2898

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XV NO: 1 and 2

January 9th and 10

1986



J1
V211,31 N86
N86-15-1 & 2
136437

680/86

வெளியீடு 11-4-1986

Issued 11-4-1986

2833

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 9, 1986-தொகுதி XV எண் 1
Thursday the 9th January 1986-Volume XV No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

[விலை ரூ 3-00 காசுகள்] [Price Rs 3-00 paise



உள்ளடக்கம்.

9-1-1986

	பக்கங்கள்.
(அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்	
(ஆ) Personnel of the Government of Tamil Nadu	i—v
(இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.	vi—vi
(ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பட்ட) பெயர்ப் பட்டியல்.	vii—xv
1. இரங்கல் குறிப்புகள் :	
முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறித்து.	1- 3
2. இரங்கல் தீர்மானங்கள் :	
(அ) தமிழ்நாட்டில் புயல், மழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் குறித்து.	3— 4
(ஆ) தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் திரு. பிரபுதாஸ் பி. பட்வாரி மறைவு குறித்து.	4
(இ) பேரவை உறுப்பினர் திரு. இ. மூருகன் மறைவு குறித்து:	5—11
மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்	5—7
திரு. உ. சுப்பிரமணியன்	7
திரு. அ. ரகுமான்கான்	7— 8
திரு. கு. ரமணி	8
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்	8— 9
திரு. வி. எஸ். டி. சம்சுல்ஆலம்	9
திரு. பொ. உத்திராபதி	9
திரு. கே. முத்துவேல்	10
திரு. குமரி அனந்தன்	10
3. பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள்.	11—25

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, சர்க்கரைப் பாகு கழிவு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை, செய்தி மற்றும் விளம்பரம் மற்றும் திரைப்படத் தொழில நுட்பவியல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்) நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்)—சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல், மற்றும் பயண இசைவுச் சீட்டு.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்) — சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எல்லைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) — மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) — போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்) — உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (வேளாண்மை துறை அமைச்சர்)— வேளாண்மை மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். வெங்கடராமன் : (சத்துணவு அமைச்சர்) — சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. எஸ். நல்லுசாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்) — வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அண்ணாமலை : (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)— பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத்துறை அமைச்சர்)— மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம் பிச்சைக் காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர் திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விமலா பழனிச்சாமி : (கதர்த்துறை அமைச்சர்) கதர் பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. பா. வெ. மு. பூசம் : (பொதுப் பணித் துறை அமைச்சர்)— பொதுப் பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃபு.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMILNADU

THIRU SUNDAR LAL KHURANA.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. The HON. DR. M. G. RAMACHANDRAN : (CHIEF MINISTER)—Public, General Administration, Indian Administrative Service, and Other All India Services. District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Molasses, Prohibition excluding grant of Liquor permits, Excise Information and Publicity and Film Technology.

2. The HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (MINISTER FOR FINANCE) : Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps, and Ex-Servicemen.

3. The HON. THIRU S. RAMACHANDRAN : (MINISTER FOR ELECTRICITY)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU K. A. KRISHNASAMY : (MINISTER FOR LABOUR) —Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The HON. THIRU R. M. VEERAPPAN : (MINISTER FOR TOURISM AND RELIGIOUS ENDOWMENTS)—Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona grant of Liquor permits, Planning, Archaelogy, and Passports.

6. The HON. THIRU K. RAJARAM : (MINISTER FOR INDUSTRIES)—Large Scale Industries, Mines and Minerals Electronics, Science and Technology.

7. The HON. THIRU P. U. SHANMUGAM : (MINISTER FOR LOCAL ADMINISTRATION)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The HON. THIRU C. ARANGANAYAGAM : (MINISTER FOR EDUCATION)—Education, Official Language, Tamil Development and Culture.

9. The HON. DR. K. KALIMUTHU : (MINISTER FOR AGRICULTURE)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. The HON. THIRU C. PONNAIYAN : (MINISTER FOR LAW)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The HON. DR. H. V. HANDE : (MINISTER FOR HEALTH)—Health and Environmental Pollution Control.

12. The HON. THIRU S. MUTHUSAMY : (MINISTER FOR TRANSPORT)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

13. The HON. THIRU S. THIRUNAVUKKARASU : (MINISTER FOR FOOD) Food, Price Control and Census.

14. The HON. THIRU V. V. SWAMINATHAN : (MINISTER FOR HANDLOOMS) Handlooms and Textiles.

15. The HON. THIRU R. SOUNDARARAJAN : (MINISTER FOR NUTRITIOUS MEALS)—Nutritious Meals.

16. The HON. THIRU T. VEERASAMY : (MINISTER FOR COMMERCIAL TAXES)—Commercial Taxes.

17. The HON. THIRU N. NALLUSAMY : (MINISTER FOR HOUSING) Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. The HON. THIRU ANOOR P. K. JAGADEESAN : (MINISTER FOR RURAL INDUSTRIES) —Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The HON. THIRU T. RAMASAMY : (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT)—Employment and Training, Indians Overseas, Refugees, and Evacuees.

20. The HON. THIRU A. ARUNACHALAM : (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The HON. THIRU M. R. GOVENDAN : (MINISTER FOR BACKWARD CLASSES) —Backward Classes and Fisheries.

22. The HON. TMT. GOMATHI SRINIVASAN : (MINISTER FOR SOCIAL WELFARE)—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages, and Correctional Administration.

23. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY : (MINISTER FOR KHADI)—Khadi, Bhoodan and Gramdhan.

24. The HON. THIRU Y. S. M. YUSUF : (MINISTER FOR PUBLIC WORKS)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN : (MINISTER FOR CO-OPERATION)—Co-operation.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு

திரு. செ. செம்மலை

திரு. சைதை சா. துரைசாமி

திரு. டி. ஆர். வேங்கடரமணன்

திரு. பொன் முத்துராமலிங்கம்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.,

இணைச் செயலாளர்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. வீ. சீதாராமன், பி.காம், பி.ஜி.எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,

குழு அலுவலர்கள்.

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி.,

திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.,

சார்புச் செயலாளர்கள்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,

திரு. கே. தியாகராஜன், பி.எ., பி.எல்.,

திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.,

திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல்.,

எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கேசவராம், பி.ஏ.,

திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.,

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. கோ. வெங்கட்டராமன்

தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.,

துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ., (தமிழ்)

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
1	அண்ணாதுரை, திரு எம்.	திருவரம்பூர்.
2	அப்துல் சமத், திரு. ஆ.அ.	திருவல்லிக்கேணி
3	அப்துல் மஜீத், திரு எச்.	வாணியம்பாடி
4	அரங்கநாயகம், திரு செ.	தொண்டாமுத்தூர்
5	அரிக்குமார், திரு இரா.	பெரணமல்லூர்
6	அருணாசலம், திரு இரா.	நாமக்கல் (செ.வ.)
7	அருணாசலம், திரு எ.	வரகூர் (செ.வ.)
8	அன்பழகன், திரு க.	பார்க் டவுன்
9	அன்பழகன், திரு கே.	ஓமலூர்
10	அன்பழகன், திரு தி.	நாட்ராம்பள்ளி
11	அன்பழகன், திரு பொ.	இலையாளூர்
12	ஆண்டி அம்பலம், திரு மெ.	நத்தம்
13	ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி,	ஆண்டிமடம்
14	ஆபிரகாம், திரு ம.	ஆலந்தூர்
15	ஆறுமுகம், திரு அ.	வந்தவாசி
16	ஆறுமுகம், திரு ஆர். எஸ்.	ஒட்டபிடாரம் (செ.வ.)
17	ஆறுமுகம், திரு எ. எஸ். ஏ.	விருதுநகர்
18	ஆறுமுகம், திரு எச். ஜி.	பென்னாகரம்
19	ஆறுமுகம், திரு செ.	மதுராந்தகம்
20	ஆறுமுகம், திரு சேலம் மு.	சேலம்–2.
21	ஆனந்த கிருஷ்ணா, திரு ஜி.	பூந்தமல்லி
22	ஆனந்தன், திரு மு.	உளுந்தூர்பேட்டை
23	இரகுபதி, திரு கோ.	காட்பாடி
24	இரத்தினம், திரு எம். வி.	பொள்ளாச்சி
25	இரத்தினவேலு, திரு சே.	முசிறி
26	இராசமாணிக்கம், திரு ஆர்.	அரூர் (செ.வ.)
27	இராசமாணிக்கம், திரு எல்ல...	தாம்பரம்
	இராசரத்தினம், திரு எப்.எம்...	கொளத்தூர்
29	இராசரத்தினம் திரு எம்.	விழுப்புரம்
30	இராசாங்கம், திரு மு.	திருவிடைமருதூர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
31	இராசாம்பாள், திருமதி த.	தலைவாசல் (செ.வ.)
32	இராசாராம், திரு. க.	பனமரத்துப்பட்டி
33	இராசாராமன், திரு எஸ்.	பாபநாசம்
34	இராசு, திரு வி. கே.	அரக்கோணம் (செ.வ.)
35	இராசேந்திரன், திரு எஸ். என்.	தூத்துக்குடி
36	இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி.	ஆண்டிப்பட்டி
37	இராமச்சந்திரன். திரு கே.எஸ். எம்.	பேடிநாயக்கனூர்
38	இராமச்சந்திரன், திரு கே.கே. எஸ்.எஸ்.ஆர்.	சாத்தூர்
39	இராமச்சந்திரன், திரு ச.	பண்ருட்டி
40	இராமச்சந்திரன், திரு சோ. மா.	அண்ணாநகர்
41	இராமச்சந்திரன், திரு ப. ந.	பட்டுக்கோட்டை
42	இராமசாமி, திரு எஸ். என்.	சாத்தான்குளம்
43	இராமசாமி, திரு த.	இராமநாதபுரம்
44	இராமநாதன், திரு மு.	கோயம்புத்தூர் மேற்கு
45	இராமலிங்கம், டாக்டர் கே.பி.	ராசிபுரம்
46	இளங்கோவன், திரு ஈ.வே.கி.ச.	சத்தியமங்கலம்
47	ஈஸ்வரன், திரு ஆர்.	வாசுதேவநல்லூர் (செ,வ)
48	உச்சி, திரு கே.	கூடலூர்
49	உத்திராபதி, திரு பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ)
50	எத்திராசன், திரு கி.	அச்சரப்பாக்கம் (செ.வ,)
51	கணபதி, திரு கே. ஆர்.	சிதம்பரம்
52	கதிர்வேலு, திரு மா.	ராணிப்பேட்டை
53	கந்தசாமி, திரு கா. வே.	கிணத்துக்கடவு
54	கந்தசாமி, திரு பி.	பொங்கலூர்
55	கல்லன், திரு. கே	உதகமண்டலம்
56	கலிதீர்த்தான், திரு சோ.	சங்கராபுரம்
57	காளிமுத்து, டாக்டர் கா.	மதுரை கிழக்கு
58	கிருஷ்ணசாமி, திரு கே. ஏ.	ஆரிரம் விளக்கு
59	கிருஷ்ணசாமி, திரு வி. இரா...	அணைக்கட்டு
60	கிருஷ்ணமூர்த்தி, திரு கி.	கும்பகோணம்

தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
61 கிருஷ்ணராஜ், திரு ஜி. ..	சேலம்-1
62 குப்புசாமி, திரு கே. ..	ஒட்டன்சத்திரம்
*63 குப்புசாமி, திரு வே. ..	செய்யாறு
64 குமர குருபர ராமநாதன், திரு ச. ..	விளாத்திகுளம்
65 குமரி அனந்தன், திரு ..	ராதாபுரம்
66 குமாரதாஸ், டாக்டர் தே. ..	இள்ளியூர்
67 கோமதி சீனிவாசன், திருமதி ..	வலங்கைமான் (தெ.வ)
68 கோவிந்தசாமி, திரு ஆர். ..	குடியாத்தம்
69 கோவிந்தசாமி, திரு ச. ..	எடப்பாடி
70 கோவேந்தன், திரு எம். ஆர். ..	பேராவூரணி
71 சங்கரலிங்கம், திரு ச. ..	சங்கரநாயனார் கோவில் (தெ.வ)
72 சண்முகம், திரு இரா. ..	திருத்தணி
73 சண்முகம், திரு என். ..	சோளிங்கர்
74 சண்முகம், திரு ப. உ. ..	மேல் மலையனூர்
75 சண்முகையா பாண்டியன், திரு. எம். ..	ஆலங்குளம்
76 சந்திரசேகரன், திரு ஆ. ..	சோழவந்தான்
77 சந்திரசேகர், திரு மு. ..	முகையூர்
78 சம்சுல் ஆலம், திரு வி.எஸ்.டி. ..	பாளையங்கோட்டை
79 சமரசம் டாக்டர், கோ. ..	காவேரிப்பட்டினம்
80 சரோஜா, திருமதி இரா. ..	உப்பிலியாபுரம் (ஆ.வா)
81 சாமிக்கண்ணு, திரு தா. ..	செங்கம் (தெ.வ)
82 சித்தன், திரு என்.எஸ்.வி. ..	திருமங்கலம்
83 சிந்தன், திரு வி. பி. ..	வில்லிவாக்கம்
84 சிவக்குமார், திரு. ஆர். ..	சமயநல்லூர் (தெ.வ)
85 சிவக்குமார், திரு எம். ..	கூனூர் (தெ.வ)
86 சிவஞானம், திரு ந. ..	திருவோணம்
87 சிவப்பிரகாசம், திரு சி. ..	சேந்தமங்கலம் (ஆ.வா)
88 சிவராமன், திரு எஸ். ..	சின்னசேலம்
89 சிவராஜ், திரு க. ..	ரிஷிவந்தியம்
90 சின்னக்குழந்தை, திரு மு. ..	ஆரணி
91 சின்னச்சாமி, திரு ரா. ..	தர்மபுரி

*21-1-1986 அன்று பதவிப்பிரமானம் எடுத்துக்கொண்டார்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
92 சின்னசாமி திரு வே. கு.	பவானிசாகர்
93 சின்னராசு திரு க. இரா.	கிருஷ்ணகிரி
94 சின்னராசு திரு மா.	மேட்டுப்பாளையம்
95 சுந்தரதாஸ் திரு மா.	விளவன்கோடு
96 சுப்பராயன் திரு கு.	திருப்பூர்
97 சுப்பிரமணிய ஆதித்தன் எனகிற சுப்பிரமணியன் திரு. எஸ். ஆர்.	திருச்செந்தூர்
98 சுப்பிரமணியன் திரு உ.	சிவகங்கை
99 சுப்பிரமணியன் திரு வீ.	கண்டமங்கலம் (தெ.வ.)
100 சுப்புராயர் திரு சி	கம்பம்
101 சுவாமிநாதன் திரு வி. வி.	புவனகிரி
102 செங்காளியப்பன் திரு ஆர்.	சிங்காநல்லூர்
103 செங்கோட்டையன் திரு கு. அ.	கோபிசெட்டிப்பாளையம்
104 செங்கோட்டையன் திரு. பெ.	கபிலர் மலை
105 செம்மலை திரு செ.	தாரமங்கலம்
106 செல்லமுத்து திரு எம்.	திருவாரூர் (தெ. வ)
107 செல்லப்பா திரு வி. கோ.	கடலூர்
108 செல்வராசன் திரு அ.	துறைமுகம்
109 சேகர் திரு கே. பி கே.	பொன்னேரி (தெ.வ)
110 சொர்ணலிங்கம் திரு கா.	திருவாடனை
111 சோலைராசு திரு. க.	மருங்காபுரி
112 சைதை துரைசாமி திரு சா.	சைதாப்பேட்டை
113 சௌந்திரராஜன் திரு ஆர்.	ஸ்ரீரங்கம்
114 சௌரிராஜன் டாக்டர் கே.	தியாகராயநகர்
115 ஞானசுந்தரம் திரு சா.	மன்னார்குடி
116 டேனியல்ராஜ் திரு எஸ்.	ஸ்ரீவைகுண்டம்
117 தங்கமணி திரு மு.	மாயூரம்
118 தங்கமணி திரு கே. எம்.	திண்டிவனம்
119 தங்கராசு திரு ஏ.	குறிஞ்சிப்பாடி
120 தங்கராசு திரு செ.	மங்களூர் (தெ.வ)
121 தங்கவேல்ராஜ் திரு பி. எம்.	கிருஷ்ணராயபுரம் (தெ.வ)
122 தங்கவேலு திரு வி.	வால்பாறை (தெ.வ.)
123 தமிழ்மணி திரு	திருப்போரூர் (தெ.வ)
124 தமிழரசன் திரு கு.	பேரணாம்பட்டு (தெ.வ)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1)	தொகுதியின் பெயர் (2)
125 தனபால் திரு ப.	சங்கரி (செ.வ)
126 தாமரைக்கனி திரு இரா.	ஸ்ரீவில்லிபுத்தூர்
127 தியாகராசன் திரு ஆர்.	விருத்தாசலம்
128 திருஞானம் திரு பி. ஆர்.	ஏற்காடு (ஆ.வா)
129 திருநாவுக்கரசு திரு எஸ்.	அறந்தாங்கி
130 திருமலைசாமிக் கவுண்டர் திரு. சு.	உடுமலைப்பேட்டை
131 தீர்த்தகிரி கவுண்டர் திரு டி.	மொரப்பூர்
132 தீர்த்தராமன் திரு ப.	பாலக்கோடு
133 துரை அன்பரசன் திரு	நெல்லிக் குப்பம்
134 துரை கிருஷ்ணமூர்த்தி திரு	தஞ்சாவூர்
135 துரை கோவிந்தராசன் திரு	திருவையாறு
136 துரைராசு திரு எஸ். பி.	காரைக்குடி
137 துரை ராமசாமி திரு	வெள்ளக்கோவில்
138 தெய்வநாயகம் திரு எ.	மதுரை சென்ட்ரல்
139 தேவராஜ் திரு வி. எம்.	வேலூர்
140 நடராசன் திரு ஆ.	பேரூர்
141 நரசிம்ம பல்லவன் திரு க.	உத்திரமேரூர்
142 நரசிம்மன் திரு பூ. மு.	பள்ளிப்பட்டு
143 நல்லமுத்து டாக்டர் க.	பெரம்பலூர் (செ.வ)
144 நல்லுசாமி திரு என்.	திருச்சிராப்பள்ளி—2
145 நாச்சிமுத்து திரு. கே. பி.	மேட்டூர்
146 நாராயணன் திரு எஸ்.	திருநெல்வேலி
147 நாராயணன் திரு பு.கோ.	பவானி
148 நெடுஞ்செழியன் டாக்டர் இரா.	ஆத்தூர்
149 பட்டாபிராமன் திரு செ.	திருவள்ளூர்
150 பரமசிவம் திரு பா. ந.	பல்லடம்
151 பரிதி இளம்வழுதி திரு	பெரம்பூர்
152 பழனி திரு த.	ஆற்காடு
153 பழனிச்சாமி திரு கா செ.	காங்கேயம்
154 பழனிமுத்து திரு சி.	ஆத்தூர்
155 பாண்டியன் திரு பி. எச்.	சேரன்மாதேவி
156 பாண்டுரங்கன் திரு மு.	கலசப்பாக்கம்
157 பாப்பா சுப்பிரமணியன் திரு	குத்தாலம்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1)	தொகுதியின் பெயர் (2)
158 பாரதி திவி ஜி. கே. ஜெ.	திருவொற்றியூர்
159 பாராமலை திரு க.	மானாமதுரை (செ.வ)
160 பாலகிருஷ்ணன் திரு ச.	மொடக்குறிச்சி
161 பாலகிருஷ்ணன் திரு வ.	சிவகாசி
162 பாலச்சந்திரன் திரு வை.	பத்மநாபபுரம்
163 பாலசுப்பிரமணியன் திரு க.	ஈர்காழி (செ.வ.)
164 பாலசுப்பிரமணியன் திரு எஸ்.	அம்பாசமுத்திரம்
165 பாலசுப்பிரமணியன் திரு வேடசந்தூர் வி.பி.	வேடசந்தூர்
166 பாலன் திரு ச.	எழும்பூர்
167 பாலாஜி திரு கே.	காஞ்சிபுரம்
168 பாலுச்சாமி திரு ஏ.	பரமக்குடி (செ.வ.)
169 பாலுசாமி திரு அ.	நிலக்கோட்டை (செ.வ.)
170 பிச்சை திரு மு.	அருப்புக்கோட்டை
171 பிரணவநாதன் திரு அ.	சுடலாடி
172 பிரேம்குமார் திரு ஆ.	திண்டுக்கல்
173 புருசோத்தமன் திரு எஸ்.	அரியலூர்
174 புஷ்பராசு திரு த.	திருமயம்
175 பெரியசாமி திரு அ.	தாராபுரம் (செ.வ.)
176 பெரியசாமி திரு ரர.	தொட்டியம்
177 பெருமாள் திரு தெ.	கடையநல்லூர்
178 பெருமாள் பிள்ளை திரு கோ.	கன்னியாகுமரி
179 பொன்முத்துராமலிங்கம், திரு	மதுரை மேற்கு
180 பொன்னம்மாள் திருமதி ஏ.எஸ்.	பழனி (செ.வ.)
181 பொன்னுசாமி டாக்டர் அ.	பெருந்துறை
182 பொன்னுரங்கம் திரு ப.	ராயபுரம்
183 பொன்னையன் திரு சி. ..	திருச்செங்கோடு
184 மணவாளன் திரு எஸ்.பி. ..	திருப்பத்தூர்
185 மணிமாறன் திரு மா. ..	நன்னிலம் (செ.வ.)
186 மலர்மன்னன் திரு அ. ..	திருச்சிராப்பள்ளி-1
187 மனோகரன் திரு கி. ..	புரசைவாக்கம்
188 மனோகரன் திரு தி.நா.கோ.அ. ...	திருநாவலூர்
189 மாதிலாமணி டாக்டர் ந. ..	ஜெயங்கொண்டான்
190 மாதவன் திரு செ. ..	திருப்பத்தூர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
191 மாதையன் திரு யு. பி. ..	அந்தியூர் (செ.வ.)
192 மாரிமுத்து திரு த. ..	குளத்தூர் (செ.வ.)
193 மாரிமுத்து, திரு மு. ..	திருப்பரங்குன்றம்
194 மீனாட்சிசுந்தரம், திரு மா. ..	வேதாரண்யம்
195 முகம்மது கனி, திரு ஜே. ..	புதுக்கோட்டை
196 முகம்மது சலீம், டாக்டர் த...	பெரியகுளம்
197 முதிறிபுத்தன், திரு பி. ..	குளித்தலை
198 முத்துசாமி, திரு சு. ..	ஈரோடு
199 முத்துராமலிங்கம், திரு பி. கே. எம். ..	உசிலம்பட்டி
200 முத்துவேல், திரு கே. ..	முதுகுளத்தூர்
201 முத்தையா, திரு இரா. ..	சேடப்பட்டி
202 முருகானந்தம், திரு டி. என்...	செஞ்சி
203 முனிரத்தினம், திரு இரா. ச...	கும்மிடிபூண்டி
204 யசோதா, திருமதி டி. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
205 இரகுமான்கான், திரு அ. ..	சேப்பாக்கம்
206 ரமணி, திரு கு. ..	கோயம்புத்தூர் கிழக்கு
207 ரவீந்திரன், திரு ஏ.எஸ். ..	திருவண்ணாமலை
208 ராமஜெயம், திரு ம. நா. ..	வாலாஜா (செ.வ)
209 ராமன், திரு கி. ..	ராஜபாளையம் (செ.வ.)
210 ராஜாபாபு, திரு ஜே. ..	போளூர்
211 ரெங்கசாமி, திரு ஆர். ..	கோவில்பட்டி
212 ரெத்தினராஜ், திரு எஸ். ..	நாகர்கோவில்
213 லட்சுமி, திருமதி பி. ..	அவினாசி (செ.வ.)
214 வடிவேல், திரு கு. ..	கரூர்
215 வளர்மதி, திருமதி பா. ..	மயிலாப்பூர்
216 விஜயபாலன், திரு என். ..	பூம்புகார்
217 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. ..	வீரபாண்டி
218 வீரய்யன், திரு கோ. ..	நாகப்பட்டினம்
219 வீராசாமி, திரு தா. ..	ஒரத்தநாடு
220 வீராணம்பலம், திரு க. வெ...	மேலூர்
221 வெங்கடரெட்டி, திரு டி. ..	ஒசூர்
222 வெங்கடாசலம், திரு அ. ..	ஆலங்குடி
223 வெங்கடாசலம், திரு கி. ..	லால்குடி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
224 வெங்கடாசலம், திரு டி. எம். ..	பரகூர்
225 வேங்கடரமணன், திரு டி. ஆர். ..	தென்காசி
226 வேணுகோபால், திரு எஸ். ..	டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்
227 வேணுகோபால், திரு கே.வி...	தள்ளி
228 வேலு, திரு கூடலூர் கி.வி. ..	தண்டராம்பட்டு
229 ஜகதீசன், திரு ஆர் பு.கோ..	செங்கல்பட்டு
230 ஜான் வின்சென்ட், திரு. மு...	நாங்குநேரி
231 ஜெகதீசன், திரு சு. ..	அரவக்குறிச்சி
232 ஜெயச்சந்திரன், திரு சா. ..	காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
233 ஜெயராமன். திரு வே.இரா...	தேனி
234 ஹேமச்சந்திரன், திரு ஜே. ..	திருவட்டாறு
235 பிரான்சிஸ், திரு ஜி. கே. ..	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1	மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ..	அமைச்சர்
2	மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ..	அமைச்சர்
3	மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் ..	அமைச்சர்
4	திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி ..	தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, சனவரி 9, வியாழக்கிழமை

மார்கழி 25, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.''

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

[ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் சட்டமன்றப் பேரவைத் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்கள் திரு. தாழை மு. கருணாநிதி 30-7-1985 ஆம் தேதியன்றும், திரு. மு. கோபால் 5-8-1985-ஆம் தேதியன்றும், திரு. வீ. செல்லதுரை 16-8-1985 ஆம் தேதியன்றும், திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் 18-8-1985 ஆம் தேதியன்றும், திரு. எஸ். ரங்கநாத முதலியார் 22-8-1985 ஆம் தேதியன்றும், திரு. என். நாராயண நம்பியார் 3-9-1985 ஆம் தேதியன்றும், திரு. எம். துரைக்கண்ணு அவர்கள் 22-9-1985 ஆம் தேதியன்றும், திரு. ஒருங்காரம் 26-9-1985 ஆம் தேதியன்றும், திரு. ஏ. சின்னதுரை அம்பலக்காரர் 28-11-1985 ஆம் தேதியன்றும் திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் 5-12-1985 ஆம் தேதியன்றும், திரு. வை. ரகுராமன் 7-12-1985 ஆம் தேதியன்றும், திரு. கே. எம். கிருஷ்ணசாமி 21-12-1985 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையும் இருமுறை தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர் (சே.வ.) தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற மக்கள் அவைக்கும் தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் (சே.வ.) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்று சீரிய முறையில் பணிபுரிந்துள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1986 சனவரி 9

திரு. மு. கோபால் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் இருமுறை செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வீ. செல்லதுரை அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஓமலூர் (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும், 1962 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1968 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரையும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

1957 ஆம் ஆண்டு திருத்தணித் தொகுதியிலிருந்து ஆந்திர மாநில சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எஸ். ரங்கநாத முதலியார் அவர்கள் 1959 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் மற்றும் சென்னை (எல்லைகள் மாற்றியமைத்தல்) சட்டத்தின்படி 1-4-1960 ஆம் தேதி முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராவார். 1960 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். நாராயண நம்பியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முடிய, அதாவது மாநிலங்கள் திருத்தியமைத்தல் சட்டம் அமலுக்கு வரும்வரை, வேலூர் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். துரைக்கண்ணு அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும் திருத்தணி பொது கிராமப்புற (செ.வ.) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி (செ.வ.) தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சிருங்காரம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை, அதாவது ஆந்திர மாநிலம் அமையும் வரை, தற்போது ஆந்திர மாநிலத்திலிருக்கும் சித்தூர் (ஒதுக்கப்பட்ட) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. சின்னதுரை அம்பலக்காரர் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து, 1967 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை ஈரோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வை. ரகுராமன் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை, தென் ஆற்காடு மாவட்டம் புவனகிரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. எம். கிருஷ்ணசாமி அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை, தென்னாற்காடு மாவட்டம் வளவனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) தமிழ்நாட்டில் புயல், மழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கீழ்க்கண்ட **தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்:**

"தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும், மற்றும் அண்டை மாநிலமான பாண்டிச்சேரியிலும்

(பேரவைத் தலைவர்) [1986 சனவரி 9

கடந்த நவம்பர் திங்களில் வீசிய 'கடுமையான புயல், மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பெருமளவு உயிர்ச்சேதம், பொருட்சேதம் பற்றி, இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதுடன், புயல் வெள்ளக் கொடுமைக்கு ஆளாகி பாதிக்கப் பெற்றவர்களுக்கு உள்ளார்ந்த அனுதாபத்தையும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கலையும் தெரிவிக்கிறது,''

(ஆ) தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர்
திரு பி. பிரபுதாஸ் பட்வாரி மறைவு குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்:

''தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த காந்தியவாதியும், 1977-ல் இருந்து 1980 வரை தமிழகத்தின் ஆளுநராகவும் பணியாற்றிய திரு. பிரபுதாஸ் பி. பட்வாரி அவர்கள் 20-11-1985 ஆம் தேதியன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது. அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.''

திரு. பிரபுதாஸ் பி. பட்வாரி அவர்கள் 1909 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24 ஆம் நாள் அகமதாபாத்திற்கு அருகில் ''தந்துகா'' என்ற இடத்தில் பிறந்தார். தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த காந்தியவாதியுமான இவர், 1942 ஆம் ஆண்டில் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் போரில் கலந்து கொண்டதன் காரணமாக 'நாசிக் மத்திய சிறைச் சாலை'யில் ஓராண்டிற்கும் மேலாகக் காவலில் வைக்கப் பட்டார். உச்ச நீதி மன்றத்தின் மூத்த வழக்கறிஞராகப் பணிபுரிந்துள்ளார். காந்தியத்தின் தலைசிறந்த கொள்கைகளான, மதுவிலக்கு, அரிசனங்கள் மேம்பாடு, கதர்-கிராமத் தொழில் மற்றும் மகளிர்க்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துப் போராடுதல் ஆகிய இக்கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து தமது வாழ்நாள் முழுவதும் ஆக்கப்பூர்வமாகப் பணி புரிந்தார். தனது எளிய வாழ்க்கையினாலும், உயர்ந்த உள்ளத்தாலும் நம் எல்லோரையும் கவர்ந்தார்.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.)

1986 சனவரி 9]

(இ) பேரவை உறுப்பினர் திரு. கி. முருகன் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செய்யாறு தொகுதி சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. கி. முருகன் 9-9-1985 ஆம் தேதி அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்த இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றல் கொண்டவரும், இப்பேரவையில் வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருமாகிய திரு. கி. முருகன் அவர்கள் 9-9-1985 ஆம் தேதியன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது.

அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.''

பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு. முருகன் அவர்கள் நேற்றுவரை நம்மோடு இருந்து நெருங்கிப் பழகியவர் என்று கருதுகிறபொழுது நம் அனைவருக்கும் நெஞ்சு நெக்குருகாமல் இராது.

அதோடு மட்டுமல்லாமல், வயதில் முதியவராக மறைந்திருந்தாலும் ஓரளவு தாங்கிக்கொள்ள இயலும். ஆனால் 40 வயது நிரம்பிய இளையவராகவே அவர் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார் என்பதைக் கருதும்போது நாம் உண்மையிலேயே வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை.

மக்களாட்சியில் பெரும் தொகையைக் கொண்ட மக்களே ஆட்சியைத் தினந்தோறும் நடத்துவது என்பது இயலாது. அதனால்தான் தங்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட மக்களாட்சி நடைபெறுகிறது. அத்தகைய பிரதிநிதிகள் வசதி பெற்றோராய், வளம் பெற்றோராய், பணக்காரர்களாய், மிட்டா, மிராசுதாரர்களாய் வந்த காலம் ஒன்று உண்டு. ஏழைகள் மீது எங்களுக்கு இரக்கம் உண்டு, இல்லாதோர் மீது கருணை காட்ட முடியும். எங்களாலே பரந்த உள்ளத்தோடும், பரந்த மனத்தோடும் பாடுபட முடியும் என்று பணக்காரர்கள் சொல்லி, சட்டப்பேரவை உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக வந்த காலம் உண்டு.

ஏழைகள்பால் நன்மை செய்வதற்கு, ஏழைகளே ஏன் வரக் கூடாது என்ற கேள்வி கேட்டு, ஏழைகள் வரலாம் என்பதை நிரூபித்துக்காட்டி, அதற்கு அடித்தளம் அமைத்துக் காட்டியவர்

பேரறிஞர் அண்ணா அவர்கள்; அதை உறுதிபடுத்தியவர் மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்கள். அத்தகைய ஒரு சாதாரண ஏழையாக, ஏழைகளின் பிரதிநிதியாக இந்தச் சட்டமன்றத்திற்கு வந்தவர்தான் மறைந்த உறுப்பினர் திரு. முருகன் அவர்கள் ஆவார்கள்.

எத்தனையோ பேர்களை நாம் பார்த்திருக்கிறோம்; வருகிற பொழுது ஏழைகளாக வருவார்கள்; போகிறபொழுது பணக்காரர் களாகப் போவார்கள். பொது வாழ்வில் சில அரசியல் வணிகர் களை நாம் அப்படிச் சந்திக்கிறோம். ஆனால் மறைந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. முருகன் அவர்கள் வாழ்ந்த காலத்திலும் ஏழையாகவே வாழ்ந்து, மறைந்த காலத்திலும் ஏழையாகவே மறைந்தார் என்பதற்கு அவரது குடும்பத்தை அவர் விட்டுச் சென்ற நிலையையும், அந்தக் குடும்பத்திற்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பேருதவி புரிந்ததையும், அவர் திரு மகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முன்வந்து அந்தச் செலவினை மேற்கொள்ள முன்வந்ததைப் பார்க்கும்போது உண்மையிலே அவர்கள் எந்த அளவுக்கு தம்முடைய பொது வாழ்க்கையை அமைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்பதை நாம் காண முடிந்தது, ஆகவே, சட்ட மன்ற உறுப்பினராக ஒரு எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு.

அதோடு மட்டுமல்ல, சிதாண்டு செய்ய வேண்டுமென்று நினைக்கின்றபொழுது அதற்குப் பதவிதான் வேண்டுமென்றோ, பட்டம்தான் வேண்டுமென்றோ, பொறுப்புகள்தான் வேண்டு மென்றோ, பண வசதிகள்தான் வேண்டுமென்றோ யாரும் கருதத் தேவையில்லை. நல்ல உள்ளம் இருந்தால் பாடுபட முடியும் என்பதற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அவர்கள் திகழ்ந்தார்கள்.

எந்தத் தொகுதியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பலமுறை முயன்றும், ஆனால் நண்பர் திரு. முருகன் வருகின்ற வரையில் தோல்வியைத் தழுவிக் கொண்டிருந் ததோ, அந்தத் தொகுதியில் அவர் வெற்றி பெற முடிந்ததென்றால் அதற்குக் காரணம் அவரது சிறந்த தொண்டு என்பதைத் தவிர, அந்தத் தொண்டர் மீது மக்கள் காட்டிய அன்பு என்பதைத் தவிர வேறொன்றும் நாம் கருத்தாக எடுத்துச் சொல்ல முடியாது. அந்த அளவு தொண்டருக்குத் தொண்டராய், மக்களின் தொண்டராய் இருந்து மறைந்தவர்தான் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. முருகன் அவர்கள் ஆவார்கள்.

இன்றைய தினம் எங்கள் இயக்கத்திற்கு—நாங்கள் அவரை இழந்திருந்தாலும் அவரைப் போன்ற தோழரை எங்களாலே பெற்றுக்கொள்ள முடியும். அந்தத் தொகுதிக்கு அவர் இல்லை என்றாலும் இன்னொரு சட்டமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த நாடும் அவர் போன்ற ஒருவரை வருங்காலத்திலே பெற்றுக்கொள்ள முடியும்.

அவரை இழந்து வாடுகின்ற அவரது குடும்பத்திற்கு நிரந்தர இழப்பு அவரது துணைவியாருக்கு ''கணவனை இழந் தோர்க்குக் காட்டுவது இல்'' என்று சொல்வதைப்போல, அந்த அம்மையாருக்கு நிரந்தரப் பேரிழப்பு. ஆகையால் இப்பேரவையின் இரங்கலை அன்னாரின் குடும்பத்திற்குத் தெரிவிக்க இந்த இரங்கல் தீர்மானத்தை மொழிந்து, அமர்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்து, அண்மையில் காலஞ்சென்ற திரு. முருகன் அவர்களுடைய மறைவுக்கு மொழிந்த இரங்கல் தீர்மானத்தில் எங்களுடைய கட்சியையும் இணைத்துக்கொள்கிறேன்.

நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இளம் வயதில் பொதுத் தொண்டில் ஈடுபட்டவர் என்பதை செய்யாறு தேர்தலின்போது, அங்கே சென்றபோது அறிந்தோம். அவர் முழுமையாக இந்தச் சட்டமன்றத் தொடரில் பதவி வகித் திருந்தால் அவருடைய சேவை மிகப்பெரும் அளவில் இருந்திருக்கும் என்பதைத் தெளிவாகக் கண்டறிய முடிந்தது. அப்படிப்பட்ட ஒரு இளைஞர் அகால மரணம் அடைந்தது அந்தக் கட்சிக்கு மட்டுமல்ல; இந்தச் சபைக்கும் பேரிழப்பாக இருக்கிறது. ஆகவே, அன்னாரை இழந்து வாடுகின்ற குடும்பத்தாருக்கு நம்முடைய அவையின் இரங்கலைத் தெரிவிக்கின்ற தீர்மானத்தில் எங்களுடைய கட்சியின் இரங்கலையும் தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், அருமைச் சகோதரர் முருகன் அவர்களுடைய மறைவு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. முருகன் அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும் கூட அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லோருடனும் சிறப்பாகப் பழகக்கூடிய இனிய நண்பர்; நல்ல பண்பாளர்; சிறந்த தொண்டர். பொது வாழ்வுக்கு அவரது இழப்பு ஒரு பெரிய நஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தன்னுடைய மறைவின் மூலமாகக்கூட மக்களுக்குச் சேவை செய்கின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தவர் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் முருகன் அவர்கள். ''செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி'' என்று சொல்வார்கள். ''யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்'' என்று கூறுவார்கள். அதைப் போன்று முருகன் அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலும்

[திரு. அ. ரகுமான்கான்] [1986 சனவரி 9

செய்யாறு தொகுதி மக்களுக்குப் பணியாற்றினார்கள்; தன்னுடைய மறைவுக்குப் பின்னாலும் குடிநீர் வசதி, ரோடு வசதி, குழாய்க்கிணறு வசதி போன்ற பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கும் வாய்ப்பை ''செத்தும் கொடை கொடுத்தான் சீதக் காதி'' என்பதைப்போல உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். அன்னாரின் இழப்பு ஒரு பேரிழப்பு, ஈடு செய்ய முடியாத இழப்பு. அன்னாரை இழந்து வாடும் குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. முருகன் அவர்கள் நல்ல முறையில் செயலாற்றி வந்தார்கள். அவர்களுடைய இழப்பு பற்றிய இரங்கல் தீர்மானத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய இரங்கலையும் சேர்த்துக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. முருகன் அவர்கள் இளைஞராக இருந்தாலும் மக்களுடைய அனுதாபத்தைப்பெற்று, அங்கே எப்படி வெற்றியோடு செயல்பட்டார் என்பதை தீர்மானத்தை முன்மொழிந்து விளக்கியபோது எடுத்துச்சொன்னார்கள். இளம் தலைமுறையினர் தங்களுடைய சேவையை அரசாங்க அதிகாரத்தோடு செம்மையாகச் செய்கின்ற நிலைமை, பொதுத் தொண்டில் பங்கு பெறுகின்ற நிலைமை நமது நாட்டிலே குறைவாக இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு இளம் தலைவர்கள் அதிகாரத்திற்கு வரவேண்டும், நியாயமான முறையில் செயல்பட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட தேவை நம்முடைய நாட்டில் பெருகி இருக்கிற சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட நல்ல ஊழியர், மக்களுடைய ஆதரவைப் பெற்ற ஊழியர் அகால மரணம் அடைந்தது எல்லோருக்கும் பெரும் வருத்தத்தைத் தருவது மட்டுமல்ல; அங்கேயுள்ள மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஆகும். ஆகவே அன்னாரின் மறைவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரைவிட்டு பிரிந்து வாடுகின்ற அவரது துணைவியாருக்கும், குடும்பத்தாருக்கும் எங்களுடைய அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அமர்கிறேன்.

(முற்பகல் 10–20)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. முருகன் அவர்கள் மறைவு குறித்து கொண்டு வரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தில் ஜனதா கட்சியும் தன்னுடைய இரங்கலை இணைத்துக் கொள்கிறது. மேட்டுக்குடி மக்களையே தேர்ந்தெடுத்து பழக்கப்பட்ட தொகுதி செய்யாறு தொகுதி. அப்படிப்பட்ட தொகுதி 1984 ஆம் ஆண்டிலே

1986 சனவரி 9] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த திரு. முருகன் அவர்களை இளைஞரைத் தேர்ந்தெடுத்தது. ஆனால் அவர் சட்டமன்ற உறுப்பினராக நம்மிடத்தில் பழகும் முன்பாகவும், மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்கு முன்பாகவும் இளம் வயதிலேயே காலன் அவரைப் பறித்துக்கொண்டான். அந்த நல்ல உள்ளத்தை காலன் பறித்துக்கொண்டது உள்ளபடியே துரதிஷ்டவசமானது. அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், அவர்சார்ந்திருந்த கட்சிக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை ஜனதா கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றிய அன்புச் சகோதரர் திரு. முருகன் அவர்களுடைய இழப்புக்காக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக எங்களுடைய அனுதாபத்தையும் இந்த இரங்கல் தீர்மானத்திலே தெரிவித்துக் கொள்கிறோம். மறைந்த உறுப்பினர் திரு. முருகன் அவர்கள் ஏழை, எளிய குடிமக்களிடையே பிறந்தாலும் எந்த ஒரு வசதியும் இல்லாத நிலைமையில் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று அந்தத் தொகுதிக்காக நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இறைவனுடைய எண்ணப்படி இளம் வயதிலேயே அவர்கள் இறைவனை அடைந்து விட்டார்கள். அவருடைய மரணம் குறிப்பாக அந்தத் தொகுதிக்கும் பெருத்த நஷ்டம்தான். என்றாலும் அவரை இழந்து வாடுகின்ற குடும்பத்தினருக்கு எங்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு இந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று, தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டு அகால மரணம் அடைந்திருக்கிறார் திரு. முருகன் அவர்கள். அப்படி மறைந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். செய்யாறு தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 ஆண்டுக் காலமும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று இருந்த ஒரு நல்ல தொண்டனைத் தேர்ந்தெடுத்த அந்த மக்களுக்கு ஒரு திடீர் ஏமாற்றத்தையும், ஆழ்ந்த வருத்தத்தையும் உருவாக்கிவிட்டது அவருடைய மரணம். ஏழை, எளிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடியவர்களை சட்டமன்றப் பேரவைக்கும், மேலவைக்கும் தேர்ந்தெடுக்க முடியும் என்று இருக்கக்கூடிய இந்தக் காலத்தில்தான் திரு. முருகன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். அப்பேர்ப்பட்ட திரு. முருகன் அவர்கள் மறைந்ததற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அன்னாருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அந்தத் தொண்டனை இழந்திருக்கக்கூடிய அவர் சார்ந்திருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த சட்டமன்ற உறுப்பினர் அமரர் முருகன் அவர்கள் செய்யாறு தொகுதி மக்களின் உள்ளம் நிறைந்த சிறந்த சேவகனாக விளங்கியவர்கள். புதிதாக அவர் சட்டமன்றப் பேரவைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்தச் சட்டப் பேரவையில் புதியவராக அவர் உலவி வந்தபோதும் அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களோடும் இனிய தன்மையில் பேசி அனைவரையும் பாசப் பிணைப்பால் பிணைத்த அவர் அகால மரணம் அடைந்து விட்டார். அவரது சேவை மக்களுக்கு முழுமை யாகப் பயன்பட்டு சட்டமன்றப் பேரவையில் பெருமை ஏற்படுத்தப் படும் என்ற நிலைமை உருவாவதற்குள்ளாகவே அரசியல் வாழ்வில் அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னாரது மறைவால் துயரம் அடைந்துள்ள திரு. முருகன் அவர்களது குடும்பத்தினருக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று நம்மிடையே இல்லாமல் மறைந்துவிட்ட திரு. முருகன் அவர்களுக்கு இங்கே முன்மொழிந்த தீர்மானத்தை, அதில் வெளிப் பட்ட உணர்வை காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் உணர்வோடு இணைத்துக்கொள்ள நான் நிற்கிறேன். எளியவராகவும், இனிய வராகவும், இளைஞராகவும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பணி புரியத் தொடங்கி நல்ல திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்ற ஆர்வத்தோடு முனைந்து நின்று செயல்பட்டவர் திரு. முருகன் அவர்கள். தனக்கென்று ஒதுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள் தன் இயக்கத்தைச் சேர்ந்த இன்னொரு புதியவருக்கு வழி விட வேண்டும் என்று எண்ணி மறைந்துவிட்டு அப்படி இன்னொருவர் அங்கிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற வகையில் அவர் மறைந்திருக் கிறார். அவர் என்னென்ன நினைத்தாரோ அவற்றை அவர் களது இயக்கத்தைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் அவற்றை அவர்கள் நிறைவேற்றுவார் என்பதே அவரது ஆத்மா சாந்தி அடையச் செய்யும். அன்னாரை இழந்து நிற்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக், கழகத்திற்கும், அவர் களுடைய குடும்பத்தாருக்கும் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் மற்றும் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் இணைத்துக் கொள்கிறேன்.

தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் பேரவை உறுப்பினர் கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பேரவை உறுப் பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, இதர அலுவல்கள் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (10-1-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரக் கட்டைகள் இட மாறுபாட்டு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத் துறையின் 28-3-1985 ஆம் நாளிட்ட 361 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

2. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 21-1-1985 ஆம் நாளிட்ட 181 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. தூத்துக்குடியில் உள்ள திருவாளர் 'லிட்டில் ஸிஸ்டர்ஸ் ஆப் புவர்'-க்குச் சொந்தமான டி.எம்.எப். 3991 எண்ணுள்ள ஆம்புலன்ஸ் வண்டிக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 1-7-1985 ஆம் நாளிட்ட 1582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

4. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு மற்றும் நிர்வாகச் சீர் திருத்தத் துறையின் 10-7-1985 ஆம் நாளிட்ட 715 ஆம் எண்

[1986 சனவரி 9

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

5. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஓழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 8-7-1985 ஆம் நாளிட்ட 705 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 5-7-1985 ஆம் நாளிட்ட 650 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

7. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராய (மொத்த விலையில் வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 4-7-1985 ஆம் நாளிட்ட 649 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

8. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அதிகாரிகள் பணியிடம் (தொகையாக வழங்கல்) ஒழிப்பு விதி களில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12-4-1985 ஆம் நாளிட்ட 575 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அதிகாரிகள் பணியிடம் ஒழிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1981) 12 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

9. சென்னையிலுள்ள இலங்கை துணை உயர் ஆணையர், அலுவல் காரணமாக செலுத்திவந்த வரியிலிருந்து விலக்களிப் பதை நீக்குவது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளை கள் துறையின் 5-7-1985 ஆம் நாளிட்ட 579 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

1986 சனவரி 9]

10. தமிழ்நாடு ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டியினரால் விற்கப்படும் வாழ்த்து அட்டைகளுக்கு விதிக்கப்படும் வரியினின்று விலக் களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-6-1985 ஆம் நாளிட்ட 557 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

11. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 21-5-1985 ஆம் நாளிட்ட 1251 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

12. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராயக் கடைகள் (ஏலத்தில் தீர்வு செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 8-3-1985 ஆம் நாளிட்ட 189 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

13. முறைப்படுத்தப்பட்ட கமுதி அங்காடியின் அறிவிக்கப் பெற்ற பகுதியிலின்று சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 27-7-1985 ஆம் நாளிட்ட 1165 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

14. இழுவைகள், இழுவை உருளிப்பட்டைகள் மற்றும் இழுவைகளின் துணைக் கருவிகளின் பாகங்கள் மீதான வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 25-6-1985 ஆம் நாளிட்ட 546 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

15. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகம் (அதிகாரம் பெறாது குடியிருப்போரை வெளியேற்றல்) சட்டத்தில் திருத்த மொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 11-7-1983 ஆம் நாளிட்ட 7706/பி2/82-4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகம்

[1986 சனவரி 9

(அதிகாரம் பெறாது குடியிருப்போரை வெளியேற்றல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள் குடியிருப்பு உரிமைப் பதிவேடு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 13-3-1985 ஆம் நாளிட்ட 368 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள் குடியிருப்பு உரிமை பதிவேடுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து சில கோவில்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 15-5-1985 ஆம் நாளிட்ட 423 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. தமிழ்நாடு நில அளவைகள் துறைகள் நடைமுறை நூல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12-6-1985 ஆம் நாளிட்ட 502 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

19. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 8-7-1985 ஆம் நாளிட்ட 706 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. விரிவான வளர்ச்சித் திட்ட ஆயத்தம் மற்றும் ஒப்பளிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26-3-1985 ஆம் நாளிட்ட 303 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971, நகர—நாட்டுப்புற திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

21. புதிய நகர வளர்ச்சித் திட்ட (தயாரிப்பு, வெளியீடு மற்றும் அனுமதி) விதிகளை வகுப்பது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 4-7-1983 ஆம் நாளிட்ட

1986 சனவரி 9]

100ஆ ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

22. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-6-1985 ஆம் நாளிட்ட 558 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

23. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 13-8-1985 ஆம் நாளிட்ட 798 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப் பெற்றது].

24. பைன் ஆப்பிளை வேளாண் விளைபொருளாக அறிவிப்பது மற்றும் சேலம் மாவட்டத்தில் கொள்முதல் மற்றும் விற்கப்படும் பைன் ஆப்பிள்களை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்மைத் துறையின் 24-5-1985 ஆம் நாளிட்ட 985 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

25. சோளம், கம்பு மற்றும் கேழ்வரகைப் பொறுத்தவரை திருநெல்வேலி மாவட்டத்தை அறிவிக்கப்பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 24-5-1985 ஆம் நாளிட்ட 984 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. ஈரோடு, பெருந்துறை மற்றும் பவானியைச் சேர்ந்த சில கிராமங்களை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதிகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 24-5-1985 ஆம் நாளிட்ட 986 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

27. கடலைப்பருப்பினை எந்த ஒரு வடிவிலும் வேளாண் விளைபொருளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 24-5-1985 ஆம் நாளிட்ட 983 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1459) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

28. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நடைபெறும் ஒவ்வொரு பந்தயக் கூட்டத்திற்கு விதிக்கப்படும் வரியினைக் குறைப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12-4-1985 ஆம் நாளிட்ட 327 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

29. ஏனைய மையங்களில் நடைபெறும் பந்தயங்களுக்கு சென்னை கிண்டி பந்தய மைதானம் மற்றும் உதகமண்டலம் பந்தய மைதானத்தில் கட்டப்படும் இடைப் பந்தயங்களுக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30-3-1985 ஆம் நாளிட்ட 304 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

30. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 19-8-1985 ஆம் நாளிட்ட 826 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

31. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்ட விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 8—7—1985-ஆம் நாளிட்ட 591-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

32. விற்பனை வரி தொழில் புரிவோர் பட்டியலில் கூட்டாண்மை செயலாளர் பட்டத்தினை சேர்ப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 11-7-1985-ஆம் நாளிட்ட 608-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சடடம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

33. மதுரை, நாராயணபுரம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ இராம கிருஷ்ணா நினைவு ஆராய்ச்சி நிலையம் மற்றும் மருத்துவ நிலையத்தினரால் கொள்முதல் செய்யப்படும் மருந்துகள், அறுவை உபகரணங்கள் மற்றும் அறிவியல் உபகரணங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய் அறக்கட்டளைகள் துறையின் 6—8—1985-ஆம் நாளிட்ட 694-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

34. தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு மரக்கட்டைகள் இடமாறு பாட்டு விதிகளில், சில திருத்தங்கள் செய்வது குறித்து வன—மினைத் துறையின் 28—3—1985-ஆம் நாளிட்ட 360-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

35. மதுரை மாவட்டம், நத்தம் தாலுகாவைச் சார்ந்த சேத்தூர் சிற்றூரில் உள்ள மொட்டைமலைப்பட்டி கிராமத்தை தானமாக கொடுக்கப்பட்ட கிராமமாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 17—6—1985-ஆம் நாளிட்ட 491-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

36. மதுரை மாவட்டம், நத்தம் மற்றும் வேடசந்தூர் தாலுக்காக்களை சார்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப் பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 9—8—1985-ஆம் நாளிட்ட 615-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

37. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளை கள் சட்டத்தின் 36—வது பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து சில கோவில் களுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 5—3—1985-ஆம் நாளிட்ட 182-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

38. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 9—7—1985-ஆம் நாளிட்ட 594-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1986 ஜனவரி 9

39. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 8-3-1985-ஆம் நாளிட்ட 568-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு திரைப் படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

40. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் மற்றும் ஊராட்சிகள் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-8-1985-ஆம் நாளிட்ட 627-ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

41. வருவாய்த் துறையின் 2-1-1973-ஆம் நாளிட்ட எஸ்.ஆர். ஒ. எண்—ஏ—67/1973-ஆம் எண் அறிவிக்கையை நீக்குவது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30-10-1984-ஆம் நாளிட்ட 1195-ஆம் என் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

42. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் மற்றும் ஊராட்சிகள் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 1—10—1985-ஆம் நாளிட்ட 742-ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

43. தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியைச் சேர்ந்த திரு. ஜி. புருஷோத்தமன் என்னும் கால்நடை தீவன வணிகர் செலுத்த வேண்டிய தண்டத் தீர்வை தொகை ரூ. 1229.17-ஐ குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29-7-1985-ஆம் நாளிட்ட 665-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

44. ஆலைகளுக்கு வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 5-8-1985-ஆம் நாளிட்ட 692-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

1985 ஜனவரி 9

45. திருவள்ளூரின் அறிவிக்கப் பெற்ற அங்காடி பகுதியினின்று சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 3-9-1985-ஆம் நாளிட்ட 1576-ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

46. மாசிக்காய் மற்றும் தக்காளியைப் பொறுத்தவரை சேலம் மாவட்டத்தை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3-9-1985-ஆம் நாளிட்ட 1575-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

47. தேங்காய், சோளம், கம்பு, கேழ்வரகு, புளி, வெங்காயம் நல்லெண்ணெய், உளுந்து, மாங்காய், வாழைப்பழம், திராட்சை, தக்காளி போன்றவை மற்றும் பட்டு-பருத்தி வகைகளை பொறுத்தவரை மதுரை மாவட்டத்தை அறிவிக்கப்பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 13—8—1985-ஆம் நாளிட்ட 1435-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

48. மதுரை சர்க்கரை ஆலையின் சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் அனைத்தும் குறித்த முழு விபரக் கணக்கை அரசுக்கு அளிக்கும் செயல் நோக்கத்திற்காக குறிப்பிட்ட நாள் குறித்து தொழில் துறையின் 17-9—1985-ஆம் நாளிட்ட 814-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984-ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1984) 33(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

49. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 23—9—1983—ஆம் நாளிட்ட 1992—ஆம் எண் அர சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

50. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து நகராட்சி

(1985 ஜனவரி 9

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 8-10-1985-ஆம் நாளிட்ட 829-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

51. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நில சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வு செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 5-6-1985-ஆம் நாளிட்ட 831-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நில சீர்திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

52. தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தய வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 19-9-1985-ஆம் நாளிட்ட 842-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

53. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு — ஆயத்தீர்வைத் துறையின் 5-9-1985-ஆம் நாளிட்ட 913-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

54. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர் மற்றும் ஊராட்சிகள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 25-10-1985-ஆம் நாளிட்ட 798-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

55. திருபுவனம் ஒழுங்குமுறை அங்காடியின் முகவரி மாற்றம் குறித்து வேளாண்மைத் துறையின் 10-10-1985-ஆம் நாளிட்ட 1703-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

1986 சனவரி 9]

56. தேனி மற்றும் கம்பம் ஒழுங்குமுறை அங்காடியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 7-10-1985-ஆம் நாளிட்ட 1763-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

57. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 1078-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

58. சென்னை அடையாற்றிலுள்ள புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோர் நிலையத்திற்குச் சொந்தமான வண்டி எண் டி. எம். ஏ. 7334 மற்றும் டி.எம்.எம். 4421-க்கு செலுத்தக் கூடிய வரியிலிருந்து விலக்களிப்பதை நீக்குவது குறித்து உள் துறையின் 11-10-1985-ஆம் நாளிட்ட 2545-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

59. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 25-10 1985-ஆம் நாளிட்ட 860-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

60. தர்வதேச பயிர் ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான மோட்டார் வண்டிக்கு செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் துறையின் 25-10-1985-ஆம் நாளிட்ட 2612-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

61. சென்னையிலுள்ள ஜெர்மன் தொழுநோய் மீட்புச் சங்கத்திற்குச் சொந்தமான வண்டிகளுக்கு சலுகை வீத வரி விதிப்பது குறித்து உள் துறையின் 29-10-1985-ஆம் நாளிட்ட 2640-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை

[1986 சனவரி 9

[தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

62. தமிழ்நாடு தென்னக ரயில்வேயின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களுக்குச் சட்டத்தின் அனைத்து பிரிவு களிலிருந்தும் விலக்களிப்பது குறித்து தொழிலாளர் துறையின் 4-4-1985-ஆம் நாளிட்ட 663-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1981) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

63. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு தொழில் வேலை வாய்ப்பு (நிலையாணைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழிலாளர் துறையின் 5-2-1985-ஆம் நாளிட்ட 265 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/1946) 15(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

64. ஆவடி மத்திய வாகனங்கள் கிடங்கின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுக்கு விலக்களிப்பது குறித்து தொழிலாளர் துறையின் 4-4-1985 ஆம் நாளிட்ட 662 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆம்ஆண்டு தொழில் நிறு வனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதிய அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1981) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

65. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் துறையின் 1-2-1985 ஆம் நாளிட்ட 214 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள்(தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1981) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

66. 1976 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப் பணிப் பொறியியல் கழகத்தின் முதல் ஆண்டறிக்கை (ஆங்கிலம்).

67. 1977 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப் பணிப் பொறியியல் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்).

68. 1978 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப் பணிப் பொறியியல் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. (ஆங்கிலம்).

1986 சனவரி 9]

69. 1979 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப் பணிப் பொறியியல் கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்).

70. 1980 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப் பணிப் பொறியியல் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்).

71. 1981 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப்பணிப் பொறியியல் கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்).

72. 1982 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொதுப்பணிப் பொறியியல் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

1. இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குள் காற்று ஒலி எழுப்பி உபயோகிப்பதை தடை செய்வது குறித்து உள்துறையின் 11-4-1985-ஆம் நாளிட்ட 895 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25-2-1985 முதல் 11-4-1985 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு (ஆங்கிலம்).

3. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 8-3-1985 முதல் 19-7-1985 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு (ஆங்கிலம்).

4. 1980-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) ஆய்வுரை (ஆங்கிலம்).

5. 1980-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் ஆய்வுரை (ஆங்கிலம்).

6. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1985).

7. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டம் தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1985).

8. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1985).

9. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (நான்காம் திருத்த அவசரச் சட்டம் தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1985)

10. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண் 6/1985).

11. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1985).

12. 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/1985)

13. 1985ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/1985)

14. 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாம்திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/1985)

15. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/1985).

16. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் மற்றும் வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம் மற்றும் சிறப்பு விதிகள்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/1985).

17. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்சங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண் 13/1985).

18. 1985 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளை (நிர் வாகத்தை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 14/1985).

19. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு வேளாண்மை பணி கூட்டுறவுச சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 15/1985).

20. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) நான்காம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1985).

21. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலு வலர்கள் நியமனம்) நான்காம் திருத்த அவசரச்சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 17/1985).

1986 சனவரி 9]

22. தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச்சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1985).

23. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினர்கள் 28-3-1983 அன்று சமர்ப்பித்த மனுக்கள் மீதான விளக்கக் குறிப்புகள்.

24. 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையரற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை.

25. 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATION.

IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. P. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10. Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-4.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15. Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathipagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26. Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi.
2. Inter National Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
7. K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

Issued: 14-7-1986

வெளியீடு: 14-7-1986

234/86
2893

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜனவரி 10, 1986–தொகுதி XV எண். 2

Friday the January 10, 1986,—Volume XV No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly, Secretariat, Fort St. George,

Madras-6000 009

விலை ரூ 3.00 காசுகள்]

[Price Rs. 3.00 Paise

உள்ளடக்கம்

10–1—1986

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள் : 27—57
   உடுக்குறியீட்ட வினாக்கள்.

2. அறிவிப்புகள் :
   (அ) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்கள் (ஆ.செ.) 58
   (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல். 70

3. தகவல் கோரல் :
   (அ) தமிழக அரசு சர்க்காரியா கமிஷனிடம் அளித்த அறிக்கையை அவைமுன் வைத்தல். 58;63-68
   (ஆ) ஆசிரியர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குவது குறித்து. 68—69
   (இ) பேரவைத் தலைவருக்கான அதிகாரங்கள் குறித்து. 69
   (ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு. 69—70

4. உரிமைப் பிரச்சனை :
   மேலவை உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, பி. மாணிக்கம் ஆகியோர் மீது. 58—62

5. அரசினர் தீர்மானம் :
   விதி 13 (2)-ன் படியான தீர்மானம். 70

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் :
   (அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1986.
   (ஆ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1986. } 70-105

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்:
   திரு. மா. சின்னராசு, 105—122
   திரு. ஏ. எஸ். ரவீந்திரன் 122—133
   திரு. மு. ஜான் வின்சென்ட் 133—139
   திரு. பொன். முத்துராமலிங்கம் 140—150

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 151—152

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, சனவரி 10, வெள்ளிக்கிழமை
மார்கழி 26, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு-2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்''.

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால் மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுகுறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 1, 2, 3 ஆகியவை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

தொழில் கல்வித் திட்டத்திற்கு நிதி உதவி.

4—(*வினா எண். 650)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 'தொழில் கல்வி' முறைக்கு நிதி வழங்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ''வாழ்க்கைக் கல்விக் கான முதலமைச்சரின் திட்டத்தை'' தமிழகப் பள்ளிகளில் அமுல் படுத்த மைய அரசின் ''திட்டமல்லாத'' (Non-Plan) நிதி உதவி வேண்டுமென்று தமிழக அரசு எட்டாவது நிதிக் கமிஷனிடம் கோரிக்கை வைத்தது. அக்கோரிக்கை அக்கமிஷனால் ஏற்கப்பட வில்லை. எனினும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இப்பணிக்கு ''மைய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக'' (Centrally Sponsored Scheme) சிறப்பு நிதி உதவி தரவேண்டுமென்று இவ்வரசு வலியுறுத்தி வரும்.

[1986 சனவரி 10

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது பிரதமர் ராஜீவ்காந்தியின் புதிய கல்விக் கொள்கையைப் பற்றி நாடு முழுவதும் இப்போது விவாதிக்கப் படுகிறது. சென்னையில் சமீபத்தில் கிறிஸ்துவ கல்லூரியின் பள்ளி விழாவின்போது பிரதமர் கலந்து கொண்டு பேசுகையில் நமது கல்வி முறை குமாஸ்தாக்களை உருவாக்குகின்ற சாதாரண காலனி முறையாகவே இருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கென புதிய கல்விக் கொள்கையை அளிக்கும் வகையில் நமது அரசின் தொழில் கல்வி இருப்பதால் அதைச் சுட்டிக் காட்டி, மத்திய அரசிடம் அதிக நிதி உதவி கோரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் நம்முடைய தொழில் கல்வி அமைந்திருக்கிறது என்பதை அடிப் படையாக வைத்துத்தான், அதை மத்திய அரசின் திட்டமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வகையில் அதிக நிதி உதவி கோரி வலியுறுத்துகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது தொழில் கல்வியில் என்னென்ன தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன? அந்தத் தொழில் கல்வியைக் கற்றுக் கொண்டு பயிற்சி பெற்று வரும் இளம் மாணவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டும் என்று தனியார் தொழில் நிறுவனங்களை நிர்வகித்து வரும் தொழில் அதிபர்களை வலியுறுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குத் தேவையான பயிற்சி, சுகாதாரத் துறை, விவசாயத் துறை, வேறு அலுவலகங்களிலே பணிபுரிவதற்கான— உதாரணமாக பேங்கிங், கோவாப்ரேட்டிவ் அமைப்புகள்— பயிற்சிகளை நாம் தந்து கொண்டிருக்கிறோம்.

தொழில் கல்வி பயிற்சி என்பது 11-வது, 12-வது வகுப்புகளி லேயே ஒரு பிரிவாகவும் வைத்துத் தருகிறோம்; அத்தோடு முதலமைச்சர் வாழ்க்கைக் கல்வி திட்டம் என்பதின் அடிப்படையில் 8-வது, 9-வது வகுப்புகளிலே படிக்கும் மாணவர்களுக்கும் தந்து கொண்டிருக்கிறோம். எல்லா வகுப்புகளிலேயுமே மாணவர்களுக்கு இந்த அனுபவம் வருகின்ற தொழில் கல்விப் பயிற்சியை தர வேண்டும் என்கிற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே தான் இப்போது நாம் செயல்படுகிறோம்.

தனியார் நிறுவனங்கள் அவர்களை வேலைக்கு ஏற்றுக் கொள்வது ஒருபுறம் இருக்க, அரசாங்கத் துறைகளிலேயே அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கான முயற்சிகளை

1986 சனவரி 10]

நாம் மேற்கொள்ள இருக்கிறோம். ஒரு நல்ல நிலைமையில் அதற்கான ஒத்துழைப்புக் கிடைக்குமேயானால் அதுவே பல மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வி நிறுவனங்கள் மற்ற மாநிலங்களை விட தமிழகத்திலேதான் அதிக அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அவற்றிற்கு உதவுகின்ற வகையில் மத்திய அரசிடமிருந்து வேறு வகையில் சலுகைகளைப் பெற நமது அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக பொதுக் கல்வி தொழிற்கல்வி எல்லாவற் றிற்குமே நிதி உதவி செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். இந்தக் கருத்தை மாநில கல்வி அமைச் சர்கள் மாநாட்டிலே கூட வலியுறுத்திவருகிறோம். ஒரு சதவீதம், இரண்டு சதவீதம் கூட மாநில நிதி ஒதுக்கத்தில் கல்விக்காக மத்திய அரசு ஒதுக்குவது இல்லை. ஆனால் மாநில அரசுகள் 22 சதவீதம், 25 சதவீதம், 30 சதவீதம் என்று கூட ஒதுக்கிக் கொண்டு வருகின்றன. ஆனால் கல்வி எப்பது மிக முக்கிய மானது என்ற கருத்தை நமது தற்போதைய பிரதமராக இருக்கிற திரு. ராஜீவ் காந்தி ஏற்றுக்கொண்டு அதற்கு தனி முக்கியத்துவம் தந்து வருகிறார்கள். ஆகவே இனி கல்விக்காக அதிகப் பணத்தை மத்திய அரசு ஒதுக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கல்வி என்பதிலே, பள்ளிப் பருவத்திலேயே அவர்களை தகுதியுடைய பிள்ளைகளாக ஆக்குவதற்கு எப்படி முயற்சிகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என் பதையும் 11ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்புகளில் கூட தொழில் கல்விப் பயிற்சியை தமிழக அரசு தந்து வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பிற மேலை நாடுகளில் பிள்ளைகள் படிக்கின்ற காலத்திலேயே அவர்களை வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாக ஆக்குகின்ற அளவிற்கு அவர்களுக்குப் போதுமான தொழிற் கல்வி தரத்தக்க ஏற்பாடு இருக்கிறது. அதைப் போன்ற ஒரு ஏற்பாட்டை நம்முடைய மாநிலத்திலே செய்கிற அளவிற்கு திட்டமிட்டு மத்திய அரசு உதவி செய்கின்ற அளவிற்கு மாநில அரசு கோரிக்கை எதுவும் வைத்திருக்கின்றதா? அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தத் தொழில் கல்வி அம்சம் நம்முடைய கல்விமுறையில் இல்லா விட்டால் அது முழுக்க முழுக்க குமாஸ்தாக்களை உருவாக்குகின்ற

கல்வித் திட்டமாகத்தான் இருக்கும். அது வாழ்க்கைக்குப் பயன் படுகிற ஒரு கல்வித் திட்டமாக இருக்காது. நாட்டின் முன்னேற்றத் திற்கு மாணவர்களைத் தயாரிக்கின்ற கல்வித் திட்டமாக அது இருக்காது. ஆகவே நாட்டின் முன்னேற்றம், மாணவர்களுடைய எதிர்காலம் எல்லாவற்றையும் நாம் மனதிலே வைத்து இந்தத் தொழில் கல்வி அம்சத்தைப் புகுத்தி வருகிறோம். இதுவரையில் அமைக்கப்பட்ட எல்லா நிபுணர்கள் குழுக்களும் இதை ஆதரித்து வந்திருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலே மட்டும்தான் அதற்கு மதிப்பு கொடுத்து நாம் கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலமாக அதற்கு ஊக்கமளித்து வருகிறோம். புதிய கல்விக் கொள்கை என்ற பெயரால் நாடு முழுவதும் ஒரு கொள்கை வரவேண்டுமென்ற கருத்தை மத்திய அரசு இன்றல்ல, இதற்கு முன்னாலிருந்தே சொல்லி வந்திருக்கிறது. அதிலே முக்கியமான அம்சம் 11-வது, 12-வது வகுப்புகளில் இந்தத் தொழில் கல்வி இருக்க வேண்டு மென்பதுதான். இன்றைக்கு இந்தியா முழுவதும் படிக்கின்ற மாணவர்கள் 60 ஆயிரம் பேர்கள். அதிலே ஏறக்குறைய 50 ஆயிரத்திற்கு மேல் தமிழ்நாட்டிலேதான் படித்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே மத்திய அரசின் அந்தக் கொள்கைக்கு முழு ஆதரவு இங்கே இருக்கின்றது. ஆகவே அந்த அடிப்படையில் நாம் அதற்கு ஊக்கம் தரவேண்டுமென்ற வகையில் மத்திய அரசி னுடைய உதவியை நாம் கேட்கிறோம். ஒரு சிறப்புத் திட்டம் நாடு முழுவதும் செயல்படவேண்டுமென்று மத்திய அரசு உண்மை யிலே நினைக்குமானால் இதுபோன்ற நிதியுதவிகளின் மூலமாகத் தான் மாநில அரசுகளை அந்த வழிக்கு கொண்டுவர முடியும். அந்த விதத்திலே நாம் இதனை வலியுறுத்தி வருகிறோம்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, இது எலக்ட்ரானிக்ஸ் யுகம். ஆகவே 11, 12 வகுப்புகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு எல்லாப்பள்ளிகளிலும் தனியாக மின்னணுப்பிரிவை வைத்தால் அவர்களின் வாழ்க்கைக்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே மின்னணு பிரிவு இல்லாத எல்லாப் பள்ளிகளிலும் அந்தப் பிரிவைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் யுகம். அதை நன்கு உணர்ந்து தான் நாம் எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் பிரிவுகளுக்கு ஒரு முக்கியத்துவம் தந்திருக்கிறோம். புதியதாக துவக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளில் இத்தகைய பிரிவுகளை ஆரம்பித்தால் தான் நாங்கள் அனுமதி தருவோம் என்று மன்றமுகமாக அந்தப் பாடப் பிரிவிற்கு ஒரு ஆதரவைத் தந்து வருகிறோம். மேல்நிலைப் பள்ளிகளில் அந்தப்பிரிவை ஆங்காங்கே வைத்திருக்கிறார்கள். கம்ப்யூட்டர் கல்வி அதேகமாக இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் அதிக மேல்நிலைப் பள்ளிகளில் இருக்குமென்று நாம் உறுதியாகச்

சொல்லமுடியும். அந்த வகையிலே நாம் முயற்சியை மேற் கொண்டு வருகிறோம். கட்டாயப்படுத்துவது என்பது, நாம் எல்லாப் பள்ளிகளிலும் கொண்டு வருவதற்கு போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் இப்போது இந்தவகையிலே செய்து வருகிறோம். ஆங்காங்கு சில பள்ளிகளில் தாங்களே பணத்தைச் செலவு செய்து இத்தகைய பிரிவுகளை ஆரம்பிக்கின்றார்கள். புதிய பாலிடெக்னிக்குகளில் எலக்ட்ரானிக்ஸ் பிரிவுகளை, கம்ப்யூட்டர் பிரிவுகளை கொண்டுவருவதற்கு நாம் அவர்களுக்கு ஆலோசனை சொல்லி வருகிறோம்.

சென்னையில் பார்வையற்ற மாணவர்களுக்குச் சிறப்பு நூலகம்.

5—(*வினா எண் 1887) — **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகத்தில் பயிலுகின்ற கண் பார்வையற்ற மாணவ மாணவியர்களிடமிருந்து Braille மற்றும் Tape நூலகம் அமைத்துத்தர வேண்டி கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்படிப்பட்ட சிறப்பு நூலகம் (Special Library) துவக்கப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, கண்பார்வையற்ற மாணவ மாணவிகள் படிப்பதற்கென்று ஒருசில பள்ளிகள், கல்லூரிகள் இருந்தாலும் அவர்கள் படித்து முடித்த பிறகு அறிவை வளர்த்துக் கொள்வதற்கு இப்படிப்பட்ட நூலகங்கள் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அப்படிப்பட்ட கோரிக்கை 'பிளைண்ட் கிராஜுவேட்ஸ் அசோசியேஷன்' மூலமாக வரவில்லையென்றாலும், அதனுடைய அவசியத்தை, நியாயதத்தை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய கேள்வியையே கூட கோரிக்கையாக ஏற்று, அந்த மாணவர்கள் அறிவை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் இப்படிப்பட்ட 'பிரெய்லி' மற்றும் 'டேப்' நூலகத்தை பரிட்சார்த்தமாக சென்னை பல்கலைக் கழக வளாகத்திலோ, மாவட்ட நூலகத்திலோ அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 சனவரி 10

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாணவர்களிடமிருந்து இத்தகைய கோரிக்கை வரவில்லை. ஆனால் நூலக சங்கங்கள் கூட்டமைப்புத் தலைவர் இத்தகைய ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் சில விளக்கங்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் எல்லாக் கல்லூரிகளிலும் இந்த விழி இழந்த மாணவர்கள் இருக்கிறார்கள். ஆகவே நாம் எல்லா இடங்களிலும் அதனை வைக்க முடியாது. ஆகவே எந்த இடத்திலே வைக்கலாம் என்பது குறித்து முடிவு செய்யப்படும். அதற்குத் தேவையான கேசட்டுகள், 1500 கேசட்டுகள் தேவை என்றால், அதற்கு 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தேவைப்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கீழ்க்கண்ட விவரங்களை எல்லாம் திரட்டிக் கொண்டிருக் கிறார்கள். (1) ஒலிப்பதிவு நாடா நூலகம் அமைக்கப்படும் இடம், (2) அதற்குத் தேவையான துணைக் கருவிகள் மற்றும் பணியாளர்கள், (3) ஒலிப்பதிவு நாடா அமைப்பது குறித்த செலவினங்கள், (4) மற்றும் இது தொடர்பான செலவினங்கள் ஆகிய இதுபோன்ற விவரங்களைத் திரட்டிக்கொண்டு இருக் கிறார்கள். இவைகள் வந்ததற்குப் பிறகு, இவற்றைப்பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இப்போது நவீனயுக்திகள், நவீன கருவிகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. மேலும் கண்பார்வை யற்றோருக்குத் தேவையான டைப்ரைட்டர்கள் கூட தயாரிக்கப் பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. எனவே அப்படிப்பட்ட கருவிகளை வழங்குவதற்கு 'யுனெஸ்கோ' அல்லது இதுபோன்ற உதவி ஸ்தாபனங்கள் ஏதாவது முன்வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட உதவிகளை நம்முடைய அரசாங்கம் பெற்று, இப்படிப்பட்ட நூலகங்களிலே அத்தகைய கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு இனிமேலாவது அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, விழி இழந்தவர்களுக்கு நூலகங்கள் அமைத்துத்தர வேண்டும் என்கிற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி வந்திருக்கிறது. எனவே அங்கே வேலை செய்கின்றவர்களும் விழி இழந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதில்லை. அங்கே வேலை செய்கின்றவர்களுக்கு டைப்ரைட்டர் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் விழி இழந்தவர்களுக்கு வசதிகள் இருக்கவேண்டும். விழி இழந்தவர்கள் அங்கே வந்து அந்த நூலகத்தை உபயோகிப்பற்கு

1986 சனவரி 10]

வேண்டிய சௌகரியங்கள் இருக்கவேண்டும். அந்த அடிப்படையிலே இந்த நூலகத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களிலே மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் இந்த பார்வையற்றவர்கள் தான் என்பதை நாம் எல்லாம் அறிவோம். இந்தப் பார்வை யற்றவர்களுக்காக, 'ராயல் அசோசியேசன் ஆப் பிளைண்ட்ஸ்' என்று சொல்கிற, இங்கிலாந்திலே உள்ள அந்த நிறுவனத்திட மிருந்து, இந்தியாவில் உள்ள மாணவர்களுக்குப் புத்தகங்கள் இலவசமாக பார்சலிலே, தபாலிலே அனுப்புகின்ற செய்திகளை நாம் பார்த்திருக்கிறோம். எனவே இதைப் போன்ற 'ராயல் அசோசியேசன் ஆப் பிளைண்ட்ஸ்'-உடன் தொடர்பு கொண்டு, மிக விரைவிலே இந்த பார்வையற்றோர்களுக்குத் தேவையான நூல்களை வாங்க அரசு முன் வருமா? மேலும் மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் சிறு தவறு செய்து விட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். 'பிரெய்லி டைப் ரைட்டர்' என்பது கண் பார்வையற்றவர்கள் அடித்து, அதை எழுதிக்கொள்வதற்காக உள்ள டைப் ரைட்டர். எனவே அந்த டைப்ரைட்டரை வாங்குவதற்கு, அரசு மானிய விலையிலோ அல்லது வெளிநாட்டிலே உள்ள உதவி நிறுவனங்களிலேயோ தொடர்பு கொண்டு, அதை வாங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கேயிருந்து உதவி வந்தாலும், அதைப் பெற்றுக்கொள்வதிலே அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அக்கறை எடுத்துக்கொள்வார்கள். பிரெய்லி டைப்ரைட்டரை விழி இழந்தவர்கள்தான் அடிப்பது எப்படி எனக்குத் தெரியும். நான் தவறு செய்யவில்லை. ஆனால் இந்தக் கேள்வி, பார்வை இழந்தவர்களுக்கு நூலகம் அமைப்பது பற்றியது. அந்த நூலகத் திலே என்னென்ன இருக்கவேண்டும் என்பதைப் பற்றி நான் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். அங்கே வேலை செய்பவர் களுக்கு இருக்கவேண்டிய டைப்ரைட்டர்களும் பிரெய்லி டைப் ரைட்டர்களாக இருக்கவேண்டும் என்றால், அங்கே வேலை செய்பவர்களும், விழி இழந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற பொருள்படும். அது தேவையில்லை. பார்வை உள்ளவர்கள் அங்கே வேலை செய்யலாம். அவர்கள் பயன்படுத்துகின்ற டைப் ரைட்டர்கள் அங்கே இருக்கும். ஆகவே விழி இழந்தவர்கள் படிப்பதற்கு, அவர்கள் அறிவு பெறுவதற்குத் தேவையான ஒலிப் பதிவு நாடாக்கள் அங்கே இருக்கும். அதை வைப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். அதுதான் அவர்களுக்குத் தேவையான ஸ்பெசல் லைப்ரரி.

[1986 சனவரி 10

நூலகங்களுக்கு வாங்கப்பெற்ற நூல்கள்

6—(*வினா எண். 2916)—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள நூலகங்களுக்கு தமிழ் நூல்கள் வாங்க செலவழித்த பணம் எவ்வளவு?

(ஆ) மற்ற மொழி நூல்கள் வாங்க செலவழித்த பணம் எவ்வளவு?

மாண்புமிகு. திரு செ. அரங்கநாயகம் : (அ) சுமார் 60 லட்சம்.

(ஆ) ஆங்கில நூல்கள் வாங்குவதற்காக சுமார் 2.3 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பயன்படுகின்ற தரமான நூல்கள் வாங்குவதற்கு நூலகங்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு, குழு அமைப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு நூல்கள் வாங்குகின்றபோது, மக்களுக்குப் பயன்படுகின்ற நூல்களை வாங்கவேண்டும் என்ற கருத்தை அரசு தெரிவித்து இருக்கிறது. குறிப்பாக மக்களுடைய சிந்தனை வளர்ச்சிக்குத் தேவையில்லாத அல்லது சமுதாயத்திற்கு விரோதமாகப் பயன்படுத்துகின்ற, அத்தகைய நூல்களை வாங்காமல் இருக்கவேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு மைய அரசு அளித்து வந்த உதவித் தொகையை அதிகரிப்பதற்கு நம்முடைய அரசு, மைய அரசுக்கு ஏதாவது பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு குறிப்பாக இதற்கு என்று பணம் தருவதாக என்னிடத்திலே உள்ள குறிப்பிலே இல்லை. பொதுவாக இந்த நூல்கள் எல்லாம் மக்கள் தருகின்ற லைப்ரரி செஸ் மற்றும் அதற்கு ஈடாக மாநில அரசு தருகின்ற பணத்திலே தான் வாங்கப்பட்டு நூலகங்கள் நடத்தப்படுகின்றன. நாம் சமீபத்திலே நூலக ஆணைக்குழு ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்த காரணத்தால், அரசே சம்பளம் தருகின்ற காரணத்தால், அந்த நூலகங்களுடைய பணத்திலே ஓரளவிற்கு அதைச் சரிகட்டுகின்ற காரணத்தால், புத்தகங்கள் வாங்குகின்ற

1986 சனவரி 10]

தொகை குறைந்து இருந்தது. இப்போது அரசும் கொஞ்சம் பணம் தர ஆரம்பித்து இருக்கிறது. இப்போது 60 லட்சம் ரூபாய் என்று சொன்னால், அதிலே 49 லட்சம் ரூபாய் நூலக நிதியிலே, அதாவது லைப்ரரி செஸ்ஸிலேயிருந்து வந்த பணம் ஆகவும், 11 லட்சம் மாநில அரசினுடைய மானியமாகவும் இருக்கும்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதில் தற்போது தமிழகத்தில் முன்னணியில் இருக்கின்ற ஒன்று இரண்டு நடிகர்களைப் பற்றிய புத்தகங்கள் அரசு செலவில் வாங்கப்பட்டு இருக்கிறது. இப்படி வாங்குவதால், ஏற்கனவே இளைஞர்கள் கவனம் சினிமாத் துறையில் அதிகமாக ஈர்க்கப்பட்டு, கெடுகிறார்களே என்று நாம் எல்லாம் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், இந்தச் சமுதாயத்திற்கு எந்தப் பயனும் அளிக்காத புத்தகங்களை வாங்குவதால் பணம் வீணாகாதா? அப்படிப்பட்ட புத்தகங்களை திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? எதிர்காலத்தில் அப்படிப்பட்ட புத்தகங்களை வாங்காமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம், அவர்கள் எல்லாம் உழைப்பால் உயர்ந்தவர்கள் என்றும் அந்தத் துறையால் அரசுக்கு நிறைய வருவாய் வருகிறது என்று சொல்வாரேயானால் அப்படி நிறைய வருவாய் வருகின்ற துறைகள் சமுதாயத்தில் நிறைய இருக்கின்றன. அவர்களை ஊக்குவிப்பதை விட்டுவிட்டு சினிமாத் துறையை மட்டும் ஊக்குவிப்பதால் அது பயன் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்கள் நூல்களை வாங்கும்போது அநேகமாக தமிழ்நாட்டில் உள்ள பல வெளியீட்டாளர்கள் வெளியிடுகிற நூல்களை வாங்குகிறார்கள். பல வெளியீட்டாளர்கள் இப்படி புத்தகப் வெளியிடும் தொழிலை நடத்திக்கொண்டு அதன் மூலம் வாழ்க்கையை நடத்துவதாகவும் ஆகவே அதிக புத்தகங்களை வாங்கவேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கையை வைக்கிறார்கள். அதேபோல் எழுத்தாளர்களும் கோரிக்கைகளை வைக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் அந்த அந்த ஆண்டு வெளியிடுகிற புத்தகங்களில் 400 காப்பிகள், 500 காப்பிகள் வாங்குகின்ற முறையில் நாம் அந்த நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்கிக்கொண்டு இருக்கிறோம். அப்படி வாங்கும்போது நல்ல புத்தகங்களைத்தான் வாங்கவேண்டும் என்றும் தவறான புத்தகங்களை, மக்களுக்கு கேடு விளைவிக்கின்ற புத்தகங்களை வாங்கக்கூடாது என்றும் வலியுறுத்திச் சொல்லி வருகிறோம். இதுவரையில் எந்த அரசும் அப்படி வலியுறுத்தவில்லை. இந்த அரசுதான் அப்படி வலியுறுத்தி வருகிறது.

[1986 சனவரி 10

திரு உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புத்தகம் வெளியிடுகின்ற தொழிலில் நிறையப்பேர் இருக்கிறார்கள். பொது நூலகங்களில் அதிகமான புத்தகங்கள் சமீப காலத்தில் வாங்கப்படாததால் அந்தத் தொழில் நசிந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி என்றால் அதற்கு மாற்று நடவடிக்கை என்ன எடுக்க அரசு உத்தேசித்து இருக்கிறது? மேலும் அதிகமான அளவில் அந்த நூல் நிலையங்களுக்கு நூல்களை வழங்கினால் மக்கள் பயன் அடைய முடியும் நிலைமை இருக்கிற காரணத்தால் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூலக ஊழியர்களை நாம் அரசு ஊழியர்களாக ஆக்கியபோது அவர்களுக்கு சம்பளம் தருகின்ற வகைக்காக நாம் பணம் ஒதுக்கிய நிலைமையில் புத்தகம் வாங்க இயலாத காரணத்தால் அந்த சந்தர்ப்பத்தில் புத்தகம் வாங்க வில்லை. அதனால் புத்தக வெளியீட்டாளர்கள் அப்போது தங்கள் புத்தகங்கள் விற்கவில்லை, பாதித்து இருக்கிறோம் என்கிற ஒரு கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் இப்போது புத்தகம் வாங்க ஆரம்பித்து இருக்கிறோம். 1984–85-ல் கூட ரூபாய் 60 லட்சம் நூல் நிலைய நிதியிலிருந்து ரூபாய் 49 லட்சமும், அரசு மானியமாக 11 லட்ச ரூபாயும் தந்து இருக்கிறோம். வருகின்ற ஆண்டில் இதை அதிகப்படுத்துகின்ற நிலையை இந்த அரசு நன்கு உணர்கிறது. இப்போது நிலைமை சீர்த்திருந்தி இருக்கிறது. இப்போது புதிய வெளியீட்டாளர்கள் கூட வந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு அதிகமான புத்தகங்கள் வெளியிட்டு இருப்பதாக எனக்குத் தகவல்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மக்களிடத்தில் நூலகத்திற்குச் சென்று படிக்கிற ஒரு நிலைமை அதிகரித்து வருகிற காரணத்தால் சென்னை போன்ற பெரு நகரங்களில் வட்டத்திற்கு ஒரு நூல் நிலையம் இருக்கிறது. ஆனால் அவைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் பாழடைந்த கட்டிடங்களில் இருப்பதால் போதிய இடம் இல்லாத காரணத்தால் படிப்பவர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த பாழடைந்த கட்டடங்களிலிருந்து அந்த நூலகங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமா, அல்லது அவைகளுக்கு வெள்ளை அடித்து சுத்தமாக வைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

1986 சனவரி 10]

படித்தால்தான் அறிவு பெற முடியும், நாம் எதிர்பார்க்கின்ற பலனும் பெற முடியும். குறிப்பாக சென்னையில் உள்ள 150 வட்டங்களில் வட்டத்திற்கு ஒரு புதிய நூலகம் கட்ட வேண்டும் என்று அதற்கு என்று டிசைன் போடப்பட்டு கட்ட வேண்டும் என்ற ஒரு திட்டத்தை 3 ஆண்டுகளுக்கு முன்னால் அறிவித்து அது இடம் கிடைக்காத காரணத்தால் அந்த 150 வட்டங்களில் முழுவதும் கட்டமுடியவில்லை. 30, 40 இடங்களில் இப்போது கட்டிடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டு இருக்கின்றன. அது மட்டும் அல்ல, ஒரு சர்க்கிளுக்கு ஒரு பெரிய நூலகம் கூடுமான வரை ஆராய்ச்சி மாணவர்களும் வந்து படிக்கிற அளவுக்கு ஒரு மாவட்டார நூலகம் அமைப்பதற்கு செயற்குறிப்பு இருந்து அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இப்போது ஏதாவது வட்டத்திலே புதிய கட்டிடம் உருவாக்கப்படவில்லை என்றால் அது இடம் கிடைக்காத குறையாக இருக்கிறது. இடம் தேடிக் கொண்டிருக்கிறோம். கிடைத்தால் உடனே கட்ட ஆரம்பித்து விடுவோம். பணம் இல்லை என்ற பிரச்சினை இல்லை.

(முற்பகல் 9-20)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நூல் நிலையங்களில் நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டன. இப்போது அவ்வாறு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நூலக ஆணைக்குழு என்பதில், பெரிதும் பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி ஆகிய அமைப்புக்களிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் பிரதிநிதிகளாக வருகிறார்கள். பணமும், முனிசிபாலிடி, பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன் ஆகியவை வசூலிக்கின்ற லைப்ரரி செஸ், நூலக ஆணைக் குழுவிற்கு நிதியாக வருகின்றது. தேர்தல் நடைபெறாது தள்ளி வைக்கப்பட்டு வந்து, இப்போது தேர்தல் அவைகளுக்கு அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால், தேர்தல் முடிந்தவுடன் உடனடியாக, முதல் வேலையாக அந்த நூலக ஆணைக் குழுக்கள் அமைக்கப்படும்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல நூலகங்களுக்குச் சென்று பார்த்தால், மிகச் சிறந்த மார்க்சிய விஞ்ஞான நூல்கள் அங்கே காணப்படவில்லை. தத்துவ ஞானம், பொருளாதாரம், அரசியல் முதலிய மார்க்சிய நூல்கள் எங்கேயும் காணக்கிடைக்கவில்லை. அத்தகைய நூல்கள் வாங்கப்படக்கூடாது என்று அரசு ஏதேனும் தடை விதித்து இருக்கிறதா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

[1986 சனவரி 16

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிவு பரவவேண்டும் என்றுதான் நாம் சொல்கிறோமே தவிர, அதற்கு தடை விதிக்க வேண்டும் என்று எந்த உத்தரவையும் அரசு போடவில்லை. எந்தக் குறிப்பையும் நாங்கள் சொல்ல வில்லை. அதற்காக போடப்பட்டு இருக்கிற குழுவையும் முழு சுதந்திரமாக இயங்க விட்டு இருக்கிறோம். ஆகவே, அவர்கள் பொறுக்கி எடுத்து அனுப்புகிற பட்டியல்படிதான் புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. மார்க்சிய கருத்துக்களைத் தடைப்படுத்த வேண்டும் என்கிற அவசியம் இல்லை. மார்க்சிய கருத்துக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நாடே சோசலிச நாடாக பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு பலதரப்பட்ட அரசியல் கருத்துக்களைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கான தார்மீகப் பொறுப்பை மேற்கொண்டுள்ள மாநில அரசு, பல்வேறு அரசியல் இயக்கங்களின், குறிப்பாக எதிர்க்கட்சிகளின் பத்திரிகைகளை நூலகங்கள் வாங்காமல் வைத்திருப்பதற்குரிய காரணம் என்ன? அவற்றை வாங்கி வைப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்து, அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் எதிர்க்கட்சிகள் பத்திரிகை என்று அல்ல, தவறான செய்திகளைப் போடுகின்ற பத்திரிகைகளை வாங்குவதில் சில சிரமங்கள் இருக்கின்றன.

சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து நகல்கள் பெறுதல்

7—(*வினா எண். 39)—**திரு டி. ஆர். வேங்கடரமணன், திரு கே. முத்துவேல்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தில் நகல் பிரதிகள் (copy) பெற தாமதமாவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1986 சனவரி 10]

மாண்புமிகு திரு கி. பொன்னையன்: (அ) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் மற்றும் அதன் ஆணைகளின் நகல்கள் கீழ்க்காணும் மூன்று முறைகளில் வழக்காடும் மக்களுக்கு (Litigant Public) வழங்கப்படுகின்றன :—

(i) சுருக்கெழுத்து நகல் (Steno-Copy)
(ii) கார்பன் நகல் (Carbon Copy) மற்றும்
(iii) சான்றிட்ட நகல் (Certified Copy)

முதல் இரு முறைகளின் மூலம் நகல்கள் வழங்கப்படுவதில் கால தாமதம் ஏற்படுவற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

சான்றிட்ட நகல்கள் (Certified Copies) வழங்கப்படும் வகையில் ஏற்படக்கூடிய காலதாமதத்தை தவிர்த்து, நிலுவையிலுள்ள வைகளைத் துரிதமாக வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் கண்டிப்பான உத்திரவுகளைப் பிறப்பித்துள்ளது.

(ஆ) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் மற்றும் அதன் ஆணைகளின் நகல்களை வழங்குவதற்கு ஜெராக்ஸ் (Xerox) காப்பி போன்ற முறையைக் கடைபிடித்து இதுபோன்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தை அரசு கேட்டுக் கொண்டு, அதற்கான நிதியும் அளித்துள்ளது. உயர்நீதிமன்றமும் அது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Justice delayed is Justice denied" என்று சொல்வார்கள். தீர்ப்புகள் வழங்கப்பட்ட பிறகும் கூட, இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்திலே காலதாமதத்தைப் பற்றிச் சொல்வோமேயானால், சர்டிஃபைடு காப்பிகள் பெறுவதற்கு இரண்டு ஆண்டுக் காலமும், கார்பன் காப்பி பெறுவதற்கு 9 மாதங்களும், எமர்ஜென்ட் காப்பி, அதாவது அவசரமாக வேண்டும் என்று சொல்லிப் பெறும் Copy Application—காப்பிக்கு ஓராண்டுக்கு மேலும், ஆட்டோ காப்பி பெறுவதற்கு மூன்று வாரங்களும் ஆகும் அவல நிலை சென்னை உயர்நீதிமன்றத்தைப் பொறுத்த வரையிலும் இன்றைக்கு இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன வென்றால், 16 நீதி அரசர்கள் இருந்த இடத்தில் எத்தனை காப்பிஸ்டுகள் இருந்தார்களோ, அத்தனை காப்பிஸ்டுகள்தான் இருக்கின்ற காரணமாகவும், டிராஃப்டிங் செக்ஷனிலே ஏற்படு கின்ற கோளாறுகளின் காரணமாகவும்தான் இந்த காப்பிகள் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகின்ற நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, சென்னை உயர்நீதிமன்றத்தில் மட்டு மல்ல. பாரதத்தில் உள்ள எல்லா உயர்நீதிமன்றங்களிலும் இருக்கின்ற ஒரு பிரச்சனையாக இது கருதப்பட்டு இந்தப் பிரச்சனையை களைய துரித நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. நமது உயர்நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் இந்தக் குறையைப் போக்குவதற்காகத்தான் இந்தியாவி லேயே முதன்முதலாக 'ஜெராக்ஸ் காப்பி மெஷின்களை' வழங்க, உயர்நீதிமன்றத்திற்கு வழங்க நம்மாநிலத்தில்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். காப்பிஸ்ட் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உயர்நீதிமன்றங்களிலும் காலதாமத மாகிறது என்ற ஒரே காரணத்திற்காக சென்னை உயர்நீதி மன்றத்திலும் காலதாமதம் ஆக வேண்டும் என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த 'காப்பியிங் சார்ஜஸ்' என்பது—நீதிமன்றங் களால் வழக்காடுபவர்களுக்கு இனாமாகத் தரப்படுவதல்ல— அதற்குரிய கட்டணங்களைப் பெற்றுக்கொண்டுதான் இந்தக் காப்பீஸ் கொடுக்கப்படுகின்றன. இப்போதிருக்கிற சிவில் ப்ரொஸீஜர் கோடில் கூட இனாமாகவே கொடுக்கவேண்டுமென்ற புதிய கருத்து ஒன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்நிலையில் தன் வழக்கு முடிந்து, அவ்வழக்கு குறித்து நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின் நகல் வேண்டுமென்று அதற்காகக் கட்டணம் செலுத்தி காத்துக்கொண்டிருக்கிற காரணத்தால், மேலும் இதிலிருந்து அரசுக்கு அதிக வருமானம் கிடைப்பதால் இந்த காப்பீயிங் செக்ஷனுக்கு வேண்டிய மெஷின்களையெல்லாம் வாங்கிக் கொடுத்து-பல ஆண்டுகளாக இது பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிற நிலையை மாற்றி—புதிய கருத்துக்களை, புதிய முறைகளை அமைத்து இந்தப் பணியினை முடுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதிய தகவல் கிடைக்காமல் கருத்துக்களைக் கூறுகிறார்கள் எனக் கருதுகிறேன். ஜெராக்ஸ் காப்பி மெஷினை இந்தியாவிலேயே முதன்முதலாக சென்னை உயர்நீதிமன்றத்தில்தான் வழங்கி யிருக்கிறோம் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். வழங்கப் பட்டு விட்டது. மேலும் ஒரு மெஷின் கேட்டிருக்கிறார்கள். அதையும் தருவதற்கு அரசாங்கம் தற்போது முடிவு எடுத்திருக் கிறது. காப்பிஸ்ட்ஸ் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு தீர்ப்பு வழங்குகிறபோதும் ஸ்டெனோ அதைச் சுருக்கெழுத்தில் எடுத்து பிறகு தட்டச்சு செய்து வரவேண்டியிருக்கிறது. அடுத்தபடியாக கார்பன் காப்பிகள்

எல்லாம் தரவேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தினால் தாமதம்' என்பது தவிர்க்கமுடியாது ஏற்பட்டு விடுகிறது. இதைப் போக்குவதற்காகத்தான் ஜெராக்ஸ் காப்பி போன்ற நவீன முறைகளைப் புகுத்தவேண்டும் என்ற முறையில் நடைமுறையில் வேண்டியதைச் செய்து வருகிறோம். காப்பிஸ்ட்களின் எண்ணிக் கையை அதிகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று ஏற்கனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன்.

திரு. மா. இன்னாசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் மேல் முறையீடுகள் செய்கின்றபோது ஜெராக்ஸ் காப்பியை அவர்கள் ஆதண்டிகேட்டட் காப்பியாக ஒப்புக்கொள்வதில்லை. அதற்காக 'சிவில் ரூல்ஸ் ஆப் ப்ராக்ட்டீஸ்'-க்கு நாம் திருத்தம் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே ஜெராக்ஸ் காப்பிகளை அப்பீல்களில் கோர்ட் அங்கீகாரம் செய்துகொள்வதற்கேற்ப 'சிவில் ரூல்ஸ் ஆப் ப்ராக்டீஸில்' தகுந்த மாற்றங்கள் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது; நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

சத்தியமங்கலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம்

8—(*வினா எண். 4140)—திரு. ஈ. வே. இ. ச. இளங்கோவன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தில் முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : (அ மற்றும் ஆ) பெரியார் மாவட்ட சத்தியமங்கலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்று அமைக்க அரசு தற்போது ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஈ. வே. இ. ச. இளங்கோவன் : தலைவர் அவர்களே, சத்தியமங்கலத்தில் முன்சீப் கோர்ட் அமைக்க அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது என்பதற்காக அரசுக்கும் அமைச்சர் அவர் களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே அமைய இருக்கிற அந்த முன்சீப் கோர்ட்டுக்கு சொந்தமாக கட்டட்டங்கள் ஏற்படுத்தவும் அங்கிருக்கிற நீதிபதிகளுக்கு குவார்ட்டர்ஸ் கொடுக்கவும் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது?

[1986 சனவரி 10

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தாற்காலிகமாக வாடகைக் கட்டடங்களில் அவை அமர்த்தப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் அமர்த்துவதால்தான் அங்கே நீதி சில சமயங்களில் தடுமாறுகிறது என்ற செய்தியை அறிகிறோம். ஆகவே சத்தியமங்கலத்தில் அரசாங்கம் விரைவாக அவற்றிற்கு சொந்தக் கட்டடங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, சத்தியமங்கலத்தில் தாளவாடி, கடம்பூர்குன்று போன்ற மலைப்பிரதேசங்களில் காம்ப் கோர்ட் அல்லது மொபைல் கோர்ட்டுக்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் நீதிமன்றங்கள் இருப்பது உகந்ததல்ல என்பதுதான் அரசாங்கத்தின் கருத்தும். அதற்காகத்தான் மாநிலங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கித்தர வேண்டும், நீதிமன்றங்களின் செலவினத்தை 'கோர் செக்டரில்' கொண்டு வந்து அதிக நிதி தாவேண்டுமென்ற கோரிக்கையை மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி இருக்கிறது.

(முற்பகல் 9-30)

சத்தியமங்கலம் மலைப்பகுதி நிலமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை 83-லே எழுப்பப்பட்டு, 84-லே அது உயர்நீதி மன்றத்தால் ஆய்வு செய்யப்பட்டு, அவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது ஆங்கே நீதிமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. கேம்ப் கோர்ட் தற்போது அங்கு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்சீப் கோர்ட்டின் அதிகார வரம்பை திடீரென்று ரூ. 5000-த்திலிருந்து ரூ. 15,000 என்று உயர்த்தியதன் காரணமாக, இன்றைக்கு முன்சீப் கோர்ட்டுகளில் வழக்குகளின் எண்ணிக்கை திடீரென்று உயர்ந்துள்ளது. அதற்கு மேல் வழக்குகள் நடத்துகின்ற சப்-கோர்ட்டுகளில் வழக்குகளின் எண்ணிக்கை குறைந்திருக்கின்ற நிலையைக் கருத்தில் கொண்டு, உயர்நீதி மன்றத்தின் ஆலோசனையுடன், ரூ. 15,000 என்றிருக்கும் அந்த அதிகார வரம்பை ரூ. 10,000ஆக குறைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

1986 சனவரி 10]

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்சீப் கோர்ட்டின் அதிகார வரம்பை ரூ. 5,000-த்திலிருந்து ரூ. 15,000-ஆக உயர்த்தியதுகூட உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில்தான்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, புதியதாக முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வந்து அமைச்சர் அவர்கள் புதியதாக கோர்ட்டுகள் உருவாவதற்கு புதிய கட்டிடங்களைக் கட்டுவது பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே உள்ள முன்சீப் கோர்ட்டுகளில் நீதிபதிகள் நியமிக்கபடாமலிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் முன்சீப் கோர்ட்டுகளில் நீதிபதிகள் ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றன. அதற்காக வக்கீல்கள் சங்கத்தார் உண்ணாவிரதம் இருந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அம்மாதிரி நீதிபதிகள் இல்லாத கோர்ட்டுகளிலே நீதிபதிகளை நியமிக்கின்ற உத்தரவை உடனடியாக இடுவார்களா ?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக 48 மாவட்ட முன்சீப் கோர்டடுகளிலே நீதிபதிகள் தேவைப்படுகின்ற காரணத்தினால், உயர்நீதி மன்றம் அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, தற்போது சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு முடிந்திருக்கிறது. விரைவில் சில இடங்களுக்குள் நிரப்பப்படும்.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலத்திலே முன்சீப் கோர்ட்டு அமைத்ததற்காக மிக்க நன்றி. ஆனால், ஏற்கனவே இருக்கின்ற முன்சீப் கோர்ட்டுகளிலே நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். காமராஜ் மாவட்டத்திலே ஆறு நீதிபதிகள் ஸ்தானம் காலியாக இருக்கின்றது. இதையெல்லாம் நிரப்பினால் ஏழை மக்களுக்கு கீழ் மட்டத்திலேயே நீதி கிடைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, அரசு உடனடியாக அங்கே நீதிபதிகளை நியமிக்குமா ?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபார்டினேட் ஜுடிஷியல் ஆபீசர்கள் உயர்நீதி மன்றத்திலே தொடர்ந்த வழக்கின் அடிப்படையில்தான் சில நீதி மன்றங்களில் நீதிபதிகளை நியமனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அதைப் போக்கத்தான் புதியதாக தற்போது 60 டிஸ்டிரிக்ட் நீதிபதிகளை சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுத்து, நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் ஏற்கனவே சில தினங்களுக்குள் இப்பதவிகள் நிரப்பப்படும் என்று சொன்னேன்.

[1986 சனவரி 10

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில், நிலக்கோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்டு அட் வத்தலகுண்டு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டு, அன்றைக்கு 85-க்குள் அது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பதில் அளித்திருந்தும்கூட, இதுவரையில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டு இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, உயர்நீதி மன்றத்தின் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் கருத்து வருவதற்கு முன்னால், இதைப் பிரத்தியேகமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று நிதித் துறைக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டூ-சென்ட்ரலைசேஷன் பாலிசி அடிப்படையில் தாலுகாவிற்கு ஒரு முன்சீப் கோர்ட்டு அமைக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்ட அளவிலும் ஆங்காங்கே மக்களுக்கு நீதி கிடைத்தாக வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், 'இன்டக்ரேஷன் ஆப் ஜுடிஷியரி' என்ற முறையில் நீதித் துறையின் கீழ்மட்ட ஒருங்கிணைப்பு திட்டத்தை சட்டத்தின் மூலம் ஏற்கனவே கொண்டு வந்திருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்த அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும். உயர்நீதி மன்றத்துடன் கலந்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

குடந்தை நகரில் நடைபாலம்.

9–(*வினா எண். 1464)—திரு. இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடந்தை நகர் துவரங்குறிச்சி கிராமத்தையும் அண்ணாலக்கிரகாரம் கிராமத்தையும் இணைக்கும் நடைபாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதற்கு மாற்றாக காங்கிரீட் பாலம் போட திட்டமிடப்பட்டு ''டான்சி''யில் அதற்கு தேவையான இரும்பு தளவாடங்கள் தயார் செய்யப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) கால தாமதத்திற்குக் காரணம் என்ன ?

1986 சனவரி 10]

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: (அ மற்றும் ஆ) வினாவில் குறிப்பிடும் நடைபாலம் அமைக்க தன்னிறைவுத் திட்டத்தில் 1982–83-ம்ஆண்டில் அரசு நிறுவனமான 'டான்சியில்' இரும்பு தளவாட சாமான்களுக்கு குடந்தை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. பிறகு வேலையை துவக்க முடியாத நிலையில் வேலைக்கான ஒதுக்கீட்டை வேறு வேலைக்கு ஒன்றியத்தில் செலவு செய்யப்பட்டது. தற்போது மேற்கூறிய இரும்பு தளவாடங்களைக்கொண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பணி எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்டதற்கும், கேள்வி சட்ட மன்றத்திலே வருவதற்கும் இடையில் அந்தப் பாலம் கட்டப்பட்டு முடிக்கப்பட்டது. ஆகவே அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வந்துள்ள விவரம் சரியாக இல்லை என்று கருதுகிறேன். இருந்தாலும். இந்த காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு, அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் பல இலட்சக்கணக்கான மக்கள் மூன்று ஆண்டுகளாக அவதிப்படுகிறார்கள். ஆகையால் அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் பாலம் அமைக்கப்பட்டதே யொழிய அதற்கு சரியான அப்ரோச் ரோடு போடப்படவில்லை, விளக்குகள் போடப்படவில்லை. அவற்றையும் தொடர்ந்து அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கிறபோது இது கட்டப்படாமல் இருந்திருக்கிறது. பதில் வரும்போது கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். நான் பதில் சொல்கிறபோது கட்டி முடித்திருக்கிறார்கள். எனவேதான் அதற்கான விளக்கத்தை முழுமையாகச் சொல்லமுடியவில்லை. ஆக அந்தக் காரியம் விரைவாக நடந்திருக்கிறது. இந்த காலதாமதத்திற்கான காரணம் என்ன என்பதை அறிவதற்கான நடவடிக்கையை உள்ளாட்சித்துறையிலே தனியாக எடுத்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படி எடுக்கவில்லையென்றால், நிச்சயமாக அதற்கான நடவடிக்கையை எடுப்பேன். மேலும் சில முன்னேற்றங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதாவது விளக்கு வசதி போன்ற மற்ற வசதிகளைக் கேட்டார்களே, அவை தொடர்ந்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

[1986 சனவரி 10

திருவள்ளுவர் கழகப் பேருந்துகளில் ''வீடியோ''

10—(*வினா எண். 2183)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: திரு க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் கழகப் பேருந்துகளில் ''வீடியோ'' பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சென்னை பெங்களூர் (வழி, சித்தூர், கோலார்) மற்றும் சென்னை எர்ணாகுளம் வழித்தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தற்போது இயக்கும் மூன்று பேருந்துகளில் வீடியோ பொருத்தப்பட்டுள்ளது. மற்ற வழித் தடங்களில் செல்லும் பேருந்துகளில் தடத்தின் தன்மைக்கு ஏற்ப எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஓடுகின்ற தனியார் வண்டிகள் அத்தனையிலேயும் வீடியோக்கள் பொருத்தப்பட்டு அதனால் அதிக இலாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே அனைத்து வழித் தடங்களிலும் ஓடுகின்ற திருவள்ளுவர் பேருந்துகளில் வீடியோக்கள் பொருத்தப்படுகின்றனவா? இப்போது பொருத்தப்படுகின்ற பேருந்துகளில் தமிழக அரசின் செய்திப் படம், தமிழக அரசின் சாதனைகள் குறித்து படங்கள் காண்பிக்கப்படுகின்றன. என்னென்ன வகைப் படங்கள் காண்பிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: தலைவரவர்களே, மற்ற பேருந்துகளைப் பொறுத்தவரை இதைப் பொருத்துவது என்பது உடனடியாக முடியாத காரியம்தான். எனவே படிப்படியாக தேவையான இடங்களில் நடவடிக்கை எடுக்கலாம் என்று ஏற்கனவே சொன்னேன். காரணம் ரூ. 26,000-லிருந்து ரூ. 30,000 வரை ஒவ்வொரு வீடியோவிற்கும் செலவாகிறது. எனவே எதிர் காலத்தில் தனியார் துறையிலும் இந்த வீடியோக்களைப் பொருத்தியிருக்கிறார்கள் என்பதை மனதிலே வைத்து நடவடிக்கை எடுக்கலாம். படங்களை பொறுத்தவரை மக்களுக்கு எது எது தேவையான படம் என்பதை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அவ்வப்போது கருதுகிறதோ, அதைக் காட்டுகிறார்கள். தற்போது மூன்று பேருந்துகளில் அவ்வாறு செயல்படுகிறது. நம் முடைய தமிழகத்தினுடைய செய்திச் சுருள்கள் எவ்வப்போது கிடைக்கிறதோ, அதற்கேற்பத்தான் அவைகளை காட்டமுடியும். காரணம் 16 எம்.எம். திரைகள் போன்றவற்றிலேதான் அவைகள் காட்டப்படவேண்டி வரும். வீடியோக்களில் அவைகளைக் காட்டுவது சிரமமாக இருக்கிறது. எனவே எங்கெங்கே இடைக் கிறதோ, அங்கங்கே காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1986 சனவரி 10]

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்திற்கு முன்னர் அளிக்கப்பட்டுள்ள டேப் ரெக்கார்டர்கள் பழுதுபட்டு விட்டதை சரிப்படுத்தி, அவைகளை மீண்டும் அந்த திருவள்ளுவர் பேருந்துகளில் பொருத்த நட வடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: தலைவர் அவர்களே, டேப் ரிக்கார்டர்கள் அடிக்கடி பழுதுபட்டு விடுகின்றன. அதற்குக் காரணம் பயணிகள் அவைகளை பலமுறை உபயோகப்படுத்துவது தான். பேருந்துகள் செல்லுகின்ற போது, ஒவ்வொரு பயணியும் என்னென்ன விரும்புகிறார்களோ, அதற்கேற்ப அவைகளை திருப்பித் திருப்பி போடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. அதன் காரணத்தால் அவைகள் அடிக்கடி பழுதுபட்டு விடுகின்றன. பழுதுபட்டு விட்டன என்ற காரணத்தால் அவைகளை எடுத்து விட்டிருப்பார்கள். ஆனாலும் இன்னும் பல தடங்களில் அவைகள் பொருத்தப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. எனவே எந்தெந்த பேருந்துகளில் அவைகள் கழற்றப்பட்டிருக்கின்றனவோ, அங்கே அந்த டேப் ரிக்கார்டர்களை மீண்டும் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலிலேயிருந்தும், கன்னியாகுமரியிலேயிருந்தும் சென்னைக்கு வருகிற விரைவு பேருந்து வழித் தடம் மிகவும் நீள மாக இருக்கிற காரணத்தால், இந்த வழித் தடத்தில் ஓடுகின்ற பேருந்துகளில் முன்னுரிமை அளித்து வீடியோக்களைப் பொருத்த அரசு முன்வருமா?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தடம் எவ்வளவு நீளமாக இருந்தாலும் படம் ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் தான ஓடும். தேவையெனில் அந்த நிலைமைகளைப் பார்த்து எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. இ. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மெட்ராஸ்-டு-எர்ணாகுளம் ரூட் நம்பர் 666 என்ற வழித்தடத்தில் வீடியோ கோச் இருப்பதாகச் சொன்னார்கள். 20-12-85 அன்று எர்ணாகுளம் போகிற பேருந்தில் நான் ஒரு பயணியாக இருந்தேன். அதில் வீடியோ புரவிஷன் இல்லை என்று நினைக்கிறேன். அது தற்காலிகமாக நீக்கப்படடிருக்கிறதா அல்லது நிரந்தரமாகவே அகற்றப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன அன்றைக்குப் பார்த்து ஏதாவது வீடியோ ரிப்பேராகியிருந்தால் அதை அகற்றியிருப் பார்கள். அல்லது அந்த வண்டியே ரிப்பேராகியிருந்தால் ஸ்பேர் வண்டி போயிருக்கும். இப்போது இருப்பதாகத்தான் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதையும் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன்.

போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள்.

*11—(*வினா எண். 2454)—திரு.எஸ். இராசாராமன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கென்று பயிற்சிப் பள்ளிகள் எத்தனை இயங்குகின்றன ?

(ஆ) அவைகள் எங்கெங்கு செயல்படுகின்றன ?

(இ) எத்தனை பேர் பயிற்சி பெறுகின்றனர் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *(அ)* 12 பயிற்சிப் பள்ளிகள் இயங்குகின்றன.

(ஆ) பொள்ளாச்சி, விழுப்புரம், இராணித்தோட்டம், காரைக்குடி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, மதுரையில் இரண்டு, குரோம்பேட்டை, கும்பகோணம், வேலூர்.

(இ) சுமார் 270 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்படுகிற ஓட்டுநர்கள் எந்தத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அவர்களுக்கு எவ்வளவு ஸ்டைபண்ட் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது 160 செண்டிமீட்டர் உயரத்திற்கு மேலே இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எவ்வளவு மார்பளவு இருக்க வேண்டுமென்ற தகவல் என்னிடத்திலே இப்போது இல்லை. அவர்கள் 8-வது தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமென்று வைத்திருக் கிறார்கள். நாம் ஐ. ஆர். டி. மூலமாக டிரெயினிங் கொடுக்கிறோம். அதற்கு எஸ். எஸ். எல். சி. என்று கல்வித் தகுதியை வைத்திருக் கிறார்கள். அந்த அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். ஸ்டைபண்ட் எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லாத காரணத்தினாலே தான் பின்னாலே அதைத் தெரிவிக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் பயிற்சிக்காகவும் நடத்துநர் பயிற்சிக்காகவும் அப்ரன்டைஸ் டிரெயினிங் 2 ஆண்டுகள் கொடுக்கப் படுகிறது. தனியார் துறையிலே 2, 3 மாதங்களிலே அந்த டிரெயினிங்கைக் கொடுத்துவிட முடிகிறது. அமைச்சர் அவர்கள் கூட 20 நாட்களிலே கற்றுக்கொண்டுவிட்டதாக எல்லோரிடமும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது இந்த டிரெயினிங் கிற்காக இரண்டு ஆண்டுகள் தேவையில்லை என்பதால் ஒரு ஆண்டில் அதைக் கொடுத்தால் அவர்கள் விரைவாக வேலை பார்த்து சம்பளம் பெறமுடியும். ஆகவே ஒரு ஆண்டாக அதைக் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் அதிகமாக ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் நல்ல பயிற்சி பெறவேண்டுமென்ற முறையிலே அதிகமான நாட்கள் பயிற்சி எடுத்துக்கொள்ளவேண்டு மென்று வைத்திருக்கிறார்கள். 10, 20 நாட்களில் பயிற்சி பெறுவது என்பது முடியாத காரியம். அது வேண்டுமானால் கார் போன்ற சிறிய வாகனங்களை ஓட்டுவதற்குப் போதுமான தாக இருக்கலாம். ஆனால் பேருந்து போன்ற பெரிய வாகனங் களை ஓட்டுவதற்கு அதுவும் திரு. இராமலிங்கம் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் வருகிற வழித் தடங்களிலே அவர்களுக்கு ஆபத்து இல்லாமல் ஓட்டவேண்டுமென்றால் இரண்டு ஆண்டுகள் பயிற்சி தேவைப்படுகிறது. ஆகவே அதை மாற்றுவது முடியாத காரியம்.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு கொடுக்கப்படுகிற ஸ்டைபண்ட், மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால் அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கணக்கையே நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு அது தெரிந்திருந்தால் அதைச் சொல்லியிருந்தால் அதை அதிகமாக்கலாமா அது குறைவா இல்லையா என்பதைச் சொல்லியிருக்கலாம். அவர்களுக்கு ஒரு வாய்ப்பு—மற்றவர்களுக்கு கிடைக்காத வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது—கிடைத் திருக்கிறது. அவர்கள் பயிற்சி பெற்றவுடன் வேலையும் கிடைக் கிறது. அப்படியிருக்கிறபோது இதைப்போய் பெரிய பிரச்சினை யாக கருதக்கூடாது, அதிலே சேருவதற்கு இடம் கிடைத்ததற்குப் பிறகு ஸ்டைபண்டைப் பற்றிப் பெரிதாகக் கருதக்கூடாது.

திரு. ஆர். நல்லசாமி: தலைவர் அவர்களே, அந்தப் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் உண்டா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே காலியிடங்கள் இருக்கிறவரை உத்திரவாதம் உண்டு.

திரு பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு சம உரிமை வழங்கவேண்டுமென்ற அடிப்படையில் காவல் துறையில் ஆண் போலீசும், பெண் போலீசும் இருக்கிறார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே ஆண் நடத்துநர்களும் இருக்கிறார்கள், பெண் நடத்துநர்களும் இருக்கிறார்கள். அதைப்போலவே ஆண் ஓட்டுநர்கள் இருக்கிறார்கள் பெண் ஓட்டுநர்கள் வரக்கூடிய முறையிலே பயிற்சி அளித்து அவர்களை நியமிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் களிடத்தில் யாராவது இருந்தால் பரிந்துரை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளுக்கு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இருப்பதைப்போல - தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து வாகனங்களையும் ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் சரியான பயிற்சி பெறாமல் ஓட்டுவதால்தான் ஆங்காங்கே விபத்துகள் நிறைய நடைபெறுகின்றன. ஆகவே, அரசே பயிற்சிப் பள்ளியை ஆரம் பித்து, ஆட்டோ முதல் ஹெவிவெஹிகிள்ஸ் வரையில் அனைத்து வாகனங்களையும் ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு அரசு பயிற்சி கொடுத்து, சாலை விதிகளையும் முறையாக அவர்கள் நடை முறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தால் விபத்துக்கள் குறையும் என்ற கருத்து இருக்கிறதே, எனவே அந்த முறையை நடைமுறைப் படுத்துவதில் கொஞ்சம் சிரமம் இருந்தால்கூட, இதைப்பற்றிப் பரிசீலனை செய்து இந்த முறையை விரிவு படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையிலே சமீப காலத்திலே இதையெல்லாம் பார்த்து ஆய்வு செய்துதான் அரசாங்கமே தகுந்த முறையிலே முறையாக இந்தப் பயிற்சியை கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து இன்றைக்கு ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலேயும் பயிற்சிப் பள்ளி நிறுவப்பட்டுள்ளது; தனியாக நிறுவப்பட்டால் அதைப் பராமரிப்பதிலும், பணியாற்றுவதிலேயும் பிரச்சனைகள் எல்லாம் அதிகமாகும் என்று கருதுவதால்தான் போக்குவரத்துக் கழகங் களிடம் இது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக இதை விரிவாக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு டிரைவர்கள் தேவையோ அவ்வளவு பேர்களையும் உடனடியாக உருவாக்குவதற்கு முடியாது. இருந்தாலும் எதிர்காலத்தில், காலப்போக்கில் தமிழ்நாட்டில்

தனியார்களுக்கும். அரசாங்கத்திற்கும் எவ்வளவு டிரைவர்கள் தேவையோ அத்தனை பேர்களையும் இதன் மூலம் உருவாக்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்ற அந்த உணர்வின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது, படிப்படியாக அவர்கள் சொல்லுகின்ற பிரச்சனை தீர்க்கப்படும். இப்பொழுது உள்ள ஓட்டுநர்களுக்கு பயிற்சி கொடுப்பது கொஞ்சம் சிரமம். ஏனென்றால், ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் பயிற்சி கொடுப்பது எப்பது கடினமாக இருந்தாலும் எதிர்காலத்தில் புதிய ஓட்டுநர்களை உருவாக்கும்பொழுது அவர்கள் தாமானவர்களாக இருந்தால் இந்தப் பிரச்சனை ஓரளவுக்குத் தீர்ந்துவிடும்.

முதுகுளத்தூரில் போக்குவரத்துக் கழக டிப்போ.

12—(*வினா எண். 3758)—திரு கே. முத்துவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் டிப்போ கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், துரித நடவடிக்கை எடுத்து கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: (அ) ஆம்

(ஆ) துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு கே. முத்துவேல்: பேரவைத் தலைவரவர்களே, முதுகுளத் தூரில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் டிப்போ கட்டும் வேலை மிகவும் தாமதமாக நடக்கிறது. அதை விரைவு படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவரவர்களே, இதையே வாய்ப்பாக எடுத்துக்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு கே. முத்துவேல்: பேரவைத் தலைவரவர்களே, தற்போது கரும்பவுண்ட் சுவர் மட்டும்தான் கட்டப்படுகிறது. ஆபீஸ், ஒர்க் ஷாப் ஆகியவைகளையும் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஜனவரி 10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தப் பணிமனைக்கு என்னென்ன தேவையோ அத்தனையையும் செய்ய வேண்டுமெனபதுதான் நோக்கம். இந்த காம்பவுண்ட் வால் கட்டி முடிக்கப்பட்டவுடன் தொடர்ந்து அதையும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாப்பாரப்பட்டியில் அருந்ததியர்களுக்குக் குடியிருப்புகள்

13—(*வினா எண். 1515)—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் அருந்ததியர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அருந்ததி யர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக பட்டா கொடுத்து பல மாதங்கள், பல வருஷங்கள் ஆகின்றன. அந்த அருந்ததியர்களுக்குத் தனியாக வீடு கட்டிக் கொடுத்தால் இந்தப் புரட்சித் தலைவர் அரசை அந்த அருந்ததியர்கள் மிகவும் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்து, அதற்குத் தனியாக அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 1985-86-இல் ஆட்சியாளரிடமிருந்து செயற் குறிப்பு அனுப்பப்பட வில்லை. அப்படி அனுப்பப்பட்டிருந்தால் வீடு கட்டும் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படும். இந்த ஆண்டிலே அனுப்பி வைக்கப்பட்டால் அது சேர்த்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் அரிசனங் களுக்கு பல ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டித் தந்திருக் கிறார்கள். அரிசனங்கள் இருக்கின்ற இடத்தில் அருந்ததியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தனியாக வீடுகள் கட்டு வதில்லை. மாவட்ட அரிசன நலத்துறை, அருந்ததியர்களுக்குத் தனியாகப் பட்டா கொடுத்து, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

1986 ஜனவரி 10]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த ஆதி திராவிடர்களே, அரிசனங்கள் மற்றும் 3 வகையான பிரிவினராக இருந்தாலும் ஒரே இடத்தில் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவைக் போட்டிருக்கிறோம். அது நடை முறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது அரிசன நலத் துறையில் ஆதி திராவிட மக்களுக்குக் கட்டப்படுகின்ற வீடுகள் ரூ. 6,000 மதிப்பீட்டில் கட்டப் படுகின்றன. அந்தப் பணம் போதுமானதாக இல்லாததால், அவை கட்டப்படுவது பாதியில் நின்று விடுகின்றன. சில வீடுகள் பாதியில் இடிந்தும் போய்விடுகின்றன. அதை ரூ. 10,000 அளவில் உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ? 3 ஆண்டுக் காலத்தில், படிப்படியாக ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் இல்லை என்ற நிலையைப் போக்குகின்ற வகையில், 'மாஸ்டர் பிளான்' என்ற வகையில், ஒரு திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 6,000-ஐ, ரூ. 10,000-ஆக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது. 'மாஸ்டர் பிளான்' என்ற திட்டத்தின் மூலமாக, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் கூட, ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோருக்கு, வருகின்ற ஆண்டில் 5 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி நல்ல திட்டங்களை, இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தீட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறுடைக்குக் கைத்தறித் துணி.

14—(*வினா எண். 3892)—திரு கே. ஆர். கணபதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி மாணவ மாணவியர்கள் சிறுடைக்கு கைத்தறி துணி உபயோகப்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (அ & ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் அல்லது அரசினர் உறைவிடங்களில் தங்கிப் பயிலும், மாணவ மாணவியர்

அனைவருக்கும், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ஜோடி உடைகள் சீருடையாக வழங்கப்படுகின்றன. தற்போது அமுலில் உள்ள அரசாணைகளின் படி, இவற்றுக்கான துணிகள் யாவும் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி நிறுவனம் மற்றும் கதர் நிறுவனத் தாரிடமிருந்து பெறப்படுகின்றன.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைத்தறித் துணியை வழங்குவதாக அறிவித்தார்கள். தமிழ் நாட்டில் அப்படி துணி பெற்றுகின்ற ஆதி திராவிடர், பழங் குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு என் பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: அதற்கான குறிப்பு என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாகக் கேள்வி போட வேண்டுமென்று சொன்னார்கள். கைத்தறி துணி ஆதி திராவிட சமுதாய மாணவர்களுக்கு எத்தனை கோடி ரூபாய்க்கு வழங்கப்படுகிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணி எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப் படுகிறது என்ற குறிப்பு இல்லையென்கிறபொழுது, துணி எத்தனை கோடி ரூபாய்க்கு வழங்கப்படுகிறது என்கிற குறிப்பும் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

தூத்துக்குடி மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை.

15.—(*வினா எண். 808)—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் இயங்கி வந்த மீன் பதப்படுத்தி டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலை மூடிக் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அதனை மீண்டும் இயங்க வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) ஆம்.

(ஆ) அதனை மீண்டும் இயங்க வைப்பது அரசுக்கு இலாப கரமாக இருக்காது எனக் கருதப்பட்டதால் அரசு அதனை மீண்டும் இயங்க வைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங் கிருக்கும் இயந்திரங்களை விவசாய பல்கலைக்கழகத்திற்கு மாற்ற ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்கள் பிடிக்கும்போது, இரால் மீன்கள் அதிகமாக அந்தப் பகுதியிலே கிடைப்பதன் காரணமாக, வெளிநாடுகளிலே இரால் மீன்களுக்கு விலை அதிகமாகக் கிடைப்பதாலே, அங்கே பிடிக்கக்கூடிய இரால் மீன்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப உடனடியாகப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அரசு அங்கே இயங்க வைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மீன் கலனடைப்பு தொழிற்சாலை 1965-ல் துவங்கப்பட்டு, 1969-ல் மூடப்பட்டிருக் கிறது. அதற்குக் காரணம் முதல் கட்டமாக, சாளை மீன்களையும் இரால் மீன்களையும் கலனில் அடைக்கும் பணி துவங்கப்பட்டது. மீன் மற்றும் இரால்களின் விலை கணிசமாக உயர்ந்ததால், துறையால் நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்ய முடிய வில்லை. எனவே, நட்டம் ஏற்பட்டு, அத்தொழிற்சாலையை 1969-லேயே மூடிவிட்டார்கள். அந்தக் கட்டிடத்தைக் கூடத் தனியாருக்கு ஏலம் விடுவதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு வழக்கறிஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

16—(*வினா எண். 2034)—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் களுக்கு சட்ட அதிகாரிகள் (Law Officers) தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வழக்கறிஞர்களுக்கு சட்ட அதிகாரிகள் (Law Officers) தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி ஏதும் இத்துறையால் அளிக்கப்படவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, 5 ஆண்டு, அல்லது 3 ஆண்டு லா படித்த பட்டதாரிகளை சீனியர் லாயர்ஸ் தங்களுடைய ஜூனியர்களாகக்கூட ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆகையால் இதனை மறுபரிசீலனை செய்து, அவர்களுக்கு லா ஆபீசர்ஸ் பயிற்சி அளிக்க வழிவகைச் செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் பிற்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து ஆண்டுதோறும் 20 சட்ட பட்டதாரி களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் பல்வேறு பிரிவுகளில் அனுபவம் பெறும்பொருட்டு பல்வேறு சட்டப்பிரிவுகளில் வல்லமை பெற்று, சிறந்து விளங்கும் முதுநிலை வழக்கறிஞர்களிடம் பயிற்சிக்கு அமர்த்தி, மூன்று ஆண்டுகள் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியிருக்கிறது. பயிற்சி காலத்தில் பயிற்சி பெறு பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் பயிற்சி உதவித்தொகை யாக வழங்கப்படும். முதுநிலை வழக்கறிஞர்கள் இத் திட்டத்தில் பங்குபெற்று, பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு 5,001 ரூபாய் மதிப்பு ஊதியமாக வழங்கப்படும். 1985-86 ஆம் ஆண்டுக்கு 3,22,000 ரூபாய் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. குறைந்தபட்ச வயது 25 என்பதால், இதனால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர், 23 வயது நிரம்பிய சட்ட பட்டதாரி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு ஒன்றைத் தொடர்ந்தார். அதன் பேரில் உயர் நீதிமன்றம் ஒரு தடை உத்தரவைப் பிறப் பித்துள்ளது. இருப்பினும் இத்திட்டத்தைத் திருத்துவதுபற்றி அரசு முடிவு செய்வதை இந்தத் தடை ஆணை தடுக்காது என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதால் இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்து பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கும் திட்டம் இருக்கிறது. அந்த வகுப்பினரிலிருந்து 20 பேர்கள் தேர்ந்தெடுத்து, பயிற்சி கொடுக்கிறோம்; பயிற்சிக்காலத்தில் அவர்களுக்கு மாத உதவித்தொகையும் வழங்குகிறோம் என்று சொன்னார்கள். அந்தப் பயிற்சியில் அரிசன நலத் துறையைச் சேர்ந்த மாணவ, மாணவியர் யாரும் சேர்க்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இது உண்மையா? உண்மை என்றால் அரிசன மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள எற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, இது முழுக்க முழுக்க பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் களுக்கும் மற்றும் சீர் மரபினரைச் சேர்ந்தவர்களுக்கும். மட்டும் தான். அவர்களிலிருந்து 20 பேர்கள் எடுத்துக்கொள்ளப்படு கிறார்களே தவிர, இது ஆதிதிராவிடர்களுக்கு அல்ல.

அண்ணப்பன்பேட்டை மீனவர்களுக்கு வீடுகள்.

17—(*வினா எண். 3840)—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதி யில் அண்ணப்பன் பேட்டையில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதி அண்ணப்பன் பேட்டையில் மீனவர்களுக்காக 1983-84-ம் ஆண்டில், ஒப்பளிக்கப் பட்டவாறு, 60 வீடுகள் குறித்த கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. தங்கராசு : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 1983-84ஆம் ஆண்டில் வீடுகள் கட்டும் பணி எடுக்கப்பட்டு, கட்டிவருவதாகச் சொன் னார்கள்; மிக்க நன்றி. துரிதமாக அந்த வீடுகளைக் கட்டி முடிப் பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவரவர்களே, டெண்டர் எடுத்த ஒப்பந்தக்காரர்கள் வேலையை தொடர்ந்து செய்யாமல் இடையிலே காலதாமதம் செய்கிற காரணத்தால் தான் தாமதம் ஏற்படுகிறது. எனவே, டெண்டர் எடுத்த ஒப்பந்தக் காரர்கள் சரியாக வேலை செய்யாமல் இருந்தால், அவர்கள் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, வேறு ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுத்து, பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 18 முதல் 20 வரை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆளுநர் அவர்களிடமிருந்து 9-1-1986 தேதியிட்ட, கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

Message.

The amendment as mentioned in the Annexure enclosed shall be incorperated in the Address delivered by me to the Joint Session of the Legislature on 8-1-1986.

For	*Enter*
The elections to Panchayats and Panchayat Unions are to be held on the dates which have been recently announced by the Government.	The elections to Municipalities, Panchayats and Panchayat Unions are to be held on the dates which have been recently announced by the Government.

3. தகவல் கோரல்.

(அ) தமிழக அரசு சர்க்காரியா கமிஷனிடம் அளித்த அறிக்கையை அவைமுன் வைத்தல்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநில அரசால் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் மூலமாக தமிழகத்திற்கு வருகை தந்த சர்க்காரியாவிடம் அரசின் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த காலகட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களால் என்ன கருத்து சர்க்காரியாவிடம் தெரிவிக்கப்பட்டது என்பதை தெரிந்துகொள்ள வேண்டாமா? அது சம்பந்தப்பட்ட அறிக்கையை அரசு எப்போது அவையில் வைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

4. உரிமைப் பிரச்சனை.

மேலவை உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, பி. மாணிக்கம் ஆகியோர் மீது.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 245-ன் படி கீழ்க் காணும் உரிமை மீறல் பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப தங்களுடைய அனுமதியை நான் வேண்டுகிறேன்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 176 உட்பிரிவு 1-ன்படி மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் கடந்த 8-1-1986 அன்று உரை நிகழ்த்துவதற்கு முன்பு, அவர் தன்னுடைய உரையைத் தொடங்கவிடாமல் மேலவை உறுப்பினர்கள் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. பி. மாணிக்கம் மற்றும் பேரவை உறுப்பினர்கள் திரு. கு. ரமணி, திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் ஆகியோர் குறுக்கிட்டு பேசி வெளி நடப்புச் செய்தனர். அன்றையதினம் கூட்டப்பட்ட கூட்டமானது ஆளுநர் உரையைக் கேட்பதற்காகத்தான் கூட்டப்பட்ட கூட்டமாகும். அன்றைய கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களோ, அவை முன்னவர் அவர்களோ, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது வேறு எந்த உறுப்பினர்களோ பேசுவதற்கு அனுமதி கிடையாது. மேதகு ஆளுநர் உரையைக் கேட்பதற்காகத்தான் அன்றையதினம் அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

ஆளுநர் அவர்களுடைய உரையைக் கேட்பதற்கு விருப்பம் இல்லை என்று சொன்னால் கூட்டத்திற்கு வராமலேயே உறுப்பினர்கள் இருந்துகொள்ளலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது. ஆளுநர் உரையிலே பேசிய கருத்துக்கள், பேசப்படாத கருத்துக்கள் பற்றி எல்லாம் பேசவேண்டுமென்றால் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகின்றபோது எடுத்துச் சொல்வதற்கும், குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கின்ற நேரத்தில் இப்படி ஆளுநரை பேசவிடாமல் குறிக்கிட்டுப் பேசியது முறையாகுமா ? அது சபையின் கண்ணியத்திற்கு உகந்ததுதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அரசியல் சட்டத்தின்படி மேதகு ஆளுநர் அவர்கள் உரையுடன் சட்டமன்றத்தின் கூட்டுக் கூட்டம் தொடங்குகிறது. இந்தக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துகிறார். இந்தக் கூட்டத்திற்குத் தலைவர் யாரும் கிடையாது. பேரவைத் தலைவரோ, அல்லது மேலவைத் தலைவரோ இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பது கிடையாது.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்து விடுகிறேன். (கூச்சல் குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் நோட்டீஸை மட்டும் படித்துவிட்டு உட்கார வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1986 சனவரி 10

திரு. என். எஸ். வி. சித்தன் : மேலவை உறுப்பினராக இருந்தால் மேலவையிலும், பேரவை உறுப்பினராக இருந்தால் பேரவையிலும் தான் பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஒரு சபை உறுப்பினர் மற்றொரு சபையில் பேச முடியாது. அப்படிப் பேசக்கூடாது என்பது நமக்குத் தெரியும். கூட்டுக் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு முன்பாக....

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோட்டீஸைப் படிப்பதற்கு நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். எனவே அவர் நோட்டீஸைப் படிக்க உரிமை உண்டு. அவர் நோட்டீஸைப் படித்து முடிக்கட்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கூட்டுக் கூட்டத்தொடரில் ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன்பாக மேலவை உறுப்பினர் ஒருவர் பேசுகிறார் என்றால் பேரவை உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் அவர் பேசுகிறார் என்று அர்த்தம். பேரவை உறுப்பினர்கள் உள்ள சட்டமன்றக் கூட்டத்தில் மேலவை உறுப்பினர் பேசுவது என்பது உரிமை மீறல் ஆகும். இதுபோன்ற நிகழ்ச்சி இந்த பேரவையில் 1952-ஆம் ஆண்டு நடைபெற்றதற்கு முன் உதாரணம் உண்டு. 6—5—1952-ஆம் தேதி நமது அரசியல் சட்டத்தின்படி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, பேரவை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தொடர் நடைபெற்றது. அப்போது ஆளுநராக மேதகு ஸ்ரீ பிரகாசா அவர்கள் இருந்தார்கள். முதலமைச்சராக அந்த நேரத்திலே மதிப்பிற்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இருந்தார்கள். அந்தக் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் மேதகு ஸ்ரீ பிரகாசா அவர்கள் பேச எழுந்த போது மேலவை உறுப்பினர் திரு டி. பிரகாசம் அவர்கள் குறுக்கிட்டு, சில குற்றங்களைச் சாட்டிப் பேசிவிட்டு வெளி நடப்புச் செய்தார்கள்.

இந்தச் சம்பவம் அவையின் உரிமை மீறலாகக் கருதப்பட்டு 13—5—1952 ஆம் நாள் அன்று, அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. ராஜாஜி அவர்களால் திரு. டி. பிரகாசம் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரப்பட்டது. எனவே மேலவை உறுப்பினர்களான திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. பி. மாணிக்கம் ஆகியோர்களின் நடத்தை பேரவையின் உரிமையை மீறியதாகும் என்பது முதல் நோக்கத்திலேயே தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1986 சனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 17-ன்படி, "அரசியலமைப்புச் சட்டத்தின் 175 அல்லது 176 வது பிரிவின்படி சட்டமன்றத்தில் இரு அவைகளில் இணைந்த கூட்டு கூட்டத்தின்போது அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 175வது பிரிவின்படி பேரவை உறுப்பினர்கள் தனியே கூடியிருக்கும்போது ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ, உறுப்பினர் எவரும் தமது பேச்சினாலோ, ஒழுங்குப் பிரச்னையினாலோ, வேறு எவ்வகையிலோ தடுக்கவோ குறுக்கீடு செய்யவோ கூடாது. அவ்வாறு தடங்கலோ, குறுக்கீடோ செய்வது பேரவையின் ஒழுங்கிற்குப் பெருத்த ஊறு விளைவிப்பதாகக் கருதப் பெற்று, அடுத்து நிகழும் கூட்டத்தில் பேரவைத் தலைவரால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பெறும்." அதுமாதிரி சட்டமன்ற மேலவையின் விதிகளிலேயும் உள்ளது.

பேரவை விதி 2 (1) (உ) இன் படி 'உறுப்பினர்' என்பது 'பேரவை உறுப்பினர்களையே குறிக்கும்'.

ஆனால் தற்போது எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்னை மேலவை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாக உள்ளது. எனவே இது குறித்து மேலவையில்தான் உரிமைப் பிரச்னையை எழுப்ப முடியும்.

இதேமாதிரி சம்பவம் நடைபெற்று, அது அவையின் உரிமை மீறலாகக் கருதப்பட்டு, 13—5—1952 அன்று, அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. இராஜாஜி அவர்களால் திரு. டி. பிரகாசம் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். 13—5—1952 அன்று மேலவையில் தான் திரு. டி. பிரகாசம் அவர்களுடைய நடத்தையைக் கண்டிக்கும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பின்னர் அது திரும்பப் பெறப்பட்டது. பேரவையில் அதுகுறித்து எந்தப் பிரச்னையும் அப்போது எழுப்பப்படவில்லை. எனவே நான் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்னையைக் குறித்து சொல்ல விரும்பவில்லை. ஆனால் நம்முடைய சட்டசபை விதிகளின்படி ஒரு உறுப்பினர் உரிமைப் பிரச்னையை எழுப்புகிறபோது, தங்களுக்கு முதலில் அது குறித்து நோட்டீஸ் தருவார். நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகு நீங்கள் அதை அவையில் எடுக்கலாம் என்று ஒத்துக் கொண்டதற்குப் பிறகு, பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதா என்று பார்க்கிற விதத்தில், அந்த நோட்டீஸின் உள் வாசகங்கள் இங்கே படிக்க அனுமதிக்கப்படும். ஆனால் இப்போது எடுத்த உடனேயே, நான் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வருகிறேன் என்று அவர் சொன்ன உடனேயே, நோட்டீஸின் வாசகத்தைப் படிப்பதற்கு நீங்கள் அனுமதி கொடுத்து விட்டீர்கள். இந்த உரிமை எங்களுக்கும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர் காலையில் 8-30 மணிக்கு என்னுடைய அறைக்கு வந்து அனுமதி வேண்டினார். நான் அதைப்படித்து பார்த்து விட்டுத்தான் அனுமதி கொடுத்தேன்.

திரு. அ. ரகுமான்கான் : நோட்டீஸ் கொடுத்த உடனேயே ஏற்றுக் கொண்டீர்களே, பரிசீலிக்கப்படும் என்று சொல்ல வில்லையே, உடனேயே அனுமதித்து விட்டீர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படித்த பிறகு தான் தெரியும். அதற்குப் பிறகு தான் என்னுடைய தீர்ப்பையும் கொடுத் திருக்கிறேனே.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, 8 ஆண்டு காலமாக நாமெல்லாம் இந்த மன்றத்திலே இருக்கிறோம். உரிமைப் பிரச்னையை எழுப்பிய உடனேயே நீங்கள் இதில் அனுமதித்து விட்டீர்கள். அவர் எழுதிக் கொடுத்து பிறகு நான் கொடுத்த உரிமைப் பிரச்னை என்னவாயிற்று என்று அவர் கேட்டதற்குப் பிறகுதான், அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வீர்கள். பிறகு அனுமதி கொடுக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், அதிலே பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதா என்று சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று தெரிவிப்பீர்கள். அப்படி தெரிவித்ததற்குப் பிறகு, அந்தப் பிரச்னை குறித்து நீங்கள் தீர்ப்பு வழங்குவீர்கள். அதுதான் நடைமுறை யாக இருந்து இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் கேட்ட உடனேயே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கு என்னுடைய தீர்ப்பை ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இந்தப் பிரச்னை அவையினுடைய நடைமுறை சம்பந்தமாக, நேற்று அவையிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி நடந்த சம்பவமாக இருந்ததால், அவையின் கண்ணியத்தைக் காப்பாற்ற அதை உடனடியாக எடுத்துக் கொண்டு தீர்ப்பளித்தேன்.

திரு. அ. ரகுமான்கான் : நடைமுறையைப் பற்றிதான் நானும் சொல்கிறேன். உரிமைப் பிரச்னை கேட்ட உடனேயே அவர் களுக்கு அனுமதி கிடைக்கிறதே, அதே உரிமை எங்களுக்கும் வழங்கப்படவேண்டும். வழங்கப்படுமா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தந்தப் பிரச்னைகளுக் கேற்ப அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) தமிழக அரசு சர்க்காரியா கமிஷனிடம் அளித்த அறிக்கையை அவை முன் வைத்தல்—தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : நான் எதற்காக கேட்கிறேன் என்றால், ஒரு முக்கியமான பிரச்சனை குறித்து, எங்கள் கட்சி உறுப்பினர் கேட்டார். அதற்கு அரசு தரப்பில் இருந்து பதில் வரவில்லை.

(முற்பகல் 10—10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை வேறு, இந்தப் பிரச்சனை வேறு.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தான் நாங்கள் உரிமையை கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொல்கிறேன். அந்தப் பிரச்சனையின் முடிவை இப்போது கேட்பது சரியில்லை.

திரு. அ. ரகுமான்கான் : உறுப்பினர்களுக்கு அந்த உரிமை இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்பதற்கு உரிமை கொடுத் தேன். (குறுக்கிடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அறிக்கையை உறுப்பினர்களுக்குத் தரவேண்டுமென்று ஒரு கருத்தை சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) அதுதானே கோரிக்கை ?

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனில் அரசாங்கத்தின் சார்பாக ஒரு மனு கொடுக்கிறபோது, அதில் என்ன கேட்டீர்கள் என்று உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டாமா ? உறுப்பினர்களுக்கும், அவைக்கும் தெரிவிக்காமல் இருட்டடிப்பு செய்யலாமா ? அமைச்சர்கள் எல்லாம் ** இருந்தால் எப்படி ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேசாமல் இருப்பதால் அமைச்சர்கள் ** இருக்கிறார்கள் என்று சொல்கிற அளவிற்கு போய்விடக் கூடாது. அதற்கு அமைச்சர்கள் ** இருக்கிறார் கள் என்று அர்த்தமல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1986 சனவரி 10

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, ** இருக்கிறார்கள் என்பதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நான் கேட்பது, 'Why are you silent ?'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சைலண்ட் என்பது அமைதி. ** என்பது வேறு. நீங்கள் கேட்பது கமிஷனுக்கு கொடுத்த ரிப்போர்ட் பற்றியதாகும்.

THIRU A. RAHMANKHAN : The Hon. Members have got the right to ask through the Hon'ble Speaker.

MR. SPEAKER : The Hon. Members have got the right to ask. That is why I have permitted the Hon'ble Member to ask. I cannot do anything more.

திரு. அ. ரகுமான்கான் : அரசு தரப்பிலிருந்து பதில் தரப்பட வேண்டுமென்று தாங்கள் சொல்லவில்லையே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகருக்கு இத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று தாங்கள் சொல்கிற கருத்தை நானும் கொண்டிருக்கிறேன். ஆனால் நடைமுறையில் சபாநாயகர் அமைச்சர்களை பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தங்களிடத்தில் கேட்டு, தங்கள் மூலமாகத் தான் விவரங்கள் தெரிய வேண்டுமென்பது முறையாகும். ஆனால் அமைச்சர்களை இந்த அவையில் அறிக்கை வைக்கும்படி சொல்வதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லையென்று தாங்கள் சொல்வது சரிதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரம் இல்லையென்று நான் சொல்லவில்லை. "I cannot compel" என்று தான் சொன்னேன். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : தாங்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லலாமே? ரிப்போர்ட்டை வைத்துவிடுங்கள் என்று சொல்லலாம் இல்லையா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 சனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புரொசிஜர்படி சபையை நடத்துவது தான் என்னுடைய கடமை. (குறுக்கீடு) அறிக்கையை அவைமுன் வைக்க வேண்டிய பொறுப்பு, அதுபற்றி இங்கே சொல்வது, சொல்லாமல் இருப்பது என்பதெல்லாம், It is upto the Government. I cannot compel.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தங்களுடைய அதிகாரம் என்று கூடத் தனியாக ஒன்றும் இல்லை. இந்தச் சட்ட சபைக்குள்ள உரிமைகளை காப்பாற்றுவதுதான் தங்களுடைய அதிகாரம். இந்தச் சட்டசபைக்கு கட்டுப்பட்டது தான் எந்த ஆட்சியும். ஆட்சியின் சார்பில் பொது அடிப்படையிலே தரப்பட்ட ஒரு அறிக்கை இந்த அவைக்கு வைக்கப்பட வேண்டுமென்பது இந்த அவையினுடைய உரிமை. எனவே இந்த அவையின் உரிமையைக் காப்பாற்ற தாங்கள் கடமைப்பட்டு இருக்கிறீர்கள். அந்தக் கடமையை நிறைவேற்றுகிறபோது, அரசாங்கம் கட்டுப்படாது என்று தாங்கள் சொல்கிறீர்களானால், இந்த அவையை அவமதித்தது .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்டுப்படாது என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். என் கன்ட்ரோலில் இல்லை என்று, My function is to conduct the proceedings according to the rules. It is part of the administration. அரசாங்கத்திலே உள்ள எல்லா விவரங்களையும் தெரிந்து சொல்ல விரும்பினால் அதை இந்த அவையிலே உரிமையாகச் சொல்ல முடியாது.

திரு. க. அன்பழகன் : இந்தப் பிரச்சனை பொதுப் பிரச்சனை. இது கட்சிப் பிரச்சனை அல்ல. இந்தப் பிரச்சனை பொது மக்களுக்கு கடமைப்பட்டுள்ள ஒரு பிரச்சனை. அரசாங்கம் எந்த அறிக்கையைத் தந்திருந்தாலும், அந்த அறிக்கையை வாதத்திற்கு எடுத்துக் கொண்டாலும், எடுத்துக் கொள்ளாவிட்டாலும், அதை வேண்டுமானாலும் அரசாங்கம் வாதிக்க வைக்க முடியவில்லை என்ற காரணம் சொல்லலாமே தவிர, இந்த அரசாங்கத்தின் சார்பாக தரப்பட்ட எந்த அறிக்கையாக இருந்தாலும், அந்த அறிக்கையை இந்த அவையில் வைக்க அரசு கடமைப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு ஏதாவது முன்மாதிரி இருந்தால் சொல்லுங்கள். I will definitely follow. I will immediately order them to place it. இந்த மாதிரி வேறு எந்த சபாநாயகராவது செய்து இருந்தால் சொல்லுங்கள். எனக்கு உதவி செய்வதற்காகச் சொல்கிறேன். I want a precedent. யாராவது ஒரு ஸ்பீக்கர் அந்தமாதிரி அரசாங்கத்திற்கு ஒரு உத்தரவு போட்டிருந்தால் சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஸ்பீக்கர் உத்தரவிட வில்லை என்று தாங்கள் சொன்னாலும் கூட, அதை வைக்க மறுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு எந்தக் காரணமும் இருக்க முடியாது. இதையும் வைக்க ஒரு அரசாங்கம் மறுக்குமானால், அந்த அரசாங்கம் நாட்டிலே, நடைமுறையிலே செயல்படுவதற்கு நியாயமான அதிகாரம் இல்லாத அரசு. பொதுமக்களுக்கு சம்பந்தப்பட்ட, மாநிலத்திற்கு சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சனையை இந்த அவையிலே வைக்காமல் மறுக்க வேண்டிய அவசியமே இந்த அரசாங்கத்திற்கு இல்லாதபோது, நீங்களாக இந்த அரசாங்கம் வைக்காது என்று சொல்லக்கூடிய அளவிற்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு வார்த்தைக்கும் பேராசிரியர் அவர்கள் அர்த்தம் கற்பித்துப் பேசவேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே பேசுகிற போது, பேரவைத் தலைவருக்கு என்று தனி அதிகாரம் இல்லை, பேரவைக்கு உள்ள அதிகாரம் தான் தலைவருக்கு உண்டு என்று சொன்னார்கள். அதை முழுக்க முழுக்க நான் வரவேற்கிறேன். அதேபோல், பேரவையினுடைய முழு நம்பிக்கையைப் பெற்றுத் தான் அரசும் இயங்குகிறது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். பேரவையின் முழு நம்பிக்கையைப் பெற்று அரசு இயங்குவதற்குக் காரணம், அரசு பல்வேறு நடவடிக்கைகளில், தானே ஈடுபடவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை வைத்துத் தான். ஆகவே அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றுதான், சர்க்காரியா அவர்கள் இங்கே வந்தபோது அரசின் சார்பிலே ஒரு அறிக்கை தரப்பட்டு இருக்கிறது. அரசின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தனையையும் சட்டப்பேரவையிலே வைக்கவேண்டும் என்று வற்புறுத்துவதற்கு இல்லை. சட்டப்பேரவையில் வைக்காமல் இருக்கவேண்டும் என்ற அவசியமும் இல்லை. எதை எதை பேரவையில் வைக்கவேண்டும் என்று அரசு விரும்புகிறதோ, முடிவு எடுக்கிறதோ, நிச்சயமாக அத்தகைய அறிக்கைகளை இந்த அவையிலே கட்டாயம் அரசு வைக்கும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தை ஒருவேளை நினைத்துக் கொண்டு சொல்லலாம். அப்போது ஒரு தீர்மானமாக கொண்டு வரப்பட்டது. ஆகையினாலே பேரவையிலே மத்திய-மாநில உறவுகளைப் பற்றி ஒரு அறிக்கையை, ஒரு தீர்மானமாக வைப்பதற்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது அரசு மறுத்ததாக அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அரசு மறுத்ததாக (குறுக்கீடு) பொருள் அல்ல. அரசு அதை எந்த நேரத்தில் இந்த மன்றத்தில் வைப்பதற்கு தேவை அல்லது பொருத்தம் என்று கருதுகிறதோ நிச்சயமாக அந்த நேரத்திலே வைக்கும். ஆளுநர் உரையிலே இதைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. அவை முன்னவர் அவர்கள் அதைப் பற்றி அறிவிப்பார்கள்.

திரு உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனிலே அரசு தரப்பிலே கொடுக்கப்பட்ட அறிக்கை, அல்லது டாக்குமெண்ட் ஒரு பெரிய ரகசியமானது அல்ல. எதிர்க்கட்சிகளும், பொதுமக்களும் அதில் என்ன கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்று அறிந்துகொள்வதற்காக இருக்கிறார்கள் என்ற ஒரு அபிப்பிராயத்தை சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு, அரசு இதை விரைவிலே இந்த அவைக்கும், மக்களுக்கும் எடுத்துச்சொன்னால் உசிதமாக இருக்கும். அதிலே தவறு இல்லை என்பது என்னுடைய கருத்து.

(முற்பகல் 10-20)

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை இங்கு வைக்கப் போகிறார்களா, இல்லையா என்பதை சொல்லச் சொல்லுங்கள். இவ்வளவு சொல்லியதால் கேட்கிறேன். இன்றைக்கே வைக்கச் சொல்லிக் கேட்கவில்லை. எப்போது வைக்கப் போகிறார்கள்? வைக்க முடியும்; முடியாது என்ற முடிவைத், தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசினுடைய முடிவு என்ன? எப்போது வைக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியாவிடம் பேசப்பட்டு இருக்கிறது. அவர்கள் சில சந்தேகங்களைக் கேட்டு இருக்கிறார்கள். அவைதயும் தயார் செய்து கொண்டு இருக்கிறோம். முழு வடிவிலே அது வந்த பிறகு அதைப்பற்றி முடிவு எடுத்து அவைக்கு அறிவிக்கிறோம் எல்கிறோம். அதற்கு மேல் என்ன வேண்டும். (குரலொலி.)

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினர் இதற்கே மகிழ்ச்சி அடைகிறார்கள். சந்தேகங்களைத் தீர்க்கப்படுவதாகச் சொல்லி மறுபடியும் சந்தேகம் ஏற்பட இடமில்லாமல் கொஞ்சம் தெளிவான நிலைமைக்கு அரசு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசு இதில் மிகத் தெளிவாக இருக்கிறது. சர்க்காரியாவிடம் அறிக்கைகளை நாங்கள் கொடுத்தோம். அவர்கள் சில கேள்விகளை எழுப்பி இவைகளுக்கு பதில் அனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்குப் பதில் தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். அது இன்னும் அமைச்சரவை முன் விவாதத்திற்கு வரவில்லை. முழு அறிக்கையும் தயாரித்துக் கொடுத்தற்குப் பிறகு அதைப் பற்றி அரசு முடிவு எடுக்கும்; அவையில் அறிவிக்கும்.

[1986 சனவரி 10

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கிறபோது சர்க்காரியாவால் கேட்கப்பட்டு இருக்கிற சில கேள்விகளுக்கு விளக்கங்கள் அளித்தபின் நிறைவான பிறகு அந்த அறிக்கை முழு வடிவில் இங்கே வைக்கப்படும் என்னும் கருத்தை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் எப்போதும் குழம்புவதே இல்லை. நான் பேசியதை நீங்கள் பார்த்தால் நன்றாகத் தெரியும். அது முழு வடிவம் பெற்ற பிறகு அரசு முடிவு எடுத்து அதற்கு பிறகு தேவைப்பட்டால் வைக்கும் என்று தெரிவித்தேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தேவைப்பட்டால் வைக்கப்படும் என்று இந்த அரசு அதையும் ரகசியமாக வைத்துக்கொள்ள விரும்புகிற காரணத்தால் இந்த அரசினுடைய இந்தப் போக்கு கண்டனத்திற்குரியது என்று தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்குச் சொல்ல விரும்புகிறேன். வேண்டும் என்றே ஒரு வாசகத்தை வரவழைத்துவிட்டு வெளிநடப்புச் செய்வது என்பது தேவை அற்றது என்று கருதுகிறேன்.

(ஆ) ஆசிரியர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குவது குறித்து.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடந்து முடிவு பெற்ற ஆசிரியர்கள் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் முதலமைச்சர் அவர்களும், அரசும் ஆசிரியர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கப்படும் என்று சொன்னார்கள். வழங்கி ஆகிவிட்டதா ? வழங்க உத்தேசம் இருக்கிறதா என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைகளை எல்லாம் ஆளுநர் உரை விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். இந்த ஜீரோ அவர் என்பது அரை மணி நேரமாக நடக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

DR. K. SOWRIRAJAN : Let them answer. They have to answer.

1986 சனவரி 10]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விளக்கம் கேட்கிறார். அதற்கு பதில் வேண்டாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் (குறுக்கீடு) பொறுத்து இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(இ) பேரவைத் தலைவருக்கான அதிகாரங்கள் குறித்து.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றுமே அனாவசியமாகக் குறுக்கிடக் கூடியவன் அல்ல. பேராசிரியர் அவர்கள் இந்தச் சபை உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரமோ அதுதான் உங்களுக்கு என்று சொன்னது போலவும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள், பேராசிரியர் சொன்னதை நானும் ஆதரிக்கிறேன் என்று சொல்லி அமர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் ஏதோ பிரேரேபிக்க, இவர்கள் ஆதரித்து, உங்களுடைய வரையறையை, அதிகாரத்தைக் குறைத்துவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த அவை உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை போக, இந்த அவை உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய உரிமையும் காப்பாற்றக் கூடிய உரிமை உங்களுக்கு இருக்கிறது. அதை நீங்கள் நிலைநாட்ட வேண்டும், அதை விட்டுவிடக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருக்காலும் அது குறையாது, குறையவும் விடமாட்டேன். உங்கள் எல்லோருடைய ஆதரவும், ஒத்துழைப்பும் இருக்கும்போது, நிச்சயமாக அந்த உரிமை பாதுகாக்கப்படும்.

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.....

திரு. வை. பாலச்சந்திரன் : கொந்தளிப்பே இல்லை, அமைதியாக இருக்கிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், இப்போது அப்துல் சமத் சொன்னதைப் போல நான் நடத்துகிற சபை.....

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் கொடுத்து 7 நாள் ஆகிவிட்டது. இன்னும் அதுபற்றி ஒன்றும் வரவில்லை.

[1986 சனவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை கூடியே இரண்டு நாள் தான் ஆகிறது. நீங்கள் அதுபற்றி என் அறையிலே வந்து பேசுங்கள். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு)

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாம் கூட்டத்தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்.

1. திரு. மா. சின்னராசு
2. திரு. செ. செம்மலை
3. திரு. சை த சா. துரைசாமி
4. திரு. டி. ஆர். வேங்கடரமணன்
5. திரு. பொன் முத்துராமலிங்கம்

5. அரசினர் தீர்மானம்

விதி 13 (2)-ன்படியான தீர்மானம்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைத் மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 13(2)-ன் படி இப்பேரவை இன்று முதலாவதாக சட்டமுன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

(ஆ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1986-ம், ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1986-ம் ஒருசேர விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெறும்.

1986 சனவரி 10]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானங்களை மொழிகிறேன்.

"1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை *அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவும் வேண்டும்."

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை* அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவும் வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டுக்கு முன்னர் நகராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருந்தது. ஆனால் 1971-ல் அந்தப் பதவிக் காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது. பின்பு, 1985-ஆம் ஆண்டு அவர்களுடைய பதவிக் காலம் 4 ஆண்டுகளாகக் குறைக்கப் பட்டது. 1950-ஆம் ஆண்டு சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி, கிராமப் பஞ்சாயத்துக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் முதலில் மூன்று ஆண்டுகளாக இருந்தது. பின்னர், அவர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. 1958 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவிக் காலம் முதலில் 5 ஆண்டுகளாக இருந்தது. பின்னர் 1985-ஆம் ஆண்டு அவர்களின் பதவிக் காலம் 4 ஆண்டு களாகக் குறைக்கப்பட்டது. நகராட்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் பரப்பளவில் சிறியதாக இருப்பதால், நகராட்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் குறைவாக இருந்தால் அவர்கள் மக்களுக்கு மிகவும் பயன் உள்ள வகையில் சேவை செய்ய இயலும் என்று அரசு கருதுகிறது. மேலும், இதனால், அப்பகுதியிலுள்ள பொதுப் பணியில் ஆர்வமுள்ள மற்றவர்களும், நகராட்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பதவி வகிக்க வாய்ப்பு விரைவில் கிடைக்கும் என்று அரசு கருதுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

எனவே நகராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும் என்றும்,

---

*1986-ம் ஆண்டு சனவரி 7-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 சனவரி 10

அதற்கேற்ப, 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தையும், 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தையும் திருத்தவேண்டும் என்று அரசு முடிவுசெய்துள்ளது. இதைச் செயல்படுத்த கொண்டு வரப்பட்டுள்ள இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1986வது ஆண்டு தொடங்கி இந்த மாமன்றத்திலே எடுத்துக்கொள்கின்ற முதல் அரசுச் சட்டங்களாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிற சட்டங்களாக பஞ்சாயத்துச் சட்டமும் நகராட்சிச் சட்டமும் வந்திருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். பஞ்சாயத்துத் தேர்தலும், நகராட்சித் தேர்தலும் தமிழகத்திலே எட்டாக் கனிகளாக மாறிவிட்டிருக்கின்றன. இன்றைக்கு ஆனந்தவிகடன் போன்ற பிரபலமான பத்திரிகையிலே கூட பஞ்சாயத்துத் தேர்தலும் நகராட்சித் தேர்தலும் பற்றி நீங்கள் தெரிவிக்கிற யோசனைகள் என்ன என்றெல்லாம் போட்டிகள் வைக்கிற அளவுக்கு மீண்டும் பஞ்சாயத்துச் சட்டத்திற்கும், நகராட்சிச் சட்டத்திற்கும் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

போகாத ஊருக்கு வழி தேடுவது என்று சொல்வார்களே அதைப்போல பஞ்சாயத்துத் தேர்தலும் நகராட்சித் தேர்தலும் நடைபெறாத சூழ்நிலையில் பஞ்சாயத்துக்களின் ஆயுட்காலத்தை — அது 5 ஆண்டுகளாக இருக்கவேண்டுமா, 4 ஆண்டுகளாக இருக்க வேண்டுமா, 3 ஆண்டுகளாக இருக்கவேண்டுமா — பற்றிய விவாதத்தில் இறங்கியிருப்பது ஒரு Futile discussion என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

5 ஆண்டுகள் ஆயுட்காலமாக இருந்ததை 4 ஆண்டுகளாக சென்ற ஆண்டுதான் Act 25 of 1985 என்பதன் மூலமாகவும் Act 24 of 1985 என்பதன் மூலமாகவும் மாற்றப்பட்டது. அப்போது என்ன காரணம் சொல்லப்பட்டது, பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகளின் ஆயுட்காலம் நான்காண்டுகளாக இருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. இப்போது அதை 3 ஆண்டுக்காலமாகக் குறைக்க வேண்டுமென்ற அவசியமும் அவசரமும் ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணங்கள் இந்தச் சட்டமுன்வடிவின் Statement of objects and reasons-இல் சொல்லப் படவில்லை. இரண்டாவது பத்தியிலே சொல்லப்படுவது "The Government now consider"..... என்பதாகும். அதாவது யூனி லேட்டராக எடுக்கப்படுகிற declaration of policy என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர என்ன காரணத்தினாலே என்ற

1986 சனவரி 10] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

விளக்கங்கள் சொல்லப்படவில்லை. 1920 ஆம் ஆண்டிலே 3 ஆண்டுகளாக இருந்தது, ஆகவே இப்போது 3 ஆண்டுகளாக இருக்கட்டும் என்றுதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் சென்ற ஆண்டே 24வது மற்றும்25வது சட்டங்கள் இயற்றப்பட்ட போதே 4 ஆண்டுகள் இருக்கட்டும் என்று என்ன காரணத்தி னாலே நினைத்தார்கள் எப்பதும், இப்போது அதை மூன்று ஆண்டுகளாக மாற்றவேண்டுமென்று என்ன காரணத்தினாலே நினைக்கிறார்கள் என்பதும் குறித்த கொள்கை விளக்கங்களை இந்த அரசு சொல்லவில்லை. இந்த மாமன்றத்தினை ஏதோ எளிதாக The House is being taken lightly என்று சொல்லக்கூடிய அளவுக்கு விளக்கங்கள் தரப்படாமல் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் தமிழகத்திலே எட்டாக் கனியாக இருக்கிறது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். சமீபத்திலே நடந்த ஒரு கூட்டத்திலே மாண்புமிகு இந்தியப் பேரரசின் துணைத் தலைவர் அவர்கள்கூட உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவேண்டு மென்ற முறையிலே இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும், எவ்வாறு ஐந்தாண்டு களுக்கு ஒரு முறை பொதுத்தேர்தல் கட்டாயமாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அந்த அடிப்படையிலே உள்ளாட்சித் தேர்தல்களும் கட்டாயமாக்கப்படாவிட்டால் அவைகளுக்குத் தேர்தலே வராதோ என்ற அச்சத்தை வெளியிட் டிருக்கிறார்கள். அதுபோன்ற மாற்றத்தைக் கொண்டுவரா விட்டால் தமிழகத்திலே உள்ளாட்சித் தேர்தல்களே வராதோ என்ற அச்ச உணர்வு எப்போன்றவர்களுக்கு வருவதில் வியப் பில்லை.

இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களிலே உள்ளாட்சித் துறைத் தேர்தல்கள் ஒழுங்காக நடந்து அவை சிறப்பாகச் செயல் பட்டுக்கொண்டுவருகிற நேரத்திலே தமிழகத்திலே மட்டும் அதுவும் தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறபோது நடத்தப்படாமல் இருக்கிறது. அதுவரையில் அதிகார வர்க்கத்தின் மூலமாக—பலமுறை இந்த மன்றத்திலே சொல்லப்பட்டதுபோல— தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பஞ்சாயத்து எக்சிகியூடிவ் அதிகாரியும், முனிசிபல் கமிஷனர் பஞ்சாயத்து யூனியன் பி.டி.ஓ. ஆகியவர்களுடைய தன்னிறைவுத் திட்டங்களாக மாறி அந்தப் பலன் மக்களுக்குச் சென்று அடையவில்லை என்பதுதான் உண்மையான கண்கூடான நிலை. என்பதை நான் மீண்டும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கவுரை யிலே 3 ஆண்டுகள் என்று எதற்காக ஆக்க இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் ஏற்கனவே அறிவித்தபடி உள்ளாட்சிகளுக்கு தேர்தல்கள் நடத்துவதற்கும் வாக்குறுதியை அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு வாழ்த்துக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் தமிழ்நாடு 1985ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டம், தமிழ்நாடு 1985ஆம் ஆண்டு ஊராட்சிகள் திருத்தச் சட்டம் என்ற இரண்டு சட்டங்கள் பேரவையின் ஆய்வுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

இந்தச் சட்டங்கள் எதற்காகக் கொண்டு வரப்படுகின்றன என்று கேட்டால், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகள் ஆகிய இவைகளில் உள்ள உறுப்பினர்கள், அதைப்போல தலைவர்கள் ஆகிய இவர்களுடைய பதவிக் காலத்தைக் குறைப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள். ஏற்கனவே உள்ள சட்டத்தின்படி ஊராட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியங்களின், நகராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியவர்களின் பதவிக் காலம் ஐந்தாண்டுக் காலமாக இருந்தது. ஆனால், இப்படி ஐந்தாண்டுக் காலம் என்று இருப்பதே தவறு, அது குறுகிய கால பதவியாக இருக்க வேண்டுமென்று சொல்லி, போன சட்டசபைக் கூட்டத் தொடரில் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள், ஐந்தாண்டு பதவிக் காலம் என்பதை மாற்றி, நான்காண்டுக் காலமாகக் கொண்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுது நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தொடரில் அந்த ஐந்தாண்டுகளை நான்காண்டுகளாக மாற்றிய நமது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இப்பொழுது அந்த நான்காண்டுகள் என்று குறைத்தது போதாது, அதை இன்னும் குறைத்து அது மூன்றாண்டுகளாக இருக்க வேண்டுமென்று இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவுகளில் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்குச் சொல்லப் படும் காரணம், பதவிக் காலம் குறுகிய காலமாக இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய முடியும் என்பது. 'ஷார்ட் டெர்ம்"ஆக இருந்தால்தான், குறுகிய பதவிக் காலமாக இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பாகச் சேவைசெய்ய முடியும் என்று Objects and reasons-இல் to serve more effectively எனக் கூறப் பட்டிருக்கிறது.

துணைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். பதவிக் காலம் குறுகிய காலமாக இருந்தால்தான் மக்களுக்குச் சிறந்த சேவை செய்ய முடியுமென்ற காரணத்தால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவை களின் உறுப்பினர்கள், தலைவர்களின் பதவிக் காலத்தை ஐந்தாண்டு களிலிருந்து நான்காண்டுக் காலமாக மாற்றி சட்டம் கொண்டு வந்து விட்டு, பழையபடி மூன்றாண்டுகளாகக் குறைக்கிறோம் என்று அமைச்சரவர்கள் காரணம் சொல்லி கொண்டு வருகிறார்கள் என்றால் நான் கேட்க விரும்புகிறேன், பதவிக் காலம் குறுகிய காலமாக இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய

முடியுமா? அப்படியானால், சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளாக இருக்கிறது, நாடாளுமன்ற உறுப்பினர் களின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளாக இருக்கிறது, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறாண்டுகளாக இருக் கிறது, ஆக குறுகிய காலத்திலே பதவி இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய முடியும் என்று சொல்லி இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டு களாக இருக்க வேண்டாம், மூன்றாண்டுகள் என்று வைத்துக் கொள்கிறோம் என்பதை ஏற்பார்களா ? அமைச்சர் பெருமக்கள் அதை ஏற்பார்களா ? இதோ இருக்கிறார்கள், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், அவர்களைக் கேட்க விரும்புகிறேன், பதவி குறுகிய காலத்தில் இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய முடியும். ஆகவே ஸ்தல ஸ்தாபன தலைவர்கள், உறுப்பினர்கள் குறுகிய கால பதவியில் இருக்கட்டும் என்று சொல் கிறோம் என்று அவர்கள் சொல்வார்கள் என்றால், குறுகிய கால பதவி இருந்தால்தான் பயனுள்ள வகையில் சேவை செய்ய இயலும், ஆகவே நான் அமைச்சராக இருந்து இதுவரை சாதித்தது போதும், மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய வேண்டுமென்றால், நான் பதவியை இராஜினாமா செய்து விடுகிறேன், ஓராண்டுக் காலம் பதவியில் இருந்தது போதும், மக்களுக்குச் சேவை செய்வதற்கு நீண்ட காலம் அமைச்சர் பதவியில் இருக்கக்கூடாது என்று சொல்வதற்கு அமைச்சரவர்கள் தயாரா ? ஒன்றியத் தலைவர் களுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் சொல்லுகின்ற நியாயம், நகராட்சி உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் சொல்லுகின்ற நியாயம் அமைச்சர்களுக்கும், சட்ட மன்ற உறுப் பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தாதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதி லிருந்து என்ன தெரிகிறது என்றால், சொல்லுகின்ற காரணம் சரியல்ல. பதவிக் காலம் நீண்ட காலமாக இல்லாமல், குறுகிய காலமாக இருந்தால் மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய முடியும் என்ற கருத்தைக் கூறுகிறார்கள். Rome was not built in a day. ரோமாபுரி ஒரே நாளில் கட்டப்பட்டது அல்ல என்று சொல்லுவார்கள்.

குழந்தை பெற்றுக் கொள்வது என்றால்கூட பத்து மாத கால அவகாசம் தேவைப்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள பாமரர் களும், படித்தவர்களும், வசதியானவர்களும், வசதியில்லாதவர் களும் ஜனநாயகத்தில் பங்கேற்கும் விதத்தில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவைகளின் உறுப்பினர் களாக, தலைவர்களாக வருகின்றபொழுது அதன் உள்ளே நுழைந்து, நாற்காலிகளில் உள்ள தூசுகளைத் துடைத்து, சட்டங் களையும், திட்டங்களையும், கோப்புகளையும் புரிந்து கொண்டு

[திரு. அ. ரகுமான்கான்] [1986 சனவரி 10

திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதற்குக் காலம் ஆகலாம். இப்படிப்பட்ட நிலையில் மூன்றாண்டுகள் போதும் என்று சொல்லியிருக்கக் கூடிய காரணம் எனக்குப் புரியவே இல்லை. குறுகிய பதவிக் காலத்தில் சிறப்பாகச் சேவை செய்ய முடியும் என்று சொல்லி, ஐந்தாண்டுக் காலத்தை போனதடவை நான்காண்டுகளாக மாற்றினீர்கள், இப்பொழுது மூன்றாண்டுகளாக மாற்றுகிறீர்கள். 'மோர் எஃபெக்டிவ்' என்று சொல்லி அடுத்த சட்டசபைக் கூட்டத்தொடரில், அதை இரண்டு ஆண்டுகளாக மாற்றி, அதற்கடுத்த கூட்டத் தொடரில், மிகமிக சிறப்பாக இவர்கள் பணியாற்ற வேண்டுமென்றால், மக்களுக்குச் சிறப்பாக சேவை செய்வதற்காக பதவிக் காலம் ஒரு நாளாக இருக்க வேண்டுமென்ற அற்புதமான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும் நான் ஆச்சரியப்படப் போவதில்லை. இந்தக் காரணம் சரியான காரணம்தானா? இதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

அதைப் போலவே இன்னொன்றையும் இங்கே நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே கூட கொஞ்சம் கோபாவேசமாகப் பதில் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அமைதியாக அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை மாநகராட்சியிலே கூட உறுப்பினர், தலைவர் பதவிக்காலம் 6 ஆண்டு என்று இருக்கிறது. அது சரியா, தவறா என்பது வேறு விவகாரம். ஆனால் நான் கேட்கிறேன், பதவிக்காலம், பணிக்காலம் குறைந்த காலமாக இருந்தால்தான் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்று வாதிடுகிற அமைச்சர் அவர்கள், இதே கூட்டத் தொடரில் மதுரை மாநகராட்சிக்கு 3 ஆண்டுக் காலம்தான் பதவிக் காலம்: அம்மாநகராட்சித் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் என்று சட்டத்தைக் கொண்டு வந்தால், இது நியாயம் தானா என்று நாம் பரிசீலிக்கலாம். அமைச்சர் அதற்குப் பதில் அளிக்க இருக்கிறாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே இன்னொன்றையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதே நம்முடைய மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 5 ஆண்டுகள் பதவிக் காலம் என்பதை 4 ஆண்டுகள் என்று சொல்லி, சட்டம் கொண்டு வந்தபொழுது, கடந்த சட்டமன்றத் தொடரிலே என்ன பேசினார் என்ற பேச்சுக் குறிப்பு, இங்கே என்னிடத்திலே அச்சடித்து தரப்பட்டிருக்கிறது. அதை நான் கையிலே வைத்திருக்கிறேன். அதிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு விநோதமான காரணத்தைக் கற்பித்திருக்கிறார். என்ன காரணம்

1986 சனவரி 10] [திரு. அ. ரகுமான்கான்]

தெரியுமா? ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிய, மேல் நடவடிக்கை எடுக்க, இந்த 8-வது சட்டசபைக்கு அதிகாரம் வேண்டும். வாய்ப்பு வேண்டும் என்று சொல்கிறார். ஆகையினாலே, இந்த நகராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், பஞ்சாயத்து ஒன்றிய உறுப்பினர்கள், தலைவர்கள் பதவிக்காலத்தை 5-லிருந்து 4-ஆக்கி, 4-லிருந்து 3-ஆக ஆக்குகிறோம் என்று சொல்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், அவர்கள் மக்களாலே தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள், நாமும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்படுகிறோம். அவர்கள் சிறப்பாகச் செயல்படுகிறார்களா என்பதை ஆராய மக்கள்தான் வாய்ப்பு பெறவேண்டும். சரி, அந்தப் பஞ்சாயத்தோ, யூனியனோ, நகராட்சியோ தப்பு செய்தால் அரசாங்கம் எப்பொழுது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். 8-வது சட்டசபைக்குப் பிறகு, 9-வது சட்டசபை வராதா? 8-வது சட்டசபைக்குப் பிறகு அரசாங்கமே இருக்காதா? எனவே, மேல் நடவடிக்கை எடுக்குவோ, தொடர்ந்து காரியங்கள் செய்யவோ இந்த 8-வது சட்டசபைக்குப் பிறகு 9-வது சட்டசபை இருக்கிறது; 9-வது சட்டசபை செய்கிறபொழுது, அரசாங்கம் என்ற ஒன்று இருந்து கொண்டுதான் இருக்கும், நடவடிக்கை எடுக்க முடியும்.

இன்னொன்றும் நான் கேட்கிறேன், இங்கே மாநில சுயாட்சி பேசுகின்ற நீங்கள், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று பேசுகிற நீங்கள், அவர்கள் சரியாகச் செயல்படுகிறார்களா என்று பார்க்கக்கூடிய மேல் ஆதிக்கம் இந்தச் சட்டசபைக்கும், அரசாங்கத்திற்கும் வேண்டுமென்று சொல்கிற நீங்கள் செய்கிற தப்புகளைப் பரிசீலிப்பதற்கு, மேல் நடவடிக்கை எடுக்க, யாருக்கு அதிகாரம் கொடுப்பது?

உதாரணத்திற்குச் சொல்கிறேன், பஞ்சாயத்துக்களிலே பல்புகள் சரியாக எரியவில்லையென்று சொல்லி, பஞ்சாயத்துக்களைக் கலைத்தீர்கள். உங்கள் ஆட்சியில் பல்புகள் சரியாக எரியவில்லையே, ஆயிரம் விளக்கு என்ற பகுதியில் பல விளக்குகள் எரியவில்லையே, அப்படியானால் உங்களை டிஸ்மிஸ் செய்வது யார்? உங்கள் நடவடிக்கையைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பது யார்? உடனே மத்திய சர்க்கார் உங்கள் நடவடிக்கையைக் கண்காணிக்க, இந்தச் சர்க்கார் நடவடிக்கையைக் கண்காணிக்க, இந்தச் சட்டசபை நடவடிக்கையைக் கண்காணிக்க, சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுக் காலம் இருந்தால் போதும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? ஆகவே, நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று நிச்சயமாகக் கிடையாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1986 சனவரி 10

அடுத்து இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இப்படி 5 ஆண்டை 4 ஆண்டாக்கி. 4-ஐ, 3-ஆக்குவதன் நோக்கம் என்ன? இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மீண்டும் பஞ்சாயத்துக்குத் தேர்தல், நகராட்சிக்குத் தேர்தல், ஒன்றியங்களுக்குத் தேர்தல் என்றால், செய்யாறு போன்று சலுகைகள் செய்து, மீண்டும் வெற்றி பெற வாய்ப்புகள் பெறமுடியும். ஆகவே, உங்களுடைய அரசாங்கம் இந்த 8-வது சட்டசபை நடக்கிறபொழுதே, இந்த அரசாங்கம் இருக்கின்றபொழுது, நம்முடைய அமைச்சர்கள் புடைசூழ மீண்டும் தொகுதியிலே அதிகார துஷ்பிரயோகம் செய்து, இன்னும் சொல்லப்போனால். சௌகரியங்களைச் செய்து, சலுகைகளைச் செய்துகாட்ட, இந்த அரசாங்கம் இருந்தால்தான் மீண்டும் அவைகளைச் சரிசெய்ய முடியும் என்ற உள் நோக்கத்தோடுதான் நீங்கள் 5-ஐ, 4-ஆக்குவதும், 4-ஐ 3-ஆக்குவதும், 3-ஐ 1-ஆக்குவதும் என்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.) திருத்தம் கொடுத்திருக்கிறேன், அதற்கும் சேர்த்தே பேசுகிறேன். அதைப்போலவே, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வேங்கடரமணன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இதிலே என்ன வேடிக்கை என்று கேட்டால், பதவிக்காலம் எவ்வளவு என்பது இருக்கட்டும். முதலிலே பஞ்சாயத்துக்குத் தேர்தல் உண்டா? ஒன்றியத்திற்கு உண்டா? நகராட்சிக்கு உண்டா? தாம்பரத்திலே அமைச்சர் சொல்கிறார், 'உறுதியாக உண்டு, சில சந்தேகங்களைக் கிளப்புகிறார்கள்; சந்தேகம் ஏன்? வந்தே தீரும்' என்று.

ஆனால், ஏன் சந்தேகப்படுகிறோம், ஏன் புரிந்துகொள்ள முடியாமல் அவை இருக்கின்றன என்பதற்கான காரணத்தை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். என்னுடைய நண்பர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் 1979-ல் 'அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடக்கும்' என்று சொன்னார். ஆனால் அதற்குப் பின்னாலே அவர் இந்த இலாகாவை விட்டு வேறு இலாகாவிற்குப் போய்விட்டார். நம்மோடு இந்தப் பிரச்சனை தீர்ந்துவிட்டது என்று இந்த இலாகாவை விட்டு வேறு இலாகாவிற்கு வந்துவிட்டார்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தேர்தல் வந்தே தீரும் என்று சொன்னார். அப்படிச் சொன்னவர் இந்தச் சிக்கல் நமக்கு வேண்டாம் என்று கருதி டெல்லிக்குச் சென்றுவிட்டார்.

அவருக்கு அடுத்து, இந்த இலாகாப் பொறுப்புக்கு வந்த மாண்புமிகு அமைச்சர் — அவர்களுடைய பெயரைச் சொல்வதால் கோபித்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்,

1986 சனவரி 10] [திரு, அ. ரகுமான்கான்]

திரு. சௌந்திரராஜன் அவர்கள் தேர்தல் வரும் என்று கௌரவமாகச் சொன்னார்கள். அவர்கள் ஏற்கெனவே பல சினிமாக்களில் கௌரவ வேடங்களில் நடித்திருப்பதைப் பார்த்து ரசித்தவன் நான். அவர்கள் அந்தப்பாணியில் கௌரவமாகச் சொல்லுகிறார்கள் தேர்தல் வரும் என்று. ஆனால் தேதியைச் சொல்லவில்லை. அந்தவகையில் அவரை கௌரவமாகப் பாராட்டுகிறேன்.

அடுத்து, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த சபையில் சொன்னார்கள். ஆளுநர் ஒரு முக்கியமான 'எக்சியூட்டிவ் ஹெட்'. அவர் இந்த சபையில் சொன்னார். 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ந் தேதி பஞ்சாயத்துத் தேர்தல், 23-ந் தேதி பஞ்சாயத்து யூனியன் தேர்தல், 28-ந் தேதி நகராட்சித் தேர்தல் என்று ஆளுநர் அமைதியாகச் சொன்னார். ஆளுநர் கொடுத்த அந்த வாக்குறுதி இந்தச் சபையில் காப்பாற்றப்பட்டிருக்கிறதா? வருஷா வருஷம் இங்கே அவர் உரை நிகழ்த்துகிறார், வாக்குறுதி வழங்குகிறார். அவருக்கு மரியாதை இல்லை.

ஆளுநருக்கு மரியாதை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மாண்புமிகு முதலமைச்சர், உங்களால் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் என்று போற்றி பாராட்டப்படுபவர், அவருக்கு மரியாதை இல்லை. அவர் சொன்னார் 1984 பிப்ரவரியில் நிச்சயம் தேர்தல் நடக்கும் என்று, இந்த சபையிலே, தேர்தல் 84 பிப்ரவரியில் நிச்சயம் நடைபெறும் என்று சொன்னார். ஆனால் புரட்சித் தலைவர் கூறியதிலேயும் ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட்டீர்கள். அது என்ன புரட்சி என்றால் அவருக்கே மரியாதை கிடையாது. உங்கள் தலைவர். உங்கள் முதலமைச்சர் இந்த சபையில் தேர்தல் வரும் என்று சொன்னார். அதையே நடத்த முடியாத சிக்கல் வந்தது என்றால் அதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாமா? புரட்சித் தலைவருக்கு மரியாதை இல்லாமல் நடந்துகொள்ளலாமா என்று நீங்கள் கேட்க வேண்டாமா?

அடுத்து. இப்போது இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவுக்கு பொறுப்பாக வந்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள்? கொஞ்சம் கடுமையாகவே சொன்னார்கள். எப்படியும் நான் தேர்தலை நடத்தியே தீருவேன் என்று சொன்னார்கள். அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்பற்றி நான சொல்லும்போது தயவுசெய்து அவர்கள் கோபப்பட்டக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். செப்டம்பர் மாதம் தேர்தல் உறுதியாக வந்தே தீரும் என்று சொன்னார்கள். பின்னால், செப்டம்பரில் வேண்டாம், சிக்கல் இருக்கிறது, மீண்டும் டிசம்பரில் தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே என்ன சிக்கல் என்று தெரியவில்லை, பிப்ரவரியில் தேர்தல் நடக்கும், உறுதி, உறுதி, உறுதி என்று சொன்னார்கள்,

[திரு. அ. ரகுமான்கான்] [1986 சனவரி 10

நான் கேட்கிறேன். இந்தத் தேர்தலை ஏன் இப்படி ஒத்தி வைக்க வேண்டும்? செய்யாறில் வெற்றி பெறுங்கள். மற்ற தேர்தல்களில் வெற்றி பெறுங்கள், சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெறுங்கள். ஜனநாயகத்தில் வெற்றி பெறுவது என்பது சகஜம் தான். ஆனால் இன்றைக்கு ** ** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எலெக்டட் பாடி இல்லை என்றால் இப்படி, இப்படி தவறுகள் நடக்கின்றன, அல்லது நடக்கும் என்று சொல்லலாம். ஆனால் இப்படி ஸ்வீப்பிங்காகச் சொல்லக்கூடாது. அதனால் உறுப்பினர் அவர்கள் குறுப்பிட்ட குற்றச்சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ** ** என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதையும் அவைத் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(முற்பகல் 10—50)

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்ற சட்ட முன்வடிவு நான்காண்டை மூன்றாண்டு என்று குறைப்பது பற்றி மட்டும்தான். ஆனால் அவர் பேசுவதோ தள்ளிப்போடப்பட்ட அதன்படி வருகின்ற சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது போல. அதன்மீது பேசுவது போல பேசிக்கொண்டிருக்கிறார். எனவே இப்போது இருக்கின்ற சட்ட முன்வடிவின்மீது மட்டும் பேசுமாறு நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தி அதன்படி தேர்ந்தெடுக்கப் படுகின்ற அவர்களுடைய பதவிக்காலம் எப்படி இருக்கவேண்டும் என்பது சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் பொதுவாகப் பேசுகின்றபோது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் தனி அதிகாரி கள் இருக்கின்ற காரணத்தால் அதிகார துஷ்பிரயோகம் செய்வ தற்கும், தவறுகள் நடப்பதற்கும் வாய்ப்புக்கள் உண்டு என்று நான் சுட்டிக்காட்டிப் பேசிய நேரத்தில் அதைத் தவறு என்று தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். இதே சட்டசபையில் நான் பேசி இருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1986 சனவரி 10] [திரு. அ. ரகுமான்கான்

ஆடிட் ரிப்போர்ட்டிலே குன்றத்தூரில் சாலை போடாமலேயே சாலை போட்டதாகச் சொல்லி பல இலட்ச ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது பற்றி வாசித்துக் காட்டி இதுபோன்ற தவறுகள் நடக்கக்கூடாது என்று சொன்ன போது அப்போதிருந்த அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அமைதியாக இருந்து தவறுகள் திருத்தப்படும் என்று சொல்லி யிருக்கிறார். இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை வேண்டும் என்றால் தேர்தல் நடக்கவேண்டும். ஆனால் காரணங்கள் அடுக்கடுக்காகச் சொல்லப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஒன்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். நகைச்சுவை உணர்வோடு அதை எடுத்துக்கொள்ளவேண்டும். கார்ட்டூன் ஒன்று பார்த்தேன். அதிலே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு ஒருவனை தூக்கிலே போடப் போகிறார்கள். சிறை அதிகாரி அவனைப் பார்த்து உன்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்கிறார். அப்போது அந்தக் கைதி சிறை அதிகாரியைப் பார்த்து, என்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்கிறீர்கள், என்னுடைய கடைசி ஆசை என்னவென்றால், இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சாகப்போகிறேன், எனவே நான் சாவதற்குள்ளாக பஞ்சாயத்துத் தேர்தலைப் பார்த்துவிட்டு சாகிறேன் என்று சொன்னாராம். சிறை அதிகாரி அப்போது எங்களாலேயே இந்த ஜன்மத்திலே பஞ்சாயத்துத் தேர்தலைப் பார்க்க முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிற நேரத்தில் நாளைக்குச் சாகப்போகின்ற உன்னால் எப்படி பஞ்சாயத்துத் தேர்தலைப் பார்க்க முடியும் என்று சொன்னாராம். இது எங்கள் பத்திரிகையில் வந்ததல்ல. பஞ்சாயத்துத் தேர்தல் இந்த ஜன்மத்தில் நடக்கப் போவதில்லை என்று கிண்டல் செய்கிற வகையில் கட்சி சார்பற்ற பத்திரிகைகளில் வந்து இருக்கின்றது,

நான் இன்னொரு கார்ட்டூனையும் சொல்ல விரும்புகிறேன். ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் ஆகவில்லை — இங்கே ஐயர் யாராவது இருந்தால் கோபித்துக் கொள்ளக்கூடாது — அவ்வாறு கல்யாணம் ஆகாததால் ஒரு ஐயரைக் கூப்பிட்டு ஜாதகம் பார்க்கிறார்கள். அப்போது ஐயர் சொன்னாராம், 'ஏன் உங்கள் பெண்ணுக்கு இவ்வளவு நாட்களாகக் கல்யாணம் ஆகவில்லை, நல்ல ஜாதகம்தானே; இன்னும் சொல்லப் போனால் உங்களுடைய பெண்ணுக்கு வருகிற மாப்பிள்ளை யார் தெரியுமா? பஞ்சாயத்து யூனியன் சேர்மன்தான் மாப்பிள்ளையாக வரப் போகிறார்' என்று ஐயர் சொன்னவுடனே அந்தப் பெண்ணின் தாயும் தகப்பனும் மற்றவர்களும் அழ ஆரம்பித்துவிட்டார்களாம். அப்போது ஐயர் விவரம் புரியாமல் கேட்டாராம், நல்ல காரியத்தைத் தானே சொல்கிறேன், பஞ்சாயத்து யூனியன் சேர்மன் தானே மாப்பிள்ளை என்று சொல்கிறேன், அதற்காக ஏன் வருத்தப்படுகிறீர்கள்? ஏன் அழுகிறீர்கள் என்று. அப்போது அந்தப் பெண்ணின் தகப்பனார் எந்தக் காலத்தில் ஐயரே கல்யாணம் நடக்க, எந்தக் கால்த்தில்

பஞ்சாயத்துத் தேர்தல் நடக்க, தேர்தல் நடந்தால்தானே சேர்மனாக வர, ஆக என்னுடைய பெண்ணுக்கு இந்த ஜன்மத்தில் கல்யாணம் ஆகாது என்றா சொல்கிறீர்கள் என்று கேட்டாராம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எக்ஸ்டென்ஷன் ஆஃப் ஸ்பெஷல் ஆஃபீஸர் என்ற வகையில் எலக்ஷன் நடத்தாத அடிப்படையில் பில் வந்தால் அதன்மீது நீங்கள் இவ்வாறெல்லாம் பேசலாம். எனவே இப்போது உள்ள பில்லினுடைய ஸ்கோப்பை விட்டுவிட்டுப் பேசுவது அவசியமில்லை. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான், கிண்டல் செய்வதற்காக சொல்ல வில்லை. அரசியல் சார்பற்ற பத்திரிகைகள் கூட தேர்தல் பற்றிய சந்தேகங்களை வெளியிடுகின்றன. தேர்தல் நடந்து, உறுப்பினர்கள் வந்து, தலைவர்கள் வந்து, அப்படி வந்தபிறகுதானே அவர்களுடைய பதவிக் காலத்தை ஐந்தை நான்காக்குவது, நான்கை மூன்றாக்குவது என்பது பற்றிப் பேச முடியும். எனவே அந்த அடிப்படை சுவர் இருந்தால் தானே சித்திரம். அந்தச் சுவர் உண்டா? அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள் பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி தேர்தல் உண்டு என்று. அந்தச் சுவர் இருந்தால் தானே எல்லாம். அந்தத் தேர்தல் நடந்தால் தானே உறுப்பினர்கள் வருகிறார்கள். எனவே அந்தச் சுவர் உண்டா? இல்லையா? இதைத் தெரிந்தபிறகுதான் பதவிக் காலத்தைப் பற்றிப் பேசுவது சரியாக இருக்கமுடியும். ஆகவே இது ரெலவன்ட் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், துணைச் சபாநாயகர் அவர்களும் அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அதிக நேரம் பேசி விட்டீர்கள், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சரிடத்தில் மெத்த அடக்கத்தோடு சில விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன். இதை நான் லாவணி கச்சேரியாக்க விரும்பவில்லை. எனக்கு உள்ள சில சந்தேகங்களை மக்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுத்தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முதலிலே நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புவது, தேர்தல்கள், அதாவது பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகராட்சிக்கும் எப்போது நடக்கும் என்று அதிகாரபூர்வமாக இந்தச் சட்டசபையில் அறிவிக்க வேண்டும். எப்போது தேர்தல் என்ற அந்தத் தேதியை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அதிலே சில குழப்பங்கள் எல்லாம் இருக்கின்றன. உதாரணமாக அரசியல் ரீதியான தேர்தல் சின்னங்களை யாருக்குக் கொடுப்பது என்று

கேட்டபோது நம்முடைய மரியாதைக்குரிய முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அண்ட் வாட்டர் போர்ட் டிபார்ட்மெண்டின் கமிஷனர் அண்ட் செகரட்டரி டு கவர்ன்மென்ட் திரு. இராமநாதன், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஒரு கடிதத்தை அனுப்பி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. முடித்து விடுங்கள். எல்லா கட்சியிலிருந்தும் பேச இருக்கிறார்கள். பில்லிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லை என்றால் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அமெண்ட்மெண்ட் கொடுத்ததில் பேசாமல் வேறு எதில் பேசுவது? அதைத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். 'Offices of the Chairmen and Councilors of Municipal Councils.' நகராட்சி மன்றத்திலுடைய தலைவர்கள், உறுப்பினர்களுக்கு அரசியல் ரீதியான தேர்தல் சின்னம் வழங்கப் படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தாம்பரத்திலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அவர் சொல்லியிருக்கக் கூடிய குறிப்புகளிலே, 'ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் ஆகிய பதவிகளுக்கு போட்டியிடுகின்றவர்களுக்கு கட்சி சின்னம் ஒதுக்கப்படுமா' என்று சம்பந்தப்பட்டவர்கள் கேட்ட போது, நம்முடைய ப. உ. ச. அவர்கள்—மன்னிக்க வேண்டும்—உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது என்ன கூறியிருக்கிறார்கள் என்றால், அந்தத் தேர்தல்களில் எந்தெந்தப் பதவிகளுக்கு கட்சி சின்னம் ஒதுக்கப்படும் என்று குறிப்பிட்டே சொல்லியிருக்கிறார்கள்.

பேரூராட்சித் தலைவர்கள் பதவிகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பதவிகள், நகராட்சித் தலைவர்கள் பதவிகள் ஆகிய பதவிகளுக்கு மட்டும் கட்சி சின்னம் ஒதுக்கப்படும் என்றும் மற்றவர் களுக்கு அந்தந்த கட்சி சின்னம் கிடையாது என்றும் பேசியதாக தினத்தந்தி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அப்படியானால் அந்தச் செய்தி தவறான செய்தியா? அப்படித் தவறான செய்தி என்றால். அப்படிப்பட்ட செய்தியை அமைச்சரவர்கள் சொல்வது சரியா என்று கேட்கிறேன்.

அடுத்து இன்னொன்றையும் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசிய பேசுக்களிலே அது இருக்கிறது. இங்கே பேசிய அவருடைய பேச்சுக்களைப் பற்றி கேட்க மக்களுக்கு உரிமை இருக்கிறது. சட்டசபை உறுப்பினர்களாகிய எங்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கே தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். தேதியும் குறிப் பிட்டார்கள். ஆனால் வெளியிலே பேசும்போது அதற்கு ஒரு காரணம் சொல்லி தேர்தல் ஒத்திவைத்து விட்டார்கள். அப்போது சட்டசபை இல்லாததினால் எங்களுக்கு உங்கள்

[திரு. அ. ரகுமான்கான்] [1986 சனவரி 10

மூலமாக அமைச்சரை இது குறித்துக் கேட்க முடியவில்லை. ஆனால் அதற்கு அவர்கள் ஒரு காரணம் சொன்னார்கள். வாக்காளர்கள் பட்டியலை தனியார் அச்சகத்தில் அச்சிடக் கூடாது; அரசுத் துறை அச்சகத்தில் தான் அச்சடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அது இப்போது தனியார் துறையில்தான் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அதை, தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்கு முக்கியமாகக் கொண்டுவர விரும்புகிறேன். தாம்பரத்திலேயும், அடையாறிலும் உள்ள தனியார் அச்சகங்களிலேதான் அவைகள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. நான் கேட்கிறேன், அமைச்சர் கூறிய அந்தக் காரணம் சரியா? தவறான காரணம் அல்லவா அது.....(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவின்மீது பேசுகிறபோது அதற்குரிய கருத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லி வந்தால் பொருத்தமாக இருக்கும். ஆனால் பொதுக் கூட்டத்தில் பேசுவது போல, ஒவ்வொரு கருத்தையும் எடுத்து வைத்து அதற்கு சான்றுகளை எடுத்துரைத்து பேசிக் கொண்டே போனால்—இந்த ஒரு உறுப்பினருக்கே நீங்கள் இவ்வளவு நேரம் ஒதுக்குவீர்களே யானால் மற்ற கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு நீங்கள் எப்படி நேரம் ஒதுக்கித் தர முடியும்? அல்லது ஒரு கட்சிக்கே மட்டும் தனிச் சலுகை காட்டப் போகிறீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள். எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வீர்கள். மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது சொல்லியிருக்கிறார்கள் —'' அரசியல் கட்சியின் பேதங்களை ஊராட்சிகளிலே, நகராட்சிகளிலே, மாநகராட்சிகளிலே புக விடுவது சரியில்லை என்ற கருத்தை வலியுறுத்திப் பேசி வந்தார்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும். ஆகவே, கட்சி இல்லாமல் இந்தத் தேர்தலை நடத்தப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று சொன்னார்கள். அத்தோடு ' அண்ணா வழியில் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த அரசின் கடமை, அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது' என்றும் சொன்னார்கள். ஆனால் திடீர் என்று அண்ணாவும் ரூபாவும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கனவிலே வந்து, ' அது எல்லாம் கூடாது நப்பு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள் ஆகவே அது கூடாது' என்று சொன்னார்களோ

1986 சனவரி 10] [திரு. அ. ரகுமான்கான்]

என்னவோ தெரியவில்லை. ஆகவே, இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்காக அண்ணா அவர்களின் கொள்கையையும் பெரியார் அவர்களின் கொள்கையையும் மாற்றிக் கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை. அத்தோடு அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கனவிலே வந்து என்ன சொன்னார்களோ அதுவும் தெரியாது.

ஆனால் தனியார் அச்சகங்களிலே அச்சடிக்கக் கூடாது என்று காரணம் காட்டியவர்கள் தனியார் அச்சகங்களிலேதான் அச்சடிக்கிறார்கள். 'பொய் சொல்லல் ஆகாது பாப்பா' என்று பாரதியார் பாடியிருக்கிறார். பாப்பாவே பொய் சொல்லக் கூடாது என்றால், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாமா என்பதைத்தான் நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொய் என்ற வார்த்தையை சொல்லக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : சரி, நான் மாற்றிக் கொள்கிறேன், உண்மைக்குப்புறம்பான தகவல்களைச் சொல்லலாமா நமது அமைச்சர் அவர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய அருமைச் சகோதரர் இராமலிங்கம் அவர்கள் கூட கேட்டார்கள், நிகராட்சிகளைப் பற்றியும், ஊராட்சிகளைப் பற்றியும், பஞ்சாயத்து யூனியன்களைப் பற்றியும் குறைகள் சொல்கிறீர்களே என்று கேட்டார்கள். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் அங்கே தவறு நடந்தால், அவர்களைக் கேட்கலாம். அவர்கள் இல்லாத நிலையில் இங்கேதான் கேட்க வேண்டும். அதேபோல திரு. மோகனரங்கம் அவர்களின் பெயரை, ஆலந்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு வைத்திருக்கிறார்கள். அவர்கள் உயிரோடு நன்றாகத்தான் இருக்கிறார்கள். அவர் பெயரை வைத்ததும் எனக்கு திடீர் என்று சந்தேகம் வந்து கேட்க வேண்டிய தாகிவிட்டது....(கூச்சல், குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 35 நிமிடம் ஆகி விட்டது. நீங்கள் சொல்வதற்கும் இந்த பில்லுக்கும் என்ன சம்பந்தம்? எலக்ஷன் பிரச்னை, விலைவாசி பிரச்னை எல்லாவற்றையும் இதிலேயே பேசிவிட வேண்டும் என்பது சரியல்ல.

(முற்பகல் 11—00)

திரு. அ. ரகுமான்கான் : ஒரே வரியில் முடித்து விடுகிறேன். உயிரோடு இருப்பவர்கள் பெயரால் மன்றங்கள் இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு, உயிரோடு இருப்பவர்கள் பெயரே அரசாங்க

கூட்டிடங்களுக்கு இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு ஆலந்தூரில் உயிரோடு இருக்கிற மோகனரங்கம் பெயரில் வைத்திருப்பது கொள்கை முரண்பாடில்லையா? அடுத்தபடியாக அரசாங்க விழாக்களில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைப்பது தானே முறை? எதிர்க்கட்சி என்பதற்காக புறக்கணிப்பது நியாயமா? அடுத்து தேர்தல் வருமா, வராதா? எப்பதைச் சொல்லுங்கள். இன்னும் சொல்லப்போனால் பஞ்சாயத்துக்களுக்காவது தேதியைச் சொன்னார்கள். செல்வனைக்கு தேதியே கிடையாது. இதிலே தேதியை சொல்லாமல் ஏமாற்றினீர்கள். அதில் தேதி சொல்லி ஏமாற்றுகிறீர்கள். கரை சேரக் கப்பலைக் காட்டுங்கள் என்றால் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் காகித ஓடத்தைக் காட்டுகிறார். ஆகவே இது வெறும் காகித ஓடம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தில் அதனுடைய சட்ட மன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் சேர்ந்து கூட அரசு விழாக்களில் இனிமேல் கலந்து கொள்வதில்லையென்று தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானம் எல்லாம் பத்திரிகைகளில் கூட வந்திருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: ஏற்கனவே சில நடவடிக்கைகளின் காரணமாக நாங்கள் அரசாங்கக் கமிட்டிகளிலே கலந்துகொள்ள மாட்டோம், புறக்கணிப்போம் என்று முடிவு எடுத்தோம். இப்போது கூட எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் நம்முடைய முத்தையா அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். நான் போய் அதில் கலந்து கொள்கிறேன். காரணம் அது இட ஒதுக்கீடு சம்பந்தமான, அறைகள் ஒதுக்குவது சம்பந்தமான பிரச்னை. அதனை அன்றைக்கே கைவிட்டு விட்டோம் என்று கலைஞர் அவர்கள் அறிவித்து விட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் நான் கேட்கிறேன். அந்தக் கொள்கை இருக்கிறது. ஆகவே நாங்கள் உங்களை அழைக்கவில்லை என்றால், ஹார்பர் தொகுதியில் அண்ணன் செல்வராசன் அவர்களை அழைத்தீர்களே, அது எப்படி? இன்னும் சொல்லப்போனால் சேப்பாக்கத்தில் என்னை அழைக்காமல் விட்டுவிட்டீர்களே அது எப்படி? அண்ணன் செல்வராசன் என்றால் இனிக்கிறது, நான் என்றால் கசக்கிறதா? நான் என்ன தப்பு செய்தேன்? ஆகவே அந்தப் பிரச்னை இப்படி இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது.)

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகளை அவை முன் வைத்திருக்கிறார்கள். ஒன்று நகராட்சிகளுடைய தேர்தல்; உறுப்பினர்களின் பதவி காலம் நான்கு ஆண்டுகள் என்று இருப்பதை மூன்று ஆண்டுகளாகக் குறைக்க

வேண்டும் என்றும், அதேபோல ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் உறுப்பினர்களுடைய பதவிக்காலத்தைத் நான்கு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக, குறைக்க வேண்டுமென்றும் திருத்த சட்டமுன்வடிவை அவைமுன் வைத்திருக்கிறார்கள். இந்தத் திருத்த சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் நிராகரிப்பதோடு, எதிர்ப்பதோடு இதிலே அரசு சொல்லியிருக்கிற காரணங்கள் பொருத்தமற்ற காரணங்களாக இருக்கின்றன என்றும் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு ஜூன் மாதம் அல்லது ஏப்ரல் மாதம் வாக்கில் ஐந்தாண்டுகளாக இருந்ததை நான்கு ஆண்டுகளாகக் குறைப்பதற்கு ஒரு காரணத்தைச் சொன்னார்கள். இப்போது நான்கு ஆண்டுகளாக இருப்பதை மூன்று ஆண்டுகளாகக் குறைப்பதற்கு ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். இந்தக் காரணங்கள் முழுவதும் சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, ஊராட்சி மன்றங்களோ, ஊராட்சி ஒன்றியங்களோ, நகராட்சிகளோ இல்லாமல் இருக்கும் போது, தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலே அவைகளின் நிர்வாகம் இருந்து கொண்டிருக்கிறபோது, அவைகளின் தலைவர்களுடைய, உறுப்பினர்களுடைய பதவிக்காலம் எத்தனை ஆண்டுகளாக இருக்க வேண்டுமென்று நாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். மன்றங்கள் இல்லை. பிள்ளையே கிடையாது, ஆனால் பிள்ளைக்கு பெயர் என்ன இடுவது என்று நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்கள் அமைக்கப்பட பிறகு, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தேர்தல்கள் நடந்து முடிந்ததற்குப் பின்னால் அவர்களுக்கு எத்தனை ஆண்டுக்காலம் பதவிக்காலம் இருக்கலாம் என்பதை எல்லாம் பேசிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரசு எப்போதும் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து சட்டமாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்த அமைப்புகளே இல்லாமல், அந்த அமைப்புகளுக்கு பதவிக்காலம் எத்தனை ஆண்டுக்காலம் இருக்கலாம் என்று ஒரு மாய மானேடு விளையாடுகிற அந்த விளையாட்டை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏன் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே தான் உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்திவிட்டு அந்தப் பதவிக் காலம் பற்றிப் பேசலாமென்று கருதுகிறேன்.

இதிலே சொல்லப்படுகிற காரணங்கள் அவர்கள் சொல்கிறார்கள். குறுகிய காலம் பதவியில் இருந்தால் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் காரணம் எதார்த்தமானதாக, சரியானதாக இல்லை. காரணம் அது நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. குறுகிய காலம் பதவியில்

[திரு. கோ. வீரய்யன்] [1986 சனவரி 10

இருந்தால் நாம் இருக்கப்போவது ஒரு ஆண்டு, அல்லது இரண்டு ஆண்டுக்காலம். அதற்கு பிறகு நாம் போய்விடப் போகிறோம் என்ற பொறுப்பற்ற நிலையில் கவனம் எடுத்துக்கொள்ளாமல் அவர்கள் செயல்படலாம். மாதத்தை, வருடத்தை எண்ணிக் கொண்டு காலத்தைப் போக்கக்கூடிய நிலைமை இருக்குமானால் சிறப்பாகப் பணியாற்றுகிற நிலைமை நிச்சயமாக ஏற்படுத்தமுடியாது. ஏன் என்றால், அமைச்சர் அவர்களோ, அல்லது அரசோ என்ன கருதுகிறதோ தெரியவில்லை. ஒருவேளை குறுகிய காலமாக ஆக்கினால், அதிகமான பேர்களுக்கு பதவிகள் கொடுக்க முடியும் என்று கருதுகிறதோ, அல்லது அமைச்சர் அவர்கள் கருதுகிறாரோ என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே குறுகிய வட்டத்திலே குறுகிய காலம் இருந்தாலே போதும் என்று சொல்லப்படுகிறது. 6 மாதங்களுக்கு முன்னாலே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய நேரத்திலே. அப்போது பரிசீலனை செய்து 5 ஆண்டுகளாக இருப்பதை 4 ஆண்டுகளாக மாற்றினார்கள். அதற்குக் காரணம் சொல்கிறார்கள். முன்னாலே 3 ஆண்டுகளாக இருந்தது. அதற்காக இப்போது நாங்கள் 3 ஆண்டுகளாக ஆக்குகிறோம் என்று சொன்னார்கள். 3 ஆண்டுகளாக இருந்த அனுபவத்தைப் பரிசீலித்துப் பார்த்துவிட்டுத்தான் 5 ஆண்டுகள் என்று மாற்றப் பட்டது முன்பு. அதற்குப் பிறகுதான் தேர்தல் நடந்தது. ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக தேர்தல் நடைபெறாமல் நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது அமைப்புகளே இல்லாமல், அதனுடைய ஆயுட்காலத்தைப் பற்றி பேசிக்கொண்டு இருப்பது அர்த்தமற்றது, தேவையற்றது. எனவேதான் இந்தக் குறுகிய காலம் என்பது ஒரு பொறுப்பற்ற நிலைமையை உண்டாக்கும். நிர்வாகம் சரியாக, சிறப்பாக நடைபெறுவதற்கு உதவி செய்யாது. சென்ற முறை சட்டத் திருத்தம் வந்தபோதே 5 ஆண்டுகளை மாற்றக்கூடாது என்று நாங்கள் அப்போதே வற்புறுத்தி இருக்கிறோம். அதையே இப்போதும் தொடர்ந்து வற்புறுத்துவதோடு, அது முடியாவிட்டாலும், இந்த 4 ஆண்டுகள் என்பதைக் குறைக்கத் தேவையில்லை. நிச்சயமாக குறுகியகாலம் சிறப்பாகப் பணியாற்ற உதவும் என்பது பொறுத்தமற்றது. அதிகமான பேர்களுக்கு பதவிகளைக் கொடுப்பதற்கு அது பயன்படுமே தவிர, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அது பயன் அளிப்பதாக இருக்காது, எனவே இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை அரசு திரும்பப் பெற்றுக்கொண்டு, தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தேர்தலை நடத்தி முடித்துவிட்டு, அதற்குப் பிறகு, அந்த அனுபவத்திலேயிருந்து, எப்படி இதை மாற்றலாம் என்று வேண்டுமானாலும் அரசு பரிசீலிக்கலாம். எனவே இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்தல் நடத்துவது பற்றி உறுதியாக முடிவு எடுத்து, அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை அரசும் அமைச்சர் அவர்களும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

1986 சனவரி 10]

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடருகிறேன். சென்ற ஆண்டு 5 ஆண்டுகளாக இருந்த, அதனுடைய ஆயுட்காலத்தை, 4 ஆண்டுகளாகத் திருத்தினீர்கள். அப்போதே அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து இருந்தோம். இப்போது அதைத் திரும்பவும் 3 ஆண்டுகளாக மாற்றியிருக்கிறீர்கள். சென்ற முறை 4 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டபோது சொன்ன காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன. அதன் பிறகு உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று, அந்த அனுபவத்தின் காரணமாக, இப்போது 4 ஆண்டுகள் என்று இருப்பது சரி இல்லை, எனவே 3 ஆண்டுகள் என்று இருந்தால் நல்லதாக இருக்கும், என்று நீங்கள் சொல்லியிருந்தால், இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஏற்கனவே இந்த அரசு வந்தபோது, 3 ஆண்டுகள் என்று இருந்ததை 5 ஆண்டுகள் என்று உயர்த்தியது. அதன் பிறகு உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. 5 ஆண்டுகளாக உயர்த்திய பிறகு, பஞ்சாயத்துக்கள் திரும்பவும் செயல்படவில்லை. அதைப் போலவே நகராட்சிகளும் சரியாக இயங்க முடியவில்லை. காரணம் நகராட்சிகளுக்குப் பணவசதி கிடையாது. பெரும்பாலான உள்ளாட்சிகளிலே, உள்ள அடிப்பம்புகள் ரிப்பேராக இருக்கின்றன. 98 சதவீத அடிபம்புகள் சரியாக இருக்கின்றன என்று அதிகாரிகள் உங்களுக்கு ரிப்போர்ட் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலே பார்த்தால், 50 சதவீத பம்புகள் கூட சரியாக இயங்காத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. இது எங்களுக்குத் தெரியும்; ஏன், ஆளும் கட்சி நண்பர்களுக்குக் கூடத் தெரியும். அப்படி இருந்தும் ஏன் காலத்தைக் குறைக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. 3 ஆண்டுகளாக இருந்தால், அவர்களுடைய பதவிக் காலத்தில் சிறப்பாக இருக்கும் என்று சொல்வதுதான் காரணமா அல்லது ஏற்கனவே இந்த மன்றத்திலே குற்றச்சாட்டு சொன்னதுபோல், இந்தச் சட்டமன்றத்தின் ஆயுட்காலம் முடிவதற்கு முன்பாகவே, இதனுடைய ஆயுட்காலம் முடியவேண்டும் என்று கருதுகிறார்களா என்று தெரியவில்லை. ஆதலால், இந்தச் சட்டத்தை இங்கே கொண்டுவருவதற்கான காரணம் இப்போது ஒன்று சொல்லப்பட்டு இருக்கிறது. அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

அதேபோல் உள்ளாட்சித் தேர்தல், ஊராட்சிகள் தேர்தலை நடத்திவிட்டு, அல்லது தேர்தலுக்கு ஒரு தேதியைச் சொல்லிவிட்டு அதற்குப் பிறகு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கலாம். இன்னும் தேதியே, சட்டப்படி, முறைப்படி அறிவிக்கப்படவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 சனவரி 10

தேர்தல்கள் நடைபெறும் என்றும், அண்ணா பிறந்த நாளில், உள்ளாட்சி நிறுவனங்கள் எல்லாம் மலரும் என்றும் சொன்னார்கள். அதற்குப் பிறகு, அக்டோபர் மாதம் 18-ஆம் தேதிக்கு மாற்றினார்கள் அரசு அச்சகங்களிலே வாக்குச் சீட்டுகள் அச்சடிப் பதற்கு தாமதம் ஆகிறது என்று காரணத்தைக் காட்டி, அதற்குப் பிறகு, டிசம்பர் மாதம் 7-ஆம் தேதிக்கு மாற்றினார்கள் இந்திரா காங்கிரசார் தேர்தல் சின்னம் கேட்கிறார்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகு, இப்போது பிப்ரவரி மாதம் 23-ஆம் தேதி என்று சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர, முறைப்படி, சட்டப்படி அறிவிப்பு எதுவும் இல்லை. இந்த அறிவிப்பு செய்த பிறகாவது, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கலாம். இதை விவாதித்து இருக்கலாம். ஆனால் அறிவிப்பு செய்யாமலேயே, 5 ஆண்டுகள் என்று இருந்ததை, 4 ஆண்டுகளாக ஆக்கி, பிறகு, இப்போது அதையும் 3 ஆண்டுகளாகக் குறைப்பதற்கு காரணம் என்ன? இந்த ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடைபெற வில்லை என்றால் அடுத்த ஆண்டு இதன் ஆயுட்காலத்தை 2 ஆண்டுகளாக ஆக்கிவிடுவீர்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக அறிவித்துவிட்டு இந்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்றும் இப்போது இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11—10)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் போன ஆண்டு 1985 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற கூட்டத்தில் 58ஆவது சட்ட விதிப்படி 5 ஆண்டு இருந்ததை 4 ஆண்டுகளாக ஒரு ஆண்டு குறைக்கப்பட்டு—4 ஆண்டுகள் என்று இருந்தால் நிர்வாகம் நல்ல அமைப்பில் செயல்பட முடியும் என்று ஒரு சட்ட முன்வடிவை வைத்து சட்டமன்றத்தில் வாதம் செய்து இறுதியில் 4 ஆண்டுகள் என்று ஏற்கப்பட்டு, அந்த 4 ஆண்டுகள் என்ற சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்தப் போகிறோம் என்று அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். ஆனால் இன்றைக்கு நடக்கக்கூடிய சட்ட மன்றத்தில் 4 ஆண்டு என்பதை 3 ஆண்டுகளாக குறைக்க வேண்டும் என்று அனுமதி கேட்டு இருக்கிறார்கள். நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வது எல்லாம் ஒரு சட்ட மன்றத்தில் ஒரு சட்ட முன்வடிவை வைத்து எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியும் இணைந்து ஏகமனதாக நிறைவேற்றப் பட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிவிக்கப்பட்டு தேர்தல் அறிவிக் கப்பட்ட பிறகு ஒரு ஆண்டு முடிவதற்கு உள்ளாகவே மீண்டும் சட்டத்தை 3 ஆண்டுகளாக குறைக்க வேண்டும் என்று கேட்பது, இந்த அளவுக்கு ஜனநாயகத்தை மதிக்கிறோமா, இந்தச் சட்டத்தை

1986 சனவரி 10] [திரு. பொ. உத்திராபதி]

அதுவும் ஜனநாயக முறைப்படி இயற்றப்பட்டதை கேலி செய் கிறோமா என்று எண்ணி எண்ணி நான் வருந்துகிறேன். இந்தச் சட்டத்தை இங்கே கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த 3 ஆண்டுகள் என்பதை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு அந்த 4 ஆண்டுகள் என்ற அடிப்படை யிலேயே அறிவித்து தேர்தல் நடத்துவதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். காரணம் 1975ஆம் ஆண்டு, 1980ஆம் ஆண்டு, 1985ஆம் ஆண்டு மூன்று தடவை தமிழகத்தில் உள்ளாட்சி மன்ற தேர்தல்கள் நடந்து முடிந்து இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கக் கூடிய ஆளும் கட்சியை 3ஆவது தடவையாக மக்கள் ஆதரித்து வாக்களித்து அதிகாரத்தை கொடுத்து இருக்கிறார்கள். இன்னமும் உள்ளாட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நடத்துவதற்கு ஏன் அச்சப்படுகிறார்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். ஆனால் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் 3ஆவது தடவையாக மக்கள் எங்களுக்கு வாக்களித்து மீண்டும் அதிகாரத்தை கொடுத்து இருக்கிறார்கள். இடையில் எதிர்க் கட்சிகள் எல்லாம் எப்படி எப்படியோ விமர்சனம் செய்தாலும் செய்யார் தொகுதி இடைத்தேர்தலில் மீண்டும் மக்கள் எங்களுக்கு வாக்களித்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. மக்கள் உங்கள் பக்கம் இருக்கிற போது 7ஆவது தடவையாக உள்ளாட்சித் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

சில தினங்களுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். என்னுடைய தொகுதியில் நான் சட்டமன்ற உறுப் பினராக வந்த நாள் முதல் நான் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் மக்களுக்கு குடிக்க தண்ணீர் கொடுக்க முடியவில்லை. சாலைகளை பராமரிக்க முடியவில்லை, மின் விளக்குகளை எரிய வைக்க முடியவில்லை. நான் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. ஆகவே நானே உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று அறிவித்து விட்டார்கள். அதற்குப் பின்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு உண்ணாவிரதத்தை நீங்கள் திரும்பப் பெறுங்கள், அந்த வேலைகளை நான் கவனிக்கச் சொல் கிறேன் என்று வாக்குறுதிக் கொடுத்து இருக்கிறார்கள். எதிர்க் கட்சியினர் சொல்வதைவிட ஒரு ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் சொல்லிப் பார்த்து, கேட்டுப் பார்த்து நடைபெறாமல் உண்ணாவிரதம் வரை தள்ளப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் கிராமப்புறத்தில் எந்த அளவுக்கு அதிகாரிகள் அல்லது பெரிய பிரமுகர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். சட்டமன்றத்தால் உள்ளாட்சித் துறைக்கு பணங்கள் கோடிக்கணக் காக ஒதுக்கப்படுகிறது. மின் விளக்கு என்று பல்வேறு காரியங் களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால் என்னுடைய அனுபவத்தில் என்

[திரு. பொ. உத்திராபதி] [1986 சனவரி 10

தொகுதியில் 1983 ஆம் ஆண்டு பொழிந்த மழையிலிருந்த இன்று வரையிலும் ஒரு கிராமச்சாலை கூட செப்பனிடப்படவில்லை. கைப்பம்புகள் எல்லாம் பல மாதங்களாக அப்படியே கிடக்கின்றன. மின் விளக்குகள் எரியவில்லை. ஆனால் பணம் செலவழிக்கப்படுகிறது. இது எப்படி செலவழிக்கப்படுகிறது என்று எல்லாம் சொல்லி, விவரிக்க நான் விரும்பவில்லை. எனவே, இவைகளை எல்லாம் பார்க்கிறபோது, இந்தத் தேர்தலை நமது அமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக ஒத்திவைத்து வருவது என்பது மக்களுக்கு நாம் செய்யக்கூடிய துரோகமாக மாறும். 4 ஆண்டுக் காலம் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எனவே, மூன்று ஆண்டுகள் என்பதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஆளுநர் உரையிலே கூட தேர்தல் நடைபெறும் என்று சொல்லி இருக்கிறார்களே தவிர, நகராட்சியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால், இப்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக் கொள்வது எல்லாம் தேர்தலில் எல்லா யூனியன்களிலேயும் ஆளும் கட்சியே வரட்டும், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. மக்கள் வாக்களிக்கட்டும். நாங்கள் வருத்தப்படவில்லை—உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று மக்கள் பிரதிநிதிகள் வந்தால்தான், ஊழல் இல்லாமல், ஒதுக்கப்பட்ட பணம், எதற்காக ஒதுக்கப்பட்டதோ அந்த வேலையினால் மக்களுக்கு பலன் கிடைக்கமுடியும். நாம் 7, 8 ஆண்டுக் காலமாக அனுபவித்து வருகிறோம். ஊழல் என்று சொன்னாலே கோபப்படக் கூடிய நிலைமை இருக்கிறது.

தன்னிறைவுத் திட்டத்தில் பள்ளிக்கூடம் கட்டப்படுகிறது. ஆனால் சிமெண்ட் எல்லாம் விற்று விட்டார்கள். அதனால் அந்தப் பள்ளிக்கூடங்கள் மூன்று ஆண்டுகள் கூட நிற்காது. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் எனக்கு முன்னாலே அமர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் என்னுடைய தொகுதி தொண்டயக்காட்டுக்கு சென்று இருக்கிறார்கள். அங்கு தன்னிறைவுத் திட்டத்தில் கட்டப்பட்ட பள்ளிக்கூடம் ஓராண்டு கூட நிற்கவில்லை. மழை பெய்து பூராவும் கொட்டிவிட்டது. இடித்து உயரே அள்ளி வைத்து இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பில்லிலே பேசுங்கள். மூன்று வருட காலம் என்பதில் என்ன கெடுதல் என்பதை மட்டும் சொல்லுங்கள். இப்படி ஒவ்வொரு ஊராகச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

திரு. பொ. உத்திராபதி : தேர்தல் நடத்தாததினாலே இந்த அளவுக்கு பொருள் பாழாகிறது என்று.....

[1986 சனவரி 10]

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு முறை தொண்டயக்காடு சென்று இருந்தேன். ஆனால் பள்ளிக்கூடம் இடிந்து இருக்கிறதா என்று தெரியவில்லை. என்னை வீணாக வம்புக்கு இழுக்கிறார், சட்டமன்ற உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உத்திராபதி நீங்கள் மூன்று வருட காலத்தைப் பற்றி பேசிவிட்டீர்கள். உட்காருங்கள்;

திரு. பொ. உத்திராபதி : ஒரே ஒரு விஷயம். அமைச்சர் அவர்கள் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். இன்னொரு முறை அந்த இடத்தைப் பார்க்கவேண்டும் என்று தயவுசெய்து கேட்டுக்கொண்டு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இந்த மூன்று ஆண்டு என்பது, சட்டசபையை உதாசீனப்படுத்துவது ஆகும். ஏனென்றால், சென்ற ஆண்டு ஒரு சட்டத்தை நிறைவேற்றியதற்குப் பிறகு இந்த ஆண்டு உடனடியாக மாற்றுவது என்பது மரபு அல்ல. எனவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 4 ஆண்டு என்று அறிவிக்கப்பட்டபடி இருக்க வேண்டும். தேர்தல் பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி என்று அறிவித்து இருக்கிறார்கள். அப்போதும் நடக்குமா என்று மக்கள் உண்மையிலேயே நம்பவில்லை. நம்பக்கூடிய அளவுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி உள்ளாட்சித் தேர்தலை அவசியமாக நடத்துவதற்கு வாக்குறுதி கொடுக்கவேண்டும் என்றும், இந்த மூன்று ஆண்டு எனற சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் கேட்டு அமர்கிறேன்.

*திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலே எதிர்த்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

இன்றைக்கு 5 ஆண்டுகாலமாக இருக்கிற பதவிக்காலம், மூன்றாண்டுகளாக படிப்படியாகக் குறைக்கப்பட்டு இருப்பதை நான் நடைமுறையிலே மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். பொதுத் தேர்தல்கள் நடைபெறுகிற காலத்திலே எவ்வளவு தூரம் நம்முடைய மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள், வாக்காளர்கள் என்ற முறையில் அவர்களுக்கு என்னென்ன கிரமங்கள் எல்லாம் ஏற்படுகின்றன என்பதை நான் மட்டும் அல்ல, எந்தவித கட்சிப் பாகுபாடுமின்றி இன்றைக்கு இந்த மன்றத்திலே அமர்ந்து இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள்.

[திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்] [1986 சனவரி 10

(முற்பகல் 11–20)

பொதுத் தேர்தலிலே 60 சதவீதம், 70 சதவிகிதம் இங்கே வாக்குப்பதிவு நடைபெறுகிற நிலை இருக்கிற நேரத்திலே கூட, பல பிரச்சினைகள், பல கலவரங்கள் நடைபெற்று இருக்கின்றன, என்பதை அத்தனை பேரும் அறிவார்கள். எனவே, இதுமாதிரியாக மூன்று ஆண்டுக்காலத்திலே அடிக்கடி நம்முடைய மக்களை ஒரு வாக்குப் பதிவுக்கு எடுத்துச் செல்கின்ற நிலை ஏற்படுவது நிச்சயமாக மக்களுக்கு நன்மையாக அமையாது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு எந்தத் தொகுதியைப் பார்த்தாலும் இதே மாதிரி பல பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே எந்தவிதமான கட்சிப் பாகுபாடின்றி அத்தனை பேர்களும் இதனை எதிர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பது மக்களுக்கு நன்மை பயக்காது என்ற உண்மை அவர்களுக்கே தெரிந்து இருந்தாலும் ஒரு வேளை அவர்கள் இருக்கிறபோதே மீண்டும் இந்தத் தேர்தலை நடத்திவிடலாம் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை, எப்படியிருந்தாலும் மீண்டும் அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவித்து அமர்கிறேன் நன்றி. வணக்கம்.

திரு. வி. எஸ். டி. சம்கல் ஆலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற சட்டமுன்வடிவில் நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். உள்ளாட்சி, நகராட்சிகளிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்களின் உறுப்பினர்கள் இல்லாமல் இருப்பதால் அந்த நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்பதால் பல முறை அதை எடுத்துக்கூறிய பிறகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தேர்தலை அறிவித்தார்கள். சிலபல காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு இப்போது நடைபெற இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பதவிக் காலத்தை 4 ஆண்டுகளாக இருப்பதை 3 ஆண்டுகளாகக் குறைத்து ஒரு சட்டமுன்வடிவை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். பல முறை நாம் சிந்தித்துத்தான் 5 ஆண்டுகளாக இருந்ததை நான்கு ஆண்டுகளாக ஆக்கினோம். அதை இப்போது 3 ஆண்டுகளாக ஆக்குவது நல்ல ஏற்பாடு அல்ல. அவ்வாறு ஆக்கினால் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களையும் தலைவர்களையும் பாராட்டும் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தத்தான் நேரம் இருக்கும். அடுத்து வர இருக்கும் தேர்தலில் முனைப்பாக இருப்பார்கள். அந்த நிலையில் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை எப்படி நிறைவுசெய்ய முடியும்? அதைக் கருத்தில்கொண்டு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

1986 சனவரி 10]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவின் மீது கருத்துக்களைத் தெரிவித்த அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் அரசு சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கண்டித்துப் பேசினாலும் நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்று, அவர்கள் நன்றி சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டதால்தான் இப்படிப் பேசுகிற வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது, அதற்காவது நன்றி தெரிவித்து இருக்கவேண்டும். ஆனால் தெரிவிக்கவில்லை.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தெல்காசி சட்டமன்ற உறுப்பினர் பேசும்பொழுது போகாத ஊருக்கு வழி காட்டுகிறோம் என்று என்னைச் சொன்னார்கள். அது உண்மைதான் மறுக்கவில்லை. போகாத ஊருக்கா வழிகாட்டுகிறார் என்று தவறாகச் சொல்லவில்லை. தமிழ்நாட்டிலே போகாத ஊர்கள் நிறைய இருந்தன. போகாத ஊர்களை எல்லாம் போகும் ஊர்களாக்கி நாங்கள் வழிகாட்டினோம். அதனாலே அவர் சொன்னதில் தவறில்லை.

தேர்தல் நடக்குமா என்று கேட்டார்கள். தேர்தல் நடக்கும் என்பதைத் தெரிவித்து அந்தத் தேர்தல்களுக்கான நாட்கள்பற்றி நான் முறைப்படி இறுதியிலே அறிவிக்கிறேன். தி.மு.க. சார்பிலே மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிய போது நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். ராஜினாமா செய்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா குறைந்த பட்சம் ஊழியம் செய்தாலே போதும், ப.உ.ச. ஒரு ஆண்டுக் காலத்திலே ராஜினாமா செய்வாரா என்றெல்லாம் கேட்டார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னவோ தெரியவில்லை, என் துர்பாக்கியம். தி.மு.க. விலிருந்து வருகிற குரல்கள் முழுவதுமே என்னைப் பார்த்து ராஜினாமா செய், ராஜினாமா செய் என்றே வந்துகொண்டிருக்கிறது. என்னவோ புரியவில்லை, பரவாயில்லை....

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது தி.மு.க.வுக்கு எந்தவித கோபமும் இல்லை. உங்களைப் பொறுத்தமட்டிலே அமைச்சரவை ஒரே படகில் பயணம் செய்கின்ற பயணிகள்தான். ராஜினாமா என்றால் ஒட்டுமொத்தம் தானே தவிர அதிலே ஒருவர் என்ன, பலர் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, நல்ல வேளை என்னைத் தனிமைப்படுத்தியிருந்தால் கொஞ்சம் ஆபத்தை என் கட்சியிலே உண்டாக்கியிருக்கும். ஒட்டு மொத்தமாகச் சேர்த்துச் சொன்னார்கள், நான் நன்றியைத்

[திரு. ப. உ. சண்முகம்] [1986 சனவரி 10

தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசும்போது நான் அடிக்கடி விநோதமான காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். விநோதமான காரணங்களைச் சொல்லவில்லை. சென்ற ஆண்டு, நான்காண்டுகளாகக் குறைக்கலாம் என்பதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டதோ, அதே காரணத்தைத் தான் இப்பொழுதும் வைத்து, மூன்று ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறோமே தவிர வேறல்ல. அரசியல் நோக்கத்துடனேயோ, அரசியல் கட்சி இலாபம் கருதியோ எதையும் செய்யவில்லை என்பதை மட்டும் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆயிரம் விளக்கு பகுதியில் பல்புகள் எரியவில்லை என்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, அப்படி மாநகராட்சியில் எங்கேயாவது பல்புகள் எரியவில்லை என்றால் அதுபற்றி உடனடியாக மாநராட்சிக்கு தெரிவித்து இருக்க வேண்டும்; அப்படித் தெரிவித்தும் பல்புகள் போடப்படவில்லையா என்பது தெரியவில்லை. அப்படித் தெரிவித்தால் நிச்சயமாக பல்புகள் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். இவைகள் எல்லாம் நடைமுறையில் செய்யப்பட வேண்டிய காரியங்களாகும்.

எட்டாவது சட்டமன்றமே இதை ஆராய வேண்டுமென்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். ஒன்பதாவது சட்டமன்றம் நிச்சயமாகக் கூடும். எனக்குத் திடமான நம்பிக்கை இருக்கிறது. ஒன்பதாவது சட்டமன்றமும் அனைத்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை கொண்டதாகத் தான் அமையும் என்ற உறுதியும் நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. இருந்தாலும் கூட இந்தச் சட்டமன்றமே விவாதிக்கலாம் என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல பத்திரிகைகளில் வந்த கேலிச் சித்திரங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பார்த்து நான் வருத்தப்படவில்லை. அது பத்திரிகைகளுக்கு இருக்கின்ற உரிமையாகும். ஆனால் கேலிச் சித்திரம் உண்மையாக அமைந்து விடுவதில்லை என்பது அவருக்கே தெரியும்.

அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து விட்டு, தேர்தலில் நிற்க, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்று சொல்லிவிட்டு, தேர்தல் வரும்பொழுது மக்களுக்கு மீண்டும் எதையாவது செய்ய வேண்டுமென்று செய்து, மீண்டும் பொதுத் தேர்தலைச் சந்திக்கப் பார்க்கிறீர்களா என்று கேட்டார்கள். அப்படிச் செய்வதில் தவறு இல்லை. மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் இந்த

1986 சனவரி 10] [திரு. ப. உ. சண்முகம்]

ஆட்சி இருக்கிறதே தவிர வேறல்ல என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதில் எந்தவிதமான தவறும் இல்லை. அதை தேர்தலை ஒட்டித்தான் செய்ய வேண்டுமென்பதில்லை. அதைச் செய்வதற்காகத்தான் ஆட்சியை அமைத்திருக்கிறோம்; அப்படிச் செய்வதில் தவறில்லை என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாகப் பேசி முடிக்கும்பொழுது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கரை சேர்வதற்கான கப்பலைக் காட்டுங்கள் என்று என்னைக் கேட்டார்கள். காகித ஓடத்தைக் காட்டாதீர்கள், கரை சேர கப்பலைக் காட்டுங்கள் என்று சொன்னார்கள். காகித ஓடத்தை பூம்புகார் பிக்சர்ஸ்தான் காட்டப் போகிறார்களே தவிர நான் அல்ல. அவர்கள் காட்டுகின்ற காகித ஓடம் எப்படியிருக்குமோ தெரியாது. அதைப் பார்த்துத் தான் சொல்ல வேண்டும். காகித ஓடம் சீக்கிரம் வந்து விடும் என்று சொல்கிறார்கள். கரை சேர்ந்தால் சரி. ஆனால் காகித ஓடங்களை, கரை சேராக் கப்பலை நான் காட்டமாட்டேன். கரை தட்டி விட்ட கப்பலில் நான் ஏற மாட்டேன்; ஏற்றவும் விட மாட்டேன். தேர்தலை நிச்சயமாகக் குறிப்பிட்டபடி நடத்தத் தான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்று காலையில்கூட ஆளுநர் உரையிலே விடப்பட்டிருந்த நகராட்சி தேர்தலுக்கான திருத்தத்தைக்கூடப் பேரவைத் தலைவரவர்கள் படித்தார்கள். தேர்தல் உறுதியாக வருகிறது என்பதற்கு இதுவே சான்றாகும். இதற்கு மேல் எந்தச் சான்றையும் நான் சொல்ல விரும்பவில்லை.

எப்பொழுது தேர்தல் என்பதை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டுமென்று ஜனதாக் கட்சித் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள் கேட்டார்கள். நான் அதிகாரபூர்வமாக, தேர்தல் அறிக்கை வெளியிடப்படுகின்ற நாளை, 17 ஆம் தேதிதான் தேர்தல் அறிக்கை வெளியாகப் போகிறது; எலக்ஷன் நோட்டீஸ் அப்பொழுதுதான் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும். அந்த நாளை இப்பொழுது முன்கூட்டியே குறிப்பிடுகிறேனே தவிர வேறொன்றுமில்லை. 17 ஆம் தேதியன்றுதான் தேர்தலுக்கான அறிக்கைகள் வெளியிடப்படும்.

23, 24, 27 ஆகிய நாட்கள் வேட்பு மனுவைப் பெறுவதற்காக குறிப்பிடப்பட்ட நாட்களாகும். வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்வதற்கு 28 ஆம் தேதி, வேட்பு மனுவைத் திரும்பப் பெறுவதற்கு 31 மாலை 3 மணி வரையில்; இறுதிப் பட்டியல் வெளியிடுவது 31 மாலை 5 மணிக்கு. வாக்காளர்கள் வாக்குப பதிவு 23-2-1986. வாக்குகள் எண்ணுவது 24-2-1986 என்று

[திரு. ப. உ. சண்முகம்] [1986 சனவரி 10

அடுத்த நாளே எண்ணி விடலாம் என்று தேதிகள் இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நான் அதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொன்றையும் மரியாதைக்குரிய திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். சின்னங்களைப் பற்றிச் சொன்னார்கள். சின்னங்களைப் பற்றி நான் தாம்பரத்தில் சொன்னது உண்மைதான். அதுப்பற்றி இப்பொழுது விளக்கமாகவே சொல்கிறேன். சின்னங்களை முதலிலே ஊராட்சி மன்றங்களுக்கும் வைக்கலாமா என்று பரிசீலித்தோம். ஊராட்சி மன்றங்களுக்குச் சின்னங்கள் வைப்பதாக அரசு முடிவெடுத்திருந்தது உண்மைதான். ஆனால் ஊராட்சி மன்றங்களுக்கு அரசியல் கட்சிகளுக்குச் சின்னம் வைக்கும்பொழுது ஒட்டுப்போடுகின்ற வாக்குச் சீட்டுகளைத் தயாரிப்பதில் கோடிக்கணக்கான சீட்டுகளை அச்சடிக்க வேண்டி வருகிறது. தனி சின்னத்தையும் வைத்து பெயரையும் வைத்து அடிக்க வேண்டியிருப்பதால் தேர்தல் நாள் தள்ளிப் போகுமோ என்ற அச்சம் இருந்தது.

(முற்பகல் 11-30)

அதுவும் இல்லாமல், சின்னம் இல்லை என்று சொன்னபொழுது, ரூ. 3 கோடிக்கு அதிகமாக, தனிச் சின்னங்கள், இன்டிபென்டன்ட் சிம்பல்ஸ் வைத்து, பேலட் பேப்பர்ஸ் தயாரித்தாகிவிட்டன. எனவே, அவைகளை எல்லாம் வீணாக்க வேண்டாம் என்று கருதித் தான் ஊராட்சி மன்றங்களுக்கு அரசியல் கட்சி சின்னங்கள் தேவையில்லையென்றும், நகராட்சிகளின் வார்டுகளுக்கும் அரசியல் கட்சிகளின் சின்னங்கள் தேவையில்லையென்றும் முடிவு செய்திருக்கிறோம். இப்பொழுது அரசியல் சின்னங்கள் கொடுப்பதாக முடிவெடுத்து அரசு அறிவித்திருப்பது, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பதவிக்கும், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், நகராட்சித் தலைவர்கள் என்ற 3 பதவிகளுக்கும் மட்டும்தான் அரசியல் கட்சி சின்னங்கள் கொடுப்பது என்ற முடிவு செய்யப் பட்டிருக்கிறது எல்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அரசாங்கத்தினுடைய கமிஷனர்—செயலாளர் கொடுத்திருக்கக்கூடிய அறிவிப்பிலே 'Members and Chairmen of the Municipalities' என்றுதான் இருக்கிறது. ஆனால் வார்டு என்று சொல்கின்றபொழுது, கவுன்சிலர் என்று சொல்பவர் வார்டில்தான் வருவார். அதற்கும் சின்னம் இல்லை என்று இப்பொழுது பேசப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே போடப் பட்ட உத்தரவைப் படிக்கிறீர்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு தான் நான் சொல்கிற ஜி. ஓ. வெளியாகி இருக்க வேண்டும்.... (குறுக்கீடு).

1986 சனவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அமைச்சர் பேசி முடித்தவுடன் கடசியிலே கேட்கலாம். அதுதான் சரியான முறை. அமைச்சர் பேசி, உறுப்பினர் திருப்பிப் பேசிக் கொண்டே இருந்தால் சரியாக இருக்காது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நகராட்சிகளுடைய வார்டு கவுன்சிலர்களுக்கு அரசியல் சின்னம் ஒதுக்குவதாக இல்லை. தனிச் சின்னங்கள் — இன்டிபென்டன்ட் சின்னங்கள் — தான் இருக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அரசாங்க உத்தரவு இருக்கமுடியாது என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லாமல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேர்தல் உறுதியாக நடக்கும் என்ற திடமான நம்பிக்கையோடு தேர்தல் நடத்துவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, கொண்டு வந்திருக்கிற திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலம் மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவும் வேண்டும்."

தீர்மானம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 2, **for** the expression "three years", **substitute** the expression "five years".

திரு. சு. பாலன் : திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் தம்முடைய பேச்சிலே ஒன்றைக் குறிப்பிட்டார். Commissioner and Secretary, Municipal Administration and Water Supply Department அனுப்பியிருக்கக்கூடிய உத்தரவு காப்பி என்னிடத்திலே இருக்கிறது. அதிலே, 18-6-1985 என்று போட்டிருக்கிறார்கள். ஏனென்றால் வெளியிலே குழப்பமாக இருப்பதாலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதிலே மிக விளக்கமாகப் போட்டிருக்கிறார்கள்.

"Under rule 17(1) of the Tamil Nadu Municipal Councils conduct of elections to the offices of Chairmen and Councillors and in supersession of the orders earlier issued in the Government, the following directions for the assignment of symbols to the candidates contesting in the elections to the offices of the Chairmen and Councillors of Municipal Councils.....' என்று போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் தாம்பரத்தில் பேசியது வேறு மாதிரி இருக்கிறது. திரும்பவும் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, கவுன்சிலர்களுக்கும் சேர்மனுக்கும் மட்டும்தான் தேர்தல் சின்னமா என்பதுதான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ரகுமான்கான் அவர்கள் படிக்கும்போது தேதியைப் படித்தார்கள். 18-6-1985 வெளியான உத்தரவு அவர் படித்தது. இப்பொழுது அரசு அதைத் திருத்தியிருக்கிறது என்றுதான் நான் சொன்னேன். நான் இப்பொழுது சொல்லியிருப்பது, நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் பதவி ஆகிய 3-க்கு மட்டும்தான்.....

திரு. அ. ரகுமான்கான் : 19-12-1985 ஆம் தேதிய ஆணை அது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படியே இருந்தாலும் இப்போது நாம் ஜனவரியில் இருக்கிறோம். 18-6-1985-லே போடப்பட்டது என்று உறுப்பினர் தேதியைக் குறிப்பிட்டதாலே சொன்னேன். இப்போது அரசு போட்டிருப்பது இந்த மூன்று பதவிகளுக்குத்தான். மற்ற பதவிகளுக்கு தனி சிம்பல்தான் கொடுக்கப்படும் என்று சொல்லி, இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று மரியாதைக்குரிய திரு. ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

135437

[1986 சனவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப்பட்டது.

பிரிவு—3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 3, for the expression "three years", substitute the expression "five years".

திரு. சு. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளில் உறுப்பினர்கள், தலைவர்களின் பதவிக்காலம் 3 ஆண்டு என்று இருப்பதை 5 ஆண்டு என்று இருக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1986 சனவரி 10

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவும் வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

'In clause 2, *for* the expression "three years", *substitute* the expression "five years."

திரு. கு. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதிலே எனக்கு ஒரு சந்தேகம். ஆளுநர் உரையில் நகராட்சித் தேர்தல் பற்றி எந்த அறிவிப்பும் இல்லாமல் இருக்கிறது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல் அரசு அண்மையில் அறிவித்துள்ள நாளில் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. நகராட்சி பற்றிச் சொல்லப்படவில்லை. அப்படியானால் நகராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெறாதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இன்று காலையிலே பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிப்பைப் படிக்கும்போது மரியாதைக்குரிய திரு. ரகுமான்கான் அவர்கள் சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரைக்கு தெரிவித் துள்ள திருத்தத்தை இங்கே படித்தார்கள். ஆளுநரின் ஒப்புத லோடு நகராட்சிகளுக்கும் தேர்தல் உண்டு என்று இங்கே அறிவிக்கப் பட்டு, அதனை அவை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

1986 சனவரி 10]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, நான் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தை வலியுறுத்துவதன் நோக்கம் 5 ஆண்டு பதவி காலம் இருந்தால்தான் நல்லமுறையில் பணியாற்ற முடியும். ஆகவே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, தோல்வி யுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு—2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'In clause 3, *for* the expression "three years", *substitute* the expression "five years."

திரு. கு. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங் களின் உறுப்பினர்கள், தலைவர்கள் பதவி காலம் மூன்று ஆண்டு என்று இருப்பதை 5 ஆண்டு என்று உயர்த்தினால்தான் நல்ல முறையில் பணியாற்ற முடியும். எனவே என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திருத்தம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி யுற்றது.

(முற்பகல் 11—40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'In clause 4, *for* the expression "three years." *substitute* the expression "five years".

திரு. க. பாலன் : அதை நான் வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வி யுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''பிரிவு 4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு—5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''பிரிவு 5 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 5, **for** the expression "three years" *substitute* the expression "five years".

திரு. க. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வி யுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 5 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு ** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவர்''.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாதம் 8-ஆம் தேதி அன்று கூட்டு அவையில் ஆற்றிய அந்த உரையில் சிறப்பான தமிழக அரசின் கொள்கைகளையும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசின் வருங்காலத் திட்டங்களையும் எடுத்து விளக்கி இருக்கிறார்கள். அந்த உரைக்காக இந்தப் பேரவை உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். நாங்கள் நன்றியுடையவர் களாக இருக்கிறோம் என்றால் நம்மைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்கள் நன்றிக்கு உரியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லாமலேயே நாடு அறியும்.

---

*153–163-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

*164–177-ம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப் பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. மா. சின்னராசு] [1986 சனவரி 10

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகள், அரசாங்கம் நடந்து முடிந்த ஆண்டிலே நிறைவேற்றிய சில, திட்டங்கள், நடப்பாண்டிலே நிறைவேற்ற எடுத்துக் கொண்டிருக்கிற திட்டங்கள் ஆகியவற்றை எல்லாம் விளக்குவதாக அமைவது மரபு. அந்த மரபு வழியில் வந்த ஆளுநர் உரையில் புரட்சித் தலைவர் அரசின் வருங்காலத் திட்டங்கள் பலவும் இங்கே கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆக எத்தனையோ திட்டங்கள் இதில் இருக்கின்றன. அவைகள் எல்லாம் படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். ஆனால் இதைப் பார்க்க மறுத்தவர்கள், ஆளுநர் அவர்கள் அதைப் படித்த போது அதைக் கேட்க மறுத்து வெளியே சென்றவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருப்பதை நாம் மறப்பதற்கில்லை.

பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்க்கிறேன். அதிலே ஒரு கருத்து நம் மதிப்பிற்குரிய இன்னும் எங்களால் மதிக்கப்படுகிற திரு. நாஞ்சிலார் அவர்கள் கூறியதாக நான் படித்தேன். குப்பைத் தொட்டியிலே போடவேண்டிய காகிதம் என்று இதை அவர்கள் சொன்னார்கள் என்று நான் கருதுகிறேன். இன்னும் கூட அவர்களா அப்படி சொல்லி இருப்பார்கள் என்பது ஐயந்தான். நானும் பழைய குப்பைகளை எல்லாம் கிளறிப் பார்த்தேன். 1977, 1978, 1979 ஆகிய ஆண்டுகளிலே எல்லாம் ஆற்றப்பட்ட ஆளுநர் அவர்களது உரைகளிலே எந்த விதத்திலே அவையெல்லாம் வைக்கப்பட்டு இருந்ததோ அதே விதத்தில்தான் இதுவும் அமைந் திருந்தது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு அவர்கள் கோபுரத்திலே இருந்த காலத்திலே குப்பைத் தொட்டியின் அருகிலேயே கூட அவர் நிற்கவில்லை. ஆகவே அன்றைக்கு அந்த வார்த்தையைப் போட முடியவில்லை. ஆனால் இன்று அவர் இருக்கிற இடத்திலே அவருக்கு மிக சமீபமாக குப்பைத் தொட்டி இருக்கக்கூடும்; அல்லது அதன் அருகில் அவர் இருந்திருக்கக் கூடும். அதனால்தான் அப்படிப்பட்ட வார்த்தை களைப் போட்டார் என்று கருதுகிறேன். ஆனால் ஒரு சிலவற்றை மட்டும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியின் சார்பாகக் கொடுக்கப் பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் எதுவுமே இல்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நாட்டினுடைய தற்போதைய பிரச்னை என்ன என்பதை நாம் அறிவோம். நம்முடைய தமிழகத்தினுடைய எதிர்காலமும், தமிழக மக்களுடைய பொருளாதார மேம்பாடும், நம்முடைய இந்திய அரசாங்கத்தினுடைய திட்டங்களை நிறை வேற்றுகிற முறையிலே தான், அது அமையும் என்பதை நான் இங்கே சொல்லாமல் இருக்கமுடியாது. அதைத்தான் நம்முடைய ஆளுநரின் உரையும் சுட்டிக் காட்டுகிறது,

1986 சனவரி 10] [திரு. மா. சின்னராசு]

பொருளாதார மேம்பாட்டிற்காக தீட்டப்பட்டிருக்கிற இன்றைய 7வது ஐந்தாண்டுத் திட்டம், 2 மிகப் பெரிய நோக்கங் களை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதிலே ஒன்று கல்லாமை யைப் போக்குவது, இன்னொன்று இல்லாமையை இல்லாமல் செய்வது என்பதாகும். அதிலே மூன்றாவதாக இருக்கும் மிகப் பெரிய குறிக்கோள், நாட்டிலே இருக்கிற வேலை இல்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழிப்பது என்பதாகும். ஆக, 2000-வது ஆண்டின் இறுதிக்குள் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது என்ற உன்னதமான நோக்கத் தோடும், நாட்டிலே கல்லாமையும், வறுமையும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த 7வது 5 ஆண்டுத் திட்டம் ஒரு நல்ல முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற திட்டம்.

நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ராஜிவ் காந்தி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த 9—11—1985-லே நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், அதிலே தமிழகத்தினுடைய பங்கானது ஓரளவிற்கு நம் காலத்திலேயே என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதும் ஆளுநர் உரையிலே முதலிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிற வாசகம் ஆகும். ஆகவே அதிலே குறை சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அதிலே விமர்சிப்பதற்கோ விவாதிப்பதற்கோ ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டால், இன்று தமிழகத்திலே இருக்கிற, இந்தியாவிலே இருக்கிற, மக்களின் பொருளாதார முன்னேற்றத் தைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அப்படி மிக முக்கியப் பிரச்னையை ஆளுநர் உரை கட்டிக் காட்டி யிருப்பதைப் பார்க்கிறோம். அதிலே நம் பங்கு என்ன என்பதை யும் அவர் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னதற்காக நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். திட்டப் பங்கான 3 லட்சத்து 25 ஆயிரத்து 366 கோடியில் —இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் - தமிழகத்தில் கிட்டத்தட்ட 1 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் நம்முடைய பொதுத் துறையிலே முதலீடு செய்யப்பட வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் 5 ஆண்டுத் திட்டத்தினுடைய நோக்கம்.

ஆகவே இந்தப் பொதுத் துறையிலே இடப்படுகின்ற மூலதனம் 1 லட்சத்து 80 ஆயிரம் கோடி என்று இருக்கும் என்றால் அதிலே தமிழக அரசாங்கத்தின் பங்காக குறைந்தது 10 ஆயிரம் கோடி வரையில், இந்த 5 ஆண்டுக் காலத்திற்கு கொடுக்கப்பட வேண்டும் எனபது நம்முடைய விருப்பம். நம்முடைய பரப்பளவையும், தமிழகத்தினுடைய மக்கள் தொகை யையும், தமிழகத்தினுடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நிதி ஆதாரங்களையும், நிதியைத் திரட்டுகின்ற முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு பார்த்தால், நிச்சயமாக இதுகாறும் பொதுத் துறையிலே வழங்கப்பட்டிருக்கிற முயற்சிகள், ஒதுக்கப்பட்டிருக்கிற

[திரு. மா. சின்னராசு] [1986 சனவரி 1

மூலதனம், தமிழகத்திலே செய்திருக்கிற முதலீடு மிகமிகக் குறைவு என்பதை நாம் அறிவோம். ஆளுநர் உரை அதைக் சுட்டிக் காட்டத் தவறவில்லை. ஆக ஆயிரம் கோடிக்கு, இந்த 5 ஆண்டுக் காலத்திற்கு, தமிழகத்தினுடைய மூலதனமாக, மத்திய அரசாங்கத்தின் பொதுத்துறை மூலமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது நம்முடைய விருப்பம்.

இதை தமிழகத்தினுடைய மேம்பாட்டிற்காக கேட்டு இருக்கிறோம். தமிழகத்தினுடைய வேலை வாய்ப்பு பிரச்னையை தீர்ப்பதற்காக, வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக கேட்டிருக்கிறோம். ஆகையினால் இதை மத்திய அரசாங்கத்தின் மூலமாகப் பெறுவது நம்முடைய தலையாய கொள்கை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் நம் தமிழகத்தில் கூடுதல் வருமானத்தை பெறுவதற்கான முயற்சிகளிலேயும் நாம் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் முன்னணியில் இருந்து வந்திருக்கிறோம். கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டு முடிவடைந்த திட்டத்தில் கூட, நாம் குறியீட்டு அளவுக்கு மேல் செலவு செய்து, முன்னேற்றப் பணிகளை செம்மையாக நிறைவேற்றியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே யாரும் மறந்துவிடக் கூடாது. ஆக, தொடர்ந்து ஒரு நாட்டினுடைய முன்னேற்றம், திட்டமிட்ட முன்னேற்றம், எடுத்துக் கொண்ட திட்டங்களை முறையாக நிறைவேற்றுவதிலே தான் இருக்கிறது என்பதற்கு இது ஒரு அடையாளமாகும். ஒரு திட்டத்தின் ஆண்டு ஒதுக்கீடு 960 கோடி என்று வரையறை இருந்தாலும் நாம் 1050 கோடியை செலவழித்திருக்கிறோம். இது இன்றைய தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு காரணமாக அமைந்திருக்கிறது. தொடர்ந்து இந்த வளர்ச்சி நமக்கு ஏற்பட்டிருக்கிற இயற்கை இன்னல்களினால் தடைபட்டாலும் வெள்ளம், வறட்சி என்ற நிலைமை மாறி மாறி வந்தாலும், அவை நம்மை ஒரளவுதத்தளிக்கச் செய்தாலும், நிலைகுலையாமல் இருந்து புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிற சீரிய முயற்சிகளினால், அந்த திட்டப் பணிகள் தொய்வில்லாமல் நடந்திருக்கிறது. இனியும் நடந்தேறும் என்று திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்று தமிழகத்தினுடைய தேசிய திட்டங்களை நிறைவேற்றுகின்ற முறைகளிலேயும், அது 20 அம்சத் திட்டமாக இருந்தாலும் சரி, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.வி.ஜி.பி, போன்ற மத்திய அரசாங்கத்தினுடைய வேலை வாய்ப்பு திட்டமாக இருந்தாலும் சரி, தமிழகம் முன் அணியிலேயே நிற்கிறது என்று சொல்லி, ஏதோ மத்திய அரசாங்கத்திற்கு பயந்து வாழ்வதாக சிலர் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

1986 சனவரி 10] [திரு. மா. சின்னராசு]

[முற்பகல் 11-50]

மத்திய அரசாங்கம் நாட்டினுடைய பொருளாதாரத்தை நிலை நிறுத்துகிற பணியில், பொருளாதார உயர்விற்கான திட்டங்களை நிறைவேற்றுகிற போது, அதைச் செவ்வனே நிறைவேற்றுவது தமிழக அரசினுடைய வளர்ச்சிக்காகத்தான், தமிழக மக்களுடைய வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்காகத்தான்.

ஆகவே அந்த வகையில் இந்தத் திட்டங்களும், மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களின் 20 அம்சத் திட்டங்களும் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கு அதற்கான பாராட்டுகளையும், பரிசுகளையும் தமிழகம் பெற்றிருக்கிறது. இது நம்முடைய கொள்கையை நிறைவேற்றுகிற நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டுகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஆகவே தமிழகத்தினுடைய எல்லாப் பிரச்னைகளையும் ஆளுநர் உரை சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆளுநர் உரையில் இலங்கை வாழ் தமிழ் மக்களுடைய பிரச்னையை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற வெள்ளம் பற்றியும், வறட்சியின் நிலையைப் பற்றியும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தமிழகம் திரட்ட வேண்டிய நிதியாதாரங்களை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் தமிழகத்திலே இருக்கிற நலிந்த பிரிவினருக்கு ஒரு சோஷியல் ஜஸ்டில், சமுதாய நீதி ஏற்படுவதற்கு, ஆதிதிராவிட மக்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி வருகிற ஆண்டுகளில் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இன்றைக்கு உலக அவை, ஐ.நா. சங்கம் உலகத்தில் 'ரூஃப் பார் ரூப்ஃலெஸ்' என்கிற முழக்கத்தை இந்த ஆண்டினுடைய முழக்கமாக எழுப்பி, அதற்கான முயற்சியை உலக நாடுகள் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே அந்தக் கொள்கையில் உலக நாடுகள் முழக்கத்தை ஈடேற்றுகின்ற முறையில் தமிழகத்தில் மிகப் பெரிய தீர்வு காணப்படவிருக்கிறது. சோஷலிசம் பேசுகின்றவர்கள் எல்லாம் குறிப்பிடுவார்கள். ஆறாத சோறும், கிழியாத உடையும், ஒழுகாத வீடும் தான் சோஷலிசம் என்று தமிழகத்திலே பலர் சொல்லியதுண்டு. ஆகவே அந்தவகையில் இன்றைக்கு 10 லட்சம் மக்களுக்கு நாம் ஒழுகாத வீட்டை, அதுவும் வீட்டை கனவிலே கூட பார்க்கமுடியாத ஏழை எளியவர்களுக்கு, ஆதி திராவிடமக்களுக்கு கட்டிக்கொடுக்கிற முயற்சியை ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியிருப்பது எந்தவகையிலே குறைவானது என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு, திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு, தமிழகத்தினுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகிற முறையில் ஒருபக்கம் தொழில் குறிப்பில் எடுத்துக்காட்டப் பெற்றிருக்கிற இந்தச் சிறப்புகளும், அதேநேரத்தில் தமிழகத்தில்

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற சத்துணவுத் திட்டமும், அதற்காகவே அந்தக் குழந்தைகளுக்கு தொடர்ந்து கொடுக்கப்படுகிற இலவச ஆடைகளும், புத்தகங்களும் என்று மற்றொரு பக்கம் சமுதாய நீதியை நிலைநாட்டுவதற்காக எடுக்கப்பட்டிருக்கிற முயற்சிகள் என்பதையும் இங்கே உள்ளப்பூர்வமாக உணரவேண்டுமென்று விரும்புகிறேன்.

வெளிநடப்பு செய்தவர்கள் இங்கே பேசுவதற்கு உரிமை படைத்தவர்களா என்பதை இங்கே நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆகவே வெளிநடப்பு செய்தவர்கள், வெளியே சென்று கொடுத்த அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்கள். அதைப் பார்க்கிற போது வேடிக்கையாக இருந்தது. ஆசிரியர் பிரச்சினையில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. பேசித் தீர்க்கவில்லை என்பதற்காக வெளிநடப்பு செய்தோம் என்று வெளியே பத்திரிகைகளில் செய்திகளைப் பார்த்தேன். நான் உள்ளப்பூர்வமாகக் கேட்கிறேன். இந்த அவையிலே கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு கேட்கிறேன். ஆசிரியர்களுடைய பத்து அம்ச பிரச்னைகளைப் பற்றி, அவை நியாயமான பிரச்னைகள் என்று சொல்லக்கூடியவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினரானாலும் சரி, அதை ஆதரிக்கும் கட்சிகளானாலும் சரி, அந்தப் பத்து அம்சங்களை சொல்ல இயலுமா? துணைத்தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு நான் உட்கார்ந்து விடுகிறேன். யாராவது சொல்வதற்கு தயாராக இருக்கிறார்களா? ஆனால் தொடர்ந்து சொல்கிறார்கள், பத்து அம்சக் கோரிக்கையை முல்வைத்திருக்கிற ஆசிரியர்களை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆசிரியர்களுடைய போராட்டத்திற்கு நாங்கள் தலைமை வகிக்கிறோம்; அதற்கு தலைமையேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்; என்றெல்லாம் சொல்கிறார்கள். அந்த பத்து அம்சங்களை இப்போது சொல்வதென்றால் யாருக்கும் நினைவிருக்க முடியாது. ஏனென்றால் பத்து அம்சக் கோரிக்கைகள் என்ன வென்று தலைவர்கள் யாரும் பார்ப்பதற்கு அக்கறை செலுத்தவில்லை. ஆனால் போராட்டம் நடக்கிற போது தலைமையேற்க வேண்டும்; அதிலே ஆதாயம் தேட வேண்டுமென்ற நோக்கத்திலே ஈடுபட்டார்களே தவிர வேறல்ல. அவர்கள் நேற்று வெளிநடப்பு செய்தார்கள்.

ஆனால் ஆசிரியர்களுடைய உண்மையான பிரதிநிதிகளாக எங்களுடைய மாவட்டத்திலேயிருந்து வந்திருக்கிற மதிப்பிற்குரிய மேலவை உறுப்பினர்கள் மயில்சாமி, மீனாடசிசுந்தரம், ஜெயச்சந்திரன் போன்றவர்கள் எல்லாம் அமைதியாக உட்கார்ந்து கொண்டு தான் இருந்தார்கள். ஆகவே பேச வேண்டியவர்கள், போராட்டம் நடத்தியவர்கள், போராட்டம் தீர்ந்தது, மாணவர்கள் படிக்கிறார்கள், ஆசிரியர்கள் பள்ளிகளுக்குப் போகிறார்கள், அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று திருப்தியோடு இருக்கிறார்கள். ஆனால்,

ஆசிரியர்களுடைய பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. அது மேலும் பேசப்பட வேண்டும். அதைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே இது எந்த நோக்கத்தை வெளிப்படுத்துகிறது என்பதைத் தான் உள்ளப்பூர்வமாக உணர்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உள்ளசுத்தியோடு, மனச்சாட்சியோடு இங்கே இருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆசிரியர்களுக்கு புரட்சித் தலைவர் அரசு கொடுத்து வருகிற சம்பளம் குறைவு என்று யாராவது சொல்ல முடியுமா? ஆசிரியர்கள் கூட அதைச் சொல்லவில்லை. குறைவு என்று சொல்லவில்லை. அதிலே முரண்பாடு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முரண்பாடுகளை நீக்குவதற்காக ஒரு நபர் கமிஷனை அரசு தற்போது நியமித்து இருக்கிறது. இன்னும் தொடர்ந்து அதிலே முடிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளிலே, விவாதிக்கப்படவேண்டிய பிரச்சனைகளிலே, அரசும் அந்தச் சங்கங்களும் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிற நேரத்திலே, இன்னும் கூட அந்தப் பிரச்சனையை விடமாட்டோம் என்று சொல்வது, போராட்டம் என்று வந்து விட்டால், அதைத் தலைமை தாங்கி நடத்துவதுதான் அரசியல் கட்சியாக இருக்கிற எங்களுடைய கடமையே ஒழிய, எங்களுக்கு என்று வேறு கொள்கை கிடையாது என்று நீங்கள் கருதுவீர்கள் என்றால், தயவுசெய்து, கட்சியைக் கலைத்துவிட்டு, ஆசிரியர்கள் சங்கத்தில் 10 பேர், மீனவர்கள் சங்கத்திலே 10 பேர், விவசாய சங்கத்தில் 10 பேர் என்று உங்களை இணைத்துக் கொள்ளலாம். ஆகவே ஒரு அரசியல் கட்சிக்கு பொது நோக்கம் வேண்டும். அரசியலிலே எந்தவிதமான போராட்டம் நடந்தாலும், அவர்களோடு, நாங்களும் ஐக்கியப் படுத்திக்கொள்வோம், அதுதான் எங்களுடைய கொள்கை என்ற நிலை இருக்கிற காரணத்தாலேதான் செய்யாறு தொடருகிறது. ஆகவே அந்த நிலைக்கு நீங்கள் போய்க்கொண்டு இருக்கிறீர்கள். ஆகவே அந்த நிலையிலிருந்து மக்கள் பிரச்சனைக்கு வரவேண்டும்.

ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள், அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்கிறபோது, அரசுக்கு உதவியாக இல்லை என்றாலும் கூட, பிரச்சனைகளைத் தீர்க்கிற முயற்சியிலே உறுதுணையாக இருக்கக்கூடியவர்கள், தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்தான் அரசியலிலே மதிக்கப்படுவார்கள். தங்களுடைய வளர்ப்புப் பையன் என்று சொல்லக்கூடிய ஒரு பையன், போராட்டம் உச்ச கட்டத்திலே இருந்த நேரத்திலே, பள்ளிக்குச் சென்றவனை காணவில்லை என்று பெரிய தலைவர் அறிக்கை விட்டார். அந்த நேரத்திலே பள்ளிக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். காரணம் தனியார் பள்ளிகள் நடக்கிறது. தனியார் நடத்தும் கான்வென்ட் பள்ளிகள் நடக்கிறது. ஆகவே வசதி உள்ளவர்கள், தங்களுடைய குழந்தைகளை படிக்க வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் போராட்டத்தினாலே அங்கே அவதிப்பட்டுக்கொண்டு இருந்தவர்கள், படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள், அரசுப் பள்ளிகளிலே,

[திரு. மா. சின்னராசு] [1986 சனவரி 10

முனிசிபல் பள்ளிகளிலே, அவைகளை நம்பிக்கொண்டிருக்கிற பாமர மக்கள் குழந்தைகள் என்கிற வகையிலே இருக்கும்போது, அந்தப் போராட்டம் நடந்தாலும் பரவாயில்லை, நம்முடைய குழந்தைகள் பாதிக்கப்படவில்லை என்கிற அளவிற்கு இருக்கிற தலைவர்கள் இந்தச் சமுதாயத்திலே இருந்தால், நிச்சயமாக அந்தச் சமுதாயம் அவர்களை அடையாளம் கண்டுகொள்கிற நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே போராட்டங்கள் வந்த நேரத்திலே அதை இந்த அரசு எதிர்த்து இருந்தாலும், அதிலே தேர்ந்தவர்கள் சில தகாத பிரச்சாரங்களை எழுப்பி, எங்கள் மனதை புண்படுத்தி இருந்தாலும், அவைகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு சமுதாயத்தின் பிரச்சனை என்கிறவகையிலே, எவ்வளவு அடக்கத் தோடு, எவ்வளவு நிதானத்தோடு, அவ்வளவுக்கும் பின்னால், இந்தப் பிரச்சனையைத் தீர்க்கிற அந்த முயற்சியிலே ஈடுபட்டு இருக்கிற நம்முடைய புனிதத் தலைவர், புரட்சித் தலைவர், என்றும் ஆளக்கூடிய தகுதி பெற்றவர், என்றும் மக்களை ஆளக் கூடியவர், இன்னும் சொல்லப்போனால், வாத்தியாருக்கு எல்லாம் வாத்தியார். ஆகவே அவர்களைப் பார்த்து, இந்தப் பிரச்சனையை வைத்து, அசைத்துவிட முடியும் என்று கற்பனை கண்டவர்கள் எல்லாம் இன்று வாயடைத்துப் போகிற அளவிற்கு, அந்த ஊழியர்களுடைய பிரச்சனை தீர்க்கப்பட்டு இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் இன்று தமிழகத்திலே, இரண்டாவது ஊதியக் குழுவை, 7 ஆண்டுக் காலத்திலே நியமித்து அதனுடைய பரிந்துரைகள் கொடுக்கப்பட்டு, பரிந்துரைகள் மட்டுமல்ல - அதைவிட சிறப்பாக கூடுதலான உதவிகளை, கூடுதலான நிதிவசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தந்தது புரட்சித் தலைவருடைய அரசு என்பதை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. 1960-லே ஊதியக் குழுவிலே கூடுதலாக அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பளம் 5 கோடிதான். 1970-லே கலைஞர் கருணாநிதி ஆட்சியிலே நியமிக்கப்பட்ட ஊதியக் குழு, கூடுதலாக அரசு ஊழியர்களுக்குக் கொடுத்த தொகை 20 கோடி. 1978-ல் புரட்சித் தலைவர் அரசு நியமித்த ஊதியக் குழுவில் நாம் கூடுதலாக செலவிட்ட தொகை 34 கோடி. 1984-லே அது 90 கோடியாக இருக்கிறது. ஆக, இவ்வளவு தூரம் ஊதியக் குழுவை நியமித்தது மட்டுமல்லாமல், 90 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் சலுகைகளை, இந்த ஊதியக் குழுவின் மூலமாக கொடுத்திருக்கிறோம் என்றால், இதிலே 35 சதவீதம் ஆசிரியர் களுக்குத்தான் போய்ச் சேருகிறது. இன்னும் கிராமப்புறத்திலே இருக்கிறவர்கள், ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் குறைவு என்று சொல்லி, நாம் பார்த்ததே கிடையாது. போராட்டம் நடக்கிற நேரத்திலே கூட அதைச் சொன்னவர்கள் கிடையாது. அவர்கள் பொறுப்பு என்ன? கடமை என்ன? என்பதைப் பற்றி இங்கே விவாதிப்பதற்கு நான் தயாராக இல்லை. கடமையைச்

1986 சனவரி 10] [திரு. மா. சின்னராசு]

செய்கிறார்கள். செய்வதற்காக இருக்கிறார்கள். சம்பளம் கேட்கிற உரிமையைப் பெற்று இருக்கிறார்கள். கூடுதல் சலுகை களைக் கேட்கிறார்கள்.

ஆனால் அரசாங்கத்தினுடைய சக்திக்கு ஏற்ப, புரட்சித் தலைவருடைய அரசு வழங்கியிருக்கிறதா, இல்லையா? என்பது தான் பிரச்சனை. ஆகவே பிரச்சனையை தீர்ப்பதற்காக நாம் வாதித்து இருக்கிறோமா, இல்லையா? என்பதைத்தான் நாம் ஜனநாயக நாட்டிலே பார்க்கவேண்டிய உண்மையாகும். ஆகவே, அதற்குப் பின்னால், போராட்டத்தை நடத்தியவர்களுக்கு இன்னும் அந்தப் பிரச்சனை வேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுக்கிறதே தவிர, அது தீரவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே 35 சதவீதம் ஆசிரியர்களுக்கு என்றால், கிட்டத்தட்ட 10 லட்சம் அரசு ஊழியர்களுக்கு வருகிற வருவாயில். நாம் 49 சதவீதம் இன்று அவர்களது சம்பளமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இன்னும் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லாமல் இல்லை. புரட்சித் தலைவர் கொடுத்துச் சிவந்த கொடை வள்ளல், பாரி வள்ளல், எங்கிற பெயரைப் பெற்றவர்கள். கொடுக்கிற மனப்பக்குவம் அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் தான், கேட்கிறவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்களைப் பார்த்தால் போதும், பிரச்சனை தீரும் என்றுதான் அவர்கள் சொன்னார்களே தவிர, அவர்களைப் பார்த்து விட்டால், கிடைக்கும் என்ற காரணத்தால், போராடுகிறவர்கள் போராடினால், அதை சமாளிக்கவேண்டிய விதத்திலே அரசு சமாளித்தது. அதைச் சமாளிக்கிற நேரத்திலே, அரசினுடைய நிதி வசதிக்கு ஏற்ப சலுகைகளைத் தந்துகொண்டிருக்கிறது. அதிலே அரசியல் ஆதாயம் தேடுகிற முயற்சியிலே யாரும் ஈடுபட வேண்டாம் என்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து, அவர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சினையில் மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்கிற காரணத்தையும் காட்டியிருக் கிறார்கள். மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு இந்த அரசிலே யாரும் அதற்காக மகிழ்ச்சியை தெரிவிக்கவில்லை அல்லது அதற்காக இரங்காதவர்கள் இல்லை. காவல் துறையில் இருப்பவர்கள் சுட்டுக் கொல்லுகிற அளவுக்கு ஒரு நிகழ்ச்சி நடக்கும் என்றால் இந்த அரசு அதற்கு மகிழ்ச்சி தெரிவித்து ஒப்புதல் அளித்தது கிடையாது. அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு, விபரீதம் ஏற்பட்டு விட்ட அந்த நிகழ்வுகளுக்கு இந்த அரசும் தன்னுடைய வருத்தத்தைதான் தெரிவித்து இருக்கிறதே ஒழிய அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்ததாக சரித்திரம்

கிடையாது. அப்படி என்றால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த துப்பாக்கிச் சுடுகளுக்கு எல்லாம் அவர்கள் விரும்பி செய்தார்கள், அதை அவர்கள் வரவேற்றார்கள், அந்த காவல் துறையைத் தூண்டி விட்டார்கள் சுட்டு சில உயிர்களைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது என்று எல்லாம் நாம் சொன்னால் யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள், அதுவும் புரட்சித் தலைவர் ஆட்சியில் மீனவர்கள் சாதாரண தொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்களில் காவல் துறை பாதுகாப்புக்காக இருந்து இருக்கிறதே ஒழிய அவர்களை சுட்டு வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் பணியாற்றியது கிடையாது. தேவை அற்ற நிகழ்ச்சி, விரும்பத் தகாத நிகழ்ச்சி, ஒரு விபரீதமான நிகழ்ச்சி ஏதோ சந்தர்ப்ப வசத்தால் ஏற்பட்டு விட்டது என்கிற போது அவர்கள் இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டார்களே ஒழிய மீனவர்கள்மீது, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கும் அவர்களுடைய தொண்டர்களாகிய எங்களுக்கும் இல்லாத பரிவு மற்றவர்களுக்கு இருக்கும் என்று நான் கருதவில்லை.

ஆனால் இன்னும் ஒன்றை இந்த நேரத்தில் மறந்து விட்டார்கள். மீனவர்கள் சுடப்பட்டதற்காக வருந்துகிறோம், வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம், அவர்களுக்கு நிவாரண உதவி செய்கிறோம். ஆக அவர்கள் உரிமையைப் பெறுவதற்கு வாதாடுகிறோம் என்ற இந்த நேரத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. என். வி. என். செல்வம் அவர்கள் ஒரு சமயம் அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிக்கு, அந்த வன்முறைக்கு, பலியாகி உயிர் துறந்து இருப்பார்களானால் உள்ள படியே நான் கேட்கிறேன் நாம் வருத்தப் படமாட்டோமா. அவர்கள் உயிரைக் காப்பதும் ஜனநாயகக் கடமை அல்லவா என்பதையும் கூட இந்த நேரத்தில் நாம் சிந்திக்கவேண்டும். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த பெரும் தலைவரில் ஒருவரான திரு என். வி. நடராசன் அவர்களுடைய மகன் செல்வம் அவர்கள். ஆக 1000, 1500 பேர் ஒருவரை தாக்க முயல்கிறபோது காவல் துறை தன்னுடைய கடமையை செய்யும்போது நாம் தடுக்க முடியாது. அது எல்லையை மீறிவிடக் கூடாது என்பது தான் நம்முடைய கவலை எல்லாம். ஒருவருடைய உயிரை ஜனநாயகத்தில் காப்பது மிகப் பெரிய தலையாய கடமை என்பதையும் நாம் மறந்துவிட வில்லை.

நான் இன்னும் சொல்கிறேன், அது விவாதத்திற்கு அரசினுடைய பரிசீலனையில், அரசினுடைய நடவடிக்கையில் இருக்கிற காரணத்தால் அதன் உள்ளே சென்று விவாதிக்க நான் விரும்பவில்லை. அப்படி இருந்தாலும் கூட காவல்துறை என்பது தன்னுடைய கடமையை செய்வதற்காக இருக்கிறது. ஆக அவர்கள் கடமையை அவர்கள் கட்டுப்பாட்டை நாம் சோதிக்கிற போது வேண்டாத சில நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுகிறது.

அதுவும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அந்த நிகழ்வுகள் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் அதை தவிர்க்கவேண்டும் என்ற முயற்சியில் ஓரளவுக்கு நாம் வென்று இருக்கிறோம்.

பல நேரங்களில் நம்மைப்பார்த்து புரட்சித் தலைவர் ஆட்சியில் இருக்கும் அதிகாரிகளைப் பார்த்து எவ்வளவு அருவருப்பூட்டி எவ்வளவு தூண்டுதல் செய்தாலும் கூட பொறுமையாக இருந்து பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற அறிவுரையை தான் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை நாம் கண்டு இருக்கிறோம். அந்த தீர்ப்பினுடைய விளைவு செய்யார் போன்ற தேர்தல்கள் முடிவு எனபதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இலங்கை இனப்பிரச்சினைப் பற்றி சொன்னார்கள். இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர்கள் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டு இருக்கிற முயற்சியை யாரும் குறை கூற முடியாது. உண்ணா நோன்பு முதல், கருப்புச் சட்டை அணிவதில் இருந்து தொடர்ந்து மாநில அரசு, மத்திய அரசு இணைந்து எடுத்துக்கொண்ட அந்த பந்த் நடவடிக்கை, ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம், அனைத்துக் கட்சிக் கூட்டம், அனைத்துத் தலைவர்களுடைய ஆலோசனையை கேட்டு பிரதமர் இடத்தில் பலமுறை சந்தித்து ஐ.நா.வில் அந்தப் பிரச்சினையை எழுப்பச் செய்து உலக நாடுகளுடைய கருத்தை இலங்கையில் பேச்சு வார்த்தை சினைக்கு திருப்புகிற முயற்சியில் இலங்கையில் தீர்ப்பதற்கு எடுத்துக் மூலம், நிர்ப்பந்தம் மூலம் பிரச்சினையை அதில் காட்டுகிற கொண்டு இருக்கிற முயற்சியில் இந்திய அரசு தீவிரமும், புரட்சித் தலைவருடைய நடவடிக்கையின் விளைவு என்பதையும் இங்கே மனசாட்சி இருப்பவர்கள் மறுக்க முடியாது. அந்த வகையில்தான் இன்று இலங்கை பிரச்சினை என்கிறபோது அது ஏதோ ஒரு பகுதியினுடைய பிரச்சினை அல்ல. இலங்கையில் கூட திரு. அமிர்தலிங்கம் ஒரு தலைவர். தமிழ் விடுதலைப் புலிகள், பகுதி தமிழர்களுடைய தலைவர். தமிழ் விடுதலைப் புலிகள், போராட்ட இயக்கத்தை நடத்தக்கூடியவர்கள், அதிலே பல இயக்கங்கள்: தமிழ் இஸ்லாமிய மக்கள் ஒரு பக்கம் குரல் கொடுக் கிறார்கள். சிறுபான்மை அற்ற தமிழர்கள் இருக்கிறார்கள். இங்கே கிறார்கள். குடியுரிமை அற்ற தமிழர்கள் இருக்கிறார்கள். அத்தனை இருந்து குடி பெயர்ந்த தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழர்களுக்கும் ஏற்புடைய ஒரு நல்ல உடன்பாடு அங்கே ஏற்படவேண்டும் என்பதிலே மத்திய அரசாங்கம் காட்டுகிற முயற்சியை, அதுவும் மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியையோ, இன்று இருக்கிற நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியையோ நாம் குறை கூறிவிட முடியாது.

[திரு. மா. சின்னராசு] *1986 சனவரி 10]*

இந்தப் பிரச்சினையைப் பற்றி ராஜ்ய சபையில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் பங்கு கொண்டு, கருத்துக்கள் சொல்கிறபோது, எந்தக் கருத்துக்களை வலியுறுத்தினாரோ, அந்தக் கருத்து, இன்றும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே சிறந்த ஒரு வழிமுறையாக அமைந்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடமுடியாது.

நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அங்கே இருக்கிற குடியுரிமை அற்ற தமிழர்களை திருப்பிக் கொள்வதை நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம்; பிரச்சினை தீருகிற வரை அவர்களை நாம் திரும்பப் பெறப் போவது இல்லை என்கிற ஒரு அறிவிப்பை—அதனுடைய விளைவுகளை இன்று இலங்கையிலே இருக்கிற ஆளுகிறவர்கள் பார்த்து வியக்கிற அளவுக்கு ஒரு அறிவிப்பை—செய்தார்கள். இதை நாம் உள்ள பூர்வமாக வர வேற்கிறோம்.

அந்தக் குடியுரிமை அற்ற தமிழர்களை ஏற்றுக் கொள்வதை நாம் ஒப்புக் கொள்ளக்கூடாது என்பதை 1964-டிசம்பர் இங்கே நமது ராஜ்ய சபையில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய அழகு ஆங்கிலத்திலே சுட்டிக் காட்டி, அன்று ஏற்பட்ட உடன்பாட்டைக் குறைகூறியிருக்கிறார்கள்; அவர்கள் சொல்கிறபோது, 'The pact means a gross betrayal of millions of people whose sinews been looking towards this country and this Government for solace. The Indo-Ceylon pact, the very name is a misnomer. இந்தியா-சிலோன் உடன்பாடு என்று சொல்வதே கூட, வார்த்தைக்குக் கூட, ஒப்புக் கொள்ள முடியாத ஒரு கருத்தாகும், கொள்கையாகும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

There is no problem at all between the two sovereign countries like India and Ceylon. The main problem is between millions of people rattled for generations together in Ceylon and Ceylonese—Government in the matter of treatment meted out to them. The only part that we could have played and the legitimate part that we could have played, is—stressing the human aspect of the problem. This is the problem wherein the whole world has an interest என்று சொல்லி, இது ஏதோ இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இருக்கிற பிரச்சினை என்ற குறுகிய அளவில் அதைக் கொண்டு வந்து விடாமல், இது உலக மக்களால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை, உலக மக்களின் கருத்துக்கு விடப்பட்ட வேண்டிய பிரச்சினை, உலகத்தினுடைய கவனத்தைத் திருப்ப வேண்டிய பிரச்சினை என்று சொல்லி, அங்கே குடியுரிமை அற்ற வர்கள் என்று நாமாக ஒப்புக் கொண்டிருக்கிற குடியுரிமை அற்ற களுடைய உரிமையில் குறுக்கிடுவதற்கு நமது அந்தத் தமிழர் உரிமை இல்லை என்று வாதிட்டு இருக்கிறார்கள்.

அங்கே இருப்பதா, இல்லையா? அந்தக் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டு இருப்பதா, அல்லது இந்தியாவுக்கு திரும்புவதா என்பதை அங்கே இருக்கிற தமிழர்கள் தான் தீர்மானிக்க வேண்டுமேயொழிய இங்கே இருக்கிற நம்முடைய அரசு நம் முடைய பிரதமர், நம்முடைய அம்பாசடர், தூதுவர் அதை முடிவு செய்து விடக்கூடாது என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். அப்படி, 'He would take any number of people coming to this country, if they come voluntarily' என்று சொல்லி நமது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்ன அந்த வாசகங்களைச் சொல்லி, நம்முடைய குறிக்கோளும், கொள்கையும் அதுவாகத் தான் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆக, அந்த வகையிலே, 'கொத்தலவாலா—நேரு ஒப்பந்தத்திலிருந்து' தொடர்ந்து எழுப்பப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் ஆய்ந்து இன்று நல்ல முடிவினை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் எடுத்து இருக்கிறார்கள்.

அந்த நிர்ப்பந்தத்தின் விளைவாகவும், தொடர்ந்து எடுக்கப் பட்டிருக்கிற நடவடிக்கையில் காரணமாகவும், அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி அக்கறை கொண்டிருக்கிறது எனபதை ஆளுநர் உரை சுட்டிக் காட்டி இருக்கிறது.

அதோடு, இன்று நம்மை நம்பி வந்திருக்கிற நம்முடைய இந்தியாவுக்கு திரும்பி இருக்கிற லட்சக்கணக்கான தமிழர்களுடைய, அகதிகளுடைய நல்வாழ்விற்கும் புரட்சித் தலைவர் அரசு சீரிய திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. குறைவு இல்லாமல் அவர்களை வைத்துக் கொள்கிற பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதையும் இங்கே சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். ஆக, தமிழகத்திலே அச்சுறுத்திக் கொண்டிருக்கிற பிரச்சினைகளில் எல்லாம், நாம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

வறட்சி, வெள்ளம் ஆனாலும், தமிழ் இனப் பிரச்சினை யானாலும், பொருளாதாரப் பிரச்சினையானாலும் சரி, வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதானாலும் சரி, இருக்கிற திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதானாலும் சரி, அதிலே எல்லாம் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற அக்கறையை, எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை, சீரிய திட்டங்களை விளக்குகிற ஒரு உரையாக இது அமைந்திருக் கிறது என்பதை யாரும் மறந்து விடமுடியாது.

(பிற்பகல் 12-10)

இந்த உரையில் இன்னொரு அம்சத்தையும் நம் ஆளுநர் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். அது நம்முடைய நெசவாளர்களுடைய பிரச்சினை. மத்திய அரசாங்கம் சில மாதங் களுக்கு முன்னால் 'டெக்ஸ்டைல் பாலிசி' என்று சொல்லி ஒரு

[திரு. மா. சின்னராசு] [1986 சனவரி 10

நூல் கொள்கையை நமக்கு அறிவித்தது, நாட்டுக்கு அறிவித்தது. அறிவிக்கப்பட்ட கொள்கையில், நமக்கு அதிக முரண்பாடு இல்லை. ஆனால் அது முழு அளவில் நூற்பாலைகளை, டெக்ஸ்டைல் மில்களை, அதனுடைய வளர்ச்சி, அதனுடைய பொலிவு, அதனுடைய மாடர்னிசேஷன் இவைகளைப் பற்றி இருந்ததேயொழிய, தேவையான அளவிற்கு, 75 இலட்சம் நெசவாளர்களைக் கொண்டிருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கான திட்டங்கள் அதில் இல்லை என்பதுதான் நம்முடைய குறைபாடு. ஆக மத்திய அரசாங்கத்தினுடைய பல திட்டங்களை வரவேற்ற அதே நேரத்தில் அரசு துணிக் கொள்கை, டெக்ஸ்டைல் பாலிசியில் போதிய அளவு கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையில் கவனம் செலுத்தவேண்டும் என்பதையும், அதில் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கிறது. டெக்ஸ்டைல் பாலிசியிலே நமக்கு ஏற்பட்டிருக்கிற சில குறைபாடுகள், 'மேன் மேட் ஃபைபர்' என்று சொல்லக் கூடிய, ஆர்ட்டிஃபீஷியல் ஃபைபர் அதை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசாங்கம் நிறைய சலுகைகளை கொடுத்திருக்கிறது. இம்போர்ட் ட்யூட்டி கன்செஷன் கொடுத்திருக்கிறார்கள். கஸ்டம்ஸ் டியூட்டி கன்செஷன் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல் 'மேன் மேட் ஃபைபர்' அதை வாங்கிப் பயன்படுத்துகிறவர்களுக்கு, நூற்பாலைகள், பெரிய ஆலைகளுக்கெல்லாம் இருக்கிற தடைகள் பல நீக்கப்பட்டிருக்கின்றன. ஆக இவைகள் எல்லாம் இந்த நூற்பாலைகளிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களை காப்பதற்கும் ஒரு பக்கம் இருக்கிறபோது, மாடர்னிசேஷன் என்ற கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆக நூற்பாலைகளையெல்லாம் முழு அளவில் நவீனப்படுத்துகிறபோது, அங்கே கிட்டத்தட்ட 15 இலட்சம் பஞ்சாலை ஊழியர்கள் தங்களுடைய வேலையை இழக்க ஒரு வாய்ப்பாக ஏற்படும். ஆக ஆட்குறைப்பின் மூலம் வேலையை இழக்க நேரிடுபவர்களுக்கு அவர்களுடைய நிவாரணத்திற்கு இந்தக் கொள்கையிலே ரூ. 2,500 கோடி இந்த நூற்பாலைகளுக்கு ஒதுக்கிவைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 12 இலட்சம் நெசவாளர்கள், பெரிய ஆலைகளிலே பணி புரிபவர்கள், அவர்களுடைய மறு வாழ்வுக்காக ரூ. 2,500-ஐ ஒதுக்கி, ஜெட் லூம்ஸ் ஆக மாற்றி, இதை மாடர்னிசேஷன் செய்ய வேண்டுமென்று சொல்கிற அளவிற்கு அந்த நூற்பாலைகளிலே அதிக கவனம் செலுத்தவில்லை. 75 இலட்சம் நெசவாளர்களுக்கு அவர்களுடைய இன்றைய வறுமையைப் போக்குவதற்கும், நிலையான வருமானத்தைப் பெறுவதற்கும், கூடுதலான வாய்ப்பை பெறுவதற்குமான அதிக கவனம் செலுத்தவில்லை. அதிலே சொல்லப்பட்டிருக்கிற 2 திட்டங்கள், (1) வீட்டுவசதி திட்டம் (2) தர்ரிஃப்ட் ப்ரொகிரேம். அதாவது சேவிங்ஸை ஊக்கப்படுத்துகின்ற இன்னொரு திட்டம். இவை இரண்டும் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற திட்டங்கள். ஆக 75 இலட்சம் நெசவாளத் தொழிலாளர்களுக்குரிய பாதுகாப்பும், அவர்களுக்கு நாம் கொடுத்து

1986 சனவரி 10] [திரு. மா. சின்னராசு]

வருகின்ற ரிபேட் போன்றவைகள், ப்ரகியூர்மெண்ட்-ஆக கொடுக்கப்படுகின்ற உதவிகளை—இவைகள் கூடுதலாக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்தினுடைய முழு உதவியை, நல்ல கொள்கையைப் பெற்றாலொழிய, இனிமேல் கைத்தறித் தொழில், தமிழத்தில், இந்தியாவில், நிலையாக இருக்கமுடியாது என்ற நிலைமையிலிருக்கிற நேரத்தில், அவர்களுடைய கவனத்திற்கு நாம் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து முதன் முறையாக கைத்தறி நெசவாளர்களுக்கு ஆளுநர் உரையிலே ஒரு பக்கத்திற்கு மேலாக கருத்துக்களைச் சொல்லி, எந்தப் பிரச்சினையை எடுத்து வைக்கவேண்டுமோ, அந்தப் பிரச்சினையை அது தெரிவித்திருக்கிறது என்பதை இங்கே படிக்க மறுத்தவர்கள், பார்க்க மறுத்தவர்கள், கேட்க மறுத்தவர்கள், இதை மறந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு சொல்கிறேன். மத்திய அரசாங்கம் 50 சதவீதம் நம்முடைய துணிகளைக் கொள்முதல் செய்யலாம். அதை மிலிட்டரி, மற்ற மத்திய அரசாங்கத் துறைகள், காவல்துறையிலுள்ளவர்கள் கூட அந்த கைத்தறி ஆடைகளை இன்று வாங்குவதில்லை. ஆகவே அவர்கள் பாட்ரனேஜ் என்று சொல்லுகின்ற அலைகளை வாங்கவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் மாநாட்டிலே வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதேபோல இன்று மிகப் பெரிய பிரச்சினை விவசாயிகளுக்கு அடுத்தபடி ஈடுபட்டிருக்கிற தொழில் கைத்தறித் தொழில். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற 75 லட்சம் மக்களில், இந்தியாவில் உள்ள மக்களில் 25 லட்சம் மக்கள் தமிழகத்தில் வாழ்கிறார்கள். ஆகவே அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்ற முறையில் தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே இன்று இந்தியாவில் அதிக அளவில் கூலியைப் பெறுகின்ற நெசவாளர்கள் தமிழகத்தில்தான் இருக்கிறார்கள். ஆகவே எதிர் காலம் வீணாகப் போய்விடக்கூடாது என்று அவர்களுடைய மார்க்கெட், அவர்களுக்கு இலாபம் இவைகளை தடுத்து விடக்கூடாது என்பதற்குத்தான் 'காஷியஸ்' ஆக, முன்னெச்சரிக்கையாக மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை, இதை நலிவு செய்து விடக்கூடாது என்ற முறையில் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் காப்பாற்றப்படுவது போன்று, இந்த 75 இலட்சம் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் காக்கப்பட வேண்டுமென்றும், அதற்கு ஏற்பட்டிருக்கிற சரிவு, நலிவுகளை எல்லாம் போக்குகிற அளவிலே மத்திய அரசாங்கத்தினுடைய பெரும் உதவி.— இதிலே நாம் சொல்கிற 'ரிவால்விங் ஃபண்ட்' நம்முடைய கைத்தறித் துணிகளை வாங்கி விற்பதற்கு நம்மிடம்

நிதியாதாரம் இல்லை. குறைந்தது 50 கோடியாயது வேண்டும், அது இருந்தால் தேவைப் படும்போது முன்பணம் கொடுத்து, தேவைப்படும்போது கடன்கள் கொடுத்து தேவைப்படும்போது நூல் வாங்கிக் கொடுப்பதற்கு கோவாப்ரேடிவ் செக்டார் மூலமாக செயல்பட்டு வருகின்ற இந்த கைத்தறி நெசவுத் தொழில் நல்ல முறையில் காக்கப்படும் என்ற எண்ணத்தையும் நம்முடைய அரசு எடுத்துச் சொல்லி இருக்கிறது.

தமிழகத்திலே எவற்றில் எல்லாம் கவனம் செலுத்த வேண்டுமோ அவற்றில் எல்லாம் அரசு கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்ற இந்த ஆளுநர் உரை கொச்சைப்படுத்துவற்குரிய உரையல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்திலே உள்ள எல்லாப் பிரச்னைகளின்மீதும் எடுக்கவேண்டிய எல்லா முயற்சிகளையும் சுட்டிக்காட்டியுள்ள இந்த உரை, புரட்சித் தலைவர் அரசு மக்களுக்குக் கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியின் அடையாளமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு சிறப்பான திட்டங்களையெல்லாம் உள்ளடக்கியுள்ள இந்த ஆளுநர் உரையில் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை. கேட்பதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்கிறார்களே என்று நான், டாக்டர் சமரசம் அவர்களிடம் அதைப்பற்றிக்கேட்டபோது அவர்கள் அவர்களுக்கே உரிய வகையில் பழமொழியைச் சொன்னார்கள். குருடனும் செவிடனும் கூத்துப்பார்க்கப் போனார்களாம், குருடன் கூத்து நல்லாயில்லை என்று சொன்னானாம். செவிடன் பாட்டு நல்லாயில்லை என்று சொன்னானாம் என்று சொன்னார்கள். கூத்தைப் பார்ப்பதற்கு குருடனுக்கு வாய்ப்பில்லை, அதனால் கூத்து நல்லாயில்லை என்று சொன்னான். அதைப்போலவே செவிடனுக்கு தன் காது கேட்கவில்லை, அதனால் பாட்டு நல்லாயில்லை என்று சொன்னான் என்று சொன்னார்கள். தமிழகத்தில் புரட்சித் தலைவருடைய அரசின் நல்ல திட்டங்களைப் பார்க்க, கேட்க மனம் இல்லாதவர்கள் கூத்து மோசம் என்று சொன்ன குருடனையும், செவிடனையும் போல இருக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். அவர்கள் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பார்க்கத் தவறியிருக்கிறார்கள், படிக்கத்தவறியிருக்கிறார்கள், அவர்கள் தொடர்ந்து செய்யாறிலே மூழ்கிவிடக்கூடாது. இந்தப் பக்கம் வந்து நல்ல நீரில் குளித்து தொடர்ந்து மக்களுடைய பிரச்சினைகளை கண்ணை மூடிக்கொண்டு இருந்து விடாமல் மறந்து விடாமல் நாம் மக்களுக்காக இருக்கிறோம் என்ற எண்ணத்தோடு எதிர்க்கட்சி என்பது வெறும் போராட்டங்களுக்காக அல்ல என்ற நல்ல உணர்வோடு தமிழகத்தின் மறுமலர்ச்சிக்காகவும் இந்தியப் பொருளாதார விடுதலைக்காகவும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

இந்திய அரசின் இளைய பிரதமராக இருக்கிற திரு. ராஜீவ் காந்தி அவர்கள் செம்மையான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள், அதைப்போலவே புரட்சித் தலைவர் அவர்களும் மக்கள் பிரச்சினைகளைத் தன்னுடைய பிரச்சினையாக எடுத்துக் கொண்டு நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பலகாலமாக மறுக்கப்பட்ட மாநில உணர்வுகள் இன்றைக்கு திரு ராஜீவ் காந்தி அவர்களால் மதிக்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் பெருந்தன்மையோடு உள்ளப்பூர்வமான எண்ணத்தோடு செயல்படுவதன் விளைவாக அசாம் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது, அதைப் போலவே பஞ்சாப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த நல்ல சூழ்நிலையில் நம்முடைய மனதையும் எண்ணத்தையும் மாற்றிக்கொண்டு இந்தியாவினுடைய பொருளாதார பிரச்சினையில் ஈடுபடுத்திக்கொண்டு இருக்கிறோம் என்பதை இந்த கொள்கைக்குறிப்பு நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

அந்த வகையில் தொழில் வளர்ச்சியிலும் நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்தி வருகிறோம். இப்போது சிங்கிள் விண்டோ சிஸ்டம் குஜராத் மாநிலத்திலே வெற்றிகரமாக செயல்படுத்தப் படுகிறது. அதைத் தமிழகத்திலே கொண்டுவருகிற முறையிலே தொழில் முனைவோர்களுக்கு எல்லாம் ஊக்கம் கொடுக்கிற முறையிலே ஒரு இடத்திலேயே எல்லா லைசென்சுகளையும் பெறுகிற முறையிலே சிங்கிள் விண்டோ முறையை இந்த ஆண்டு நாம் தொடங்க இருக்கிறோம் என்ற கருத்தும் இதிலே இருக்கிறது. தொழில் தொடங்குவதற்கு எல்லா சலுகைகளையும் கொடுக்கிற முயற்சியில் அதிக தீவிரம் காட்டுவோம் என்ற குறிப்பும் இதிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கு பற்றாக்குறையாக இருப்பது மின்சாரம் ஆகும். மின்சார உற்பத்தியைக் கூட்டுவது மட்டுமல்லாமல் இருக்கிற மின்சார நிலையங்களில் புரடக்டிவிடியை பெருக்குவதற்கான முயற்சிகளையும் நாம் எடுத்து வருகிறோம். எண்ணூர் மின் நிலையத்திலே 35 சதவீதமாக இருந்த மின் உற்பத்தி 62 சதவீதத்திற்கு உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சாதாரண முயற்சியல்ல. தொடர்ந்து செயல்படுவோமானால் மின் நிலையங்களிலே உற்பத்தி 90 சதவீதத்திற்கு வரும் என்ற நிலையையும் எடுத்துச் சொல்லப்படுகிறது. கல்பாக்கத்திலே நாம் பார்க்கிறோம். அது தமிழகத்திலே நாம் தொழில் வளர்ச்சியில் வெற்றி பெற முடியும் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. தொழில் வளர்ச்சி பெருகுகிறபோது வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். அந்த வகையில் சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை தமிழக மக்களுக்காகச் சிறந்த பல திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது ஆளுநர் உரை. நம்முடைய புரட்சித் தலைவர் அரசினுடைய நல்ல கொள்கைகளை குறுகிய மனப்பான்மைக்கு அப்பாற்பட்ட முறையிலே எடுத்துச் சொல்லாமல் கொச்சைப்படுத்துவது சரியல்ல. பொருளாதார மேம்பாட்டிற்கு

[திரு. மா. சின்னராசு] [1986 சனவரி 10

மாற்று வழிகள் தெரிந்தால் சொல்லட்டும், எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகளில் குறைபாடுகள் இருந்தால் சொல்லட்டும்; அந்த வகையில் இந்த விவாதம் அமையட்டும் என்று சொல்லி, ஆளுநர் அவர்கள் அழகான ஆங்கிலத்தில் புரட்சித் தலைவரின் கொள்கைகளை, அரசின் கொள்கைகளை எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நன்றியை இந்தப் பேரவையின் சார்பாகத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12—20)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்வதற்கு என்னை ஒப்பனிங் பேட்ஸ்மேனாக அனுப்பி வைத்த என் தலைவரவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் தொடக்கத்திலேயே குறிப்பிட்டார்கள். நாஞ்சிலார் குறிப்பிட்டதைப் பற்றிக் கூறி, 1967-இலே இருந்த அதே வடிவம், 1971-இலே இருந்த அதே வடிவம்தான் இன்றைக்கும் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் நண்பருக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே வடிவில் அமைப்பதற்கு ஆண்டுக்காண்டு ஆளுநர் உரை தேவையில்லை. உங்களுடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன். நாஞ்சிலார் சென்ற நிலைக்குத் தயவுசெய்து நீங்கள் சென்றுவிடக் கூடாது.

நான் சென்ற ஆண்டு பேசும்பொழுதே குறிப்பிட்டேன், ஒவ்வொரு ஆண்டும் உரை வழங்குவது என்பது ஒரு மரபாகி விட்டது. அதே நேரத்தில் கடந்த ஆண்டு உரையிலே குறிப்பிட்டுள்ளவற்றில் நாம் எந்த அளவிற்கு சாதித்து இருக்கிறோம் என்ற தன்னாய்வு அவசியம் என்று குறிப்பிட்டேன். இன்றும் இந்த உரையின்மீது விவாதத்தைத் தொடங்குகின்றபொழுது, சென்ற ஆண்டு உரையில் குறிப்பிட்ட சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு என்னுடைய பேச்சைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன்.

1985 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே ''முதியோர் ஓய்வூதியம்'' பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். முதியோர்களுக்கும் சரி, விதவைகளுக்கும் சரி ஓய்வூதியம் வழங்குவது என்பது வரவேற்கத்தக்க ஒரு கொள்கை என்பதில் எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. ஆனால் அது சரியான முறையில் செயல்படவில்லை என்பதை வருத்தத்துடன் இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பவர்கள் இறந்தால்தான் அடுத்தவருக்கு வாய்ப்பு என்ற நிலையில் இந்த முதியோர் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அமைந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருவண்ணாமலையில் 500 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது என்றால், அடுத்து 501ஆவது பேராக வருபவருக்குக் கிடையாது. இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டால் ஏற்கனவே 500 பேர்களுக்கு ஒதுக்கியாகிவிட்டது, ஆகவே இருப்பவர்கள் தொகை குறைந்தால்தான் அடுத்தவர்களுக்கு வாய்ப்பு என்று சொல்கிறார்கள். இதே நிலைதான் விதவைகள் ஓய்வூதியத் திட்டத்திலும் இருக்கிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனைபேர் முதியோர் ஓய்வூதியத் தொகை வாங்குவதற்குத் தகுதியானவர்கள் இருக்கிறார்கள் என்று அரசாங்கத்தின் மூலம் கேட்டிருக்கிறோம்; அவர்கள் கொடுத்திருக்கிறார்கள், அந்த அடிப்படையில் இன்றைக்கு ஒதுக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட தேதிவரையில் இருக்கும் மனுக்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் சென்ற எட்டாவது, பத்தாவது மாதங்களிலே வந்த மனுக்கள் இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை என்ற தகவலை அதிகாரிகள் சொல்கிறார்கள். அதுபற்றி என்ன நிலைமை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதுமாதிரி எவ்வளவு பேர் என்று குறிப்பிட்டுக் கொடுத்தார்களேயானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனே எடுக்கச் சொல்லலாம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த தகவல் சரியானதாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் அரசு அலுவலர்களை விசாரிக்கின்ற பொழுது அவர்கள் குறிப்பிடுவது ஒன்றைத்தான், அதாவது ஏற்கனவே 500 பேர்களுக்கு ஒதுக்கியாகிவிட்டது, அவர்கள் பெற்று வருகிறார்கள், அடுத்து வருகின்றவர்களுக்கு இப்பொழுது கொடுக்க முடியாது என்பதுதான். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவுசெய்து இது குறித்து கவனிக்க வேண்டுமென்று

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1986 சனவரி 10

கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து அது குறித்து விசாரித்து தகுதி படைத்த அனைவருக்கும், இன்ன உச்சவரம்பு என்று நிர்ணயிக்காமல், தொகை வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே பொது வினியோக ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படுகிற அரிசியின் உச்ச வரம்பைப் பற்றி குறிப்பிட்டு குடும்பம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசியாக உயர்த்தியுள்ளது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், வேதனையோடு கூறுகிறேன், இன்றைக்கு குடும்பம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி, பொது வினியோக கார்டில் வழங்கப்படவில்லை. வேண்டுமென்றால் அமைச்சர் விசாரித்துப் பார்க்கட்டும். குமரி மாவட்டத்தில், எனக்குக் கொடுத்த தகவல்படி, ஏறத்தாழ 15 தினங்களாக அங்கே போராட்டம் நடத்தி வருகிறார்கள். குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ, அல்லது அதிகபட்சம் 7 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. எனவே இந்த நிலையையும் அரசு உன்னிப்பாக கவனித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், சென்ற ஆண்டு, ஆளுநர் உரையிலே, அரிசிக்கு அளிக்கப்படும் ஊக்கத் தொகையைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதே நேரத்திலே கரும்புக்கும் ஊக்கத் தொகை அளிக்கவேண்டும். சென்ற ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட ரூ. 45 கூடுதலாக இந்த அரசு கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு அளித்து வந்தது. ஆனால், இந்த ஆண்டு மத்திய அரசு அளித்த தொகையைக் காட்டிலும் ரூ. 25 தான் கூடுதலாக மாநில அரசு வழங்க முன் வந்தது. இதன் காரணமாக, பல்வேறு கரும்பு ஆலைகளிலும் போராட்டம் ஏற்பட்டு, கரும்பு ஆலைகள் செயல்படாமல் இருக்கின்றன. அது குறித்தும் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே, தமிழக கூட்டுறவுத் துறை பற்றிப் பெருமையாகப் பேசி இருக்கிறார்கள். ஆனால் எனக்குள்ள வருத்தம் எல்லாம், சென்ற ஆண்டு இந்தக் கூட்டுறவுத் துறையைப் பற்றி, பெருமையாக, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கூட்டுறவு இயக்கங்கள், சிறப்பாக, செம்மையாக நடைபெறுகின்றன என்று பாராட்டுத் தெரிவித்துவிட்டு, அதே ஆண்டிலே கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவை, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு கலைத்திருப்பது முறையற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1986 சனவரி 10] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

பொது நிர்வாகங்களில் காழ்ப்புணர்ச்சியையும், கசப்புணர்ச்சியையும், அரசியல் காழ்ப்புணர்ச்சியையும் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டம் என்று குறிப்பிட்டார்கள். வரவேற்கப்பட வேண்டிய திட்டம். இருள் அடைந்த வீடுகள் ஒளிமயமாக வேண்டியது அவசியமான திட்டம். ஆனால், இந்தத் திட்டமும் பரிபூரணமாகச் செயல்படவில்லை. எல்லா குடிசைகளுக்கும் அந்த ஒரு விளக்கு அளிக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த, கீழ் பெண்ணாத்தூர், ஆராஞ்சி போன்ற கிராமங்களிலே இன்றும் பல வீடுகளுக்கு விளக்கு வசதி ஏற்படவில்லை. எனவே, அதையும் அரசு கவனமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், நீரேற்றுப் பொறிக்கு ஒரு குதிரைத் திறனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75 என்று வரையறுக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், என்னுடைய கவலை எல்லாம் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே ரீதியில் அத்தகைய விலையை நிர்ணயிப்பது முறை அல்ல. ஏனென்றால், தஞ்சாவூரிலே ஆற்றுப் பாசன வசதி இருக்கிறது. மற்ற பாசன வசதிகள் இருக்கின்றன; எப்பொழுதும் நீர் கிடைக்கின்றது. ஆகவே, தஞ்சை விவசாயிகள் ஆண்டுதோறும் அந்த நீரேற்றுப் பொறியைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் ஒருசில பகுதிகளில் ஆண்டிலே ஒரு மாதம் கூட அந்த நீரேற்றுப் பொறி பயன்படுத்த வாய்ப்பில்லாத ஏழை விவசாயிகளுக்கும் அதே நிலையிலே வசூலிப்பது முறையான தல்ல. எனவே, இதையும் அரசு கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே, எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி. படித்த அனைவருக்கும் வேலை வாய்ப்பின்மை உதவித் தொகை முறையாக கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதிலும் நான் முன்பு குறிப்பிட்டதைப்போல், ஓய்வூதியம், விதவை ஓய்வு ஊதியம் கொடுப்பதைப் போன்று நிலைதான் இருக்கிறது. தகுதி வாய்ந்த அனைவருக்கும் இந்தத் தொகை வழங்கப்படவில்லை. எனவே அரசு அது குறித்து தனிக் கவனம் செலுத்தி, தகுதி வாய்ந்த அனைவருக்கும் வேலை வாய்ப்பின்மை உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

அதைப்போன்று, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போது சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் ''பிரச்சனைக்குரிய குடியிருப்புகளில் 17,193 குடியிருப்புகளுக்குக் குறைந்தது ஒரு குடிநீர் வாயில் கிடைக்குமாறு செய்யப்படும்'' என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ஆளுநர் உரையில் அந்த உறுதிமொழியில் எத்தனை சதவீதம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, எத்தனை சதவீதம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது என்று கூறப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, சென்ற ஆண்டு ஆளுநர் உரையில், 26-வது பாராவில் எதிர்கால பணிகள் குறித்து கூறுகின்றபோது ''மேலும் தொடங்கக் கருதியுள்ள புதிய குடிநீர் திட்டங்கள் பற்றிய விவரங்களை'' அறிவித்துள்ளார்கள். ஆனால் இன்றுகூட பல கிராமங்களில், பல்வேறு குடியிருப்புகளில் குடிநீர் வசதி இல்லாமல், குழாய் வசதி இல்லாமல் இருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிட நல மேம்பாட்டிற்காக விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படும் என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு உரையில் அதுபற்றி தெளிவாக ஒன்றும் கூறப்படவில்லை. சென்ற ஆண்டில் இதற்கு என்ன செயல்திட்டம் இருந்தது என்றும் கூறப்படவில்லை.

அதைப்போன்று, நகராட்சிப் பகுதிகள் மேம்பாட்டிற்காக காலவரையோடு கூடிய திட்டம் தயாரிக்கப்படும் என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டதா, அது எந்த நிலையில் உள்ளது என்று கூறப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, கைத்தறி நெசவாளர்களின் வீட்டு வசதிக்காக மூன்றாண்டு கால அளவில் முடிப்பதென்ற காலவரையோடு கூடிய திட்டம் தயாரிக்கப்படும் என்று சென்ற ஆண்டு உரையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை அதுபற்றி அரசிடமிருந்து எந்த செயற்குறிப்பும் இங்கே அவையில் வைக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மைய அமைப்புகளாகப் பணியாற்றும் வகையில் வலுப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தபடும் என்று சென்ற ஆண்டு கூறப்பட்டது. அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று இந்த ஆண்டு உரையில் கூறப்படவில்லை.

அதைப்போன்று, பழுதுபட்ட நிலையிலுள்ள பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட காலவரையோடு கூடிய திட்டமொன்று வகுக்கப்படும்; அவசியமான இடங்களில் எல்லாம் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டத் தனியே நிதி ஒதுக்கம் செய்யப்படும் என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் கூறப்பட்டது. ஆனால் இதிலே வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் சென்ற நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு முழுவதற்கும் இளநிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையே 94,000 ரூபாய்தான். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி வேதனையோடு கேட்டேன். 94,000 ரூபாய் போதுமா என்று கேட்டேன். அதிலே முன்னேற்றம் எதுவும் தெரியவில்லை. அரசு உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று சென்ற ஆண்டு அறிக்கையில், சென்னையில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்க அரசு கருதியுள்ளது என்று கூறப்பட்டது. இந்த ஆண்டு அறிக்கையில் அதுபற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. இந்த அவையிலே அதுபற்றி எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று சென்ற ஆண்டு அறிக்கையில், 23-வது பக்கத்தில் ''உற்பத்தியைப் பெருக்கவும் பொது விநியோக முறையை மும்முரமாகச் செயற்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டபோதிலும் பதுக்கல், கள்ளச்சந்தை போன்ற ஊக வணிக நடவடிக்கை காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது; இத்தகைய செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் தவறிழைப்போருக்கு கடுந் தண்டனை விதிக்கவும் அரசு கருதியுள்ளது'' என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு அறிக்கையிலே அதுகுறித்து இந்த அரசு செய்த ஏற்பாடு என்ன என்று கூறப்படவில்லை. எனவே நான் இந்த அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

கள்ளச்சந்தை போன்ற ஊக வணிகத்தில் ஈடுபடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று கூறும்போது, இந்த அரசின் செயல்பாடுகள் குறித்து 'காம்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா' அவர்களுடைய ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட துறையில், சுற்றுலா வளர்ச்சித் துறையில் 'மிஸ்ஸப்ராபிரியேஷன்' செய்திருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 112-ம் பக்கத்தில் 'சேல் ப்ரசீடில்' 1,66,000 ரூபாய் மிஸ்ஸப்ராபிரியேஷன், கையாடல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1986 சனவரி 10

அதைப்போன்று, அதே பக்கத்தில் சோழன் போக்குவரத்து நிர்வாகக் குழு மிஸ்ஸப்ராப்ரியேஷன் செய்திருக்கிறது, கையாடல் நடந்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கையாடல்களுக்குக் காரணமானவர்கள் யார் ? அப்படி கையாடல்களைச் செய்தவர்கள் மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க இந்த அரசு கடமைப் பட்டு இருக்கிறது என்பதை மட்டும் தோழமைக் கட்சி என்ற முறையில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி மிகப் பெருமையாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வரவேற்கின்ற இயக்கங்களிலே எங்களுடைய இயக்கமும் ஒன்று. ஆனால் அதே நேரத்தில் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்தும் முறையிலே கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் சரியானது அல்ல என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசு ஊழியர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு ஆயாக்கள் ஆகியோர் கட்டாயமாக ஆள்பிடிக்க கட்டளையிடப்படுகின்றனர். அப்படிக் குறிப்பிட்ட இலக்கை அவர்கள் எட்டத் தவறினால் அதற்குப் பரிகாரமாக அவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது. இதுபற்றி ஏற்கெனவே இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கட்டாயமாக வற்புறுத்துவதன் மூலம் அடைய வேண்டும் என்பது அந்த இலக்கின் நோக்கத்தையே பாழ்படுத்துவதாக அமைகின்றது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இதன் விளைவாக என்ன நேரிடுகிறது என்றால் தவறான காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. தகுதி இல்லாத நபர்கள் எல்லாம் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே அரசினுடைய இலக்கை மட்டும் பூர்த்தி செய்துவிடுகிறோம் என்ற மகிழ்ச்சி வேண்டுமானால் இந்த அரசுக்கு இருக்கலாம். ஆனால் இதில் தகுதியுடைய எத்தனை பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டது என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது மனதுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய தாக இல்லை என்பதை வேதனையோடு குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். ரீபட்டன் சிஸ்டம் என்று கூட அதற்கு அவர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள். அதாவது ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாடு செய்தவர்களை எல்லாம் மறுபடியும் அழைத்துவந்து குடும்பக்கட்டுப்பாடு செய்து அதன்படி நாம் எண்ணிய இலக்கை அடைந்துவிட்டோம் என்று மகிழ்ச்சி அடைகிறார்கள். எனவே உள்ளபடியே குடும்பக் கட்டுப்பாடு என்பதன் நோக்கம் நிறைவேற வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே பல தவறுகள் நடக்கக் காரணமாக உள்ள இந்தத் திட்டத்தை ஒழுங்கான முறையில், சரியான முறையில் செயல்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1986 சனவரி 10] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

அதேபோல் 15-வது பத்தியிலே ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டு உள்ளது என்னவென்றால், சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்ட அதே கருத்தைத்தான் மறுபடியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு குறிப்பிட்டதை மறுபடியும் இந்த ஆண்டு குறிப்பிடுவதைப் பார்க்கின்றபோது இந்த அரசு சென்ற ஆண்டில் அதைச் சாதிக்கவில்லை என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

நான் இன்னும் பிரச்சினைக்கே வரவில்லை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினர் 38 நிமிஷம் பேசி இருக்கிறார். எனவே எனக்கும் போதிய நேரம் தரவேண்டும்.

எதிர்காலப் பணிகளைப் பற்றி ஆளுநர் அவர்கள் தங்கள் உரையிலே 26-வது பத்தியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 16-வது பத்தியிலே காவிரி டெல்டா பகுதிக்கு மட்டும் உற்பத்தி ஊக்கத் தொகையை உயர்த்தி இருப்பது முறை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உற்பத்தி ஊக்கத் தொகையை உண்மையிலேயே பாசன வசதியற்ற வடாற்காடு, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களுக்கும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறை கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பற்றிக் குறிப்பிடும்போது 1985 ஆம் ஆண்டிலே குறிப்பிட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் ஏறத்தாழ 66 இலட்சம் ரூபாய்க்கு மேல் இந்த ஆண்டு செலவுக்கணக்கு காட்டப்பட்டுள்ளது. காலந்தாழ்த்தி திட்டங்களை நிறைவேற்றியதன் காரணத்தால் இது ஏற்பட்டது. எனவே திட்டங்களை நிறைவேற்றுவதில் இத்தகைய காலத் தாழ்வுகள் தவிர்க்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

30-வது பத்தியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் வேதனையோடு கூறுகிறேன். அந்தத் திட்டங்கள் எல்லாம் ஒழுங்காக செயல்படுத்தப்படவில்லை. அதிகாரிகளின் அசட்டை காரணமாகவும், அலட்சியத்தின் காரணமாகவும் இந்த அரசுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. மணலியிலே ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடம் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்னும் 10 ஆண்டுகளுக்குக் கூட அந்தக் கட்டிடம் இருக்காது என்று கட்டிடக் கலை வல்லுநர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மண்ணின்

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1986 சனவரி 10

தரத்தைக் கருத்தில் கொள்ளாமல் கட்டிடம் கட்டப்பட்டதால் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய தவறுகளை இனிமேலாவது தவிர்க்கவேண்டும்.

(பிற்பகல் 12-40)

அதே நேரத்திலே தொழில் துறையிலே தமிழக அரசின் போக்கு இன்னும் சிறப்பாக அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அண்மையிலே பத்திரிகையிலே படித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் அமெரிக்காவிற்குச் சென்றிருந்த அமைச்சர் பெருமக்களில் சிலர் 'நான்-ரெசிடென்ட் இண்டியன்ஸ்' சிலரை அழைத்து தமிழகத்தில் தொழில் முதலீடு செய்யுமாறு அழைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இங்கே வந்தபோது, அவர்களை வரவேற்பதற்குக்கூட ஆள் இல்லாத நிலைமையினால் கர்நாடக மந்திரி ஹெக்டே, அவர்களிடம் தொடர்பு கொண்டு ஒரு எலக்ட்ரானிக் தொழிற்சாலையை கர்நாடகத்திலே அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள், இத்தகைய நிலை இருப்பது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்காது என்பதை மட்டும் கூற ஆசைப்படுகிறேன்.

அதேபோல ஆதிதிராவிடர்களுக்கும் நலிந்த பிரிவினர்களுக்கும் 10 லட்சம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் வரவேற்கப்படவேண்டிய ஒன்று. அதை உடனடியாக நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டும் என்பதுடன், அதைப் பூர்த்தி செய்து, அந்தக் கட்டிடங்களை வினியோகிப்பதில் கட்சிக் கண்ணோட்டம் இல்லாது தகுதி வாய்ந்த அனைவருக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்தைப் பிரிப்பதைப் பொறுத்த மட்டில் நெல்லை மாவட்டத்தை பிரிக்கும்போது வ.உ.சி. பெயரால் ஒரு மாவட்டம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1982லேயே அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். அதற்கிணங்க நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது வ.உ.சி. யின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்தப் மணியை விரைவாகச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் வட ஆற்காடு மாவட்டத்தை பிரிப்பதைப் பொறுத்தவரையில் திருவண்ணாமலை பகுதிக்கு, அண்ணாமலை மாவட்டம் என்று பெயர் வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியின் கருத்து பற்றி, குறைந்த பட்சம் மக்கள் மத்தியிலே இருக்கிற ஒரு அபிப்பிராயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய அபிப்பிராயம், அவர்களுடைய தொகுதியிலே எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும் எனறால், அந்தப் பகுதிக்கு இடைத் தேர்தல் நடந்தாக வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஏனெனறால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அடிப்படை வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை. அதனால் அங்கே ஒரு இடைத் தேர்தல் வந்தாலும்கூட பரவாயில்லை என்று நானே ஆசைப்படுகிறேன். அறம் பாடுகிறேனோ என்ற அச்சம் இருந்தாலும் நானே அதை ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இடைத் தேர்தல் வந்தால்தான் மக்களுக்கு அவர்களுடைய அடிப்படை வசதிகளைக் கொடுக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அப்படி ஒரு கருத்து மக்கள் மத்தியிலேயும் நிலவுகிறது.

அப்படி ஒரு இடைத் தேர்தல் என்னுடைய தொகுதிக்கு வந்தாலும்கூட, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, அந்த தேர்தலை முனனின்று நடத்த வேண்டும் என்பது என் விருப்பம். ஆகவே இந்த நிலையை மக்கள் மத்தியில் நீண்டநாள் நினைக்கச் செய்யாமல், எல்லாத் தொகுதி மக்களுக்கும் அடிப்படை வசதிகளைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியைச் சார்ந்த வேட்டவலம் என்ற கிராமத்திலே கூட்டுறவு விற்பனை ஒழுங்கு முறைக் கூடத்திற்கு கட்டடம் இல்லாத காரணத்தால் திறந்த வெளியிலே மழையிலும் வெய்யிலும் 5 ஆயிரம் மூட்டை நெல்லை போட்டிருக்கிறார்கள். பயனற்ற முறையிலே இருக்கும் மகளிர் பள்ளியின் ஆய்வுக் கூடத்தை தற்காலிகமாவது இந்த ஒழுங்கு முறைக் கூடத்திற்காக ஒதுக்கித் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சோழனூர் கல்லாழி போன்ற இடங்களிலே உள்ள பள்ளிக் கட்டிடங்கள் இடிந்த நிலையில் இருக்கின்றன. அதேபோல கிராமப் புறங்களில் போக்குவரத்திற்கே வசதி இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சார்ந்த செல்லக் குப்பம், ஜமீன் கூடலூர், நாகலாபுரம் போன்ற ஊர்களுக்கு அழகான சாலை வசதிகள் இருந்தும்கூட, திருவண்ணாமலைக்கு வருவதற்கு பேருந்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அவைகளையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருவண்ணாமலையின் நகர சாலைகளின் மோசமான நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக அதைச் செம்மைபடுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1986 சனவரி 10

அடுத்தபடியாக குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது ஒன்று. ஏற்கனவே நண்பர் ரகுமான்கான் அவர்களுக்கூட குறிப்பிட்டார்கள். அரசுத் துறைகளும், அரசுத் துறையினை சார்ந்த நிறுவனங்களும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான மரியாதையை வழங்குவதில்லை. இந்தக் கருத்து பரவலாக எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே நிலவி வருகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லலாம், என்னுடைய தொகுதியிலே அருணாசலேச்வரர் ஆலயத்திலே சமபந்தி போஜனம் நடத்தினார்கள். அதற்கு விளம்பரமும் செய்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெயராலே அது நடைபெற்றது, வரவேற்கிறேன். அதே நேரத்திலே என்னுடைய அருமை நண்பர் பாண்டுரங்கன் அவர்களின் பெயரும் போட்டிருந்தார்கள். நண்பர் வஜ்ஜிரவேலு அவர்களின் பெயரும் போடடிருந்தார்கள். அவர்களுக்கு கீழ் என்னுடைய பெயரைப் போட்டார்கள். அப்படி போடுகின்ற நேரத்தில், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, 'சட்டமன்ற உறுப்பினர்' என்று பெயரின் பின்னாலே குறிப்பிடுவார்கள். ஆனால் எனக்கு அது கூட போடவில்லை. சும்மா ஏ. எஸ். ரவீந்திரன், பி.ஏ.பி.எல். என்று போட்டு விட்டார்கள். தொகுதி மக்கள் என்னை சட்டமன்ற உறுப்பினராக ஏற்றுக் கொண்டாலும்கூட, அதிகாரிகளுக்கு என்னை அவ்வாறு நினைக்க விருப்பம் இல்லையோ என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதேபோல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கிற தொகுதிகளில் அரசு விழாக்கள் நடைபெறுகிற பொழுது அமைச்சர்கள் தலைமையில் வேறு யாரோ அதிகாரிகள் தலைமை வகிக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருக்கிற தொகுதிகளில் நடைபெறுகிற அரசு விழாக்களில் அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர் தலைமை வகிக்கிறார்கள். இந்த முரண்பாடுகள் அதிகாரிகள் மத்தியில் இருப்பது முறைதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப் பெற்றது) விரைவில் முடித்துவிடுகிறேன். ஆகவே அரசு அதிகாரிகள் எங்களை அங்கீகரித்தாலும், அங்கீகரிக்காவிட்டாலும் மக்கள் எங்களை அங்கீகரித்து தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்–அரசு ஊழியர்கள் போராட்டத்தைப் பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். ஆசிரியர் போராட்டத்தில் இந்த அரசின் அணுகுமுறை சரியானதாக இல்லையென்றே கருதுகிறேன். எனக்கு ஏற்பட்ட ஒரே விந்தையெல்லாம், ஆசிரியர்கள் பேச்சுவார்த்தையில் கல்வியமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளாதது தான். அதுகுறித்து பரவலாக பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இத்தகைய குறைபாடுகள் இருக்கக் கூடாது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாமல் சம்பந்தப்பட்ட துறையில் பேச்சுவார்த்தை நடைபெறுவது என்பது நடைமுறையில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

1986 சனவரி 10] (திரு. ஏ. எஸ். ரவீந்திரன்)

இறுதியாக ஒரே ஒரு வேண்டுகோளைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். தியாகிகள் ஓய்வூதியம் அன்றிலிருந்து இன்று வரையில் ரூ. 150 ஆகவே இருந்து வருகிறது. அதனை ரூ. 300 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தியாகிகளின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையினை முடிக்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் நாள் நமது பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து பேசுகிற தீர்மானத்தின் மீது நான் எனது சில கருத்துக்களை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், 1984, 85 ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தி எவ்வளவு என்பதையும், அதிகமான சதவீதம் மின் உற்பத்தி செய்து தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். மக்கள் பெருக்கம் காரணமாக மின்தேவையை ஈடுகட்ட முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் ஏராளமாக கொடுக்கிற நேரத்தில், நான் விவசாயிகள் சார்பாக ஒரு கருத்தை எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். 1985ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு விவசாயிகளுக்கு நேரடி மின் இணைப்பு on the line service வழங்கியது. ஆனால் தனிநபர் ஒருவர் நெல்லை மாவட்டத்தில், வள்ளியூர் கோட்டத்தில் ஸ்டே வாங்கியதால் மின் இணைப்பு கொடுப்பதில் தடை ஏற்பட்டது. தனிநபர் ஸ்டே காரணமாக வள்ளியூர் கோட்டத்தில் கொடுக்கப்படாத மின் இணைப்பு இதுவரையில் கொடுக்கப்படாமல் இருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே பிற கோட்டங்களில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, இந்த வள்ளியூர் கோட்டத்தில் மட்டும் ஸ்டே வெகேட் ஆகியும் கொடுக்கப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். ஆகவே அரசும் மின்சார இலாகாவும் பரிசீலனை செய்து மின் இணைப்பு வழங்கவேண்டும். 1985 ஆம் ஆண்டில் on the lire service கொடுக்கப்படாத காரணத்தால் அதனை மீண்டும் வள்ளியூர் கோட்டத்தில் கொடுக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். காரணம், அந்தப் பகுதியில் விவசாயிகள் சங்கத்தின் பெயரால் பல கிராமங்களில் மின் இணைப்பு கட்டணம் கட்டப்படவில்லை. ஆனால் அதே கோட்டத்தில் திசையன்விளை பகுதியில் உள்ள விவசாயிகள் அந்த சப்டிவிஷனில் கட்ட வேண்டிய பணத்தை ஒழுங்காக கட்டி வருகிறார்கள். ஆகவே on the line service கொடுக்கப்படாத காரணத்தால் அந்த சப்டிவிஷனில் உள்ள ஈத்தாமொழிப் பகுதியில் உள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே

[திரு.மு. ஜான் வின்சென்ட்] [1986 சனவரி 10

உடனடியாக அரசு இதற்கு பொறுப்பேற்று, ஆணை பிறப்பித்து அந்த விவசாயிகளுக்கு on the line service கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

ஆளுநர் அவர்களின் உரையில் 20 அம்சத் திட்டத்தைப் பற்றியும், வறுமையை எப்படி ஒழிக்கலாம் என்பதைப் பற்றியும் எடுத்துக் கூறியிருப்பதை பாராட்டுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் இந்த அரசை எப்படி கட்டிக்காத்து வருகிறார் என்பதையும், ஏழை மக்களுக்கு ஒவ்வொரு திட்டத்தின் மூலமும் எப்படி நன்மையை செய்து வருகிறார்கள் என்பதையும் தமிழக மக்கள் மட்டுமல்லாமல், பிற மாநிலங்களில் உள்ள அமைச்சர்களும், மக்களும் வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டத்தை செம்மையுற நிறைவேற்றிக் கொடுத்ததற்காக, ரூ. 2.5 கோடி பரிசாக பெறுவதற்கு தமிழகம் தகுதி பெற்றிருக்கிறது என்பது, நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் உள்ள அதிகாரிகள், மக்கள் ஒத்துழைப்போடு, இதைச் செய்து காட்டியிருக்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

பாரதத்திலேயே தமிழ்நாடுதான் ஆண்டுதோறும் வெள்ளத்தாலும், வறட்சியினாலும் பாதிக்கப்படுகிறது என்பதை நாம் 1977-க்கு பிறகு இன்று வரை பார்த்து வருகிறோம். ஒரு புறத்திலே வறட்சி, மறுபுறத்திலே வெள்ளத்தால் பாதிப்புகள். இப்போது நடைபெற்ற, நடப்பு ஆண்டிலே கூட, ஏராளமான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. ஆனாலும் கூட, ஆங்காங்கே இருக்கின்ற ஒவ்வொரு அதிகாரியும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், மக்கள் ஒத்துழைப்போடு சென்று, அந்தப் பகுதியிலே ஒவ்வொரு காரியங்களையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்து, அங்கே நல்ல பல திட்டங்களைச் செய்து கொடுத்தார்கள், அதற்காக வாழ்த்துகிறேன்.

அதேநேரத்தில், இன்று மத்திய அரசு, மாநில அரசுகளின் நேரடிப்பார்வையில் உள்ள 'நேசனல் ஹைவேஸ்' மற்றும் மாநில அரசு சம்பந்தப்பட்ட 'ஹைவேஸ் ரோடுகள்' வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. தார் ரோடுகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மெட்டல் ரோடுகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ரோடுகளுக்கு தனி விலக்கு அளித்து, அதற்கு தனியாகத் தொகையை ஒதுக்கி, உடனடியாக அவைகளைச் செப்பனிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சியினர் பல கருத்துக்களை பலவிதமான நேரங்களில் பேசியிருக்கிறார்கள். இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில், தமிழக அரசு, தமிழகத்தினுடைய தலைவர் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள், மைய அரசுக்கு, நேரத்திற்கு ஏற்ற நிலையில், தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு தகவல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழக அரசும், மைய அரசும், ஒருங்கிணைந்து இலங்கைப் பிரச்சனையில், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக சிறப்பான காரியங்களை எடுத்து வருவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து, கல்வி இலாக்காவைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாடு அரசு சிறப்பாக இயங்கி வருகிறது. 1985-86 ஆம் ஆண்டில், 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளும். 49 புதிய மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இதை நான் வரவேற்கிறேன். மேலும் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது இருக்கின்ற பள்ளிகள், கிராமத்திலே இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்குப் போதுமான வசதி இல்லை. ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து, மேல்நிலைப் பள்ளிகளுக்காக. உயர்நிலைப் பள்ளிகளுக்காக, அங்கே இருக்கின்ற விஞ்ஞானக் கூடங்களைக் கட்டுவதற்காக, அதிகமான தொகையை ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கல்வி கற்கின்ற மாணவர்களில், 61,502 மாணவர்கள் வாழ்க்கைத் தொழில் பாட முறையைப் பயில்கின்றனர். மொத்தமுள்ள 1,541 மேல்நிலைப் பள்ளிகளில், 969 பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பாடமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளன என்பது வரவேற்கத்தக்கதாகும். அதேபோல் 1985-86-ல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2.73 லட்சம் குடும்பங்கள் பயன் அடையும் என்றும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 146.61 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்றும், இதனால் 14 லட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர் என்றும் சொல்லியிருப்பது, போற்றத்தக்கதாகும். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறோம். உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில், ஏராளமான பாசனத்திட்டங்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றன. இன்று இருக்கின்ற பாசனத் திட்டங்களில், மழைக் காலங்களில் தண்ணீரை நிரப்பிவிட்டாலும், மற்ற காலங்களில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகின்றது. அதேநேரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில், வருகின்ற தண்ணீரைப் பிடித்து வைத்துக் கொள்ளத் தேவையான இடங்கள் இல்லை.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1986 சனவரி 10

இதனால் தண்ணீர் வீணாகச் சென்று கடலில் கலக்கின்றன. எனவே ஏராளமான அளவில் உள்ள ஏரிகள், கண்மாய்கள், குளங்கள் ஆகியவைகள் உடைந்து தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்று விடுகின்றன. அதனால், விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க வழியில்லாமல் போய்விடுகிறது. எனவே கூடுதலாக இன்னும் அதிகமான நீர்ப்பாசனத் திட்டங்கள் நமக்குத் தேவை. குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், 1977-ஆம் ஆண்டு முதல், இதே சட்டமன்றத்திலே வலியுறுத்தி வந்த பச்சையாறு-கொடுமுடியாறு திட்டங்களை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட 60 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மேல் பாசன வசதிபெறும்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. ஒன்று தாமிரபரணி, பாபநாசம் திட்டம், அடுத்தது, மணிமுத்தாறு திட்டம். இந்த இரண்டு திட்டங்கள் நிறைவேறினால் ஏராளமான இடங்கள் பயன் அடையும் வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால், இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றித்தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இப்படிப்பட்ட திட்டங்கள் இல்லாத காரணத்தால், ராதாபுரம் தொகுதி, நாங்குநேரி தொகுதி போன்ற இடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால், பச்சையாறு, கொடுமுடியாறு, திட்டத்தை அரசு உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக குடிநீர்ப் பிரச்சனையையும் நாம் தீர்க்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தமட்டில், 1985-86ஆம் ஆண்டு ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். இந்த 24 கோடி ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு டிவிசனாக, ஒவ்வொரு ஒன்றியமாக, ஒவ்வொரு ஊராட்சி மன்றமாக சென்று, உப்புத் தண்ணீர் இருக்கின்ற கிராமங்களை முதலாவதாக எடுத்து, தண்ணீரே இல்லாத கிராமங்களை முதலாவதாக எடுத்து, அந்தப் பகுதியில் தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சில அதிகாரிகள் கொடுக்கும் அந்த சீரியல் நம்பர் அடிப்படையில் தண்ணீர் கொடுப்போம். ஆனால் ஏராளமான கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள். உதாரணமாக சில கிராமங்களை சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், களக்காடு நகர ஊராட்சி ஒன்றியத்தில் உப்பு நீராக குடிக்கவே முடியாத நிலையில் மிக மோசமாக 3 பெரிய கிராமங்கள் இருக்கின்றன. அவைகள் மைனர் பஞ்சாயத்தைச் சேர்ந்தவை. அந்த 3 கிராமங்களைப் பற்றி நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

1986 சனவரி 10] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

அந்த கிராமங்களுக்கு இப்போது கூட இந்த வெள்ளப் பெருக்கு எடுத்த நேரத்தில் கூட தண்ணீர் பிரச்சினை தீர்ந்த பாடில்லை. காரணம் உப்பு நீர். உடனடியாக அந்த கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமை கொடுத்து தண்ணீர் கொடுப்பதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாக தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். களக்காடு ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் டோனாவூர், சிதம்பரபுரம், ஆதிச்சபேரி போன்ற ஊர்களில் உள்ள மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அதிலும் நாங்குநேரி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் பாப்பான்குளம், மன்னார்புரம், ஏமன்குளம் போன்ற 3 ஊர்களில் உள்ள மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். காரணம் அங்கே உப்பு நீராக இருக்கிறது. மற்றும் இது போன்ற 28 கிராம மக்கள் உப்பு நீரால் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு உடனடியாக தண்ணீர் கஷ்டத்தை மாற்றி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை போட்டு தண்ணீர் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு பிற மாநில அரசுகளைவிட குழந்தைகளுக்கு நல்ல பல திட்டங்களை செய்து வருகிறது. இன்று பொது மக்கள் மத்தியில் தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி மக்கள் பாராட்டுவதற்கு காரணம் சத்துணவுத்திட்டம். அது மட்டுமல்லாமல் இப்போது 58.10 லட்சம் சிறார்களுக்கு பயன் அளிக்கக்கூடிய இலவச சீருடை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்து இருக்கிற அரசை மக்கள் பாராட்டுகிறார்கள். ஒரு புறத்தில் சத்துணவின் காரணத்தால் ஏழைக் குழந்தைகள் பயனடைகிறார்கள். மறுபுறத்தில் சீருடை காரணத்தால் ஏழை குழந்தைகள் அத்தனையும் பயனடைகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை கொண்டு வந்து இருக்கிற நேரத்தில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அதை ஆதரிக்கவேண்டும் என்பதையும் அவர்கள் ஆதரிக்கா விட்டாலும் எங்கோ சென்று இல்லாத சில புரளிகளை கிளப்பி விடுகின்ற நிலைமையைத்தான் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

இங்கே விளையாட்டைப் பொறுத்தவரையில் டெல்லியானாலும் சரி, கோவை ஆனாலும் சரி விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் முன்னணியில் இருப்பதற்கு காரணம் இங்கே இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஊக்குவிக்கிற அளவில், ஏராளமான நிதியை ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, நடைபெற்ற கடந்த கால நிகழ்ச்சியைப் பார்க்கிற போது இப்போது விளையாட்டு மிக முன்னேறி இருப்பதற்கு காரணம் தமிழகத்தை பிற மாநிலங்கள் பாராட்டுவதற்கு காரணம் தமிழகத்தின் விளையாட்டு அரங்கத்தில் தலைமை பொறுப்பை ஏற்று இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய சிவந்தி ஆதித்தன் அவர்கள். அவர்கள் உலக அரங்கு ஆனாலும் சரி, இந்திய அரங்கு ஆனாலும்

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1986 சனவரி 10

சரி விளையாட்டுக்கு தனி ஊக்கத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன் மக்கள் சார்பாக. ஆகவே இந்த விளையாட்டுக்கு ஊக்கம் கொடுப்பதற்கு இன்னும் தமிழக அரசு கணிசமான நிதி உதவிகளை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கவர்னர் உரையில் சுட்டிக்காட்டிய நேரத்தில் 10 லட்சம் இலவச வீடுகள் கட்டித் தருவதாக இருக்கிறது. அரிசன மக்களுக்கு 5 லட்சம் வீடுகள் என்றும் அதேநேரத்தில் பழங்குடி மக்கள் நரிக்குறவர்களுக்கு ஏழ்மை கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு 5 லட்சம் வீடுகள் ஆக மொத்தம் 10 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க முன் வந்து இருக்கிற தமிழக அரசை நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நேரத்தில் பணக்காரர்கள்மீது அக்கறை கொள்ளாமல் ஏழை மக்களுக்கு நல்ல பல திட்டங்களை செய்து வருகிற அ.இ.அ.தி.மு.க அரசை—புரட்சித் தலைவர் இதய தெய்வம் அவர்கள் அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக கட்டும் 10 லட்சம் வீடுகள் நகர்ப் புறத்திற்கு சென்றுவிடாமல் கிராமப் பகுதிகளுக்கு அந்த வீடுகளை விரிவாக்கம் செய்து கொடுத்து இந்த 10 லட்சம் வீடுகளை கிராமப் பகுதியில் கட்டிக் கொடுக்கவேண்டும் என்பதையும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்கள் பிரச்சினையைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களில் பல கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள், ஒன்றை மட்டும் மெத்த பணிவோடு சொல்லிக் கொள்வேன், ஆசிரியர்கள் பிரச்சினையை வளரவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தின் காரணத்தால் ஒரு நபர் குழுவை அமைத்து இருக்கிறோம். நீங்கள் அதை பின்பற்றி உங்களுடைய ஒவ்வொரு ஸ்டேட்மெண்டையும் அவர்களிடம் கொடுங்கள் என்று சொல்லி ஒரு நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் நலனில் அக்கறை கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனாலும்கூட சமீபத்தில் நடந்த செய்யாறு தேர்தலிலே சில நண்பர்கள் சொன்னார்கள், ஆசிரியர்கள் பிரச்சினை, மீனவர்கள் பிரச்சினை, செய்யார் தொகுதியில் என்ன நடைபெறும் என்று கேட்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அதை நன்கு உணர்ந்து பார்க்கவேண்டும். செய்யார் தொகுதியைப் பற்றி எண்ணிப் பார்த்த நேரத்தில் அ.இ.அ.தி.மு.க. கடந்த நேரத்தைவிட அதிக மான வாக்குகளைப் பெற்றதை அத்தனை பேரும் மறந்து விடுவதற்கு இல்லை. ஆக கடந்த கால காரியங்களைப் பார்க்கிற போது இந்த அரசு—புரட்சித் தலைவர் அரசு செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் மக்கள் வாழ்த்துகிறார்கள், பாராட்டுகிறார்கள்.

1986 சனவரி 10] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

(பிற்பகல் 1-00)

இங்கே பேசிய மரியாதைக்குரிய ரவீந்திரன், எம்.எல்.ஏ. அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற நேரத்தில் விரைவிலே அதனைப் பிரிக்கின்ற நேரத்தில் ஒரு பகுதியை தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு வ.உ.சி. மாவட்டம் என்றும், நெல்லை மாவட்டத்திற்கு பாரதியார் மாவட்டம் என்றும் பெயர் வைக்க வேண்டும் என்று சொன்னார்.

அங்குள்ள மக்கள், நெல்லை மாவட்டம் என்றே இருக்க விரும்புகிற காரணத்தினாலும், எங்களது மாவட்ட 18 சட்டமன்ற உறுப்பினர்களும் நெல்லை மாவட்டம் என்று இருக்கவேண்டும் என்று விரும்புவதனாலும் நெல்லை மாவட்டத்திற்கு பாரதியார் மாவட்டம் என்று பெயர் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அத்தான் அங்குள்ள மக்களும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக் கிறார்கள். ஆகையால், வ.உ.சி. மாவட்டம் என்று பெயர் மாற்றிய பிறகு நெல்லை மாவட்டம் என்ற பெயரை மாற்ற மக்கள் இசைவு கொடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக சில விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒதுக்கப் படுகின்ற தொகை, விசேஷமாக, ஒவ்வொரு யூனியனில் வெள்ளத் தால் எந்தெந்த ரோடுகள், ஊராட்சி மன்ற ரோடுகள், எம்.ஆர்.இ.பி. இல் போடப்பட்ட ரோடுகள், எஸ்.எஸ். இலே போடப்பட்ட ரோடுகள், ஹைவேஸிலே போடப்பட்ட ரோடுகள், ஆர்.ஆர். இலே போடப்பட்ட ரோடுகள், எந்த ரோடுகளாக இருந்தாலும். அதைப் பிரித்துப் பிரித்துக் கணக்கெடுக்காமல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ரோடுகளை ஒன்றாக, அந்தத் தொகுதியிலிருந்து, நிதியிலிருந்து அத்தனை ரோடுகளையும் செப்பனிட்டால் போக்குவரத்து பயன் அடையும் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே கொடுக்கப்பட்ட கவர்னர் உரை மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி செலுத்துகிறேன். அதே நேரத்தில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு காரியங்களையும் சம்பந்தப்பட்ட இலாகாவில் உடனடியாக துரிதப்படுத்தி, நடவடிக்கை எடுத்து, வேகமாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[1986 சனவரி 10

*திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில பல கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். என்னுடைய கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எடுத்து வைப்பதற்கு முன்பாக, என்னுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் சார்பாகவும், நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், பொங்கல் தினத்தன்று உங்களை எல்லாம் சந்திக்க முடியாது என்கின்ற காரணத்தினாலே, இனிய பொங்கல் வாழ்த்துக்களை உங்களுக்கு நான் முதல் கட்டமாக தெரிவித்திட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே ஆளும் கட்சியின் சார்பாக இந்த தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய என்னுடைய அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் பல்வேறு விளக்கங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர் சொல்லிய விளக்கத்தில் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சில் மனோகரன் அவர்கள், 'ஆளுநர் உரை என்பது குப்பையிலே போடக்கூடிய ஒன்று' என்று சொல்லி, பத்திரிகையிலே சொல்லி இருக்கிறார்கள்; அப்படி. அவர் இன்றைக்கு சொல்வதற்குக் காரணம், அவர் குப்பைத் தொட்டிகளுக்கு அருகாமையிலே இருக்கிறார் என்ற பொருள்படவும், கடந்த காலத்திலே அவர் கோபுரத்திலே இருந்தார் என்றும், கோபுரத்திலே இருந்த காரணத்தினாலே அவர் குப்பையை போட முடியவில்லை என்றும் பொருள் தொனிக்க இங்கே எடுத்துச் சொன்னார்.

அவருக்கு நான் என்னுடைய விளக்கமாகத் தெரிவிப்பது எல்லாம், கோபுரத்திலே இருந்தாலும் கூட, குப்பையிலே போடக் கூடிய காரியங்களை குப்பையிலேதான் போட்டாகவேண்டும். கோபுரத்திலே இருக்கிறோம் என்பதற்காக, குப்பையை நீங்கள் பக்கத்திலே போட்டுக் கொள்வீர்களானால் கோபுரம் கூட குப்பை மேடுகளாக மாறும் என்பதற்கான வரலாறுகள் பல உண்டு என்பதை நண்பர் சின்னராசு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து சின்னராசு சொன்னார்—ஏதோ இந்த ஆளுநர் உரையைப் பற்றி இதிலே பார்ப்பதற்கு என்ன இருக்கிறது, கேட்பதற்கு என்ன இருக்கிறது என்று சொல்லியவர்களைப் பற்றி டாக்டர் சமரசம் அவர்களிடம் சம்பாஷித்ததாகவும், டாக்டர் சமரசம் அவர்கள், 'குருடனும், செவிடனும் கூத்து பார்க்கப் போனார்கள்; அப்படிப் போனதினாலே என்ன நிலைமை

1986 சனவரி 10] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

ஏற்பட்டது என்றால், கூத்தைப் பற்றி குருடனும் சொல்ல முடியாமல், செவிடனும் சொல்ல முடியாமல் விழித்தார்கள் என்று சொன்னதாகச் சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் அவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையை வாங்கிக் கொண்டு என்னுடைய அறைக்கு நான் சென்றேன். என்னைப் பார்ப்பதற்கு கிராமப்புற பகுதியிலே இருந்து வந்த பெரியவர் அமர்ந்து இருந்தார். அவரிடம் ஆளுநர் உரையைப் படித்துக் காண்பித்து எப்படி இருக்கிறது, பெரியவரே, என்று கேட்டேன். அவருக்கே உரிய பாணியிலே சொன்னார். ஊமையனும் உளறுவாயனும் சண்டப் பிரசங்கம் பண்ணியதைப் போல இருக்கிறது என்று சொன்னார். எனவே குருடனும், செவிடனும் கூத்து பார்க்க போன கதை எப்படியோ, அதைப் போலவேதான் ஊமையனும், உளறுவாயனும் சண்டப் பிரசங்கம் செய்கிற கதை என்பதை நான் அவருக்கு நினைவு படுத்த, ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அறைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர்தான் வந்திருப்பார். அவர்களைத்தான் நான் சொல்கிறேன், குருடனும் செவிடனும் கூத்து பார்க்கிறதைப் போல் பார்க்கிறார் என்று சொன்னேன். ஆனால் அதிலே வேறுபாடு இருக்க முடியும்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மதிப்பிற்குரிய சகோதரர், என்னுடைய அறைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான் வருவார் என்று சொன்னார். அது எங்களுடைய வழக்கம் இல்லை. நண்பர் சின்னராசுக்கு வேண்டுமானால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு கதவைத் திறந்துவிட்டு, மற்றவர்களுக்கு கதவை மூடும் பழக்கம் இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், எல்லா இயக்கத்தைச் சார்ந்தவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் வந்தாலும் கூட, அவர்களை அழைத்து அமரச்செய்யும் பண்பு உடையவர்கள். அந்தப் பண்பு பாண்டிய நாட்டிற்குச் சொந்தமானது என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு வந்திருந்த அந்த நண்பர் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவர் அல்ல என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே ஒரு நிகழ்ச்சி நடந்ததைப் பற்றி நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை இங்கே கொண்டுவந்தார்கள். அந்த ஆளுநர் உரையின் மீது எங்களுடைய இயக்கத்தின் பொருளாளர் சாதிக் பாட்சா அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில் கொண்டு வந்தார்கள். ஆனால் சட்டமன்ற மரபுகளின்படி அந்தக் கருத்துக்கள், மாண்புமிகு மேலவை

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1986 ஜனவரி 10

உறுப்பினர் சாதிக் பாட்சாவால் வாசிக்கப்பட்ட கருத்துக்கள், இந்தச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறதா என்பதைப் பார்த்து விட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்திருப்பாரேயானால். அது ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலே இருக்கக் கூடும்...

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ஆளுநர் உரையைத் தொடங்குவதற்கு முன்பே, எந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மேலவை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, ஆளுநர் உரையைக் கேட்பதற்காகத்தான் கூடியிருக்கிறோமே தவிர, பேசுவதற்காக இல்லை. அதிலே தலைவர்கள் யாரும் கிடையாது. யாரும் பேசக் கூடாது. மற்றவர்கள் உரையாற்றக் கூடாது என்பதுதான் என்னுடைய தீர்மானமாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆக அது நடவடிக்கை குறிப்பில் இருந்தாலும் இருக்கலாம், இல்லாமல் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அதே நேரத்திலே ஆளுநர் உரையின்மீது இப்படி பேசுவதற்கு மரபு கிடையாது. அப்படி பேசி இருப்பதற்காகத்தான் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்தேன் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக காலையிலே பேசிவிட்டார்கள். பேரவைத் தலைவர் தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது. திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கேட்டார்கள். திரு. சித்தன் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள். குறுக்கீடுகள் வேண்டாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெக்னிக்கலி ஸ்பீக்கிங், ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்றால், சட்ட மன்ற நடவடிக்கை குறிப்பில் அது இருந்தாகவேண்டும். சட்ட மன்றத்தின் நடவடிக்கை குறிப்பிலே இல்லாத ஒன்றைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள்.....(குறுக்கீடு)

(பிற்பகல் 1—10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையிலே எழுப்பப்பட்டு, பேரவைத் தலைவர் ஒரு தெளிவான தீர்ப்பைச் சொல்லி விட்டார்கள். எனவே உங்களுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பொன் முத்துராமலிங்கம் : ** ** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 சனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் காலையிலேயே ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறேன். அது சரியில்லை என்று பேசினால் தவறாகும். ஆகவே அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நடைபெறுகிற விவாதம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறுகிறது. ஆகவே அதைப்பற்றி மட்டும் பேசுவது நல்லது.

திரு. பொன் முத்துராமலிங்கம் : ஆல் இண்டியா பொலிடிக்கல் கான்பரன்சில் கவர்னர் என்ன சொன்னார் என்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே பேசுவது வேறு. இந்த மன்றத்திலே பேசுவது வேறு. இங்கே அவர் ஆற்றிய உரைக்குத்தான் நாம் நன்றி தெரிவித்துத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறோம், ஆகவே அதைப் பற்றிப் பேச வேண்டும். ஆளுநர்கள் பற்றியெல்லாம் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே. நம்முடைய சபை விதிகளிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, ஆளுநர் காண்டக்ட் பற்றி கேரக்டர் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் வெளியிட்டிருக்கிற நல்ல கருத்துக்களை மேற்கோள் காட்டுவதிலே தவறில்லை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ** ** **

Dr. K. SOURIRAJAN : The hon. Member should not review the conduct of the Governor or discuss about it. We are not competent to discuss about the various conduct of the Governors.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I know. அதை தவிர்ப்பது நல்லது. இரண்டு முறை நான் சொல்லிவிட்டேன். The Legislature composes of even the Governor.

திரு. பொன் முத்துராமலிங்கம் : ** **

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் 'நீக்கம்' வேண்டாம் என்று தான் பார்த்தேன். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1986 சனவரி 10

திரு. அ. ரகுமான்கான் : அறிஞர் அண்ணா அவர்களே ஆளுநர் பதவி வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விவகாரம். அதற்கு வேறு போரம் இருக்கிறது. இங்கே வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ஆளுநர் பற்றி உறுப்பினர் பேசியவைகளை நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். நான் அதைச் சொல்லியபிறகு அவைபற்றி வெளியிடப்படலாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தல் தேதி பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

உள்ளாட்சித் தேர்தல்களுக்கான தேதிபற்றி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அதுபற்றிப் பேச வேண்டியது அவசியம் தேவைதானா என்று கருதினாலும்கூட, அறிவிக்கப்பட்ட தேதிகள் பலமுறை ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, அதுபற்றிச் சில கருத்துக்களை மட்டும் நான் தெரிவிக்கப் விரும்புகிறேன். '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' பத்திரிகையில் வந்துள்ளதை, பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் படிக்க விரும்புகிறேன். என்னென்ன காரணங்களுக்காக, இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிச் சொல்லுகின்றபோது,

" Elusive Local Body Elections " என்ற தலைப்பில் " இந்தியன் எக்ஸ்பிரஸ் " பத்திரிகை தெளிவுபடுத்துகிறது.

Excuses started for not holding the elections have run through the whole gamut—drought, monsoon, agricultural operations, flood and cyclone, revision of electoral rolls, school and college examinations, Sri Lanka problems, photo Identity cards for voters, Reservation to S.Cs and S.Ts and Women, Court Stay, Mid-term elections, General elections, Bye-elections, Determination of Wards, revision of voting age, census, and finally delay in printing of Electoral rolls

என்று சொல்லி பல்வேறு காரணங்களைச் சொல்லி, இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் என்பது இன்றையதினம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே காலையில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தேதிகளை அறிவித்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு அரசியல் கட்சியின் சின்னம் ஒதுக்கப்படவேண்டுமென்று சொல்லி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 சனவரி 10] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

மீண்டும் ஒருமுறை இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' பத்திரிகையிலே கண்ட அந்தக் காரணங்களையெல்லாம் நான் எடுத்து விளக்கியிருக்கிறேன். ஆளுநர் அவர்கள் கூட உள்ளாட்சித் தேர்தல்கள் எந்தக் காலகட்டத்திலும் ஒத்திவைக்கப்படக் கூடாது என்று தெளிவுபட பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து, நமது இந்திய அரசு நவீன இந்தியாவை உருவாக்குவதற்காக, இளம் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் கல்விக் கொள்கை ஒன்றை பொதுமக்களின் விவாதத்திற்காக அறிவித்திருக்கிறார்கள். கல்விக் கொள்கையைப் பற்றி இந்த அரசு—தமிழக அரசு தீர்க்கமான முடிவெடுத்து வெளியிடாவிட்டாலும் கூட, நமது மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அதுபற்றிக் கருத்து சொல்லியிருக்கிறார்கள். இந்திய நாட்டினுடைய விவாதத்திற்காக வைக்கப்பட்ட கல்விக் கொள்கை எப்படி ஏற்புடைய கொள்கையே அல்லாமல் அது தேச விரோதக் கொள்கை என்று யாரும் சொல்லக்கூடாது என்று அவரே பேசி அது பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கு ஒன்றைக் கவனப்படுத்த விரும்புகிறேன். கல்விக் கொள்கை விவாதத்திற்காக வைக்கப்படும் நேரத்தில் இந்திய அரசாலே ஒரு புத்தகம் வெளியிடப்பட்டு '' கல்வி ஒரு சவால் '' என்று இந்திய கல்வி அமைச்சகம், ஒரு கொள்கை விளக்கப் புத்தகத்தை விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தில் 4-வது அத்தியாயத்தில், 44-வது பாராவில், மொழி போதனைகளில்கூட மைய அரசு மும்மொழித் திட்டத்தினை உண்மையாக அமல் படுத்த முடியாத நிலையில் உள்ளது ; மொழியின் மூலம் எதிர்கால இந்தியாவில் இடம் பெயர்ந்து வாழும் தன்மைக்கு இடையூறு உண்டாவதைத் தவிர்க்க வேண்டும் என்று '' கல்வி ஒரு சவால் '' என்கின்ற இந்திய அரசு இன்றையதினம் வெளியிட்டிருக்கின்ற அந்தக் கல்விக் குறிப்பு இந்தக் கொள்கையை நமக்கும் தெரிவிக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில்—திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் ''. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று நான் நம்புகின்றேன். இருமொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த இரு இயக்கங்களில் ஒன்று ஆளுங்கட்சி வரிசையிலேயும், இன்னொன்று எதிர்க்கட்சி வரிசையிலேயும் இருக்கின்ற நேரத்தில் மத்திய அரசு மும்மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்துகின்ற வகையில் ஒரு கல்வித் திட்டத்தை, கொள்கையை நாட்டிலே அறிமுகம் செய்தால் அதை எதிர்க்க வேண்டிய கடமை ஆளுங்கட்சிக்கு—அண்ணாவின் பெயரைச் சொல்லுகின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறதா இல்லையா என்பதை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1986 சனவரி 10

இன்றையதினம் மும்மொழிக் கொள்கை அமல் நடத்தப் படுமேயானால். அதற்குப் பின்னால் இந்தி ஆதிக்கம் என்பது வந்தே தீரும்; இந்தி ஆதிக்கம் இன்றைக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றது. இந்த கல்விக் கொள்கை என்பது என்ன? Cultural invasion என்பது, கலாச்சார ஆக்கிரமிப்பு என்பது இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கிறது.

Integration through education and Education through Hindi.

இந்த அடிப்படையிலேதான் ஒரு கலாச்சார ஆக்கிரமிப்பு கல்வியின் மூலம் இந்தியைத் திணிப்பது என்கின்ற அவசரத்தாலே உருவாக்கப்பட்ட குறைமாதக் குழந்தைதான் இந்திய நாட்டி னுடைய கல்விக் கொள்கை என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

அது மட்டுமல்ல, Main stream என்கின்ற ஆங்கிலப் பத்திரிகை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. under privileged, வாய்ப்பில்லாத மக்களுக்கு, சமுதாயத்தில் ஏழை எளியவர்களாக வாழக்கூடிய மக்களுக்கு, இந்திய நாட்டினுடைய கல்விக் கொள்கை ஏற்புடையதாக இல்லை என்பதை மெயின் ஸ்டிரிம் (Main stream) என்கின்ற ஆங்கிலப் பத்திரிகை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

அது மட்டுமல்ல, ஆந்திராவினுடைய முன்னாள் துணை வேந்தராக இருந்த ஐயங்கார் அவர்கள் இன்றையதினம் இந்தக் கல்விக் கொள்கை பற்றி, தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அவர்கள் சொல்கிற நேரத்தில், ஏறத்தாழ 500 மாதிரி பள்ளிகளை உருவாக்கி, அதன்மூலம் ரூ. 1,000 கோடியை மத்திய அரசு செலவு செய்ய இருக்கிறது; அது தேவைதானா? ஆரம்பப் பள்ளிக்கூடங்களில், பள்ளிக் கட்டிடங்கள்கூட இல்லாமல், ஆரம்பக் கல்விக் கூடங்களில் முறையான கல்விகூட பயிற்றிவிக்க முடியாமல் இருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில், நீங்கள் ஆயிரம் கோடி ரூபாயை மாதிரி பள்ளிகள் என்று சொல்லி, 500 இடங்களில் வைப்பதன் மூலம் நாட்டில் ஒரு முறையான பணியை மத்திய அரசு செய்ததாகக் கருதப்படுமா என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை, ஆந்திராவினுடைய முன்னாள் துணை வேந்தர் தெளிவுபட தினமணி பத்திரிகையிலே, 25-12-1985 அன்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கல்விக் கொள்கை என்பது இன்றையதினம், மொழியை, இந்தி ஆதிக்கத்தை, ஏற்படுத்துகின்ற கொள்கையாக, மத்திய அரசு கல்விக் கொள்கை இருக்குமானால், அண்ணா அவர்கள், நாடாளு மன்றத்திலே, அன்றையதினம் எடுத்துத் தெரிவித்ததைப் போல்,

1986 சனவரி 10] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

எவ்வளவு எதிர்ப்புகள், தடைக்கற்கள் இடைப்பட்டாலும், முழு மூச்சாக, ஏன்? இயக்கத்திற்கே பேராபத்து என்றாலுங்கூட, இந்தியை ஏற்க முடியாது என்ற அடிப்படையில், இந்தக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக எதிர்க்கும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய நவீன இந்தியாவை உருவாக்க முனைந்திருக்கின்ற பாரத பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள், டெக்ஸ்டைல் பாலிசி என்கிற துணிக் கொள்கையை அறிவித்து இருக்கிறார்கள். துணிக் கொள்கையைப் பொறுத்தமட்டில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பாக, பதில் கூறி இருக்கிறார்கள். அப்படிக் கூறுகிற நேரத்தில், அவர் சொல்கிறார், கைத்தறி பாதிக்கப்படும்; கைத்தறி பாதிக்கப்படுகின்ற காரணத்தாலே, கைத்தறி பாதிக்கப் படாமல் இருக்கிற அளவுக்கு மத்திய அரசு பாதுகாப்பு தர வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அடுத்து, உற்பத்தி, அதை விநியோகம் செய்வது, அது போன்று வேலை வாய்ப்பு, இவையெல்லாம் மையமாகக் கொண்ட அடிப்படை புதிய துணிக் கொள்கை (டெக்ஸ்டைல் பாலிசி) உருவாக்கப்பட வேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

இன்னொன்றையும் அவர் விட்டு விட்டிருக்கிறார். பருத்தி உற்பத்தி செய்கின்ற பருத்தி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப் படவிருக்கிறார்கள். இந்தத் துணிக் கொள்கையாலே ஆலைகள் எல்லாம் நவீனமயமாக்கப்படுகின்ற காரணத்தாலே, இன்றைக்கு, பருத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்படுகின்ற காரணத்தாலே, அந்த விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற அளவுக்கு, துணிக் கொள்கை மாற்றி யமைக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்திற்கு புதிய திட்டத்தின்மூலம் நாங்கள் தண்ணீர் கொண்டுவர இருக்கிறோம் என ஆளுநர் உரையில் ஒன்றைத் தெரிவித்து இருக்கிறார்கள். தெலுங்கு — கங்கை என்கின்ற அந்த மகத்தான திட்டம் நடைமுறையில் இருக்கிற நேரத்தில் நாங்கள் சில ஏற்பாடுகளைச் செய்து, இடைக்கால ஏற்பாடாக, நிலத்தடி நீரைக் கொண்டு வந்து, தண்ணீர் கொடுக்க இருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆளுநர் உரையிலேயே அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் என்பது, இங்கே தெரிவித்ததைப் போன்று, ஆரணியாறு, கொற்றலையாறு பகுதிகளிலே உள்ள நிலத்தடி நீரை சென்னை மாநகரத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் ரூ. 98 கோடி

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1986 சனவரி 10

செலவாகும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்பதெல்லாம் நீங்கள் தெலுங்கு-கங்கை என்கின்ற திட்டத்தை உருவாக்கி, அதற்கு ஏற்கெனவே ரூ. 40 கோடிக்கு மேலாகப் பணத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அது இன்னும் மத்திய அரசிலிருந்து முடிக்கப்பட்டு, செயல்படுத்தலாம் என்கின்ற அடிப்படையில் ஆந்திர அரசுக்கு வரவில்லை. ஆந்திர அரசு, எந்தவிதமான சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு, எல்லா விளக்கங்களும் தரப்பட்டு, மத்திய அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டு, இருக்கிறது, ஆனால் இன்னும் வரவில்லை, என்று சொல்கிறது. ஆண்டுகள் ஓடிக் கொண்டிருக்கிறது. தெலுங்கு-கங்கை திட்டம் என்பது, முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலே அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேறுமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. இதற்கு இடையிலே நீங்கள் 98 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கு குடிநீர் கொண்டுவர முயற்சி மேற்கொள்கிறீர்கள். நான் உங்களை, இந்த மன்றத்திலுள்ள அனைவரையும் ஒன்று கேட்கிறேன். வீராணம் திட்டத்தை தொழில் நுட்பக் குழு நடைமுறை சாத்தியம் உள்ளது என்று தெரிவித்த பின்னாலும் எதற்காக கைவிட்டீர்கள்? அதனை முறையாக நிறைவேற்றி யிருந்தால் இதற்குள் சென்னை நகருக்கு குடிதண்ணீர் வழங்கப் பட்டிருக்கும். எனவே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்து வைத்தத் திட்டம் என்ற காரணத்தைத் தவிர நீங்கள் வீராணம் திட்டத்தை கைவிட்ட தற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்று கேட்கிறேன்.

நீங்கள் வீராணம் திட்டம் வேண்டாம் என்று கூறுகின்ற காரணத்தால் இன்றைய தினம் 98 கோடி ரூபாய் நிலத்தடி நீருக்குச் செலவு செய்யவிருக்கிறீர்கள். அதனால் சென்னை மாநகருக்கு முழுமையாகத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுமா என்பது கேள்விக்குறிதான்.

தெலுங்கு-கங்கைத் திட்டத்திலே 40 கோடி ரூபாய் போட்டிருக்கிறீர்கள். அது நிறைவேறுமா? கேள்விக்குறிதான். எனவே ஆட்சியாளர்கள் முன்னால் இருந்தவர்கள் செய்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக நல்ல திட்டங்களை ஒதுக்கிவிடாமல் பிரச்சனையில் இருக்கிற நியாயத்தை உணர்ந்து நீங்கள் செயல் பட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

இன்றைக்கு ஆனந்த விகடன் பத்திரிகையைப் பார்த்தேன். அதிலே ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறார்கள். அந்தத் தலையங்கம் என்னுடைய நெஞ்சத்தை நெகிழ வைத்தது. அதிலே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தந்தை பெரியார், கர்மவீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லாம் ஓட்டு மொத்தமாக தமிழ்நாட்டு மக்களால் வணங்கப்படுகிறார்களே

1986 சனவரி 10] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

யல்லாமல் அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரஸ் என்று வெவ்வேறு கட்சிகளால் தனித்தனியாகத்தான் வணங்கப்பட வேண்டும், வாழ்த்தப்பட வேண்டும் என்று அவசியம் இல்லை என்று தெரிவிக்கிறது. அதைப் போன்று அண்ணா நகரில் உள்ள அண்ணா சிலையை அகற்றி இன்னொரு இடத்திலே வைப்பதன் மூலமாக என்ன விளைவு ஏற்படப் போகிறது என்று ஆனந்த விகடன் நம்மைப் பார்த்துக் கேட்கிறது. நீங்கள் சிந்திக்க வேண்டும். அண்ணா அவர்களை அ.தி.மு.க. வணங்கினாலும் ஒன்றுதான். தி.மு.க. வணங்கினாலும் ஒன்றுதான். அதைப் போன்று அண்ணாவின் சிலையை தி.மு.க. வைத்தாலும் ஒன்றுதான். அகில இந்திய அண்ணா தி.மு.க. வைத்தாலும் ஒன்றுதான். எனவே நீங்கள் அண்ணா நகரில் அண்ணா சிலையை அகற்றுவதன் மூலமாக, அங்கே ஒரு வளைவை உருவாக்குவதன் மூலமாக தேவையற்ற, அரசியலில் ஒதுக்கப்பட வேண்டிய பிரச்சனைகளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து, ஒரு பிரச்சனையாக உருவாக்குகிறீர்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. எவ்வளவு எண்ணிக்கைப் பலம் இருந்தாலும் நீங்கள் இதை ஒரு சாதாரணப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அது அல்லாமல் ஜனநாயக சம்பிரதாயங்களை கடைப்பிடிக்க வேண்டிய நீங்கள், அண்ணாவினுடைய பெயரை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள், அண்ணா நகர் சட்ட மன்ற உறுப்பினர் சோ. மா. இராமச்சந்திரன் பெயரை சேர்ப்ப திலேயும், நாடாளுமன்ற உறுப்பினர் பெயரை சேர்ப்பதிலேயும் என்ன தடை இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போன்று, ஆலந்தூரில் ஆப்ரகாம் அவர்களுடைய பெயரை அந்த வாழ்த்துரையில் சேர்ப்பதில் என்ன தடை இருக்கிறது என்று நான் உங்களைக் கேட்கிறேன். இந்த நடவடிக்கை காரணமாகத்தான் இன்றைக்கு ஆனந்த விகடன் நமக்கு தலையங்கம் தீட்டி, நம்மை எல்லாம் உணர வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே இப்படிப்பட்ட காரியங்களில் ஒரு பெருந்தன்மையோடு, எண்ணிக்கைப் பலம் இருப்பதால் எதையும் செய்யலாம் என்ற முடிவு சர்வாதிகாரப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதால், எண்ணிக்கைப் பலம் இருந்தாலும் அடக்கத்தோடு செயல்படுகிறோம் என்ற முறையை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் எண்ணற்ற பிரச்சனைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சனையில் சிலவற்றை இங்கே சொன்னார்கள். ஆதி திராவிடர்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர இருக்கிறோம் என்று சொல்லீர்கள். அந்த

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1986 சனவரி 10

வீடுகளை எப்படி கட்டுகிறோம் என்றால் 5 இலட்சம் ஆதி திராவிட மக்களுக்கும், 5 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கும் நாங்கள் கட்டித் தரவிருக்கிறோம் என்று சொன்னீர்கள். நானும் பார்த்தேன். இன்று காலையிலே ஆதி திராவிட நல அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். ஒரு வீடு 10,000 ரூபாய் என்ற அடிப்படையில் கட்டித் தருகிறோம் என்று சொன்னார்கள். ஏறத்தாழ பத்து இலட்சம் வீடுகள் ஒரு ஆண்டில் கட்டப் போவதாக ஆளுநர் உரையில் கூறியிக்கிறார்கள். ஒரு வீட்டுக்கு 10,000 ரூபாய் என்றால் 10 இலட்சம் வீடுகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட வேண்டும். உங்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் ஆண்டுக்கு 2,368 கோடி ரூபாய்தான் மொத்த செலவு என்று கருதுகிறேன். அப்படி இருக்கையில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு ஆண்டில் ஆதி திராவிட மக்களுக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருகிறோம் என்று சொல்வது உள்ள படியே நிறைவேற்றுவதற்காகச் சொல்கிறீர்களா அல்லது ஆளுநர் உரை என்பது வணிக விளம்பரம் போல கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்பதற்காக சொல்கிறீர்களா என்று எனக்கு புரிய வில்லை. எனவே, அமைச்சரவர்களும் மற்றவர்களும் இந்தக் கணக்கைப் போட்டுப்பார்த்தீர்களா என்று கேட்க விரும்புகிறேன். எனவே இப்படிப்பட்ட காரியங்களிலே வணிக விளம்பரத்தைப் போல் இங்கேசொல்லி விடாமல் எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து, எண்ணிப் பார்த்து பதில் சொல்ல வேண்டும் என்று இந்தக் சந்தர்ப்பத்தில் நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி ஒன்றரை ஆகி விட்டது. இதோடு உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (11—1—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

1986 சனவரி 10]

8, பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

73. மதுரை மாவட்டம், நத்தம் தாலுகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18—10—1985 ஆம் நாளிட்ட 779-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான நியக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவில் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

74. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 15—11—1985 ஆம் நாளிட்ட 2763 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

75. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு ஊராட்சி சுட்டிட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 4—7—1985 ஆம் நாளிட்ட 540 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

76. கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சியைச் சேர்ந்த சில கிராமங்களை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அங்காடியிலிருந்து நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 7—10—1985 ஆம் நாளிட்ட 1761 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

77. மதுரை சர்க்கரை நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையை பணமாக தொகை வழங்கு ஆணையருக்கு வழங்கும் செயல் நோக்கத்திற்காக குறிப்பிட்ட நாளை குறிப்பிடுதல் பற்றிய தொழிற் துறையின் 1—10—1985 ஆம் நாளிட்ட 834 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [மதுரை சர்க்கரை நிறுவன (நிர்வாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1984) 33 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

78. தமிழ்நாடு பொதுப் பணி பொறியியல் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)

79. தமிழ்நாடு பொதுப் பணி பொறியியல் கழகத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)

80. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)

81. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1983-84 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிஞிப்புகள், ஏனைய தாள்கள்.

26. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் காலவரைக்கான தமிழ்நாடு ஒழுக்கக் கண் காணிப்புக் குழுவின் பதினேழாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

27. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் பின் இணைப்பு உ-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியல் குறித்த அறிவிக்கையில் திருத்தம் (27—11—1985)ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

28. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருந்த) சட்ட முன்வடிவு இணைப்புடன் (மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 131-வது விதியின் வழிவகைகளின் கீழ் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பெற்றது).

29. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு இணைப்புடன் (மாண்புமிகு பேரவைத் தலை வரின் ஆணைப்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 131-வது விதியின் வழிவகைகளின் கீழ் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பெற்றது).

இணைப்பு I.

(Speech of H. E. Thiru Sundarlal Khurana).

(....79-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

Honourable Members of the Legislature,

May I at the outset wish you all a very happy New Year and Pongal. I hope that this year will bring further prosperity to the State and people of Tamil Nadu.

2. Last year witnessed momentous events in both the economic and political scene in the country. With the launching of the Seventh Five-Year Plan, the announcement of the long-term fiscal policy, liberalisation for industrial development and development oriented taxation structure, the country is poised for faster economic growth. The State Government proposes to take advantage of this favourable investment climate to accelerate the industrial growth through channelisation of adequate inputs by way of infrastructural development and a conducive policy framework. The major thrust this year also will be on the strengthening of Power sector which is the sine qua non for industrial development. In the Seventh Plan allocations, the State has already earmarked more than 30 per cent of the outlay on Power development. I shall be mentioning, in the course of my address, the areas of emphasis that have been selected by the State for providing necessary impetus for a balanced growth in various sectors.

3. Tamil Nadu has always enjoyed the reputation of implementing the Plan programmes sincerely and effectively and has been achieving all the Plan targets. As against an outlay of Rs. 3,150 crores for the Sixth Plan, we had spent Rs. 3,675 crores by the end of 1984-85 and for the Seventh Plan, we have adopted an increased outlay of Rs. 5,750 crores. As against an approved outlay of Rs. 960 crores for the first year of the Plan, we anticipate that expenditure will be around Rs. 1,050 crores. I am happy to inform you that for the year 1984-85, the performance of Tamil Nadu along with Maharashtra was adjudged best among all the States in respect of poverty eradication schemes encompassed in the 20-Point Programme. Tamil Nadu will also be receiving the national award of Rs. 2.5 crores for its performance in the Family Welfare Programme for 1984-85.

4. The development thrust in the activities of the Government is subject to periodical strains on account of natural calamities to which the State is prone. There is hardly a year when we do not suffer from the visitations of serious drought or devastating flood. Last year also was no exception and the month of November 1985 witnessed unprecedented heavy rains in Madras City and Thanjavur, South Arcot, Chengalpattu and North Arcot districts. The heavy damage caused by the flood which inundated the low lying areas and the tragic death of so many persons in the flood are still fresh in our memory. Relief and rehabilitation measures were undertaken on a war footing. We are grateful to the Prime Minister for personally visiting the flood affected areas and for promptly despatching a team of officials to assess the damage and recommend relief assistance. Pending the receipt of assistance from Government of India, the State Government had already sanctioned a sum of Rs. 26.26 crores to attend to the immediate works of relief and restoration. Government of India have recently passed orders fixing a ceiling of Rs. 66.81 crores as relief and rehabilitation assistance. Orders on this basis are being issued.

5. The State Government are greatly concerned about the continued ethnic violence in Sri Lanka and condemn the violent attack on Sri Lankan Tamils by the Sri Lankan army, in contravention of the ceasefire agreement and without revival of the negotiations with the liberation fighters and the Tamil United Liberation Front. The State Government urge the Government of India to take all possible steps to find an early solution to this problem. In the course of my address last year, I had touched upon the problem of Sri Lanka refugees. On their part, the Government have been taking all possible steps to take care of the vast influx of refugees coming to India from July 1983 onwards. Approximately 1.25 lakhs persons have arrived from Sri Lanka and of these about 33,000 destitutes have been admitted to various camps in the State. The total expenditure on the relief and rehabilitation measures so far will be about Rs. 45 crores. In this connection, Government of Tamil Nadu welcome the recent statement of the Prime Minister that India would not be able to take back Sri Lankan people who are qualified for Indian citizenship until the situation stabilises in Sri Lanka enabling the refugees to return to their homeland in safety and with dignity.

6. Before outlining the thrust areas for the concentrated attention of the Government during the current year, I would briefly touch upon the activities and achievements in some important sectors.

7. The Government is fully cognisant of the importance of electricity as a basic infrastructural requirement for all development. In keeping with this awareness, an outlay of Rs. 2,000 crores out of the total Plan outlay of Rs. 5,750 crores for the Seventh Plan period has been envisaged for the power development alone.

8. One of the significant achievements of the Electricity Board in the previous year has been the improvement in the plant load factor of thermal stations. The plant load factor of Ennore Thermal Station has risen to 50.7 per cent in the first eight months of 1985-86 as against an average of 35 per cent in the past. Substantial increase in the plant load factor is being effected in Tuticorin Thermal Power Station also where it rose to 62 per cent in 1984-85 as against 50.5 per cent in 1983-84.

9. However, with the increased pace of development, the demand for electricity has also been increasing rapidly. For example, though the availability in the year 1984-85 was increased to 13,731 million units from 10,377 million units in 1983-84, the power shortage could not be completely wiped out. Keeping in view the increased demand for power, additional installed capacity of 1,416 MW is planned to be commissioned during the seventh Five-Year Plan.

10. The Government have been taking all possible steps to popularise education and make it more responsive to the needs of the people. During 1985-86, as many as 85 new high schools, and 49 new higher secondary schools have been opened. During my last address, I had mentioned that the Government would take up a programme for constructing new school buildings in a phased manner. Accordingly, in 1985-86, a provision of Rs 1·50 crores has been made for taking up this work. The State Government has attached great importance to vocationalisation of education. It is worth noting that in 1983-84 itself, Tamil Nadu had more than half of the 1,600 vocational institutions which were in existence all over the country. Out of 3.32 lakh higher secondary students in Tamil Nadu in 1984-85, 61,502 were studying in vocational courses. Vocational courses have been introduced in 969 out of 1,541 Higher Secondary schools. We do hope that this high degree of vocationalisation will make the eduction more relevant to the needs of the people.

11. The State Government have all along been assigning the highest priority to rural development. This is reflected in the zeal and effectiveness with which rural development and poverty eradication schemes are being implemented in Tamil Nadu. Under the Integrated Rural Development Programme, an expenditure of Rs. 146·61 crores was incurred during the Sixth Five-Year Plan

period which benefited nearly 14 lakhs people. In 1985–86, it has been targeted to assist 2·73 lakh families under this Scheme. Under the National Rural Employment Programme, it has been targeted to generate 287 lakh mandays in the year 1985–86 with an allocation of Rs. 41 crores. Similarly, under Rural Landless Employment Guarantee Programme, it has been targeted to provide 299 lakh mandays in the year 1985–86. At the same time, the expenditure under this programme will go towards creation of durable community assets.

12. Government have been taking effective measures to increase the food production. At the end of the Sixth Plan period, we had reached production level of 69·17 lakhs MT of rice and other cereals, 3·42 lakhs MT of pulses and 13.425 lakhs MT of oil seeds. For the Seventh Plan, the targeted production level is 105 lakhs MT of foodgrains, 6 lakhs MT of pulses, and 18·98 lakh MT of oil seeds. Various schemes have been formulated to impart new technologies to achieve this target.

13. The failure of south-west monsoon in Tamil Nadu resulted in poor flow of water in Mettur Reservoir. However, arrangements had been made for the irrigation of crops by turn system in Thanjavur district. But, the north-east monsoon accompanied by severe cyclone created havoc, and caused extensive damages, particularly in Thanjavur, South Arcot and Chengalpattu districts. The heavy rain in Thanjavur district was counter-productive as the excessive rain water not only flowed into the sea, but also affected adversely the standing samba crops. Inspite of these severe handicaps, the State Government had tried to compensate the loss in acreage by promoting intensive cultivation of paddy in all other areas and consequently high productivity level was achieved in different parts of the State during kuruvai and the Government hopes to achieve a production level of around 50 lakh Metric Tonnes.

14. Recently, based on the representation of State Government, Karnataka agreed to release 5 T.M.C. of water in exchange of power. However, it has now become clear that a permanent and mutually acceptable solution to Cauvery water dispute is urgently required. The Chief Minister has already initiated negotiations for resolving this Issue to the mutual satisfaction of both Tamil Nadu and Karnataka. This is being vigorously pursued by the State Government and we hope that an amicable settlement will be reached based on the principles already incorporated in the 1924 agreement.

15. The Government is fully aware that in the context of limited and uncertain supply of water, Tamil Nadu will have to design its strategy towards better water management and adoption of dry land farming techniques. Government have accordingly organised, on a

large scale, special demonstration known as "3 P" to popularise better water management. Another area of thrust will be the popularisation of appropriate technologies for the dry land farmers through weather proofing.

16. Due to the inclement seasonal conditions, the food production this year was adversely affected. This has resulted in an increased offtake of rice from the public distribution system. On any average, the offtake has been of the order of 94,000 tonnes per month this year against the average of 55,000 tonnes per month in the past four years. The Government have been taking all possible measures to meet the increased demand of rice under public distribution system. The production incentive for the paddy brought to the Direct Purchase Centres in Cauvery Delta area had been increased from Rs. 15 to 20 per quintal this year. Moreover, from 1st November 1985, Government have taken up monopoly procurement in Cauvery Delta area and increased the production incentive to Rs. 35 per quintal. During the kuruvai seasons 2.9 lakh tonnes of rice was procured. In order to have enough stock under the public distribution system, it has been decided to extend the monopoly procurement even for samba crop initially upto 31st January 1986.

17. The State Government have been repeatedly urging the Central Government to allocate more rice to Tamil Nadu from the Central pool. The Central Government had increased the allocation for September 1985 to 35,000 tonnes from 25,000 tonnes and further enhanced the allocation to 40,000 tonnes from October 1985. In addition to this, the Central Government have agreed for an additional allocation of 50,000 tonnes for November 1985 and December 1985. The State Government welcome this gesture of goodwill on the part of the Central Government. We hope that in future the Central Government will increase this allocation to one lakh tonne. The State Government will make all possible efforts to ensure adequate supply of foodgrains through Public Distribution System.

18. During the Seventh Five-Year Plan, it is proposed to cover approximately 10,000 habitations with safe drinking water-supply. The Government is continuing its efforts for augmenting the drinking water-supply in rural areas. Under the Minimum Needs Programme itself, a provision of Rs. 24 crores has been made for the year 1985–86.

19. With a view to augmenting water-supply in Madras City hydrogealogical studies in Araniar and Kortaliar basin have been completed with UNDP assistance. The Government have sanctioned a scheme, in the first phase, for extraction and supply to Madras City of 55 mld. of ground water. Total estimated cost is Rs. 98 crores. It is proposed to pose this scheme to the World Bank for assistance.

20. This Government have justifiably earned the reputation of a welfare oriented Government. Number of pioneering schemes have been started by this Government which have served as a model at the National level and have been well acclaimed at international level also. In the course of my address last year, I had mentioned that a comprehensive programme for child welfare would be implemented. I am happy to inform that this has been given effect to and the Government is now taking care of all the basic needs of the children starting from nutritional support and health back up to free provision of clothes and text books. At present 86.88 lakh children are being benefited under the Chief Minister's Nutritious Meal Programme and 58.10 lakh children will be benefited from the free supply of uniforms. I may also point out that the programme for the supply of uniforms will give employment opportunities to 40,000 women in various tailoring units. With a comprehensive scheme like this, Tamil Nadu can definitely look forward to a bright and healthy future generation which will build a strong Tamil Nadu of tomorrow.

21. Realising the importance of mass media in motivating the acceptor to readily accept a planned family norm, the communication strategy has been reoriented and audience specific messages for the agriculturists, salaried class of employees and women have been developed. Professional experts are proposed to be involved in developing further a varied strategy to suit the needs of different groups of acceptors. Efforts to involve industrialists and philanthropic houses in donating modern gadgets of communication like T.V., V.C.P., etc., to hospitals and institutions, to add to the comfort and recreational facilities of the acceptors, have produced gratifying results and it is proposed to intensify further the efforts in this area.

22. By way of improving the services it is proposed to provide adequately equipped operation theatres in the Primary Health Centres and Taluk Hospitals in a phased manner so that such services are made available to every acceptor in the rural areas within a distance of 8 to 10 kilometres from his door step.

23. Mass immunisation programme to cover all the children in the vulnerable age group, in an effort to reduce infant mortality, has been undertaken in three districts on the pattern of the Universal Immunisation Programme launched by the Government of India on 19th November 1985 and a coverage of over 95 per cent has been achieved even in the third phase of the programme. These efforts would farther improve our performance in the Family Welfare Programme in the coming years.

24. As indicated in my address last year, the Government have been taking steps for integrated and comprehensive development of adi-dravidar community. During 1985-86, the Special Component

Plan for the economic upliftment of adi-dravidars involves an outlay of Rs. 126.16 crores. In order to give further fillip to the socio-economic development of adi-dravidars, the Government will give special emphasis to increase educational facilities for them. A special scheme would be drawn up for upgradation of existing schools.

25. In the course of my address last year, I had mentioned that the family benefit fund payment to Government servants will be raised from Rs. 10,000 to Rs. 20,000. This has already been implemented. TheGovernment have also pasred orders on the recommendation of the Fourth Pay Commission expeditiously. Even though the commitment on account of these orders was as high as Rs. 90 crores per annum, the Government have not hesitated in giving retrospective effect to these recommendations from 1st October 1984. This will clearly bear out the fact that the Government is keenly sensitive to the welfare of employees. Even now, when some representations were received, the Government decided to appoint a One Man Committee. Government will also quickly pass orders after receiving and considering the report of the One Man Committee.

26. The effort of the Government is to judiciously mix the thrust for key welfare measures with emphasis on some new areas for economic development. As mentioned by me last year, the Government have launched a large scale programme to tap the non-conventional sources of energy. The Government have sanctioned a sum of Rs. 95 lakhs to Tamil Nadu Energy Development Agency for promoting solar hot water system, solar hot air system, etc., in industries and public institutions. The Government have also taken up the implementation of Wind Energy Project at a total cost of Rs. 1 crore.

27. It has been the endeavour of the State Government to place Tamil Nadu in the forefront of the industrial map of the country. With a view to achieve this, all possible steps have been taken to encourage entrepreneurs to set up industries in the State. Sanction of letters of indent and their conversion to industrial licenses are being monitored closely During the year 1985, 38 letters of indent have been issued.

28. The Mayiladuthurai Co-operative Sugar Mill which is being set up at a cost of Rs. 1,177 lakhs is expected to commence production in December 1986.

29. The Tamil Nadu Industrial Development Corporation continues to play a vital role in the promotion of major industries. It has taken up a number of projects which are in various stages of implementation. Among the public sector projects taken up by the Corporation, the Tamil Nadu Explosives Ltd, has commenced trial production in the year 1985.

30. In addition to its usual promotional activities, the Tamil Nadu Industrial Investment Corporation has taken up a Special Industrial Development Programme under Madras Urban Development Project-II funded by the World Bank. The scheme envisages provision of infrastructural facilities, construction of factory buildings and purchase and erection of machineries to set up 145 industrial units at Mogappair which are being financed by TIIC and the scheme is expected to be completed by the end of 1986.

31. The Government of India has set up an Export Processing Zone at Madras to promote exports from the region. The State Government have provided about 158 acres of lands for the first stage of the project and it is proposed to acquire about 300 acres of land for the second stage to set up 250 more units besides 120 units under the first stage. So far, the Government of India have cleared 74 applications for this project.

32. The State Government have been pleading the Central Government for rectifying the imbalance in the matter of central investment resulting in lesser investment in Tamil Nadu as compared to other States. Madras Refineries Limited at Manali has recently doubled its existing capacity from 2.8 million tonnes to 5.6 million tonnes per annum. The State Government is also pressing the Government of India to set up the Cine Colour Plant at a cost of Rs. 200 crores and the X-Ray Film Plant at a cost of Rs. 170 crores in Uthangamandalam.

33. From the foregoing, it will be evident that a strong foundation exists in the State both by way of manpower and infrastructure for launching a concerted effort for accelerated economic growth. As already mentioned by me, Government of India is planning to create a favourable investment climate and we propose to take full advantage of this to reap maximum benefits for the State. Economic growth has also to be balanced with distributional justice in providing avenues for the percolation of these benefits to the common man. One of the major problems in the State is large scale unemployment and the industrial policy of the State has to consider a balanced development not only in high technology sectors or in large scale and medium industries but also in the traditionally high employment oriented areas, like handlooms, cottage and village industries and small scale sector, both organised and unorganised. Over the years, the service sector has also increased its contribution

to the State Domestic Product and this sector would also require support and strengthening. With these objectives in view the following measures are proposed to be introduced from the current year :—

(1) The major incentives provided by the State, in addition to infrastructural support, to large and medium industries have been capital subsidies and interest free sales tax loans. It is proposed to streamline these incentive packages in such a way as to direct their focus to backward areas and also to specific categories of industries which need to be attracted to the State.

(2) The Power sector has already been provided high priority in our Plan programmes and the endeavour of the State would be to overcome the deficit in power by the end of the Seventh Plan. The Government are also considering power generation to be taken up through independent corporations in collaboration with private sector, with external aid or commercial credit so that the process of augmenting generation capacity can be speeded up.

(3) We have already informed the Government of India that the textile policy which has been announced does not provide adequate support to the handloom sector. It is essential not only to modernise the sector but also to provide suitable incentives and financial inputs in order to increase their marketing competence so that increased output can be sustained and the large employment provided by such output is not jeopardised. We hope that based on our stand in the matter the Prime Minister will make necessary changes to properly safeguard the interest of the handloom sector.

(4) Unlike the Central Government the States lack the advantage of directly tapping resources like external assistance of domestic borrowings. In this context the observation of the Prime Minister that resources can be augmented by increasing the productivity of Public Sector Undertakings is highly relevant to the State Governments. Our endeavour will be to focus our attention on increasing the productivity in this field so that instead of being a drag on the State exchequer the Public Sector becomes a net contributor. The State Government have already introduced a system of subjecting the various sectors in the Government to a strict discipline of fulfilling prescribed targets and closely monitoring their performance.

(5) Tamil Nadu has witnessed phenomenal growth in the area of small-scale sector and we are also the pioneers in introducing co-operatives in select industrial activities. The State has already conducted resource profile studies for the various districts. It is necessary to dovetail these with the demand needs so that ultimately we achieve a portfolio of industrial production which would cater fully or at least to the maximum extent possible to the local needs. The common man should be able to obtain his normal consumption requirements from industrial production within the State. The gaps that are identified on this basis will have to be filled in by encouraging industrial production in those areas. It is proposed to set up a nodal agency in the Directorate of Industries and Commerce for this purpose which will work out the requirements by way of inputs, incentives and other support for fostering such industries in identified areas, be they in the small scale, cottage or village sectors. This requires a co-ordinated effort by the various wings of the Government which are, today, catering to these different needs and it is proposed that this nodal agency under the Director of Industries and Commerce should fulfil this need.

(6) Last year, I had mentioned the intention of the Government to augment assistance to the vulnerable sections of the population like Adi-dravidars through time bound programmes. This is intended as a supplement to the large number of national schemes implemented in the State. Shelter is one of the prime requisites for decent living and the Government firmly believe that the poor and vulnerable sections of the population should be provided with this basic facility. **I am happy to announce that the Government intend to implement a massive programme for providing houses to the homeless from next financial year. Five lakh houses will be provided to the Adi-dravidars, Scheduled Tribes and Nari Kuravars who are today anguishing without proper and adequate shelter. Similarly, five lakh houses will also be provided to other families living below the poverty line. This Programme is intended to fulfil the laudable objective of meeting the housing needs of these sections of the population by providing houses to thirty lakh people in a three year period.**

(7) The elections to Municipalities, Panchayats and Panchayat Unions are to be held on the dates which have been recently announced by the Government. The Government are also firmly of the view that elections to the Co-operative Societies shall be conducted soon.

(8) Education has been a priority area for this Government and as mentioned by me last year, Government have started increasing the allocation for improvement of the school buildings and strengthening the laboratories. Special allocations will be made to the Adi-dravidar schools in this regard.

(9) As announced in my speech last year, the Government have bifurcated Madurai district into Madurai and Anna districts. This process of creating viable and manageable administrative districts units is proposed to be continued in the current year and in the next phase Tirunelveli and North Arcot districts are proposed to be bifurcated.

(10) In the last budget, Government had made a beginning in simplification of the sales tax structure by converting multi-point sales tax to single point tax on a few commodities. It is proposed to continue this exercise so that the sales tax structure in the State will be growth oriented.

34. The Government are making all possible efforts to usher in an era of growth and development. Your co-operation to this noble endeavour will pave the way for a bright future for Tamil Nadu. Vanakkam.

[1986 சனவரி 10

இணைப்பு II

(79ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே!

உங்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு, தமிழ் நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் மேலும் வளஞ்சேர்க்கும் ஆண்டாக அமையும் என நான் நம்புகிறேன்.

2. கடந்த ஆண்டில், நமது நாட்டில், பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் பல முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன. நம் நாடு செம்மையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி விரைந்து நடைபோடுவதற்கு, புதிதாகத் தொடங்கப் பட்ட ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம், நீண்ட கால வரி விதிப்புக் கொள்கை, தொழில் வளர்ச்சிக்காகத் தளர்த்தப்பட்ட விதிமுறைகள், தொழில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட வரிவிதிப்பு முறைகள் ஆகியவை ஏதுவாக உள்ளன. அடிப்படை வசதிகளை மேம்படுத்தியும், தொழில் வளர்ச்சிக்கு உகந்த கொள்கைகளை வகுத்தும், வாய்ப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் தற்போது நிலவும் சாதகமான முதலீட்டு சூழ்நிலையைப் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சியின் வேகத்தை முடுக்கி விடுவதுமே அரசின் நோக்கமாகும். தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான அடிப்படைத் தேவை மின்சக்தி என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனவே, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு இந்த ஆண்டும் இவ்வரசு அதிகச் சிறப்பிடம் அளிக்கும். ஏழாவது திட்ட நிதி ஒதுக்கீட்டில், இவ்வரசு, மின் உற்பத்தி மேம்பாட்டுக்காக, ஏற்கெனவே, 30 சதவீதத்திற்கும் மேலாக நிதி ஒதுக்கியுள்ளது. பல்வேறு துறைகளில், சீரான வளர்ச்சி ஏற்பட எந்தெந்தத் துறைகளுக்கு ஊக்கமளிக்கக் கருதியுள்ளது என்பதை இந்த உரையினிடையே நான் குறிப்பிடவிருக்கிறேன்.

3. திட்டப் பணிகளை ஆக்கபூர்வமாகவும் செம்மையாகவும் நிறைவேற்றி, எல்லா இலக்குகளையும் எய்தி வருகிறது என்ற பெருமை தமிழ்நாட்டுக்கு எப்போதுமே உண்டு. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3,150 கோடி ஒதுக்கப்பட்டிருக்கையில், 1984–85ஆம் ஆண்டு இறுதிவரை நாம் ரு. 3,675 கோடி செலவிட்டுள்ளோம். ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு ரூ. 5,750 கோடியாக உயர்ந்துள்ளது. இத் திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 960 கோடி செலவிட ஒப்புதல் அளித்திருக்கையில், நாம் செலவிடக்கூடிய தொகை ஏறத்தாழ ரூ. 1,050 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். வறுமை ஒழிப்புத் திட்டமான இருபது அம்ச திட்டத்தைச் செயற்படுத்து

1986 சனவரி 10]

வதில் 1984–85ஆம் ஆண்டில், தமிழ்நாடும், மகாராஷ்டிர மாநிலமும் இந்தியாவிலே மிகச் சிறந்த மாநிலங்களாகத் தெரிந் தெடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1984–85ஆம் ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தை செம்மையுறச் செயற்படுத்தியதற்கான தேசிய விருதாக, தமிழ் நாடு ரு. 2.5 கோடி பெறும்.

4. வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடிக்க அரசு முழு மூச்சுடன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தடையாக விளங்குவது தமிழ்நாட்டில் அவ்வப்போது ஏற்படும் இயற்கைச் சீற்றங்களேயாகும். தமிழ்நாட்டில் கடும் வறட்சியோ பெரும் வெள்ளமோ ஏற்படாத ஆண்டே இல்லையெனச் சொல் வது மிகையாகாது. கடந்த ஆண்டுகூட இதற்கு விலக்கு இல்லை. 1985 நவம்பரில் சென்னை மாநகர், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் இதுவரை கண் டிராத அளவிற்குப் பெருமழை பெய்ததை அனைவரும் அறிவர். தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் புகுந்து சூழும் சேதம் விளைந் ததையும் வெள்ளத்தில் சிக்கிப் பலர் இன்னுயிர் இழந்த கொடுமை யையும் நாம் இன்னும் மறக்கவில்லை. போர்க்கால அடிப்படை யில் நிவாரணப் பணிகளையும், மறுவாழ்வுப் பணிகளையும், மேற் கொள்ள வேண்டியிருந்தது. பாரதப் பிரதமர் நேரில் வந்து வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டுச் சென்றமைக்கும், வெள்ளச் சேதத்தை மதிப்பிடவும், நிவாரண உதவி குறித்து பரிந்துரைக்க வும், உரிய நேரத்தில் அதிகாரிகளை அனுப்பியமைக்கும் நாம் இத் தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உடனடி நிவாரணப் பணிகளையும், செப்பனிடும் பணிகளையும் மேற் கொள்வதற்காக, மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து, மாநில அரசு, ஏற்கெனவே ரூ. 26.26 கோடி செலவிட அனுமதி வழங்கி யுள்ளது. மொத்த நிவாரணத் தொகையை ரூ. 66.81 கோடி யாக வரையறுத்து, மத்திய அரசு, அண்மையில் ஆணை பிறப்பித் துள்ளது. இதன் அடிப்படையில், மேற்கொண்டும் தொகைகள் அனுமதித்து ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்பட உள்ளன.

5. ஸ்ரீலங்காவில் தொடர்ந்து இன வன்முறை தலை விரித் தாடி வருவது குறித்து மாநில அரசு ஆழ்ந்த கவலை கொண் டுள்ளது. விடுதலைப் போராளிகளுடனும், தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியினருடனும் பேச்சு வார்த்தை தொடராத நிலையில், அமைதி உடன்படிக்கையை மீறி இலங்கை இராணுவம் தமிழ் மக்கள்மீது வன்முறைத் தாக்குதல் நடத்துவதை இந்த அரசு கண்டிக்கிறது. இதுபற்றி தக்க நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது. சென்ற ஆண்டு நான் சட்டமன்றத்தில் உரையாற்றும்போது, ஸ்ரீலங்காவிலிருந்து வரும் அகதிகள் பிரச்சினை பற்றிக் குறிப்பிட் டிருந்தேன். 1983 ஜூலைத் திங்களிலிருந்து இந்தியாவிற்குப் பெரும் எண்ணிக்கையில் வந்த அகதிகளைக் கவனித்துக் கொள்ள

அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. தோராயமாக, 1.25 இலட்சம் அகதிகள் ஸ்ரீலங்காவிலிருந்து வந்துள்ளனர். இதில், ஆதரவற்ற 30,000 பேர், மாநிலத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் தங்கியிருக்க வசதி செய்யப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளுக்காகவும் மறுவாழ்வுப் பணிகளுக்காகவும் இதுவரையில் மொத்தம் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் நடைபெறும் கலவரத்தையொட்டி தமிழகம் வந்துள்ள ஆதரவற்ற தமிழ் அகதிகள் மீண்டும் ஸ்ரீலங்காவிற்கு அமைதியாகத் திரும்பிச் சென்று, சுமுகமான நிலை ஏற்படாத வரையில், ஸ்ரீலங்காவில் உள்ள இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுள்ளவர்களை இந்தியா ஏற்க முடியாது என்று பிரதமர் தெரிவித்த கருத்தை இந்த அரசு வரவேற்கிறது.

6. நடப்பாண்டில் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டிய துறைகள் குறித்து விவரிப்பதற்கு முன்னர் சில முக்கிய துறைகளின் பணிகளையும் சாதனைகளையும் கீழே நான் விவரித்துள்ளேன்.

7. வளர்ச்சிப் பணி அனைத்துக்கும் அடிப்படையானது மின்சக்தி என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்த திட்டச் செலவான ரூ. 5,750 கோடியில், மின்சக்தி வளர்ச்சிக்கு மட்டும் ரூ. 2,000 கோடி செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

8. சென்ற ஆண்டில், அனல்மின் நிலையங்களில் மின் உற்பத்தித் திறனை அதிகரித்திருப்பது, மின் வாரியத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் முந்தைய ஆண்டு 35 சதவீதமாக இருந்த மின் உற்பத்தித் திறன், 1985–86ஆம் ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் 50.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலும் மின் உற்பத்தித் திறனைக் கணிசமான அளவு அதிகரிக்கச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மின் உற்பத்தித் திறன் 1983–84-ல் 50.5 சதவீதமாக இருந்த நிலை மாறி, 1984–85-ல் 62 சதவீதமாக உயர்ந்துள்ளது.

9. எனினும், வளர்ச்சிப் பணிகள் பெருகப் பெருக மின்சக்தியின் தேவையும் விரைவாக அதிகரித்து வருகிறது. எடுத்துக்காட்டாக, 1983–84-ல் உற்பத்தி செய்யப்பட்ட 10,377 மில்லியன் யூனிட் மின்சக்தி, 1984–85ஆம் ஆண்டில் 13,731 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தபோதிலும் மின் பற்றாக் குறையை முற்றிலுமாக நீக்க முடியவில்லை. அதிகரித்து வரும் மின்சக்தியின் தேவையைக் கருத்திற்கொண்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,416 மெகாவாட் கூடுதல் நிறுவு திறன் கொண்ட மின்சக்தி உற்பத்தி நிலையங்களைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

10. கல்வியை மக்களிடையே பரப்பவும் மக்களின் தேவைகளுக்கு உகந்ததாக கல்வித் திட்டத்தை மாற்றவும் அரசு முயன்று வருகிறது. 1985–86-ல், 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளும் 49 புதிய மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. புதிய பள்ளிக் கட்டிடங்களைப் படிப்படியாகக் கட்டும் திட்டத்தை, அரசு மேற்கொள்ளும் என்று நான் என்னுடைய முந்தைய உரையில் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறே, 1985–86-ல் இப் பணியை மேற்கொள்ள 1.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தொழில் கல்வி முறைக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. 1983–84ஆம் ஆண்டிலேயே, நாட்டில் செயற்பட்டுக் கொண்டிருந்த 1,600 வாழ்க்கைத் தொழில் கல்வி நிலையங்களில் பாதிக்கு மேல் தமிழ்நாட்டில் மட்டும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1984–85-ல், தமிழ்நாட்டில் உள்ள 3.32 இலட்சம் மேல்நிலைப் பள்ளி மாணவர்களில், 61,502 மாணவர்கள் வாழ்க்கைத் தொழில் பாட முறையைப் பயின்றனர். மொத்தமுள்ள 1,541 மேல்நிலைப் பள்ளிகளில், 969 மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பாடமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. வாழ்க்கைத் தொழில் கல்வி பாடமுறையை அதிக அளவில் செயலாக்குவது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் என்று நம்புகிறோம்.

11. இவ்வரசு, ஊரக வளர்ச்சிக்கு எப்போதுமே தலையாய முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது என்பதை ஊரக வளர்ச்சித் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் போன்றவை மிகுந்த ஊக்கத்துடனும் செம்மையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 146.61 கோடி செலவிடப்பட்டது. இதனால் 14 இலட்சம் மக்கள் பயனடைந்தனர். 1985–86-ல் இத்திட்டத்தின்கீழ், 2.73 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1985–86-ல் 287 இலட்சம் மனித நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ரூ. 41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல, 1985–86-ல் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், 299 இலட்சம் மனித நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்படும் தொகை மூலம் கிராமப்புறங்களில் நிலையான பொதுச் சொத்துக்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

12. உணவு உற்பத்தியைப் பெருக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், ஆண்டொன்றுக்கு 69.17 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் உணவு தானியங்களும், 3.42 இலட்சம் மெட்ரிக் டன் பயிறு வகைகளும், 13·425 இலட்சம் மெட்ரிக் டன்

உருவாக்க வேண்டியுள்ளது. அவ்வாறே, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த ''3பி'' என்றழைக்கப்படும் திட்டத்தைப் பிரபலப் படுத்த அரசு பெரிய அளவிலான சிறப்புச் செய்முறை விளக் கங்களை நடத்தியுள்ளது. எத்தகைய பருவ நிலையிலும் புன்செய் நிலச் சாகுபடி செய்யப் பொருத்தமான தொழில் நுட்ப உத்தியைப் பிரபலப்படுத்துவதும் மற்றொரு நடவடிக்கையாகும்.

16. பாதகமான பருவ நிலை காரணமாக, இவ்வாண்டில் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால், பொது வினியோக முறையின் மூலம் அதிக அளவில் அரிசி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த நான்காண்டுகளில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 55 ஆயிரம் டன் அரிசி வழங்கப்பட்டிருக் கையில், இவ்வாண்டில் மாதம் ஒன்றுக்கு 94 ஆயிரம் டன் வழங்கப் பட்டு வருகிறது. பொது வினியோக முறையின்கீழ்த் தேவைப் படும் அதிக அளவிலான அரிசியை வழங்க இயன்ற நடவடிக்கை கள் அனைத்தையும் அரசு எடுத்து வந்துள்ளது. காவிரி டெல்டா பகுதியிலுள்ள நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வரப்படும் நெல்லிற்கு வழங்கப்பட்டு வந்த உற்பத்தி ஊக்கத் தொகை இவ்வாண்டு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1—11—1985 முதல் காவிரி டெல்டா பகுதியில் ஏகபோக கொள்முதலை அரசு மேற் கொண்டுள்ளது. இங்கு குவிண்டால் ஒன்றுக்கு அளிக்கப்படும் உற்பத்தி ஊக்கத் தொகை ரூ. 35ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறுவைப் பருவத்தில் 2.9 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. பொது வினியோக முறையின்கீழ் அரிசி வழங்க தேவையான அளவில் இருப்பு வைத்துக் கொள்ள முதற்கண் 31—1—1986வரை சம்பாப் பயிருக்கும் ஏகபோக கொள்முதலை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

17. தமிழ்நாட்டுக்கு, மைய ஒதுக்கீட்டிலிருந்து அதிக அளவில் அரிசியை வழங்குமாறு மாநில அரசு தொடர்ந்து வற் புறுத்தி வருகிறது. இப்போது, மைய அரசு 1985 செப்டம்பர் திங்களுக்கான ஒதுக்கீட்டை 25 ஆயிரம் டன்னிலிருந்து 35 ஆயிரம் டன்னாகவும், 1985 அக்டோபர் திங்கள் முதல் 40 ஆயிரம் டன்னாகவும் உயர்த்தியுள்ளது. 1985ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குக் கூடுதலாக 50 ஆயிரம் டன் அரிசியை ஒதுக்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. மைய அரசின் இந்த நல்லெண்ண நடவடிக்கையை இந்த அரசு வரவேற் கிறது. வருங்காலத்தில் மத்திய அரசு இந்த ஒதுக்கீட்டை 1 இலட்சம் டன்னாக உயர்த்தும் என்று நம்புகிறோம். பொது வினியோக முறையின் மூலம் போதிய அளவிற்கு உணவுப் பொருளை வழங்குவதற்கு, மாநில அரசு, இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆண்டு ஒன்றுக்கு 105 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள், 6 இலட்சம் மெட்ரிக் டன் பயறு வகைகள் மற்றும் 18·98 இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்த புதிய தொழில் நுட்ப முறைகளைச் செய லுக்குக் கொண்டுவர பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

13. தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மிகக் குறைந்த அளவில் தண்ணீர் இருந்தது. இருந்தாலும், தஞ்சைப் பகுதியில் முறைப் பாசனத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் புயலுடன் அதிக மழை பெய்து, குறிப்பாக, தஞ்சை, தென்னார்க்காடு, செங்கற்பட்டு போன்ற பகுதிகளில் பெருஞ் சேதம் விளைவித்தது. தஞ்சை மாவட்டத்தில் அதிக மழை பெய்தாலும் அது விவசாயத்திற்குப் பயன்படாமல் வீணாகக் கடலில் கலந்ததோடு சம்பா பயிரை வெகுவாகப் பாதித்தது. இத்தகைய கடுமையான இடர்பாடுகள் இருந்த போதிலும், மற்ற பகுதிகளில் நெல் சாகுபடியைத் தீவிரப்படுத்தி, அதன் மூலம் இந்த இழப்பை ஈடு செய்ய அரசு முயன்றது. இதன் காரணமாக மாநிலத்தின் வேறு பகுதிகளில் குறுவை நெல் விளைச் சல் அதிகமாகி 50 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உற்பத்தி அளவை மாநில அரசு எய்த முடியும் என நம்புகிறோம்.

14. அண்மையில், மாநில அரசு கேட்டுக் கொண்டதற் கிணங்க, கர்நாடக அரசு மின்சக்திக்கு ஈடாக 5 டி.எம்.சி. நீர் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இருப்பினும், இப் பிரச்சினையில் இரு மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு நிலையான தீர்வு விரைவில் ஏற்பட வேண்டியது இன்றியமையாததாகும். தமிழ்நாட்டிற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் மன நிறைவு ஏற்படுகின்ற வகையில் இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண தமிழக முதல்வர் அவர்கள் பேச்சு வார்த்தைகளை ஏற்கனவே தொடங்கியுள்ளார். இப் பேச்சு வார்த்தைகளை மாநில அரசு தொடர்ந்து வருகிறது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஏற்கனவே விவரித்துள்ள கோட்பாடுகளின் அடிப் படையில் சுமூகமான உடன்பாடு ஒன்று விரைவில் ஏற்படும் என்று நம்புகிறோம்.

15. குறைந்தளவு நீர் வழங்கப்படுவதன் காரணமாகவும், நீர் வழங்கப்படுவது நிச்சயமற்றதாக இருப்பதாலும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், புன்செய் சாகுபடி தொழில் நுட்ப உத்திகளை பின்பற்றவுமான வழிமுறைகளை மாநில அரசு

[1986 சனவரி 10

18. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 10 ஆயிரம் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதிகளை அதிகப்படுத்த, அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. மக்களின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின்கீழ் 1985–86ஆம் ஆண்டில் இதற்கு ரூ. 24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகப்படுத்த ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதி உதவியுடன் ஆரணியாறு, கொற்றலையாறு வடிநிலப் பகுதியில் நிலத்தடி நீரியல் ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் நீரை வழங்குவதற்காக முதற்கட்டமாகத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 98 கோடியாகும். இத் திட்டத்திற்கு, உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20. இவ்வரசு, மக்கள் நலத்தில் அக்கறை கொண்ட அரசு என்ற நற்பெயரை ஈட்டியுள்ளது. இவ்வரசு தொடங்கியுள்ள பல முன்னோடித் திட்டங்கள், தேசிய அளவில் முன்மாதிரிகளாக விளங்குவதோடு உலக அரங்கில் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன. சென்ற ஆண்டு நான் ஆற்றிய உரையில், குழந்தைகள் நல மேம்பாட்டுக்காக அடங்கல் திட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட்டிருந்தேன். அதற்குத் தற்போது செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளதென்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஊட்டச் சத்து வழங்குவது, சுகாதாரத் திட்டங்கள் முதற் கொண்டு, இலவச உடைகளும் பாடப் புத்தகங்களும் வழங்குவது வரை குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை அரசு நிறைவு செய்து வருகிறது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், தற்போது 86.88 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 58.10 இலட்சம் சிறார் பயன் பெறுவர். சீருடைகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பல்வேறு தையல் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 40,000 மகளிர் வேலைவாய்ப்புகள் பெறுவர் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இது போன்ற அடங்கல் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி வகுப்பதுடன், வருங்காலத்தில் ஆரோக்கியமான தலைமுறையையும் உருவாக்கும் எனத் திடமாக நம்பலாம். இதன் மூலம், எதிர்காலத்தில் வலுவானதொரு தமிழகம் உருவாகும் என்பது திண்ணம்.

1986 சனவரி 10]

21. திட்டமிட்ட குடும்ப அமைப்பு முறையை மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்ய, மக்கள் தொடர்பு சாதனங்கள் முக்கியமென்பதை உணர்ந்து, மக்கள் தொடர்பு நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள், மாத ஊதியம் பெறும் பணியாளர்கள், மகளிர் ஆகியோருக்கு, தனித்தனியாகக் குறிப்பிட்ட வகையில் குடும்ப நலப் பிரச்சாரம் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நிலையில் உள்ள மக்களின் திறனுக்கேற்ப வேறுபட்ட வகையில் குடும்ப நலப் பிரச்சாரம் செய்ய, பிரச்சார அணுகு முறையில் வல்லுநர்களாகத் திகழ்பவர்களையும் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் இது தொடர்பாக மேலும் வசதி செய்து கொடுக்க, தொலைக்காட்சி, காணொலி (V.C.P.) போன்ற நவீன கருவிகளைத் தொழில் அதிபர்கள், கொடை வள்ளல்கள் மூலம் நன்கொடையாகப் பெற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்குக் கேளிக்கை வசதிகளைச் செய்து கொடுப்பது நல்ல பலனை அளித்துள்ளது. இதில் மேலும் தீவிரமாக முயற்சிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

22. குடும்ப நல சிகிச்சை குறித்த பணிகளை மேம்படுத்துவதற்கு, ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில் போதிய அளவிற்குச் சாதனங்களைக் கொண்ட அறுவை அரங்குகளைப் படிப்படியாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்போதுதான், அத்தகைய பணிகள் கிராமப் பகுதிகளில் குடும்ப நலச் சிகிச்சையை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் தங்கள் வீட்டிலிருந்து மிக அருகில், அதாவது, 8 முதல் 10 கி.மீ. தொலைவிற்குள் இந்த வசதிகளைப் பெற இயலும்.

23. குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக நோய் எளிதில் பற்றக்கூடிய வயதுத் தொகுதிகளில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் பெருமளவில் நோய்த் தடுப்பு ஊசி போடும் வகையில், 19-11-1985 ஆம் நாளன்று, மத்திய அரசு தொடங்கிய "அனைவருக்கும் நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டம்", மூன்று மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூன்றாவது கட்டத்திலேயே 95 சதவீதத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொண்டுள்ள இம் முயற்சிகள் குடும்ப நலத் திட்டத்தில் நம்முடைய சாதனையை மேலும் அதிகரிக்கும்.

24. என்னுடைய கடந்த உரையில் குறிப்பிட்டிருந்ததைப் போல, ஆதி திராவிடரின் ஒருங்கிணைந்த, விரிவான வளர்ச்சிக்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. 1985–86ஆம் ஆண்டில் ஆதி திராவிடரின் பொருளாதார மேம்பாட்டுக்காக, ரூ. 126.16 கோடி செலவில் சிறப்பு கூடுதல்

திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டை மேலும் வலுப்படுத்த அவர்களுக்கு அதிகப்படியான கல்வி வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும். தற்போதுள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்த சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

25. சென்ற ஆண்டு கூட்டத் தொடரில் நான் உரையாற்றுகையில், அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் குடும்ப நல நிதியை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்துவது குறித்துக் குறிப்பிட்டிருந்தேன். இது தற்போது செயற்படுத்தப் பட்டு வருகிறது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைக் குறித்த ஆணைகளையும் அரசு விரைவில் பிறப்பித்துள்ளதோடு இந்த ஆணைகளினால் ஏற்படக் கூடிய செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 90 கோடியாக இருந்த போதிலும், இப் பரிந்துரைகளை 1—10—1984-லிருந்தே செயலுக்குக் கொண்டு வர அரசு தயங்கவில்லை. இதிலிருந்து, இந்த அரசு, பணியாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பது தெளிவாகும். இப்போதும்கூட, முறையீடுகள் வரப்பெற்றதன் பேரில் ஒரு நபர் குழுவை அரசு அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பெற்று அதனை பரிசீலித்த பின்னர், அரசு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும்.

26. முக்கியமான மக்கள் நலப்பணிகளை மேற்கொள்வதுடன் பொருளாதார வளர்ச்சிக்கான புதிய துறைகளிலும் கவனம் செலுத்துவதுதான் இம்மாநில அரசின் முயற்சியாகும். நான் கடந்த ஆண்டு குறிப்பிட்டதுபோல, புதிய எரிபொருளைக் கண்டறிய பெரிய அளவிலான திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. தொழில்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் சூரிய வெப்ப வெந்நீர் ஏற்பாடு, சூரிய வெப்பக் காற்று ஏற்பாடு போன்றவற்றை உருவாக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்புக்கு அரசு ரூ. 95 இலட்சம் அனுமதித்துள்ளது. காற்று மூலம் சக்தி உற்பத்தி செய்யும் திட்டத்தையும் ஒரு கோடி ரூபாய் செலவில் அரசு மேற்கொண்டுள்ளது.

27. நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் பெற வேண்டுமென்பதே அரசின் தலையாய நோக்கமாகும். இந்த நோக்கத்தை எய்துவதற்காக, இம் மாநிலத்தில் தொழில்களை அமைப்பதற்குத் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகள் அனைத்தையும் மாநில அரசு எடுத்துள்ளது. தொழில்கள் தொடங்குவதற்கு இசைவளிப்பது, தொழில் தொடங்குவதற்கு உரிமங்கள் பெற்றுத் தருவது ஆகிய பணிகள் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 1985 ஆம் ஆண்டில், தொழில்கள் தொடங்குவதற்கான 38 இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

28. ரூபாய் 1,177 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வரும் மயிலாடுதுறை கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1986 டிசம்பரில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

29. புதிதாகப் பெருந்தொழில்கள் தொடங்குவதில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்ந்து முக்கியப் பங்கு வகித்து வருகின்றது. இந்த நிறுவனம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவை பல்வேறு நிலைகளில் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள பொதுத் துறைத் திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு வெடிமருந்துத் தொழிற்சாலை 1985ஆம் ஆண்டில் சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

30. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மேற்கொண்டுவரும் வழக்கமான தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளுடன் உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்—2-லுள்ள சிறப்புத் தொழில் வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. முகப்பேரில் 145 தொழில் பிரிவுகள் அமைக்க அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் தொழிற் சாலைகளுக்கான கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கும், இயந்திரங்களை வாங்கி நிறுவுவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது. இவற்றிற்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிதி உதவி அளித்து வருகிறது. இத் திட்டம் 1986ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. ஏற்றுமதி அளவை அதிகரிப்பதற்காக, ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் மண்டலத்தை மத்திய அரசு சென்னையில் அமைத்துள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்ட பணிக்காக, மாநில அரசு சுமார் 158 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. முதற் கட்டத்தில் அமைக்கப்படும் 120 தொழில் பிரிவுகளுடன் இரண்டாவது கட்டத்தில் அமைக்கப்படவுள்ள 250-க்கும் மேற்பட்ட தொழில் பிரிவுகளுக்கு சுமார் 300 ஏக்கர் நிலத்தைப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இத் திட்டத்திற்காக மத்திய அரசு 74 விண்ணப்பங்களுக்கு இசைவளித்துள்ளது.

32. பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்யும் முதலீடு மிகக் குறைவாக உள்ளதைச் சுட்டிக்காட்டி, அதை ஈடு செய்ய வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. மணலியில் உள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 2.8 மில்லியன் டன் என்ற உற்பத்தித் திறனை 5.6 மில்லியன் டன்னாக அண்மையில் உயர்த்தியுள்ளது. உதகமண்டலத்தில் ரூ. 200 கோடி செலவில் வண்ணத் திரைப்படச் சுருள் உற்பத்தி

செய்யும் தொழிற்சாலையையும், ரூ. 170 கோடி செலவில் எக்ஸ்-கதிர் படச் சுருள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் அமைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

33. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, ஒருமித்த முயற்சியை மேற்கொள்வதற்கு அடிப்படையான மனித ஆற்றல் அடிப்படை வசதி ஆகிய வகையில் வலுவான அமைப்பு இம் மாநிலத்தில் இருந்து வருகிறது என்பது மேற்சொன்னவற்றி லிருந்து தெரியவரும். ஏற்கெனவே நான் குறிப்பிட்டவாறு, நாட்டில் பெருமளவில் தொழில்களில் முதலீடு செய்வதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. மத்திய அரசின் இந்த நடவடிக்கையை முழுமையாகப் பயன்படுத்தி, உயரளவு பயன்களைப் பெறக் கருதியுள்ளோம். பொருளாதார வளர்ச்சி இன்றியமையாதது என்பது உண்மைதான். ஆனால், அதே சமயத்தில் இந்த வளர்ச்சியின் பயன்கள் ஏற்ற தாழ்வின்றி சாதாரண மனிதனுக்கும் கிட்டும் வகையில் வழி வகுக்கப்படுவதும் அவசியமாகும். இந்த அரசை எதிர் நோக்கி உள்ள பிரச்சினைகளில் முக்கியமான ஒன்று, வேலை வாய்ப்பின்மை யாகும். இதைச் சமாளிக்க வேண்டுமெனில், நமது தொழில் வளர்ச்சித் திட்டங்கள், பெரிய, நடுத்தரத் தொழில்களை மட்டும் நம்பியிராமல், அதிகமான வேலை வாய்ப்பைக் கிராமப் புற மக்களுக்கு அளிக்கக் கூடிய, கைத்தறி, கதர், குடிசைத் தொழில் மற்றும் அமைப்பு ரீதியிலும், அமைப்பு ரீதியில் அல்லாமலும் உள்ள இதர சிறு தொழில்கள் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தில் அமைய வேண்டுமென்பதே இவ்வரசின் குறிக்கோளாகும். கடந்த சில ஆண்டுகளில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் சேவைத் துறையின் பங்கு அதிகரித்துள்ளது. இத் துறைக்கு உதவி அளிப்பதோடு அதனை வலுப்படுத்தவும் வேண்டியுள்ளது. இந்நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, நடப்பாண்டில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

(1) பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளை அளித்துள்ளதுடன், முதலீட்டு உதவித் தொகை வழங்குதல், வட்டியில்லா விற்பனை வரிக் கடன்கள் அளித்தல் ஆகிய இரண்டுமே மாநில அரசு அவற்றை ஊக்குவிப்பதற்காக வழங்கும் முக்கிய சலுகைகளாகும். இச்சலுகைகளின் செயல் முறையைச் சீரமைப்பதன் மூலம் குறுப்பிட்ட தொழில்களுக்கும் பின் தங்கிய பகுதிகளுக்கும் முழுமையாக இப் பயன்கள் கிடைக்கச் செய்ய அரசு முயற்சி எடுக்கவுள்ளது.

(2) நமது திட்டப் பணிகளில் மின்சக்தி உற்பத்திக்கு ஏற்கெனவே உயரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏழாவது திட்டக்கால இறுதிக்குள் மின்சக்தி பற்றாக்குறையை நீக்கிவிட மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வெளி நாட்டு உதவி அல்லது வணிகக் கடன் கொண்டு, தனியார் துறையின் உடனுழைப்புடன் தனிப்பட்ட கழகங்கள் மூலமாக கூடுதல் மின் உற்பத்திப் பணியை மேற்கொள்வது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது. இதனால், மின் உற்பத்தித் திறனளவை அதிகரிக்கும் பணி துரிதப்படுத்தப்படும்.

(3) மத்திய அரசு அறிவித்துள்ள துணிக் கொள்கை, கைத்தறித் துறைக்குப் போதுமான ஆதரவு அளிக்காது என்று நாம் ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம். கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டு, அத் துறையை நவீனமயமாக்குவது மட்டுமன்றி, தகுந்த ஊக்கத் தொகைகளையும் நிதி வகையிலான அடிப்படை வசதிகளையும் அளிக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான், அதிகரித்த விற்பனையை தொடர்ந்து நீடிக்க இயலும். மேலும், இத்தகைய அதிக உற்பத்தியால் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளும் தடையின்றி நீடிக்க முடியும். இது தொடர்பான நமது நிலையையொட்டி, கைத்தறித் துறைக்குரிய பாதுகாப்பை அளிக்கின்ற வகையில் அவசியமான மாற்றங்களை நமது மதிப்பிற்குரிய பிரதமர் செய்வார் என நம்புகிறோம்.

(4) மைய அரசைப் போலன்றி, தங்கள் திட்டப் பணிகளுக்குத் தேவையான நிதிக்கு வெளிநாட்டு உதவியையோ அல்லது உள்நாட்டுக் கடன் வசதியையோ நேரடியாகப் பெறுகின்ற வாய்ப்புக்கள் மாநில அரசுகளுக்கு இல்லை. இந்நிலையில் பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கி வருவாய் ஆதாரமாக அமைய வேண்டும் என்று பிரதமர் தெரிவித்த கருத்து மாநில அரசுகளைப் பொறுத்தவரையில் மிகப் பொருத்தமானதாகும். அவ்வகையில், பொதுத் துறை நிறுவனங்கள், அரசுக்கு ஒரு சுமையாக அமையாமல், வருவாய் அளிக்கின்ற, நாட்டின் வளர்ச்சிக்கு உரமிடுகின்ற வகையில் அவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதில் இவ்வரசு கவனம் செலுத்தும். அரசின் பல்வேறு துறைகள், அவற்றிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவு செய்வதற்கு ஏற்ப, அவற்றைச் சில கண்டிப்பான ஒழுங்கு முறைகளுக்குட்படுத்தவும் அவை செயற்படும் விதத்தைக் கண்காணிக்கவும் அரசு ஏற்கெனவே திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

(5) சிறு தொழில் துறையில், தமிழ்நாடு, குறிப்பிடத் தகுந்த வளர்ச்சி கண்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் துறைகளில் கூட்டுறவு முறையை அறிமுகப்படுத்துவதில் தமிழ் நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரசு, ஏற்கெனவே

(8) இம் மாநில அரசு, கல்வித் துறைக்குச் சிறப்பிடம் அளித்து வந்துள்ளது. கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டது போல பள்ளிக் கட்டிடங்கள் பலவற்றை மேம்படுத்தவும், ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்தவும், அரசு கூடுதலாக நிதி ஒதுக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக ஆதி திராவிடர் பள்ளிகளுக்குத் தனி நிதி ஒதுக்கப்படும்.

(9) கடந்த ஆண்டு என்னுடைய உரையில் அறிவித்திருந்தவாறு மதுரை மாவட்டத்தை, அரசு, மதுரை மாவட்டம் என்றும், அண்ணா மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளது. மாவட்டங்களைப் பிரித்து, அவற்றின் நிருவாக அமைப்பைச் செம்மையானதாக மாற்றக் கூடிய இத்தகைய நடவடிக்கைகளை நடப்பாண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக, திருநெல்வேலி, வட ஆற்காடு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது.

(10) கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், அரசு, சில பொருட்கள் மீதான பலமுனை விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றி, அதன் மூலம் விற்பனை வரி விதிப்பு முறையை எளிமையானதாக ஆக்கும் பணியைத் தொடங்கி வைத்தது. இத்தகைய நடவடிக்கைகள் மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுறது. இதன் மூலமாக இம்மாநிலத்திலுள்ள விற்பனை வரி விதிப்பு அமைப்பு, பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமானதாக இருக்குமென்று நம்புகிறோம்.

34. வளமான எதிர் காலத்தை உருவாக்கும் முயற்சிகளில் இவ்வரசு ஈடுபட்டுள்ளது. இந்த உன்னத முயற்சிக்குத் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பு, தமிழ்நாட்டில் வருங்காலத்தில் வளம் கொழிக்க வழி வகுக்கும். வணக்கம்.

பல்வேறு மாவட்டங்களில் தொழில் வள ஆய்வுகளை நடத்தியுள்ளது. நமது தேவைகளை முழுமையாகவோ அல்லது எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கேனும் நிறைவு செய்வதற்கு ஏற்றாற்போல், பலதரப்பட்ட தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பணிகளை ஒருமுகப்படுத்துவது மிக அவசியம். ஒரு சாதாரணக் குடிமகனின் அடிப்படைத் தேவைகள், நமது மாநிலத் தொழில் உற்பத்தியிலிருந்தே நிறைவு செய்யப்படும் நிலை உருவாக வேண்டும். இந்த வகையில் காணப்படும் இடைவெளிகளை, தொழில் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதன் மூலம் நிரப்ப வேண்டும். இதற்கென, தொழில் மற்றும் வணிக இயக்குநர் அலுவலகத்தில் மைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, இதற்காகத் தேவைப்படும் துறைகள் என்று தெரிந்தெடுக்கப்பட்டவற்றிற்கு, அவை சிறுதொழில் துறைகளாக இருந்தாலும் அல்லது கிராமத் தொழில்களாக இருந்தாலும், அவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், சலுகைகள், ஏனைய உதவிகளைக் கண்டறியும். இதற்கு, குறிப்பிட்ட தொழில்களைக் கவனித்துவரும் அரசின் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். இந்த ஒருங்கிணைப்புப் பணியை இந்த அமைப்பு நிறைவு செய்யும் என்று கருதப்படுகிறது.

(6) ஆதி திராவிடர் போன்ற நலிந்த பிரிவினருக்குக் குறித்த காலத் திட்டங்கள் மூலமாக உதவி அளிக்க அரசு கருதியுள்ளது பற்றி, கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டிருந்தேன். இம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல தேசிய திட்டங்களுக்குத் துணையாக இத் திட்டங்கள் அமைய வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். மக்கள் நல்ல முறையில் வாழ வேண்டுமாயின் வீட்டு வசதி இன்றியமையாததாகும். இந்த அடிப்படை வசதி, ஏழை, எளிய மக்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உறுதியாகக் கருதுகிறது. வீடில்லாதோருக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் பெரியதொரு திட்டமொன்றை அடுத்த நிதி ஆண்டில் செயற்படுத்த அரசு கருதுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய வீட்டு வசதியின்றி அல்லலுறும் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோருக்காக 5 இலட்சம் வீடுகள் கட்டப்படும். அதே போன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங்களுக்கும் 5 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இந் நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்ற பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் மூப்பது இலட்சம் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டி முடித்து விட வேண்டுமென்பதுதான் இத் திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்.

(7) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்கள், அரசு அண்மையில் அறிவித்துள்ள நாட்களில் நடக்க விருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களும் விரைவில் நடத்தப்பட வேண்டுமென்று அரசு உறுதியாகக் கருதுகிறது.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136437
சென்னை-600 008.